T. 1632.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

உ

திருச்சிற்றம்பலம்

பதினோராந் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்
திருவுள்ளப்படி

'கலைமகள்' ஆசிரியர்
கி. வா. ஜகந்நாதன்
எழுதிய குறிப்புரையுடன்
வெளியிடப்பெற்றது.

•

விரோதி வருஷம் பங்குனி மாதம்
1950

(உரிமை பதிவு)

நேஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை, சென்னை-18.

உ

திருச்சிற்றம்பலம்

பொருள் அடக்கம்

பக்கம்

முன்னுரை vii

நூலைப்பற்றிய குறிப்புகள் ix

நம்பியாண்டார் நம்பி வரலாறு xiii

திருவாலவாயுடையார் :

1. திருமுகப் பாசுரம் 1

காரைக்காலம்மையார் :

2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2

மூத்த திருப்பதிகம் 5

3. திருவிரட்டை மணிமாலை 7

4. அற்புதத் திருவந்தாதி 12

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் :

5. க்ஷேத்திரத் திருவெண்பா 27

பக்கம்

சேரமான் பெருமாள் நாயனார்

6.	பொன்வண்ணத்தந்தாதி	....	32
7.	திருவாரூர் மும்மணிக்கோவை	....	62
8.	திருக்கைலாய ஞான உலா	....	75

நக்கீரதேவ நாயனார் :

9.	கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி	....	91
10.	திருவீங்கோய்மலை எழுபது	....	107
11.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	....	116
12.	திருவெழுகூற்றிருக்கை	....	121
13.	பெருந்தேவபாணி	....	124
14.	கோபப் பிரசாதம்	....	127
15.	கார் எட்டு	....	131
16.	போற்றித் திருக்கலிவெண்பா	....	133
17.	திருமுருகாற்றுப்படை	....	137
18.	திருக்கண்ணப்பதேவர் திருமறம்	....	153

கல்லாடதேவ நாயனார் :

19.	திருக்கண்ணப்ப தேவர் திருமறம்	....	159

கபிலதேவ நாயனார் :

20.	மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை		160
21.	சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை		165
22.	சிவபெருமான் திருவந்தாதி	....	174

பக்கம்

பரணதேவ நாயனர் :

23. சிவபெருமான் திருவந்தாதி 190

இளம்பெருமான் அடிகள் :

24. சிவபெருமான் திருமும்மணிக்கோவை 205

அதிராவடிகள் :

25. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை 213

பட்டினத்துப் பிள்ளையார் :

26. கோயில் நான்மணிமாலை 220
27. திருக்கழுமல மும்மணிக்கோவை 244
28. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 251
29. திருவேகம்பமுடையார் திருவந்தாதி 277
30. திருவொற்றியூர் ஒருபா ஒருபது 307

நம்பியாண்டார் நம்பி :

31. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை 315
32. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 321
33. திருத்தொண்டர் திருவந்தாதி 342
34. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி 372
35. ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் 404

பக்கம்

36. ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்
கோவை 408

37. ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை 420

38. ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்.... 431

39. ஆளுடையபிள்ளையார் திருத்தொகை 449

40. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதச
மாலை 452

பாட்டு முதற்குறிப்பகராதி 457

உ

செந்திலாண்டவன் துணை

முன்னுரை

ஸ்ரீகுமரகுருபரஸ்வாமிகளை முதல்வராகக் கொண்டு அவர் செய்துவந்த சமயத் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் மிகச் சிறப்பாக நடத்தி வருவது திருப்பனந்தாளில் உள்ள காசிமடமாகும். இந்த மடத்தில் தலைவர்களாக இருப்பவர்கள் செய்துவரும் நற்றொண்டுகளும் வள்ளன்மைச் செயல்களும் இன்று தமிழ் நாடும் பிற நாடுகளும் போற்றும் வகையில் சிறந்து விளங்குகின்றன. இப்போது காசி மடாலயத்தலைமையைத் தாங்கி விளங்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிறந்த நூல்களை நல்ல முறையில் பதிப்பிக்கச்செய்து தமிழ்மக்கள் எளிதிலே பெற்றுப் பயனடையும்படி செய்து வருகிறார்கள். சில அரிய நூல்களை ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் மொழி பெயர்க்கச் செய்து வெளியிட்டிருக்கிறார்கள்.

சைவத்திருமுறைகளைத் தனித்தனியே பதிப்பிக்கச் செய்து தமிழ்மக்கள் பயனடையும்படி செய்யவேண்டுமென்று சுவாமிகள் கொண்ட கருத்து இப்போது அநேகமாக முற்றுப் பெறும் நிலையில் உள்ளது. தேவார திருவாசகங்களையும் பிற திருமுறைகளையும் வெளியிடும் பணி நடந்து வருகிறது. இந்த வகையில் இந்தப் பதினோரந் திருமுறையை வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

பதினோராந்திருமுறையை யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அச்சிட்டிருக்கிறார்கள். பல காலமாக அச்சுப்புத்தகம் இருந்து வரினும் தமிழ்மக்கள்

இத் திருமுறையில் அதிகமாக ஈடுபடவில்லை. அதனால் இதன்கண் உள்ள பல பாடல்கள் மூல உருவம் இன்னதென்றே தெரியாமல் இருக்கின்றன. பல பாடல்கள் விட்டுப் போயிருக்கின்றன. பல பாடல்களின் இடையிற் சில சொற்கள் விட்டுப்போயின. பல பாடல்களுக்குரிய பொருள் இன்னதென்று தெளிவுற இயலாதவகையிலே அப் பாடல்களின் உருவம் இருக்கிறது. ஏட்டுச்சுவடிகளை நன்கு ஆராய்ந்து அவற்றிலுள்ள பாடபேதங்களைத் தெரிந்து தொகுத்துப் பொருள் நிச்சயம் செய்தால் பல பாடல்களின் உண்மை உருவத்தைக் காணுதல் கூடும்.

இந்தப் பதிப்பில், அத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ள இயலவில்லை. பாடல்களைப் பொருள் விளங்கும் வகையில் பதம் பிரித்து இன்றியமையாத இடங்களில் சுருக்கமான குறிப்புரை எழுதி அமைக்கப்பெற்றது, இப்பதிப்பு.

காசிவாசி சுவாமிகள் அவர்கள் செய்துவரும் இந்த அரிய உபகாரச் செயலைத் தமிழ் நாட்டார் அனைவரும் வாழ்த்தும் கடப்பாடுடையவர்கள். அவர்கள் செய்திருக்கும் அறச் செயல்களைப்பற்றிய செய்திகளை இப்புத்தகத்தின் இறுதியிலே காணலாம். ஆண்டுகளையும் மாதங்களையும் சைவமும் தமிழும் பரவுவதற்கேற்ற அறச் செயல்களால் கணக்கிடும் பெரியாராகிய சுவாமிகள் பல்லாண்டு வாழ்ந்து தமிழுலகத்திற்கு உபகாரம் புரிந்து விளங்கவேண்டுமென்று வாழ்த்தும் கூட்டத்தினரோடு நானும் சேர்ந்து கொள்ளுகிறேன்.

மயிலாப்பூர்
15-3-50

இங்ஙனம்
கி. வா. ஜகந்நாதன்

முருகன் துணை

இந் நூலைப்பற்றிய குறிப்புகள்

ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத சிறப்பு ஒன்று இதற்கு உண்டு. ஆலவாய் இறைவர் இயற்றிய திருமுகப் பாசுரம் இந்தத் தொகைநூலின் முதலில் திகழ்கிறது. சிவபெருமானாலே இயற்றப் பெற்றதாகச் சொல்லப்பெறும் தமிழ்நூல் ஒன்று; இறையனாரகப் பொருள் என்ற தமிழ் அகப்பொருள் இலக்கணம் அது. அப் பெருமானாலே திருவாய்மலர்ந்தருளப்பெற்ற பாடல்கள் இரண்டு. ஒன்று "கொங்குதேர் வாழ்க்கை" என்பது. அது குறுந்தொகை என்ற சங்கநூலில் இரண்டாவது பாட்டாக அமைந்திருக்கிறது. மற்றொன்று இந்தத் திருமுகப் பாசுரம். வேறு சில பாடல்கள் அப்பெருமானால் அருளப் பெற்றன என்று சில வரலாறுகள் வழங்குகின்றன. ஆயினும் பெரியோர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்று, மதிப்பைப் பெறும் தொகை நூல்களிலே கோக்கப் பெற்றவை இந்த இரண்டு பாடல்களுமேயாம்.

மற்றொரு சிறப்பு: இந்தத் திருமுறையிலே கடைச் சங்ககாலத்து நூலொன்று உள்ளது. நக்கீரரால் இயற்றப்பெற்ற திருமுகாற்றுப்படை இதன்கண் இடம் பெற்றுள்ளது. சங்கநூல்களைப் பயில்வார் இல்லாமல் தமிழுலகம் மறந்திருந்த காலத்திலுங்கூட, சைவத்திருமுறையிலே சேர்க்கப் பெற்றமையின் இந்நூல் மறையாமல் நின்று விளங்கியது.

இத்திருமுறையில் பன்னிரண்டு அருளாளர்கள் பாடிய 41 நூல்கள் உள்ளன. 1388 பாடல்கள் இப்போது கிடைக்

கின்றன. ஆனால் சில நூல்களில் இன்னும் சில பாடல்கள் இருக்கவேண்டும் என்று தோற்றுகிறது. திருவீங்கோய் மலை எழுபதில் 48-ஆம் பாடலுக்குப் பின் 13 பாடல்கள் இல்லை. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையில் இறுதியில் ஏழு பாடல்கள் இல்லை. சிவபிரான் திரு விரட்டை மணி மாலையில் இப்போது 37 பாடல்கள் உள்ளன. இரட்டைப்படையான செய்யுட்கள் இருக்க வேண்டிய இந்நூலில் 40 பாடல்களோ 50 பாடல்களோ இருக்கவேண்டும். திருக்கழுமல மும்மணிக்கோவையில் இப்போது 12 பாடல்கள் உள்ளன. 12-ஆவது பாட லின் இறுதியும் முதற்பாடலின் முதலும் மண்டலிக்க வில்லை. ஆதலின் இடையிலே சின்றிருக்கின்றதென்று தெரிகிறது. இந்நூல் 30 பாடல்களை உடையது போலும். ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் 49 பாடல் களே கிடைக்கின்றன. 50 அல்லது 100 பாடல்களையுடைய பிரபந்தமாக இந்நூல் இருத்தல் கூடும். எப்படியாயினும் இந்த 49-ஆம்பாடல் இறுதிப் பாடலாக இருக்க இயலாது. மண்டல அந்தாதி இதன்கண் அமையவில்லை. க்ஷேத்திரத் திருவெண்பாவில் இன்னும் பல தலங்களைப் பற்றிய பாடல்கள் இருக்க வேண்டுமென்றே தோற்றுகிறது.

இத் திருமுறையில் அமைந்துள்ள நூல்களை இயற் றிய திருவருட் செல்வர்கள் திருவாலவாயுடையார், காரைக் காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேர மான் பெருமாள் நாயனார், நக்கீரதேவநாயனார், கல்லாட னார், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமானடி கள், அதிராவடிகள், பட்டினத்துப்பிள்ளையார், நம்பி யாண்டார் நம்பி என்போர்.

இவர்களுள் திருவாலவாயுடையார் மதுரைப்பெரு மான் என்பதும், அப்பெருமான் பாணபத்திரருக்காகச் சேரமான் பெருமாள் நாயனாருக்குத் திருமுகப்பாசுரம்

உய்த்தருளினரென்பதும் திருவிளையாடற்புராணத்தினால் நன்கு தெரியவரும்.

காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் என்னும் மூவரும் அறுபத்து மூன்று நாயன்மார்களைச் சேர்ந்தோர். இவர்களுடைய அரிய வரலாறுகள் பெரிய புராணத்தில் உள்ளன. நக்கீரர், கல்லாடனார், கபிலர், பரணர் என்னும் நால்வரும் கடைச் சங்க காலத்துப் புலவர்கள். இவர்கள் இயற்றிய பல பாடல்கள் சங்க நூல்களில் காணப் பெறும். ஆயினும் இத் திருமுறையிலே அவர்கள் இயற்றியனவாக உள்ளவற்றில் திருமுருகாற்றுப்படையைத் தவிர மற்றவை சங்ககாலத் தொகைநூல்களில் சேர்க்கப் பெறவில்லை. இவை அப் புலவர்களின் வாக்குத்தானா என்பது ஆராய்ச்சிக்குரிய செய்தி. இளம் பெருமானடிகள், அதிரா வடிகள் என்னும் இரண்டு பெரியார்களைப் பற்றிய செய்தி பிற நூல்களில் காணவில்லை. பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு தனியே வழங்குகிறது. பட்டினத்துப் பிள்ளையார் பாடல் என்ற பெயரோடு சில பிரபந்தங்களும் தனிப் பாடல்களும் அடங்கிய நூலொன்று உண்டு. அதன்கண் உள்ள பாடல் நடைக்கும், இந்தத் திருமுறையிலுள்ள பாடல்களின் நடைக்கும் வேறுபாடு இருக்கிறது. நம்பியாண்டார் நம்பி, தேவாரம் முதலியன வெளிப்படுவதற்கு உறுதுணையாக இருந்தவர் என்பதைத் திருமுறை கண்ட புராணம் என்ற நூல் கூறுகிறது. அதில் அவருடைய வரலாறும் இருக்கிறது. தஞ்சையில் அரசாண்டிருந்த முதல் இராசராசச் சோழன் காலத்தில் வாழ்ந்தவர் அவர் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். நம்பியாண்டார் நம்பியே பதினோராந்திருமுறையைத் தொகுத்தவர்.

இத் திருமுறையில் அமைந்த நூல்கள் தெய்வங்களையும் அடியார்களையும் பற்றியவை. பெரும்

பாலும் சிவபெருமானுடைய தோத்திரங்களாக அமைந்தவை முன்னுள்ள பத்துத் திருமுறைகளும். திருமந்திரத்திலும், திருவிசைப்பாவிலும் மாத்திரம் சில பாடல்கள் முறையே விநாயகரையும் முருகனையும் போற்றும் வகையில் உள்ளன. இந்தத் திருமுறையில் விநாயகருக்கும் முருகப் பெருமானுக்கும் தனித்தனி நூல்களே உள்ளன. விநாயகரைப் பற்றியவை—3; முருகவேளைப்பற்றியது-1; சிவபெருமானைப்பற்றியவை—26; திருஞானசம்பந்தரைப் பற்றியவை—6; திருநாவுக்கரசரைப் பற்றியது—1; கண்ணப்பநாயனாரைப் பற்றியது—2; சேரமான் பெருமாளைப்பாட்டுடைத் தலைவராக உடையது—1; திருத்தொண்டர் அனைவரையும் பற்றியது—1.

இதில் தொகுக்கப்பெற்ற பிரபந்தவகைகள் 21. அவற்றுள் அந்தாதி—8, ஆற்றுப்படை—1, இரட்டைமணிமாலை—4, உலா—2, எட்டு—1, எழுகூற்றிருக்கை—1, எழுபது—1, ஏகாதசமாலை—1, ஒருபா ஒருபது—1, கலம்பகம்—1, கலிவெண்பா—1, கோபப்பிரசாதம்—1, திருமுகப்பாசுரம் (சீட்டுக்கவி)—1, தொகை—1, நான்மணிமாலை—1, பதிகம்—2, பெருந்தேவபாணி—1, மறம்—2, மும்மணிக்கோவை—7, விருத்தம்—2, வெண்பா—1.

இத்திருமுறையில் உள்ள நூல்களை ஆராய்ந்தால் பல சொல்வழக்காறுகளும், பொருட்சிறப்பும், செய்திகளும், மரபுகளும் தெரியவரும். பலபல காலமாகத் தமிழ் நாட்டில் தெய்வநம்பிக்கையும், வழிபாடும், பக்தியும், மெய்ஞ்ஞானமும், தத்துவ ஆராய்ச்சியும் வழிவழி வந்து விளங்கி மக்களுடைய மன அமைதிக்கும் இன்பத்துக்கும் காரணமாக இருந்தன என்பதையும் உணரலாம்.

நம்பியாண்டார் நம்பி வரலாறு

இந்தப் பதினோராந் திருமுறையைத் தொகுத்தவரும் இதில் உள்ள திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணி மாலை முதலிய பத்துப் பிரபந்தங்களை இயற்றியருளிய வரும் ஆகிய நம்பியாண்டார் நம்பி என்ற பெரியார், சோழ நாட்டில் திருநாரையூர் என்னும் தலத்தில் ஆதி சைவ மறையவர் குலத்தில் உதித்தவர். அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையாரைப் பூசிக்கும் குடியைச் சார்ந்தவர்.

முறைப்படி உபநயனம் ஆனபிறகு இவர் வேதங் களையும், ஆகமங்களையும், தமிழ் இலக்கண இலக்கியங்களை யும் பயிலத் தொடங்கினர். ஒருநாள் இவர் தந்தையார் வேற்றூருக்குச் சென்றனர். அவர் கட்டளைப்படியே நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யச் சென்றார். திருமஞ்சனம் முதலியவற்றைச் செய்தபின் நிவேதனத்தை முன்வைத்து, "எம்பெரு மானே, அமுது செய்தருளவேண்டும்" என்று விண்ணப் பித்துக் கொண்டார். விநாயகர் உண்மையாகவே நிவேதனத்தை ஏற்றருள்வாரென்று இவ்விளஞ் சிறுவர் எண்ணியிருந்தார். அம்மூர்த்தி அமுது செய்யாமல் இருப்பதைக் கண்டு, "நாம் ஏதேனும் தவறு செய்து விட்டோமோ!" என்று எண்ணி உள்ளம் நைந்து சாம்பினர். பிறகு வருத்த மிகுதியால் தலையைச் சுவரில் மோதிக்கொள்ளப் புகுந்தார். அது கண்டு இரங்கிய பொல்லாப் பிள்ளையார் அச்சிறுவரைத் தடுத்து, நிவேதித்த

நிவேதனத்தை அமுதுசெய்தருளினார். பிறகு பொல்லாப் பிள்ளையாரே நம்பிக்குக் கல்வி கற்பிக்கலானார். தினந் தோறும் இந்த அதிசயங்கள் நிகழ்ந்துவரவே, இச்செய்தி எங்கும் பரவலாயிற்று.

அக்காலத்தில் தஞ்சையில் இருந்து அரசாண்டு வந்த சோழ மன்னன் மிக்க சிவபக்தன். அவனிடம் வந்த சிவபக்தர்கள் தேவாரத்தில் சில பாசுரங்களைச் சொல்வார்கள். அவற்றைக் கேட்டு, அவற்றின் இனிமையிலே உள்ளம் பறிகொடுத்து, தேவாரம் முழுவதும் எங்கே கிடைக்கும் என்று ஆராயலானான். எங்கும் கிடைக்காமற் போகவே, மனம் வருந்தியிருந்தான். அவன் காதில் நம்பியாண்டார் நம்பியின் செய்தி விழுந்தது. 'இப்பெரியாரைக் கொண்டு நம் குறையைப் போக்கிக்கொள்வோம்' என்று எண்ணி, அளவற்ற பூசைப் பொருள்களை ஆட்கள் மேலும் பிற வாகனங்களிலும் கொண்டு திருநாரையூரை அடைந்தான். நம்பியை வணங்கிப் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசையும் நிவேதனமும் செய்யும்படி வேண்டினான். அவர் அங்ஙனமே செய்யக் கண்டு களித்தான்.

அப்பால் மன்னன் நம்பியை அடிவணங்கி, "அடியேனுக்கு ஒரு குறை உள்ளது. மூவர் முதலிகள் அருளிச் செய்த தேவாரம் முழுவதும் எங்கும் கிடைக்கவில்லை. விநாயக மூர்த்தியின் திருவருளைத் துணைக்கொண்டு, அவை கிடைக்கும்படி செய்யவேண்டும்" என்று வேண்டினான். நம்பியும் விநாயகரை வணங்கி அப்பெருமானுடைய திருவருளால், 'சிதம்பரத்தில் பொன் மன்றத்தின் அருகே மூவர் திருக்கர முத்திரைகளோடு தேவார ஏடுகள் உள்ளன' என அறிந்தார். அன்றியும், 'திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம்; திரு

நாவுக்கரசு நாயனார் பாடியவை நாற்பத்தொன்பதினாயிரம் பதிகங்கள்; சுந்தரமூர்த்தி நாயனார் பாடியவை முப்பத்தெண்ணாயிரம் பதிகங்கள்' என்றும் உணர்ந்து இச் செய்திகளைச் சோழ மன்னனுக்கு அறிவித்தார்.

அப்பால் நம்பியும் மன்னனும் சிதம்பரம் சென்று ஆங்குள்ள தில்லைவாழந்தணரை வணங்கிச் செய்தியைக் கூறினர். மூவர் முதலிகளுக்கு விழா நடத்தி அவர்களை எழுந்தருளச்செய்து, குறிப்பிட்ட இடத்தில் தேடும் பொழுது, கறையான் புற்று மூடிக்கிடப்பது கண்டு திடுக்கிட்டனர். அப்பால் எண்ணெய் சொரிந்து புற்றினுள்ளே இருந்த சுவடிகளை எடுத்துப் பார்த்தபோது பல பகுதிகள் கறையானுக்கு இரையாகிப் போயினவென்று அறிந்தார்கள். உள்ளவற்றை எடுத்துச் சோதித்து அடைவுப்படுத்தத் தொடங்கினர் நம்பியாண்டார் நம்பி.

திருஞானசம்பந்தர் தேவாரத்தை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் தேவாரத்தை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகள் தேவாரத்தை ஒரு திருமுறையாகவும் முதலில் வகுத்தார். மூவர் தேவாரத்தை இவ்வாறு ஏழு திருமுறைகளாக வைத்துப் பின்பு திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாந் திருமுறையாகக் கோத்தார். அப்பால் திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகியவற்றை ஒன்பதாம் திருமுறையாக வகுத்துச் சேர்த்தார்.

அப்போது சோழமன்னன் நம்பியை இறைஞ்சி, "வேறு பல அடியார்கள் பாடிய பாடல்களையும் தொகுத்து ஒரு திருமுறையாக்கி அருளவேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொள்ள, அதற்கு இணங்கி, ஆலவாயுடையார்

அருளிய திருமுகப்பாசுரத்தை முன்வைத்து, காரைக்காலம்மையார் முதலியோர் இயற்றியவற்றையும் தொகுத்துச் சேர்த்துப் பதினோராந் திருமுறையாக வகுத்தருளினர். அப்பால் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய பல நூல்களும் அத் திருமுறையின் இறுதியிலே கோக்கப் பெற்றன.

இறைவன் திருவள் துணைசெய்ய, திருவெருக்கத்தம் புலியூர் சென்று திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழிவந்த பெண்மணி ஒருத்தியின் வாயிலாக, தேவாரப்பதிகங்களின் பண்களைத் தெரிந்து கொண்ட நம்பியார், அந்தப்பண்களின் அடைவே தேவாரத் திருமுறைகளை வகுத்து அமைத்தார்.

அதுமுதல் தேவாரம் முதலிய திருமுறைகள் தமிழ் நாட்டில் பரவி வழங்கலாயின.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பதினோராந் திருமுறை

1

திருவாலவாயுடையார்
அருளிச்செய்த

திருமுகப் பாசுரம்

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க

இப்பாசுரம் மதுரை ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள், பாணபத்திரருக்கு உதவி புரியவேண்டுமென்று சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதியருளிய திருமுகம்.

1. புரிசை - மதில்.
5. கார்காலத்து மேகத்துக்கு ஒப்பாக.
8. செருமா - போர்க் குதிரை.

பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்

2

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (1)

கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள எழுதி வெடுவெடென்ன
நக்கு வெருண்டு விலங்குபார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபிணத்தீச்
சுட்டிட முற்றுஞ் சுளிந்துபூழ்தி

---

1. பங்கி - தலைமயிர். 2. விலங்கு பார்த்து - குறுக்கே நோக்கி.

அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (2)

வாகை விரிந்துவெண் ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையொ டாண்டலை பாடஆந்தை
கோடதன் மேற்குதித் தோடவீசி
ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தே
ஆகங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (3)

குண்டிலோ மக்குழிச் சோற்றைவாங்கிக்
குறுநரி தின்ன அதனைமுன்னே
கண்டிலோம் என்று கனன்றுபேய்கள்
கையடித் தோடிடு காடரங்கா
மண்டலம் நின்றங் குளாளம்இட்டு
வாதித்து வீசி எடுத்தபாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (4)

விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்டலை மாலை விரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளியென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணா
தழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்பன்இடந்திரு வாலங்காடே. (5)

பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டைஆந்தை

---

3. ஆண்டலை – ஒருவகைப் பறவை. ஈமம் - விறகடுக்கு
4. உள்ளாளம்,- ஒருவகைப் பாட்டு.

குட்டி யிட்டமுட்டை கூகைபேய்கள்
குறுநரி சென்றணங் காடுகாட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டில்இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டிஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (6)

சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடிஆடித்
தழலுள் எரியும் பிணத்தைவாங்கித்
தான்தடி தின்றணங் காடுகாட்டிற்
கழல்ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக்
காலுயர் வட்டணை இட்டுநட்டம்
அழல்உமிழ்ந் தோரி கதிக்கஆடும்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (7)

நாடும் நகரும் திரிந்துசென்று
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்டமாடே
முன்னிய பேய்க்கணம் சூழச்சூழக்
காடுங் கடலும் மலையும்மண்ணும்
விண்ணுஞ் சுழல அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (8)

துத்தங் கைக்கிள்ளை விளரிதாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதந் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோல்
தமருகங் குடமுழா மொந்தைவாசித்

---

6. பிட்டு - பிட்டம். அட்டம் - குறுக்கே.
7. தடி - மாமிசம். ஓரி - நரி.
8. மாடு - பக்கத்தில்.
9. கைக்கிள்ளை - கைக்கிளை. தகுணிதம் - தகுணிச்சம் என்றும் வழங்கும். கரடிகை - ஒருவகைப் பறை.

தத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (9)

புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமைசெய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசைகது வச்சிலம் பார்க்கஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. (10)

ஒப்பினை இல்லவன் பேய்கள்கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டையாடப்
பாடிருந் தந்நரி யாழ்அமைப்ப
அப்பனை அணிதிரு வாலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும்வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

3

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

மூத்த திருப்பதிகம்

பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே. (1)

10. கடமை - ஈமக்கடன். 1. கூளி - பேய்.

நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை எறிந்து சூழும் நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக் களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே. (2)

புட்கள் பொதுத்த புலால்வெண் டலையைப் புறமே நரிகவ்வ
அட்கென் றழைப்ப ஆந்தை வீச அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே. (3)

செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபேய் இரிந்தோடப்
பித்த வேடங் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே. (4)

முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி இடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே. (5)

வாளைக் கிளர வளைவாள் எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கட் டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக் குழகன் ஆடுமே. (6)

நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ்சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே. (7)

வேய்கள் ஓங்கி வெண்முத் துதிர வெடிகொள் சுடலையுள்
ஓயும் உருவில் உலறு கூந்தல் அலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும் பெருங்காட்டின்
மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே. (8)

---

2. சூழும் - சுற்றிலும்.
3. பொதுத்த - துளைத்த. ஊமன் - கோட்டான். பிட்க - பிளக்க.
5. முளரி - ஒருவகை முள்ளுச் செடி. பியற்கு - முதுகில்.
7. புழுக்கு - புழுக்கிய ஊன்.

கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண் டலையும் ஏமப் புகையும் எழுந்த பெருங்காட்டிற்
கொடுவெண் டலையும் பிறையுந் ததும்பக் கொள்ளென் றிசைபாடப்
படுவெண் துடியும் பறையுங் கறங்கப் பரமன் ஆடுமே. (9)

குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டு படர்ந்த இருள்சூழ் மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமலன் ஆடுமே. (10)

சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே. (11)

திருச்சிற்றம்பலம்

4

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

கிளர்ந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி
நெஞ்சம்என் பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்த்திகண்
டாய்தளரா துவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்
திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்மிருக்
குஞ்சென்னி ஈசனுக்கே. (1)

---

1. நெஞ்சம் என்பாய் - நெஞ்சம் என்று சொல்லப்படும் பொருளே; விளி. வந்தி - வணங்குவாயாக.

ஈசன் அவன்அல்லா தில்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான். (2)

பிரானென்று தன்னைப்பன் னாள்பர
வித்தொழு வார்இடர்கண்
டிரானென்ன நிற்கின்ற ஈசன்கண்
டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
கிடந்துபொம் மென்றுரைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன்
நீள்முடி அந்தணனே. (3)

அந்தணனைத் தஞ்சமென் றாட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்—கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணுதே கோள்நாகம்பூண்டானை
என்கண்டாய் நெஞ்சே இனி. (4)

இனிவார் சடையினிற் கங்கையென்
பாளைஅங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில்என்
செய்திகை யிற்சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்
தன்றுசெந் தீயில்மூழ்கத்
தனிவார் கணைஒன்றி னால்மிகக்
கோத்தஎஞ் சங்கரனே. (5)

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - எங்கொருநாள்
ஆவாவென் றாழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை. (6)

---

2. காக்கும் - காப்பான்.
3. இரைக்கும் - ஒலிக்கும்.
5. அங்கத்து இருந்த - திருமேனியில் ஒரு பாதியைக் கொண்டு வீற்றிருந்த.

உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு
கேட்கிற்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றுந்
தொடேல்இழிந் தோட்டந்தெங்கும்
திரைக்கின்ற கங்கையுந் தேன்நின்ற
கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித்
தலைவைத்த வேதியனே. (7)

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை ஆதிரைநன் னாளானைச் - சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாஎன்றான் கீழ். (8)

கீழா யினதுன்ப வெள்ளக்
கடல்தள்ளி உள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென்
பீர்விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டன்என்
தோளன்டைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன்
னாளுந் தலைநின்மினே. (9)

தலையாய ஐந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினஉணர்ந்தோர் காண்பர்—தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். (10)

கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினைநிகர் ஏதுமின்றித்

---

7. ஓட்டந்து - ஓடி. விரைக்கின்ற - நறுமணம் வீசுகின்ற. கில்லேன் அமா என்றான் - நான் ஆற்றலில்லாதவன், அப்பா என்றான்.

தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம்
மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்மடுந் தொல்வினையே. (11)

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும்—மெல்லியல்ஓர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. (12)

நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச
மேஇங்கோர் தஞ்சமென்று
மனையா ளையும்மக்கள் தம்மையுந்
தேறியோர் ஆறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன்நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான்அண்ட
வாணன் அடித்தலமே. (13)

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த வாறென்—முடித்தலத்தில்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ. (14)

நீநின்று தானவர் மாமதில்
மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட
வாறென் திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா
டரங்காப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யும்
மொய்கழற் புண்ணியனே. (15)

---

13. கொந்தாத - தாண்டாத.

புண்ணியர்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால்—திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு. (16)

அன்பால் அடைவதெவ் வாறுகொல்
மேலதோ ராடரவம்
தன்பால் ஒருவரைச் சாரஒட்
டாதது வேயும்அன்றி
முன்பா யினதலை யோடுகள்
கோத்தவை ஆர்த்துவெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர்
ஏறுகந் தேறுவதே. (17)

ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார்—வேறோர்
படங்குலவு நாகம்உமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. (18)

தமக்கென்றும் இன்பணி செய்திருப்
பேமுக்குத் தாம்ஒருநாள்
எமக்கொன்று சொன்னால் அருளுங்கொ
லாம்இணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப
தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பெறுதுட
னேகொண்ட உத்தமரே. (19)

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரம்அடுக்கித் தீயாமுன்—உத்தமனும்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. (20)

திருச்சிற்றம்பலம்

---

19. உடனே கொண்ட - தம்முடனே இருத்திக்கொண்ட.
20. உலந்தக்கால் - இறந்தால். கேள் ஆழி - கேட்பா யாக, அதன் கண்ணே ஆழ்வாயாக.

5

காரைக்காலம்மையார்

அருளிச்செய்த

அற்புதத் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். (1)

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்—சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. (2)

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள். (3)

ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ கேளாமை—நீளாகம்
செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மைஆட் கொண்ட இறை. (4)

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான்—இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான். (5)

வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தால்இருண்ட மொய்யொளிசேர் கண்டத்
என்னெஞ்சத் தான்என்பன் யான். [தான்

3. பவர் - கொடிபோன்ற.

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்—யானேஅக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். (7)

ஆயினேன் ஆள்வா னுக் கன்றே பெறற்கரியன்
ஆயினேன் அஃதன்றே ஆமாறு—தூய
புனற்கங்கை ஏற்றானோர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை ஏற்றான் அருள். (8)

அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு. (9)

எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று. (10)

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன்—ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது. (11)

அதுவே பிரானாமா றாட்கொள்ளு மாறும்
அதுவே இனிஅறிந்தோம் ஆனல்—அதுவே
பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. (12)

---

8. கங்கையையும் ஏற்றையும் உடையவன். அனலுக்கு அங்கையை ஏந்தினவன்.

12. பனிக்கு அணங்கு கண்ணியார் - பனியைக் கண்டு வாடும் கொன்றை மாலையை உடையவர். தனிக்கண் அங்கு வைத்தார்.

தகவுடையார் தாம்உளரேல் தார்அகலம் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர்—மிகஅடர
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவந் தான். (13)

தானே தனிநெஞ்சந் தன்னை உயக்கொள்வான்
தானே பெருஞ்சேமஞ் செய்யுமால் —தானேஓர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து. (14)

நினைந்திருந்து வானவர்கள் நீண்மலராற் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்
கென்செய்வான் கொல்லோ இனி. (15)

இனியோநாம் உய்ந்தோம் இறைவன்தாள் சேர்ந்தோம்
இனியோர் இடர்இலோம் நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். (16)

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன். (17)

அரனென்கோ நான்முகன் என்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்—முரண்அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று. (18)

---

13. தார்அகலம் - மாலையையணிந்த மார்பு.

14. பூண் ஆகத்தால்.

16. வினைக்கு அடலை ஆக்குவிக்கும் - இருவினைகளுக்கும் வன்மையை உண்டாக்கும்.

17. தரிசிப்பவர், தொழுபவர், தியானிப்பவர் என்னும் மூன்று வகையினரைப்பற்றிச் சொல்கிறார்.

இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை—என்றுமோர்
மூவா மதியானை மூவே ழுலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. (19)

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன். (20)

அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல்காற் றாவான்—அவனே
இயமான னாய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. (21)

வந்திதனைக் கொள்வதே ஒக்கும்இவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ—வந்தோர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
பிரானீர்உம் சென்னிப் பிறை. (22)

பிறையும் புனலும் அனல்அரவுஞ் சூடும்
இறைவர் எமக்கிரங்கா ரேனும்—கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டேம் என்றென் றிருக்குமே
எந்தையா உள்ளம் இது. (23)

இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமா
றிதுவன்றே என்றனக்கோர் சேமம்—இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்ற திங்கு. (24)

---

19. அறிவு எளிதே.

23. எம் தையா உள்ளம் - எம்முடைய புண்படாத மனம்.

இங்கிருந்து சொல்லுவதென் எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும்—பொங்கிரவில்
ஈமவனத் தாடுவதும் என்னுக்கென் றாராய்வோம்
நாம்அவனைக் காண லுற்ற ஞான்று. (25)

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பின்—ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
அக்கயலே வைத்த அரவு. (26)

அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்—முரண்அழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண். (27)

பூணாக ஒன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக்—கோள்நாகம்
பொன்முடிமேற் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்
கென்முடிவ தாக இவர். (28)

இவரைப் பொருள்உணர மாட்டாதார் எல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர்—இவர்தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர். (29)

பிறர்அறிய லாகாப் பெருமையருந் தாமே
பிறர்அறியும் பேருணர்வுந் தாமே—பிறருடைய
என்பே அணிந்திரவில் தீயாடும் எம்மானார்
வன்பேயுந் தாமும் மகிழ்ந்து. (30)

---

25. என்னுக்கு - எதற்கு.

26. அக்கு அயலே - எலும்புக்கு அருகில்.

28. அதளின் நாணாக - தோலாடைக்கு மேலே அரை ஞாணாக.

மகிழ்தி மடநெஞ்சே மானிடரின் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய்—இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. 31

பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்தொழுகிற் றொக்கும்—தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெறித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல். 32

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே—மேலுவந்த
தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம். 33

ஆமா றறியாவே வல்வினைகள் அந்தரத்தே
நாமாள்என் றேத்தார் நகர்மூன் றும்—வேமா
றொருகணையாற் செற்றானை உள்ளத்தால் உள்ளி
அருகணையா தாரை அடும். 34

அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி இருள்போந்
திடங்கொண் டிருக்கின்ற தொக்கும்—படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு. 35

மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்துழலும் ஆவா—உறுவான்
தளரமீ தோடுமேல் தான்அதனை அஞ்சி
வளருமோ பிள்ளை மதி. 36

மதியா அடல்அவுணர் மாமதில்மூன் றட்ட
மதியார் வளர்சடையி னானை—மதியாலே
என்பாக்கை யால்இகழா தேத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. 37

ஈண்டொளிசேர் வானத் தெழுமதியை வாளரவம்
தீண்டச் சிறுகியதே போலாதே—பூண்டதோர்

தாரேறு பாம்புடையான் மார்பில் தழைத்திலங்கு
கூரேறு கார்ஏனக் கொம்பு. 38

கொம்பினை ஓர் பாகத்துக் கொண்ட குழகன்றன்
அம்பவள மேனி யதுமுன்னம்—செம்பொன்
அணிவரையே போலும் பொடிஅணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து. 39

மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதம்—குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்டம் ஒருவு. 40

ஒருபால் உலகளந்த மாலவனும் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால்—இருபாலும்
நின்னுருவம் ஆக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. 41

நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றே நீஅதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ—பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர மாட்டாதோ என்னே
இளங்குழவித் திங்கள் இது. 42

திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென் றார்திரியேல்
எங்கள் பெருமானே என்றிரந்து—பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே
தானே அறிவான் தனக்கு. 43

தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவா றென்கொல்—மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். 44

---

38. பன்றிக் கொம்புக்குச் சிறுகிய பிறை உவமை. போலாதே: வினா.

42. குழவித்தாய் - இளமையை உடையதாகி.

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப்—பிரானவனை
எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது. 45

எளிய திதுஅன்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர் ஆவா—ஒளிகொள்மிடற்
றெந்தைஅராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம். 46

திறத்தால் மடநெஞ்சே சென்றடைவ தல்லால்
பெறத்தானும் ஆதியோ பேதாய்—நிறத்த
இருவடிக்கண் ஏழைக் கொருபாகம் ஈந்தான்
திருவடிக்கட் சேருந் திரு. 47

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்—ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவுந் தேரா
ததுமதியொன் றில்லா அரா. 48

அராவி வளைத்தனைய அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய ஓடி—விராவுதலாற்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடே ஒப்பான் சடை. 49

சடைமேல்அக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும்—முடிமேல்
வலப்பாலக் கோலமதி வைத்தான்தன் பங்கின்
குலப்பாவை நீலக் குழல். 50

---

46. திறம் எளியதிது அன்றே.

47. இரு வடி கண் இரண்டு மாவடுவின் பிளப்பைப் போன்ற கண்களை உடைய.

49. போலாவே : வினா.

50. அம்பிகையின் குழலுக்குக் கொன்றைக்கனி உவமை.

குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்
தெழிலாக வைத்தேக வேண்டா—கழல்ஆர்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு. 51

அங்கண் முழுமதியஞ் செக்கர் அகல்வானத்
தெங்கும் இனிதெழுந்தால் ஒவ்வாதே—செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 52

சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேண்உலவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப்—போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்ஈசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். 53

காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஓருருவாய் நின்னோ டுழிதருவான்—நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணுமே பண்டு. 54

பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததும் அன்றியே—உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 55

வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயிற்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய்—படுவெண்
புலாற்றலையின் உள்ளூண் புறம்பேசக் கேட்டோ
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. 56

நீஉலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய்—தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடஅரவம் மேலாட மிக்கு. 57

---

52. சடைக்குச் செவ்வானமும் சிரமாலைக்கு முழுமதிய வரிசையும் உவமை.

53. முடிக்கு மேகம் உவமை.

54. மேனியான் - திருமால்.

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே—செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்றன் பொன்உருவிற்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு. 58

பண்புணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா—பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவ
தெவ்வுருவோ நின்உருவ மேல். 59

மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே—மாலாய
கைம்மா மதகளிற்றுக் கார்உரிவை போர்த்தபோ
தம்மான் திருமேனி அன்று. 60

அன்றுந் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் நம்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது. 61

ஏதொக்கும் ஏதொவ்வா தேதாகும் ஏதாகா
தேதொக்கும் என்பதனை யார்அறிவார்—பூதப்பால்
வில்வேட னாகி விசயனோ டேற்றநாள்
வல்வேடன் ஆன வடிவு. 62

வடிவுடைய செங்கதிர்க்கு மாறாய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேல் திங்கள் நிலா. 63

நிலாஇலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ—நிலாஇருந்த

---

58. சடைக்கு நெருப்பும் உமாதேவியின் குழலுக்கு இருளும் உவமை.

62. பூதப்பால் – பழங்காலத்தில்; பூதம் - இறந்தகாலம்.

செக்கரவ் வானமே ஒக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று. 64

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. 65

மிடற்றில் விடமுடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறே—மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணங் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு. 66

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாள்அருவி தூங்குதலால்—ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடிவின் மேய சிலம்பு. 67

சிலம்படியாள் ஊடலைத் தான்தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி—நலம்பெற்
றெதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி. 68

முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோங் கூற்றைப்—படிமேற்
குனியவல மாமடிமை கொண்டாடப் பெற்றோம்
இனிஅவலம் உண்டோ எமக்கு. 69

எமக்கிதுவோ பேராசை என்றுந் தவிரா
தெமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய்—அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம். 70

---

69. குனியும்படியாக வெற்றி உண்டாகும் அடிமைத் தன்மையைப் பெற்றோம். அவலம் உண்டோ - துன்பம் உண்டோ.

இடப்பால வானத் தெழுமதியை நீஒர்
மடப்பாவை தன்னருகே வைத்தால்—இடப்பாகம்
கொண்டாள் மலைப்பாவை கூறுன்றுங் கண்டிலங்காண்
கண்டாயே முக்கண்ணாய் கண். 71

கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான்செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன்—துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து. 72

கருத்தினால் நீகருதிற் றெல்லாம் உடனே
திருத்தலாஞ் சிக்கெனநான் சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது. 73

ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்தட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பராற்—பேதையர்கள்
எண்ணா திடும்பலியால் என்னே நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். 74

கலங்கு புனற்கங்கை யூடால லாலும்
இலங்கு மதிஇயங்க லாலும்—நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்க லாலும்
விரிசடையாங் காணில் விசும்பு. 75

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப—முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி. 76

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு. 77

---

74. அட்ட - சொரிய.
75. சடை விசும்பு ஆம்.
77. அறிந்து ஆடும்; ஆடும் - ஆடுவிராக.

அரங்கமாப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய்—இரங்குமேல்
என்னாக வையான்றான் எவ்வுலகம் ஈந்தளியான்
பன்னாள் இரந்தாற் பணிந்து. 78

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத்—துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு. 79

செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன்னின் றடர்த்த—திருத்தக்க
மாலயனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுரைத்த கால். 80

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேர் அறுத்தோம்—கோல
அரணார் அவிந்தழிய வெந்தீஅம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. 81

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத்தீக்கொடியின்பெற்றியவாம்-நேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின். 82

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடு மீண்டிசைந்தால்
என்போலுங் காண்பார்கட் கென்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது. 83

நெடிதாய பொங்கெரியும் தண்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும்—கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினில்அழியக்
கண்டாலும் முக்கணாங் கண். 84

---

79. சிந்தையார் என்றது தம் மனத்தையே.
80. கால் அடர்த்த.
81. அரணார் - திரிபுராதிகள்.
82. சடை - பெற்றியவாம்.

கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும்—விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். 85

பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ
தறினும் உறுதொழியு மேனும்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம். 86

நாமாலை சூடியும் நம்ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய்—நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றேற தடுமே
எறிவினையே என்னும் இருள். 87

இருளின் உருஎன்கோ மாமேகம் என்கோ
மருளில் மணிநீலம் என்கோ—அருள்எமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்க வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத் தொளி. 88

ஒளிவிலி வன்மகனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தனையிற் சேர்வாய்—ஒளிநஞ்சம்
உண்டவா யஃதிருப்ப உன்னுடைய கண்டம்இருள்
கொண்டவா றென்இதனைக் கூறு. 89

கூறெமக்கீ தெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்
டேற மிகப்பெருகின் என்செய்தி—சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை. 90

---

87. **வினை என்னும் இருள் எற்று ஏது அடும்; எற்று - எவ்வாறு; ஏது - எதனை.**

89. **ஒளி விலி வன்மகனை** - **ஒளியையுடைய வில்லைப்** பெற்ற வலிய மகனாகிய மன்மதனை.

90. **தெழித்து** - ஒலித்து.

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாம்உணர்ந்தோம் கண்டீர்—தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே
எம்மைப் புறம்உரைப்ப தென். 91

என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையனும்—பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்
கருளாக வைத்த அவன். 92

அவன்கண்டாய் வானோர் பிரானாவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள வண்ணன்—அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு. 93

விருப்பினால் நீபிரிய கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ என்னோ—பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள். 94

அவளோர் குலமங்கை பாகத் தகலாள்
இவளோர் சலமகளும் ஈதே—தவளநீ
றென்பணிவீர் என்றும் பிரிந்தறியீர் ஈங்கிவருள்
அன்பணியார் சொல்லுமின்இங் கார். 95

ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சின் உள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. 96

மறைத்துலகம் ஏழினிலும் வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்து நீளரிப்ப மூவுலகும் உள்புக்
களைந்தெழுந்த செந்தீ அழல். 97

---

95. சலமகள் - கங்கை. அன்பு அணியார் - அன்புக்கு நெருக்க மானவர்.
96. தாயம் - உரிமை.

அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ—கழலாடப்
பேயோடு கானிற் பிறங்க அனல்ஏந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. 98

செப்பேந் திளமுலையாள் காணவோ தீப்படுகாட்
டப்பேய்க் கணமவைதாங் காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தான் அங்காந் தனல்உமிழும் ஐவாய
நாகத்தாய் ஆடுன் நடம். 99

நடக்கிற் படிநடுங்கும் நோக்கின் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும்—அடுக்கற்
பொருமேறோ ஆனேறோ பொன்னொப்பாய் நின்னே
றுருமேறோ ஒன்றா உரை. 100

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினால் காரைக்காற் பேய்சொற்—பரவுவார்
ஆராத அன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. 101

திருச்சிற்றம்பலம்

5

ஐயடிகள் காடவர்கோன்நாயனார்

அருளிச்செய்த

க்ஷேத்திரத் திருவெண்பா

திருச்சிற்றம்பலம்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 1

---

100. பொரும் ஏறு - சிங்கம். உருமேறு - இடி.
1. ஓடுகின்ற - வாழ்க்கையில் இயங்குகின்ற. நல் அச்சு இற்று அம்பலமே நண்ணாமுன்; அச்சு - உடம்பு.

கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாஅடங்கா முன்னம்—பொடிஅடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட. 2

குந்தி நடந்து குனிந்தொருகை கோல்ஊன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. 3

காளை வடிவொழிந்து கையறவோ டையுறவாய்
நாளும் அணுகி நலியாமுன்—பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற் காளாய்க்
கவிழ்கமுகம் கூம்புகஎன் கை. 4

வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேற் கொண்டிருந்து—கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான்பாதம் சேர். 5

காலைக் கலையிழையாற் கட்டித்தாங் கையார்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி—மேலோர்
பருக்கோடி மூடிப் பலர்அழா முன்னம்
திருக்கோடி கா அடைநீ சென்று. 6

மாண்டுவாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே
வேண்டுவாய் ஆகி விரைந்தொல்லைப்—பாண்டவாய்த்

---

2. **கடு அடுத்த நீர்**-கடுக்காய்க் கஷாயம். பாழ்க்கோட்டம் - மயானம். குடந்தைக் கீழ்க் கோட்டம் - நாகேசுவரர் திருக்கோயில்.

3. **ஐ ஆறு வாயாறு பாயாமுன்** - கோழையின் பெருக்கு வாய்வழியே பாய்வதற்குமுன்.

4. **முகம் கவிழ்க** - வணங்குக.

5. **திருத்துருத்தி** - சோழநாட்டில் உள்ள குத்தாலம் என்னும் தலம்

6. **கலை இழையால்** - ஆடையின் நூலால். **பருகோடி மூடி** - பெரிய புதிய ஆடையை மூடி.

தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை. 7

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்—கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. 8

அழுகு திரிகுரம்பை ஆங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா—கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் தென்பால்
குழித்தண் டலையானைக் கூறு. 9

படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மைக்—கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
டோடேந்தி உண்ப துறும். 10

குழீஇயிருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம்—தழீஇயிருந்தும்
என்னானைக் காவா இதுதகா தென்னாமுன்
தென்னானைக் காவடைநீ சென்று. 11

குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை அங்காந் திளைத்து. 12

---

8. எடுங்கள் அத்தா.

9. குழித்தண்டலை-சோழநாட்டிலுள்ள கடம்பர் கோயில் என்னும் தலம்; இப்போது குளித்தலை என வழங்கும்.

11. என் ஆனைக்கு ஆவா இது தகாது; ஆனையென்றது அருமைப் பாட்டாற் சொல்லியது. ஆவா - ஐயோ.

12. மயிலைத் திருப்புன்னையங்கானல்: "மட்டிட்ட புன்னை யங்கானல்" (தேவாரம்.) இளைத்து இரு.

காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து—சூளையர்கள்
ஓகாளஞ் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து. 13

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே—நல்ல
கிளைகுளத்து நீர்அளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து. 14

அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன்—நெஞ்சமே
பேய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து. 15

இட்ட குடிநீர் இருநாழி ஓர்உழக்காச்
சட்டஒரு முட்டைநெய் தான்கலந்—தட்ட
அருவாச்சா ரென்றங் கழாமுன்னம் பாச்சிற்
றிருவாச்சி ராமமே சேர். 16

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடன்இரா வண்ணம்—அழிந்த
திராமலையா கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர். 17

இழவாடிச் சுற்றத்தார் எல்லாருங் கூடி
விழவாடி ஆவிவிடா முன்னம்—மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. 18

உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன்—கொள்ளிடத்தின்

---

13. ஈளையர்கள் - இருமலை உடைய கிழவர்கள். சூளையர்கள் ஓகாளம் செய்யாமுன் - விலைமகளிர் வெறுப்பதற்கு முன்னே.

17. இராமல் ஐயா.

தென்றிருவாப் பாடியான் தெய்வமறை நான்கனையும்
தன்றிருவாய்ப் பாடியான் தாள். 19

என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு. 20

கரம்ஊன்றிக் கண்இடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரம்ஊன்றி வாய்குதட்டா முன்னம்—புரம்மூன்றும்
தீச்சரத்தாற் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து. 21

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்
டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின். 22

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விளையாதே—கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்றன்
பாடரவங் கேட்ட பகல். 23

உய்யும் மருந்திதனை உண்மின் எனஉற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்கால்—பைய
எழுந்திருமி யான்வேண்டேன் என்னுமுன் நெஞ்சே
செழுந்திருமயானமே சேர். 24

திருச்சிற்றம்பலம்

---

19. மறை நான்கையும் தன் திரு வாயினாலே பாடியவன்.

21. தாடகேச்சரம் என்பது திருப்பனந்தாளில் உள்ள திருக்கோயிலின் பெயர்.

6

சேரமான்பெருமாள்நாயனார்

அருளிச்செய்த

பொன்வண்ணத்தந்தாதி

திருச்சிற்றம்பலம்

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே. 1

ஈசனைக் காணப் பலிகொடு
செல்லஎற் றேஇவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ
லாம்என்று பேதையர்முன்
தாயெனை ஈர்ப்பத் தமியேன்
தளரஅத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லஎன் றான்இமை
விண்டன வாட்கண்களே. 2

கண்களங் கஞ்செய்யக் கைவளை
சோரக் கலையுஞ்செல்ல
ஒண்களங் கண்நுதல் வேர்ப்பஒண்
கொன்றையந் தார்உருவப்

---

2. இறைவன் பிட்சாடனத் திருக்கோலம் கண்டு காமுற்ற பெண் கூறியது.

3. கலை - ஆடை. களமும் கண்ணும் நுதலும் வேர்ப்ப.

பெண்களங் கம்பிவள் பேதுறும்
என்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்பிசை பாடநின்
றாடும் பரமனையே. 3

பரமனை யேபலி தேர்ந்துநஞ்
சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரங் கொண்டுங்
கொடுப்பது பேரருளாம்
சரமனை யேஉடம் பட்டும்
உடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகுமுக்
கண்ணுடை மாதவனே. 4

தவனே உலகுக்குத் தானே
முதல்தான் படைத்தஎல்லாம்
சிவனே முழுதும்என் பார்சிவ
லோகம் பெறுவர்செய்ய
அவனே அடல்விடை ஊர்தி
கடலிடை நஞ்சம்உண்ட
பவனே எனச்சொல்லு வாரும்
பெறுவர்இப் பாரிடமே. 5

இடமால் வலந்தான் இடப்பால்
துழாய்வலப் பால்ஒண்கொன்றை
வடமாலிடந்துகில் தோல்வலம்
ஆழி இடம்வலம்மான்
இடமால் கரிதால் வலஞ்சே
திவனுக் கெழில்நலஞ்சேர்
குடமால் இடம்வலங் கொக்கரை
யாம்எங்கள் கூத்தனுக்கே. 6

---

4. பரமனை - பிறர் வீடு.
6. சங்கர நாராயணத்திருக்கோலம். சேது - சிவப்பு.

கூத்துக் கோலம்இவர் ஆடித்
திரிவது கோல்வளைகள்
பாத்துக் கொலாம்பலி தேர்வது
மேனி பவளங்கொலாம்
ஏத்துக் கொலாம்இவர் ஆதரிக்
கின்ற திமையவர்தம்
ஓத்துக் கொலாம்இவர் கண்டதிண்
டைச்சடை உத்தமரே. 7

உத்தம ராய்அடி யார்உல
காளத் தமக்குரிய
மத்தம் அராமதி மாடம்
பதிநலஞ் சீர்மைகுன்று
எத்தம ராயும் பணிகொள்ள
வல்ல இறைவர்வந்தென்
சித்தம ராய்அக லாதுடன்
ஆடித் திரிதவரே. 8

திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தின்
உள்ளுந் திரிதரினும்
அரிதவர் தன்மை அறிவிப்ப
தாயினும் ஆழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர்
சாந்தம்கண் மூன்றொடொன்றும்
பரிதவர் தாமே அருள்செய்து
கொள்வர்தம் பல்பணியே. 9

பணிபதம் பாடிசை ஆடிசை
யாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற் கொளப்பனை
அத்தவற் கேஅடிமை

---

7. பாத்து - பகுத்து.
8. மராய் - மருவி. திரிதவர் - திரிதருவர்.
9. ஒன்றும் பா. தவர் - தவத்தையுடையவர்.

துணிபதங் காமுறு தோலொடு
நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காட்டிடுஞ் சஞ்சலம்
நீஎன் தனிநெஞ்சமே. 10

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர்
ததும்ப முகம்மலர
அஞ்செங் கரதலங் கூம்பஅட்
டாங்கம் அடிபணிந்து
தஞ்சொல் மலரால் அணியவல்
லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத்
தான்பெரு வானகமே. 11

வானகம் ஆண்டுமந் தாகினி
ஆடிநந் தாவனஞ்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல்
வோருஞ் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப்
போருங் கனகவண்ணப்
பானிற நீற்றற் கடியரும்
அல்லாப் படிறருமே. 12

படிறு யினசொல்லிப் பாழ்உடல்
ஓம்பிப் பலகடைச்சென்
றிடறு தொழிதும் எழுநெஞ்ச
மேஎரி ஆடிஎம்மான்
கடல்தா யினநஞ்சம் உண்ட
பிரான்கழல் சேர்தல்கண்டாய்
உடல்தான் உளபயன் ஆவசொன்
னேன்இவ் வுலகினுள்ளே. 13

---

10. பதங்கன் - சூரியன்.
12. சிதவல் - கந்தை. அடியார் சூடிச்செல்வோர்; அல்லாப் படிறர் இரப்போர்; படிறர் - வஞ்சகர்.

உலகா ளுறுவீர் தொழுமின்விண்
ணாள்வீர் பணிமின்நித்தம்
பலகா முறுவீர் நினைமின்
பரமனொ டொன்றலுற்றீர்
நலகா மலரால் அருச்சிமின்
ஆள்நர கத்துநிற்கும்
அலகா முறுவீர் அரன்அடி
யாரை அலைமின்களே. 14

அலையார் புனல்அனல் ஞாயி
றவனி மதியம்விண்கால்
தொலையா உயிர்உடம் பாகிய
சோதியைத் தொக்குமினோ
தலையாற் சுமந்துந் தடித்துங்
கொடித்தேர் அரக்கன்என்னே
கலையான் ஒருவிரல் தாங்ககில்
லான்விட்ட காரணமே. 15

காரணன் காமரம் பாடஓர்
காமர்அம் பூடுறத்தன்
தாரணங் காகத் தளர்கின்ற
தையலைத் தாங்குவர்யார்
போரணி வேற்கண் புனற்படம்
போர்த்தன பூஞ்சுணங்கார்
ஏரணி கொங்கையும் பொற்படம்
மூடி இருந்தனவே. 16

இருந்தனம் எய்தியும் நின்றுந்
திரிந்துங் கிடந்தலைந்தும்

---

14. நல்ல காவில் உள்ள மலரால். ஆள் நரகத்து நிற்கும் அல - ஆளுகின்ற நரகத்தில் நிற்பதற்குக்காரணமான அறமல்லாத செயல்களை. அடியவரை வருத்துபவர் நரகம் புகுவர் என்றபடி.

16. காமர் அம்பு ஊடுற. தார் அணங்காக - மாலை வருந்துவதற்குரிய பொருளாக.

வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு
போகநெஞ் சேமடவாள்
பொருந்திய பாகத்துப் புண்ணியன்
புண்ணியல் சூலத்தெம்மான்
திருந்திய போதவன் றூனே
களையும்நந் தீவினையே. 17

தீவினை யேனைநின் றைவர்
இராப்பகல் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன்
வெறுத்துவிட் டேன்வினையும்
ஓவின துள்ளந் தெளிந்தது
கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கணன்
ஆரணன் பாதங்களே. 18

பாதம் புவனி சுடர்நய
னம்புவ னம்உயிர்ப்போங்
கோதம் உடுக்கை உயர்வான்
முடிவிசும் பேஉடம்பு
வேதம் முகம்திசை தோள்மிகு
பண்மொழி கீதம்என்ன
போதம் இவற்கோர் மணிநிறந்
தோற்பது பூங்கொடியே. 19

கொடிமேல் இடபமுங் கோவணக்
கீளும்ஓர் கொக்கிறகும்
அடிமேற் கழலும் அகலத்தில்
நீறும்ஐ வாய்அரவும்
முடிமேல் மதியும் முருகலர்
கொன்றையும மூவிலைய
வடிவேல் வடிவும்என் கண்ணுள்ளஎப்
போதும் வருகின்றவே. 20

---

18. செத்தி - செதுக்கி.
19. ஓதம் உடுக்கை - கடலே ஆடை.

வருகின்ற மூப்பொடு தீப்பிணிக்
கூற்றம்வை கற்குவைகல்
பொருகின்ற போர்க்கொன்றும் ஆற்றகில்
லேன்பொடி பூசிவந்துன்
அருகொன்றி நிற்க அருளுகண்
டாய்அழல் வாய்அரவம்
வெருகொன்ற வெண்மதி செஞ்சடை
மேல்வைத்த வேதியனே. 21

வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானம்என்னும்
சோதிஎன் பால்கொள்ள உற்றுநின்
றேற்கின்று தொட்டிதுதான்
நீதிஎன் றுன்செல்வம் ஆவதென்
றேன்மேல் நினைப்புவண்டேர்
ஓதிநின் போல்வகைத் தேஇரு
பாலும் ஒழித்ததுவே. 22

ஒழித்தேன் பிறவியை ஊர்ந்தேன்
உவகையை ஓங்கிற்றுள்ளம்
இழித்தேன் உடம்பினை ஏலேன்
பிறரிடை இம்மனையும்
பழித்தேன் பழியே விளைக்கும்பஞ்
சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் சிவன்அடி சேர்ந்தேன்
இனிமிகத் தெள்ளியனே. 23

தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன்
தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும்
பெறேன்உரைத் தார்உரைத்த

---

23. ஏலேன் - இரக்கமாட்டேன்.

கள்ளிய புக்காற் கவிகள்ஒட்
டார்கடல் நஞ்சயின்றாய்
கொள்ளிய அல்லகண் டாய்புன்சொல்
ஆயினுங் கொண்டருளே. 24

அருளால் வருநஞ்சம் உண்டுநின்
றுயை அமரர்குழாம்
பொருளார் கவிசொல்ல யானும்புன்
சொற்கள் புணர்க்கலுற்றேன்
இருளா சறஎழில் மாமதி
தோன்றவும் என்றதென்ன
வெருளா ததிர்சென்று மின்மினி
தானும் விரிகின்றதே. 25

விரிகின்ற ஞாயிறு போன்றது
மேனிஅஞ் ஞாயிறுசூழ்ந்
தெரிகின்ற வெங்கதிர் ஒத்தது
செஞ்சடை அச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது
கண்டம்அக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள
தால்எந்தை ஒண்பொடியே. 26

பொடிக்கின் றிலமுலை போந்தில
பற்சொற் பொருள்தெரியா
முடிக்கின் றிலகுழல் ஆயினும்
கேண்மின்கள் மூரிவெள்ளம்
குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங்
கண்டன்மெய்க் கொண்டணிந்த
கடிக்கொன்றை நாறுகின் றாள்அறி
யேன்பிறர் கட்டுரையே. 27

---

24. கள்ளிய - திருட.
27. மேகத்தைப்போன்ற கரிய கண்டத்தை உடையவன்

உரைவளர் நான்மறை ஓதி
உலகம் எலாந்திரியும்
விரைவளர் கொன்றை மருவிய
மார்பன் விரிசடைமேல்
திரைவளர் கங்கை நுரைவளர்
தீர்த்தனு செறியச்செய்த
கரைவளர் வொத்துள தாற்சிர
மாலைஎம் கண்டனுக்கே. 28

கண்டங் கரியன் கரியீர்
உரியன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான்
சிறுமான் தரித்தபிரான்
பண்டன் பரம சிவன்ஓர்
பிரமன் சிரம்அரிந்த
புண்டங் கயிலன் பயில்ஆர
மார்பன்எம் புண்ணியனே. 29

புண்ணியன் புண்ணியல் வேலையன்
வேலைய நஞ்சன் அங்கக்
கண்ணியன் கண்ணியல் நெற்றியன்
காரணன் கார்இயங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன்
பாணி கொளஉமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடலன்
ஆடற் பசுபதியே. 30

பதியார் பலிக்கென்று வந்தார்
ஒருவர்க்குப் பாவைநல்லீர்
கதியார் விடைஉண்டு கண்மூன்
றுளகறைக் கண்டம்உண்டு

---

30. அங்கக்கண்ணியன் - எலும்பு மாலையை அணிந்தவன்.

கொதியார் மழுஉண்டு கொக்கரை
உண்டிறை கூத்தும்உண்டு
மதியார் சடைஉள மால்உள
தீவது மங்கையர்க்கே. 31

மங்கைகொங் கைத்தடத் திங்குமக்
குங்குமப் பங்கநங்கி
அங்கமெங் குங்நெகச் சங்கமங்
கைத்தலத் துங்கவர்வான்
கங்கைநங் கைதிரைப் பொங்குசெங்
கண்அர வங்கள்பொங்கப்
பங்கிதங் கும்மலர்த் திங்கள்தங்
கும்முடிப் பண்டங்கனே. 32

பண்டங்கன் வந்து பலிதாஎன்
றான்பக லோற்கிடென்றேன்
அண்டங் கடந்தவன் அன்னம்என்
றான்அயன் ஊர்திஎன்றேன்
கொண்டிங் குனையம்பெய் என்றான்
கொடித்தேர் அநங்கன்என்றேன்
உண்டிங் கமைந்ததென் றற்கது
சொல்ல உணர்வுற்றதே. 33

உற்றடி யார்உல காளவோர்
ஊணும் உறக்கும்இன்றிப்
பெற்றம தாவதென் றேறும்
பிரான்பெரு வேல்நெடுங்கட்

---

31. மங்கையர்க்கு ஈவதாகிய மால் உள; மால் - காம மயக்கம்.

33. பலி தா - பிச்சை தா, பல் இதா. அன்னம் - சோறு, அன்னப்பறவை. ஐயம் பெய் - பிச்சையெடு, ஐந்து அம்புகளை எய்வாயாக.

சிற்றடி யாய்வெண்பற் செவ்வாய்
இவள்சிர மாலைக்கென் றும்
இற்றிடை யாம்படி யாகஎன்
னுக்கு மெலிக்கின்றதே. 34

மெலிக்கின்ற வெந்தீ வெயில்வாய்
இழுதழல் வாய்மெழுகு
கலிக்கின்ற காமங் கரதலம்
எல்லி துறக்கம்வெங்கூற்
றொலிக்கின்ற நீருறு தீஒளி
யார்முக்கண் அத்தர்மிக்க
பலிக்கென்று வந்தார் கடிக்கொன்றை
சூடிய பல்லுயிரே. 35

பல்உயிர் பாகம் உடல்தலை
தோல்பக லோன்மறல்பெண்
வில்லிஓர் வேதியன் வேழம்
நிரையே பறித்துதைத்துப்
புல்லியுஞ் சுட்டும் அறுத்தும்
உரித்துங்கொண் டான்புகழே
சொல்லியும் பாடியும் ஏத்தக்
கெடும்நங்கள் சூழ்துயரே. 36

துயருந் தொழும்அழும் சோரும்
துகிலுங் கலையுஞ்செல்லப்
பெயரும் பிதற்றும் நகும்வெய்
துயிர்க்கும் பெரும்பிணிகூர்ந்
தயரும் அமர்விக்கும் மூரி
நிமிர்க்கும்அந் தோஇங்ஙனே
மயரும் மறைக்காட் டிறையினுக்
காட்பட்ட வாணுதலே. 37

---

36. பகலோன் பல்லைப் பறித்து, மறல் (யமன்) உயிரை உதைத்து, பெண்ணின்பாகம் புல்லி, வில்லி (காமன்) உடல் சுட்டு, வேதியன் (பிரமன்) தலை அறுத்து, வேழத்தின் தோலை உரித்துப் புகழ் கொண்டான் என்று முறையே கூட்டுக.

வாணுதற் கெண்ணம்நன் றன்று
வளர்சடை எந்தைவந்தால்
நாணுதற் கெண்ணுள் பலிகொடு
சென்று நகும்நயந்து
பேணுதற் கெண்ணும் பிரமன்
திருமா லவர்க்கரிய
தாணுவுக் கென்றோ இராப்பகல்
நைந்திவள் தாழ்கின்றதே. 38

தாழுஞ் சடைசடை மேலது
கங்கைஅக் கங்கைநங்கை
வாழுஞ் சடைசடை மேலது
திங்கள்அத் திங்கட்பிள்ளை
போழுஞ் சடைசடை மேலது
பொங்கர வவ்வரவம்
வாழுஞ் சடைசடை மேலது
கொன்றைஎம் மாமுனிக்கே. 39

முனியே முருகலர் கொன்றையி
னுய்என்னை மூப்பொழித்த
கனியே கழலடி அல்லாற்
களைகண்மற் றொன்றும்இலேன்
இனியேல் இருந்தவஞ் செய்யேன்
திருந்தஅஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கடம்
ஆர்க்கினிச் சாற்றுவனே. 40

சாற்றுவன் கோயிற் றலையும்
மனமுந் தவம்இவற்றால்
ஆற்றுவன் அன்பெனும் நெய்சொரிந்
தாற்றியஅஞ் சொல்மலரால்

---

40. அஞ்சே நினைந்து – பஞ்சாட்சரத்தையே தியானித்து.

எற்றுவன் ஈசன்வந் தென்மனத்
தான்என் றெழுந்தலரே
தூற்றுவன் தோத்திரம் ஆயின
வேஇனிச் சொல்லுவனே. 41

சொல்லா தனகொழு நாஅல்ல
சோதியுட் சோதிதன்பேர்
செல்லாச் செவிமரம் தேறித்
தொழாதகை மண்திணிந்த
கல்லாம் நினையா மனம்வணங்
காத்தலை யும்பொறையாம்
அல்லா அவயவந் தானும்
மனிதர்க் கசேதனமே. 42

தனக்குன்றம் மாவையஞ் சங்கரன்
றன்னருள் அன்றிப்பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா
நினைவன் மதுவிரியும்
புனக்கொன்றை யான்அரு ளாற்புழு
வாகிப் பிறந்திடினும்
எனக்கென்றும் வானவர் பொன்னுல
கோடொக்க எண்ணுவனே. 43

எண்ணம் இறையே பிழைக்குங்
கொலாம்இமை யோர்இறைஞ்சும்
தண்ணம் பிறைச்சடைச் சங்கரன்
சங்கக் குழையன்வந்தென்
உண்ணன் குறைவ தறிந்தும்
ஒளிமா நிறங்கவர்வான்
கண்ணும் உறங்கா திராப்பகல்
எய்கின்ற காமனுக்கே. 44

---

42. சொல்லாத நாக்கள் கொழுவிய நாக்கள் அல்ல. செவி மரத்துக்கு ஒப்பாம். கை மண் மனம் கல்லாம்.

43. தனக்குன்றத்தையும் மா வையத்தையும் பெற்றால் விடத்தை விட இழிந்தனவாக எண்ணுவேன்.

காமனை முன்செற்ற தென்றாள்
அவள்இவள் காலன்என்னும்
தாமநன் மார்பனை முன்செற்ற
தென்றுதன் கையெறிந்தாள்
நாம்முனஞ் செற்றதன் றுரையென்
றேற்கிரு வர்க்கும்அஞ்சி
ஆம்எனக் கிற்றிலர் அன்றெனக்
கிற்றிலர் அந்தணரே. 45

அந்தண ராம்இவர் ஆரூர்
உறைவதென் றேன்அதுவே
சந்தணை தோளிஎன் றார்தலை
யாய சலவர்என்றேன்
பந்தணை கையாய் அதுவும்உண்
டென்றார் உமையறியக்
கொந்தணை தாரீர் உரைமின்என்
றேன்துடி கொட்டினரே. 46

கொட்டுஞ் சிலபல சூழநின்
றார்க்குங்குப் புற்றெழுந்து
நட்ட மறியுங் கிரீடிக்கும்
பாடும் நகும்வெருட்டும்
வட்டம் வரும்அருஞ் சாரணை
செல்லும் மலர்தயங்கும்
புட்டங் கிரும்பொழில் சூழ்மறைக்
காட்டான் பூதங்களே. 47

---

45. நாம் என்றது தேவரீர் என்ற பொருளுடையது.

46. ஆரூர் - யாருடைய ஊர், திருவாரூர். தலையாய சலவர் - முதல் தரமான வஞ்சகர், தலையில் அமைந்த நீரை உடையவர்.

47. கிரீடிக்கும் - விளையாடும். புள் தங்கு.

பூதப் படையுடைப் புண்ணிய
 ரேபுறஞ் சொற்கள் நம்மேல்
ஏதப் படஎழு கின்றன
 வால்இனி யாவொடும்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட
 காமனைக் கண்மலராற்
சேதப் படுத்திட்ட காரணம்
 நீர்இறை செப்புமினே. 48

செப்பன கொங்கைக்குத் தேமலர்க்
 கொன்றை நிறம்பணித்தான்
மைப்புரை கண்ணுக்கு வார்புனற்
 கங்கைவைத் தான்மனத்துக்
கொப்பன இல்லா ஒளிகிளர்
 உன்மத் தமும்அமைத்தான்
அப்பனை அம்மனை நீஎன்
 பெறாதுநின் றார்க்கின்றதே. 49

ஆர்க்கின்ற நீரும் அனலும்
 மதியும்ஐ வாய்அரவும்
ஓர்க்கின்ற யோகும் உமையும்
 உருவும் அருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையும் மானும்
 பகலும் இரவும்எல்லாம்
கார்க்கொன்றை மாலையி னார்க்குட
 றாகிக் கலந்தனவே. 50

கலந்தனக் கென்பலர் கட்டவிழ்
 வார்கொன்றை கட்டரவார்
சலந்தனக் கண்ணிய கானகம்
 ஆடியோர் சாணகமும்

---

49. **கொன்றைநிறம்**- பசலை நிறம். புனற்கங்கை என்றது அழும் **கண்ணீரை. அம்மனை: விளி.**

50. ஒன்றோடு ஒன்று ஒவ்வாத பொருள்களை உடன் வைத்தவன் என்றபடி.

நிலந்தனக் கில்லா அகத்தியன்
ஆகிய நீலகண்டத்
தலந்தலைக் கென்னே அலந்தலை
யாகி அழிக்கின்றதே. 51

அழிகின்ற தாருயிர் ஆகின்ற
தாகுலம் ஏறிடும்மால்
இழிகின்ற சங்கம் இருந்த
முலைமேற் கிடந்தனபீர்
பொழிகின்ற கண்ணீர் புலர்ந்தது
வாய்கலை போனவந்தார்
மொழிகின்ற தென்இனி நான்மறை
முக்கண் முறைவனுக்கே. 52

முறைவனை ஏப்புக்கு நான்மறைக்
கும்முதல் ஏழ்கடலந்
துறைவனைச் சூழ்கயி லாயச்
சிலம்பனைத் தொன்மைகுன்று
இறைவனை எண்குணத் தீசனை
ஏத்தினர் சித்தந்தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை
என் சொல்லி ஓதுவதே. 53

ஓதவன் நாமம் உரையவன்
பல்குணம் உன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன்
வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ
மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னான் அதுகொண்
டொழிஇனி ஆரணங்கே. 54

---

51. ஆபரணமாவன என்பு முதல் சலம் வரையில். ஓர் சாண் இடமும் தனக்குரிய நிலமென்று இல்லாத அகத்தியன்.
52. பீர் - பசலை.

ஆரணங் கின்முகம் ஐங்கணை
யான்அகம் அவ்வகத்தில்
தோரணந் தோள்அவன் தேர்அகல்
அல்குல்தொன் மைக்கண்வந்த
பூரண கும்பம் முலைஇவை
காணப் புரிசடைஎம்
காரணன் தாள்தொழும் அன்போ
பகையோ கருதியதே. 55

கருதிய தொன்றில்லை ஆயினுங்
கேண்மின்கள் காரிகையாள்
ஒருதின மும்முள ளாகஒட்
டாதொடுங் கார்ஒடுங்கப்
பொருதநன் மால்விடைப் புண்ணியன்
பொங்கிளங் கொன்றைஇன்னே
தருதிர்நன் றாயிடும் தாரா
விடிற்கொல்லுந் தாழ்இருளே. 56

இருளார் மிடற்றால் இராப்பகல்
தன்னால் வரைமறையாற்
பொருளார் கமழ்கொன்றை யால்முல்லை
புற்றர வாடுதலால்
தெருளார் மதிவிசும் பாற்பௌவந்
தெண்புனல் தாங்குதலால்
அருளாற் பலபல வண்ணமு
மாஅரன் ஆயினனே. 57

ஆயின அந்தணர் வாய்மை
அரைக்கலை கைவளைகள்
போயின வாள்நிகர் கண்ணுறு
மைந்நீர் முலையிடையே

---

55. முகம் மன்மதனுக்கு இருப்பிடம்.
57. குறிஞ்சி முதலிய ஐந்து நில இயல்புகளும் பெற்றான் என்றபடி.

பாயின வேள்ளைக் கரபத்
திரத்துக்குச் சூத்திரம்போல்
ஆயின பல்சடை யார்க்கன்பு
பட்டவெம் ஆயிழைக்கே. 58

இழையார் வனமுலை வீங்கி
இடைஇறு கின்றதிற்றுற்
பிழையாள் நமக்கிவை கட்டுண்க
என்பது பேச்சுக்கொலாம்
கழையார் கழுக்குன்ற வாணனைக்
கண்டனைக் காதலித்தாள்
குழையார் செவியொடு கோலக்
கயற்கண்கள் கூடியவே. 59

கூடிய தன்னிடத் தான்உமை
யாளிடத் தானைஐயா
நீடிய பல்சடை மேற்றெரி
வண்ணம் எனப்பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்தது
கூற்றைப் படர்புரஞ்சுட்
டாடிய நீறுசெஞ் சாந்திவை
யாம்எம் அயன்எனவே. 60

ஆயமே பலிஇங்கு மாடுள
தானுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் பசுபதி
ஏறெம்மைப் பாய்ந்திடுமால்
புயமேய் குழலியர் புண்ணியர்
போமின் இரத்தல்பொல்லா
நயமே மொழியினும் நக்காம்அும்
மாஉம்மை நாணுதுமே. 61

58. கரபத்திரம் – கைவாள். நீர் சூத்திரம் போல் ஆயின.
61 அயம் – ஐயம்.

நாணு நடக்க நலத்தார்க்
கிடைஇல்லை நாம்எழுத
ஏணார் இருந்தமி ழால்மற
வேனுந் நினைமின்என் றும்
பூணார் முலையீர் நிருத்தன்
புரிசடை எந்தைவந்தாற்
காணு விடேன்கண் டிரவா
தொழியேன் கடிமலரே. 62

கடிமலர்க் கொன்றை தரினும்புல்
லேன்கலை சாரஒட்டேன்
முடிமலர் தீண்டின் முனிவன்
முலைதொடு மேற்கெடுவன்
அடிமலர் வானவர் ஏத்தநின்
றுய்க்கழ கல்லஎன் பன்
தொடிமலர்த் தோள்தொடு மேல்திரு
ஆணை தொடங்குவனே. 63

தொடங்கிய வாழ்க்கையை வாளா
துறப்பர் துறந்தவரே
அடங்கிய வேட்கை அரன்பால்
இலர்அறு காற்பறவை
முடங்கிய செஞ்சடை முக்கண
ணார்க்கன்றி இங்கும்அன்றிக்
கிடங்கினிற் பட்ட கராஅனை
யார்பல கேவலரே. 64

வலந்தான் கழல்இடம் பாடகம்
பாம்பு வலம்இடமே
கலந்தான் வலம்நீ றிடம்சாந்
தெரிவலம் பந்திடமென்

---

64. கேவலர் - இழிகுணம் உடையவர்.

பலந்தார் வலம்இடம் ஆடகம்
வேல்வலம் ஆழிஇடம்
சலந்தாழ் சடைவலம் தண்ணங்
குழல்இடம் சங்கரற்கே. 65

சங்கரன் சங்கக் குழையன்
சரணார விந்தந்தன்னை
அங்கரங் கூப்பித் தொழுதாட்
படுமின்தொண் டீர்நமனார்
கிங்கரர் தாம்செய்யும் கீழா
யினமிறை கேட்டலுமே
இங்கரம் ஆயிரம் ஈரஎன்
நெஞ்சம் எரிகின்றதே. 66

எரிகின்ற தீயொத் துள்சடை
ஈசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது
சூழ்புனல் அப்புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணிஒக்
கின்றதத் தோணிஉய்ப்பான்
தெரிகின்ற திண்கழை போன்றுள
தால்அத் திறல்அரவே. 67

அரவம் உயிர்ப்ப அழலும்அங்
கங்கை வளாய்க்குளிரும்
குரவங் குழல்உமை ஊடற்கு
நைந்துருகும் அடைந்தோர்

---

65. மாதொரு பாதியனது திருக்கோல வருணனை. ஆடகம் - பொன்மாலை.

66. மிறை - நடுக்கத்தைத் தரும் சொற்கள்.

67. கழை - மூங்கில்.

68. பிறை இடரும் இன்பமும் கலந்து அநுபவிக்கும்.

பரவும் புகழ்அண்ணல் தீண்டலும்
பார்வா னவைவிளக்கும்
விரவும் இடர்இன்பம் எம்இறை
சூடிய வெண்பிறையே. 68

பிறைத்துண்டஞ் சூடலுற் றேபிச்சை
கொண்டனல் ஆடலுற்றே
மறைக்கண்டம் பாடலுற் றேஎன்பும்
நீறும் மருவலுற்றே
கறைக்கண்டம் புல்லலுற் றேகடு
வாய்அர வாடலுற்றே
குறைக்கொண் டிவள்அரன் பின்செல்வ
தென்னுக்குக் கூறுமினே. 69

கூறுமின் ஈசனைச் செய்ம்மின்குற்
றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின்
சிவனைச் செறுமின்செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின்
அவலம் இவைநெறியா
ஏறுமின் வானத் திருமின்
விருந்தாய் இமையவர்க்கே. 70

இமையோர் கொணர்ந்திங் கிழித்திட
நீர்மைகெட் டேந்தல்பின்போய்
அமையா நெறிச்சென்றோர் ஆழ்ந்த
சலமக ளாய்அணைந்தே
எமையாளு டையான் தலைமக
ளாஅங் கிருப்பஎன்னே
உமையா ளவள்கீழ் உறைவிடம்
பெற்றே உறைகின்றதே. 71

---

71. கங்கை தலையில் இருக்க உமை கீழ் உறைவது நியாயமா என்றபடி.

உறைகின் றனர்ஐவர் ஒன்பது
வாயில்ஓர் மூன்றுளதால்
மறைகின்ற என்பு நரம்போ
டிறைச்சி உதிரம்மச்சை
பறைகின்ற தோல்போர் குரம்பை
பயன்இல்லை போய்அடையின்
அறைகின்ற தெண்புனல் செஞ்சடைக்
கொண்டோன் மலரடிக்கே. 72

அடிக்கண்ணி கைதொழு தார்க்ககன்
ஞாலங் கொடுத்தடிநாய்
வடிக்கண்ணி நின்னைத் தொழுவளை
கொண்டனை வண்டுண்கொன்றைக்
கடிக்கண்ணி யாய்எமக் கோரூர்
இரண்டகங் காட்டினையால்
கொடிக்கண்ணி மேல்நல்ல கொல்லே
றுயர்த்த குணக்குன்றமே. 73

குன்றெடுத் தான்செவி கண்வாய்
சிரங்கள் நெரிந்தலற
அன்றடர்த் தற்றுகச் செற்றவன்
நற்றவர்க் கற்றசிவன்
மன்றிடைத் தோன்றிய நெல்லிக்
கனிநிற்ப மானிடர்போய்
ஒன்றெடுத் தோதிப் புகுவர்
நரகத் துறுகுழியே. 74

குழிகட் கொடுநடைக் கூன்பற்
கவட்டடி நெட்டிடைஊன்
உழுவைத் தழைசெவித் தோல்முலைச்
சூறை மயிர்ப்பகுவாய்த்

---

72. ஒன்பது வாய்; இல் ஓர் மூன்று **உளதால்;** மூன்று சரீரங்கள் உண்டு.

73. ஓரூரில் இரண்டு விதமான மன இயல்பைக் காட்டினாய்.

தெழிகட் டிரைகுரற் றேம்பல்
வயிற்றுத் திரக்குவிரற்
கழுதுக் குறைவிடம் போல்கண்டன்
ஆடும் கடியரங்கே. 75

அரங்கா மணிஅன்றில் தென்றல்ஓர்
கூற்றம் மதியம்அந்தீச்
சரங்காமன் எய்யஞ்சு சந்துட்
பகையால் இவள்தளர்ந்தாள்
இரங்கா மனத்தவர் இல்லை
இரங்கான் இமையவர்தம்
சிரங்கா முறுவான் எலும்புகொள்
வான்என்றன் தேமொழிக்கே. 76

மொழியக்கண் டான்பழி மூளக்கண்
டான்பிணி முன்கைச்சங்கம்
அழியக்கண் டான்அன்றில் ஈரக்கண்
டான்தென்றல் என்உயிர்மேற்
சுழியக்கண் டான்துயர் கூரக்கண்
டான்துகில் சூழ்கலையும்
கழியக்கண் டான்தில்லைக் கண்ணுத
லான்கண்ட கள்ளங்களே. 77

கள்ள வளாகங் கடிந்தடி
மைப்படக் கற்றவர்தம்
உள்ள வளாகத் துறுகின்ற
உத்தமன் நீள்முடிமேல்
வெள்ள வளாகத்து வெண்ணுரை
சூடி வியன்பிறையைக்
கொள்ள அளாய்கின்ற பாம்பொன்
றுளது குறிக்கொண்மினே. 78

---

75. போல் – போலும் என்பதன் விகாரம்.
76. காவில் உள்ள அழகிய அன்றில் அரமாகும்.
78. கள்ள வளாகங் கடிந்து - கள்ளமுடையவர் கூட்டத்தை வெறுத்து. உள்ளமாகிய வளாகத்தில். அளாய்கின்றது -- அளாவுகின்றது.

குறிக்கொண் டிவள்பெய்த கோல்வளை
யேவந்து கோள்இழைத்தீர்
வெறிக்கொண்ட வெள்ளிலம் போதோ
எனும்போ விரிசடைமேல்
உறைக்கொன்றை யோஉடைத் தோலோ
பொடியோ உடைகலனோ
கறைக்கண்ட ரேநும்மக் கென்னே
சிறுமி கடவியதே. 79

கடவிய தொன்றில்லை ஆயினும்
கேண்மின்கள் காரிகையாள்
மடவிய வாறுகண் டாம்பிறை
வார்சடை எந்தைவந்தாற்
கிடவிய நெஞ்சம் இடங்கொடுத்
தாட்கவ லங்கொடுத்தான்
தடவிய கொம்பதன் தாள்மேல்
இருந்து தறிக்குறுமே. 80

தறித்தாய் அயன்தலை சாய்த்தாய்
சலந்தரனைத்தழலாப்
பொறித்தாய் அனங்கனைச் சுட்டாய்
புரம்புன லுஞ்சடைமேற்
செறித்தாய்க் கிவைபுகழ் ஆகின்ற
கண்டிவள் சில்வளையும்
பறித்தாய்க் கிதுபழி ஆகுங்கொ
லாம்என்று பாவிப்பனே. 81

பாவிக்கும் பண்டையள் அல்லள்
பரிசறி யாள்சிறுமி
ஆவிக்கும் குற்குலு நாறும்
அகம்நெக அங்கம்எங்கும்

---

79. உறை - தேன் துளியை உடைய.

காவிக்கண் சோரும்பொச் சாப்புங்
    கறைமிடற் றானைக்கண்ணிற்
றாவிக்கும் வெண்ணகை யாள்அம்மெல்
    லோதிக்குச் சந்தித்தவே. 82

சந்தித்த கூற்றுக்குக் கூற்றாம்
    பிணிக்குத் தனிமருந்தாம்
சிந்திக்கிற் சிந்தா மணிஆகித்
    தித்தித் தமுதமுமாம்
வந்திக்கில் வந்தென்னை மால்செய்யும்
    வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ணாடியி னான்அடி
    யார்களுக் காவனவே. 83

ஆவன யாரே அழிக்கவல்
    லார்அமை யாஉலகிற்
போவன யாரே பொதியகிற்
    பார்புரம் மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத்
    திருந்தடி கைதொழுது
தீவினை யேன்இழந் தேன்கலை
    யோடு செறிவளையே. 84

செறிவளை யாய்நீ விரையல்
    குலநலம் கல்விமெய்யாம்
இறையவன் தாமரைச் சேவடிப்
    போதென்றெல் லோரும்ஏத்தும்
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று
    வேண்டிய நீசர்தம்பாற்
கறைவளர் கண்டனைக் காணப்
    பெரிதுங் கலங்கியதே. 85

---

82. ஆவிக்கும் - பெருமூச்சுவிடும். குற்குலு - குங்கிலியம்.
83. அந்திக்கண் ஆடியினன் அந்திப் போதில் திரு நடனம் செய்தவன்.
84. பொதியகிற்பார் - போகாமல் பாதுகாக்க வல்லவர்.

கலங்கின மால்கடல் வீழ்ந்தன
கார்வரை ஆழ்ந்ததுமண்
மலங்கின நாகம் மருண்டன
பல்கணம் வானங்கைபோய்
இலங்கின மின்னொடு நீண்ட
சடைஇமை யோர்வியந்தார்
அலங்கல்நன் மாநடம் ஆர்க்கினி
ஆடுவ தெம்மிறையே. 86

எம்மிறை வன்இமை யோர்தலை
வன்உமை யாள்கணவன்
மும்முறை யாலும் வணங்கப்
படுகின்ற முக்கண்நக்கற்
கெம்முறை யாள்இவள் என்பிழைக்
தாட்கிறை என்பிழைத்தான்
இம்முறை யாலே கவரக்
கருதிற் றெழிற்கலையே. 87

கலைதலை சூலம் மழுக்கனல்
கண்டைகட் டங்கம்கொடி
சிலையிவை ஏந்திய எண்டோட்
சிவற்கு மனஞ்சொற்செய்கை
நிலைபிழை யாதுகுற் றேவல்செய்
தார்நின்ற மேருஎன்னும்
மலைபிழை யார்என்ப ரால்அறிந்
தோர்கள்இம் மாநிலத்தே. 88

மாநிலத் தோர்கட்குத் தேவர்
அனைய அத் தேவர்எல்லாம்
ஆனலத் தாற்றொழும் அஞ்சடை
ஈசன் அவன்பெருமை

---

87. மும் முறையாலும் - மூன்று வேதங்களாலும். முறை - நூல்; இங்கே வேதம்.

88. மழுவாகிய கனல். கண்டை - மணி. எட்டுத் திருக் கரங்களிலும் ஏந்தும் எட்டுப் பொருள்களைக் கூறினார்.

தேனலர்த் தாமரை யோன்திரு
மால்வர் தேர்ந்துணரார்
பானலத் தாற்கவி யாம்எங்க
னேஇனிப் பாடுவதே. 89

பாடிய வண்டுறை கொன்றையி
னன்படப் பாம்புயிர்ப்ப
ஓடிய தீயால் உருகிய
திங்களின் ஊறல்ஒத்த
தாடிய நீறது கங்கையுந்
தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தால்உமை
பாகம்எம் கொற்றவற்கே. 90

கொற்றவ னேஎன்றுங் கோவணத்
தாய்என்றும் மாவணத்தால்
நற்றவ னேஎன்றும் நஞ்சுண்டி
யேஎன்றும் அஞ்சமைக்கப்
பெற்றவ னேஎன்றும் பிஞ்ஞக
னேஎன்றும் மன்மதனைச்
செற்றவ னேஎன்றும் நாளும்
பரவும்என் சிந்தனையே. 91

சிந்தனை செய்ய மனம்அமைத்
தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத்
தேன்கை தொழஅமைத்தேன்

---

89. **ஆன்நலத்தால் – பசுவிடத்தே பெறும் நல்ல பொருளால்.**

90. **நீற்றினால் வெண்ணிறம் பெற்ற பெருமான் மேனி கங்கையையும், உமாதேவியாரின் நீலத்திருமேனி யமுனையையும் ஒத்தன.**

91. **அஞ்சு அமைக்கப் பெற்றவன் - புலனைந்தும் வென்றவன்.**

பந்தனை செய்வதற் கன்பமைத்
தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்
கிவையான் விதித்தனவே. 92

விதித்தன வாழ்நாள் பெரும்பிணி
விச்சைகள் கொண்டுபண்டே
கொதிப்பினில் ஒன்றும் குறைவில்லை
குங்குமக் குன்றனைய
பதித்தனங் கண்டனம் குன்றம்வெண்
சந்தனம் பட்டனைய
மதித்தனங் கண்டனம் நெஞ்சினி
என்செய்யும் வஞ்சனையே. 93

வஞ்சனை யாலே வரிவளை
கொண்டுள்ள மால்பனிப்பத்
துஞ்சும் பொழுதும் உறத்தொழு
தேன்சொரி மால்அருவி
அஞ்சன மால்வரை வெண்பிறை
கவ்விஅண் ணாந்தனைய
வெஞ்சின ஆனையின் ஈருரி
மூடிய வீரனையே. 94

வீரன் அயன்அரி வெற்பலர்
நீர்எரி பொன்எழிலார்
காரொண் கடுக்கை கமலம்
துழாய்விடை தொல்பறவை
பேர்ஒண் பதிநிறம் தார்இவர்
ஊர்திவெவ் வேறென்பரால்
யாரும் அறியா வகைஎங்கள்
ஈசர் பரிசுகளே. 95

---

95. **வீரன்** - சிவன். திரிமூர்த்திகளுள் இறைவனே என்றபடி. அவர்களின் பேர் முதலியவற்றை வரிசையாகச் சொல்கிறார். தொல்பறவை என்றது அன்னத்தையும் கருடனையும்.

பரியா தனவந்த பாவமும்
பற்றும்மற் றும்பணிந்தார்க்
குரியான் எனச்சொல்லி உன்னுட
னவன் எனஅடி யார்க்
கரியான் இவன்என்று காட்டுவன்
என்றென் றிவைஇவையே
பிரியா துறையுஞ் சடையான்
அடிக்கென்றும் பேசுதுமே. 96

பேசுவ தெல்லாம் அரன்திரு
நாமம்அப் பேதைநல்லாள்
காய்சின வேட்கை அரன்பா
லதுஅறு காற்பறவை
மூசின கொன்றை முடிமே
லதுமுலை மேல்முயங்கப்
பூசின சாந்தம் தொழுமால்
இவைஒன் றும் பொய்யலவே. 97

பொய்யா நரகம் புகினுந்
துறக்கம் புகினும்புக்கிங்
குய்யா உடம்பினோ டூர்வ
நடப்ப பறப்பஎன்று
நையா விளியினும் நானிலம்
ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற
வாவரம் வேண்டுவனே. 98

வேண்டிய நாள்களிற் பாதியும்
கங்குல் மிகஅவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது
பிள்ளைமை மேலதுமூப்

---

98. நையா விளியினும் - வருந்தி இறந்தாலும்.

பாண்டின அச்சம் வெருளி
அவாஅழுக் காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்
சடைமுக்கண் மாயனையே. 99

மாயன்நன் மாமணி கண்டன்
வளர்சடை யாற்கடிமை
ஆயின தொண்டர் துறக்கம்
பெறுவது சொல்லுடைத்தே
காய்சின ஆனை வளரும்
கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே
படைத்தது பொன்வண்ணமே. 100

ஆக்கியோன் பெயர்

அன்றுவெள் ளானையின் மீதிமை
யோர்சுற் றணுகுறச்செல்
வன்றொண்டர் பின்பரி மேற்கொண்டு
வெள்ளி மலையரன்முன்
சென்றெழில் ஆதி உலாஅரங்
கேற்றிய சேரர்பிரான்
மன்றிடை ஓதுபொன் வண்ணத்
தந்தாதி வழங்கிதுவே.

திருச்சிற்றம்பலம்

---

99. இங்ஙனே வாழ்நாட்கள் மாண்டன. புன்சடை - செஞ்சடை. "வேதநூற் பிராயம் நூறும் மனிசர்தாம் புகுவரேனும், பாதியும் உறங்கிப் போகும் நின்றதிற் பதினை யாண்டு, பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம், ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகரு ளானே" (திருமாலை) என்பது இங்கே ஒப்பு நோக்கற்குரியது.

7

சேரமான்பெருமாள் நாயனார்

அருளிச் செய்த

திருவாரூர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(அகவல்)

விரிகடல் பருகி அளறுபட் டன்ன
கருநிற மேகம் கல்முக டேறி
நுண் துளி பொழிய நோக்கி ஒண்டொடி
பொலங்குழை மின்னப் புருவ வில்லிட்
டிலங்கெழிற் செவ்வாய் கோபம் ஊர்தரக்
கைத்தலம் என்னும் காந்தள் மலர
முத்திலங் கெயிறெனும் முல்லை அரும்பக்
குழலுஞ் சுணங்குங் கொன்றை காட்ட
எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப
உண்ணிறை உயிர்ப்பெனும் ஊதை ஊர்தரக்
கண்ணீர்ப் பெருமழை பொழிதலின் ஒண்ணிறத்
தஞ்சனக் கொழுஞ்சே றலம்பி எஞ்சா
மணியும் பொன்னும் மாசறு வயிரமும்
அணிகிளர் அகிலும் ஆரமும் உரிஞ்சிக்
கொங்கை என்னுங் குவட்டிடை இழிதரப்
பொங்குபுயல் காட்டி யோளே கங்கை
வருவிசை தவிர்த்த வார்சடைக் கடவுள்
அரிவை பாதத் தண்ணல் ஆரூர்
எல்லையில் இரும்பலி சொரியும
கல்லோ சென்ற காதலர் மனமே. 1

1. அடி, 2. கல் முகடு - மலையுச்சி. 8 - 10. சுணங்கு - பசலை. ஊதை - காற்று. 16. இவள் கார் காலத்துத் தன்மை யெல்லாம் காட்டினள். இது தலைவியின் நிலை கண்ட தோழி வருந்திக் கூறியது.

(வெண்பா)

மனமால் உறுதே மற்றென்செய் யும்வாய்ந்த
கனமால் விடைஉடையோன் கண்டத்—தினமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் சோர்ந்தனசங் கூர்ந்தனபீர்
கான்றனநீர் ஏந்திழையாள் கண். 2

(கட்டளைக்கலித்துறை)

கண்ணார் நுதல்எந்தை காமரு
கண்டம் எனஇருண்ட
விண்ணால் உருமொடு மேலது
கீழது கொண்டல்விண்ட
மண்ணார் மலைமேல் இளமயி
லால்மட மான்அனைய
பெண்ணாம் இவள்இனி என்னாய்க்
கழியும் பிரிந்துறைவே. 3

(அகவல்)

உறைகழி ஒள்வாள் மின்னி உருமெனும்
அறைகுரல் முரசம் ஆர்ப்பக் கைபோய்
வெஞ்சிலை கோலி விரிதுளி என்னும்
மின்சரந் துரந்தது வானே நிலனே
கடிய வாகிய களவநன் மலரொடு
கொடிய வாகிய தளவமும் அந்தண்
குலைமேம் பட்ட கோடலுங் கோபமோ
டலைமேம் பட்ட காந்தளும் இவற்றொடு
காயா வெந்துயர் தருமேல் அவரே
பொங்கிரும் புரிசை போக்கற வளைஇக்
கங்குலும் பகலும் காவல் மேவி

---

2. தேர் - தலைவனுடைய தேர். பீர் - பசலை.

4. துணைவயிற் பிரிவுக்காலத்தில், பருவங் கண்ட தலைவி வருந்திக் கூறியது. அடி 1. வாளைப் போல மின்னி. 6—8. கொடியவாகிய தளவம் - கொடியிலே வளரும் முல்லை. குலை - கொத்து. கோடல் - காந்தள். கோபம் - இந்திர கோபப் பூச்சி.

மாசறு வேந்தன் பாசறை யோரே
யானே இன்னே
அலகில் ஆற்றல் அருச்சுனற் கஞ்ஞான்
றுலவா நல்வரம் அருளிய உத்தமன்
அந்தண் ஆரூர் சிந்தித்து மகிழா
மயரிய மாக்களைப் போலத்
துயர்உழந் தழியக் கண்துயி லாவே. 4

(வெண்பா)

துயிலாநோய் யாய்தோன்றத் தோன்றித்தீத் தோன்ற
மயிலால வந்ததால் மாதோ—அயலாய
அண்டத்துக் கப்பாலான் அந்திங்கட் கண்ணியான்
கண்டத்துக் கொப்பாய கார். 5

(கட்டளைக்கலித்துறை)

காரும் முழக்கொடு மின்னொடு
வந்தது காதலர் தம்
தேருந் தெருவுஞ் சிலம்பப்
புகுந்தது சில்வளை கள்
சோருஞ் சிலபல அங்கே
நெரிந்தன துன்னருநஞ்
சாரும் மிடற்றண்ணல் ஆரூர்
அனைய அணங்கினுக்கே. 6

(அகவல்)

அணங்குறை நெடுவரை அருமைபே ணாது
மணங்கமழ் தெரியல் சூடி வைகலும்
விடுசுடர் நெடுவேல் முன்னடி விளக்காக்
கடுவிசைக் கான்யாற்று நெடுநீர் நீந்தி
ஒருதனி பெயரும் பொழுதிற் புரிகுழல்

---

17. மயரிய - மயங்கிய.
5. தோன்றி - செங்காந்தள்.

வானர மகளிர்நின் வல்வழங் ககலத்
தானாக் காதல் ஆகுவர் என்று
புலவி உள்ளமொடு பொருந்தாக் கண்ணள்
கலைபிணை திரியக் கையற வெய்தி
மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்
தல்லியங் கோதை அழலுற் றாஅங்
கெல்லையில் இருந்துயர் எய்தினள் புல்லார்
திரிபுரம் எரிய ஒருகணை தெரிந்த
அரிவை பாகத் தண்ணல் ஆரூர்
வளமலி கமல வாள்முகத்
திளமயிற் சாயல் ஏந்திழை தானே. 7

(வெண்பா)

இழையார் வனமுலை ஈர்ந்தண் புனத்தில்
உழையாகப் போந்ததொன் றுண்டே—பிழையாச்சீர்
அம்மான் அனலாடி ஆரூர்க்கோன் அன்றுரித்த
கைம்மானேர் அன்ன களிறு. 8

(கட்டளைக்கலித்துறை)

களிறு வழங்க வழங்கா
அதர்கதிர் வேல்துணையா
வெளிறு விரவ வருதிகண்
டாய்விண்ணின் நின்றிழிந்த
பிளிறு குரற்கங்கை தாங்கிய
பிஞ்ஞகன் பூங்கழல்மாட்
டொளிறு மணிக்கொடும் பூண்இமை
யோர்செல்லும் ஓங்கிருளே. 9

---

7. வரும் வழியிடையே உண்டாகும் இடையூற்றுக்கு அஞ்சினாள் தலைவியென்று தோழி தலைமகனுக்குக் கூறியது. அடி, 1-7. வேலோடு நீ வந்தால் தேவமளிர் உன்னைக் கண்டு காமுறுவர்.

8. கெடுதி வினவிப் புக்க தலைமகன் கூறியது. உழையாக - பக்கத்தில்.

9. தோழி தலைமகனை இரவு வருகென்றல். அதர் - வழி.

(அகவல்)

இருள்புரி கூந்தலும் எழில்நலம் சிதைந்தது
மருள்புரி வண்டறை மாலையும் பரிந்தது
ஒண்ணுதல் திலகமும் அழிந்தது கண்ணும்
மைந்நிறம் ஒழிந்து செந்நிறம் எய்தி
உள்ளறி கொடுமை உரைப்ப போன்றன
சேதகம் பரந்தது செவ்வாய் மேதகு
குழைகெழு திருமுகம் வியப்புள் ளுறுத்தி
இழைகெழு கொங்கையும் இன்சாந் தழீஇக்
கலையுந் துகிலும் நிலையிற் கலங்கி
என்னிது விளைந்த வாறென மற்றிஃ
தன்னதும் அறிகில மியாமே செறிபொழில்
அருகுடை ஆரூர் அமர்ந்துறை அமுதன்
முருகுவிரி தெரியல் முக்கண் மூர்த்தி
மராமரச் சோலைச் சிராமலைச் சாரற்
சுரும்பிவர் நறும்போது கொய்யப்
பெருஞ்செறி வனத்தில்யான் பிரிந்ததிப் பொழுதே 10

(வெண்பா)

பொழுது கழிந்தாலும் பூம்புனங்காத் தெள்கி
எழுது கொடியிடையாய் ஏகான்—தொழுதமரர்
முன்னஞ்சேர் மொய்கழலான் முக்கணன் நான்மறையான்
மன்னுஞ்சேய் போல்ஒருவன் வந்து. 11

(கட்டளைக்கலித்துறை)

வந்தார் எதிர்சென்று நின்றேன்
கிடந்தவண் டார்தழைகள்
தந்தார் அவைஒன்றும் ஆற்றகில்
லேன்தக்கன் வேள்விசெற்ற

---

10. தோழி கூற்று. தலைவனுடன் அளவளாவிய தலைவி பெற்ற வேறுபாடுகளைச் சொல்கிறாள். அடி, 2. பரிந்தது.- அறுந்தது.

11. தோழி கூற்று. எள்கி - வருந்தி. சேய் - முருகன்.

செந்தா மரைவண்ணன் தீர்த்தச்
சடையன் சிராமலைவாய்க்
கொந்தார் பொழில்அணி நந்தா
வனஞ்சூழ் குளிர்புனத்தே. 12

(அகவல்)

புனமயிற் சாயற் பூங்குழல் மடந்தை
மனைமலி செல்வம் மகிழா ளாகி
ஏதலன் ஒருவன் காதல னாக
விடுசுடர் நடுவுநின் றடுதலின் நிழலும்
அடியகத் தொளிக்கும் ஆரழற் கானத்து
வெவ்வினை வேடர் துடிக்குரல் வெரீஇ
மெய்விதிர் எறியுஞ் செவ்வித் தாகி
முள்ளிலை ஈந்தும் முளிதாள் இலவமும்
வெள்ளிலும் பரந்த தெள்ளிடை மருங்கில்
கடுங்குரற் கதநாய் நெடுந்தொடர் பிணித்துப்
பாசந் தின்ற தேய்கால் உம்பர்
மரைஅதள் மேய்ந்த மயிர்ப்புன் குரம்பை
விரிநரைக் கூந்தல் வெள்வாய் மறத்தியர்
விருந்தா யினள்கொல் தானே திருந்தாக்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் ஒருவன்
ஆற்றல் செற்ற அண்ணல் ஆரூர்ச்
செய்வளர் கமலச் சீறடிக்
கொவ்வைச் செவ்வாய்க் குயில்மொழிக் கொடியே. 13

---

12. தோழி கூற்று. தழை - தழையாலும் மலராலும் அமைந்த ஒருவகை ஆடை. மாற்றகில்லேன் - மறுக்கும் வலியில்லேன்.

13. தலைமகள் தலைமகனுடன் சென்றாளாக, செவிலி கவன்று கூறியது. அடி, 3 - 7. ஏதலன் - அயலான். விதிரெறியும் - நடுங்கும். 8 - 12. முளி - உலர்ந்த. வெள்ளில் - விளா. கதம் - விரைவு. பாசம் - கயிறு. தின்ற - உராய்ந்து அறுத்த. மரையதள் - மரையின் தோல். குரம்பை - குடிசை.

(வெண்பா)

கொடியேர் நுடங்கிடையாள் கொய்தாரான் பின்னே
அடியால் நடந்தடைந்தா ளாக—பொடியாக
நண்ணார்ஊர் மூன்றெரித்த நாகஞ்சேர் திண்சிலையான்
தண்ஆரூர் சூழ்ந்த தடம். 14

(கட்டளைக்கலித்துறை)

தடப்பாற் புனற்சடைச் சங்கரன்
தண்மதி போல்முகத்து
மடப்பால் மடந்தை மலரணைச்
சேக்கையிற் பாசம்பிரீஇ
இடப்பால் திரியில் வெருவும்
இருஞ்சுரஞ் சென்றனளாம்
படப்பா லனஅல்ல வால்தமி
யேன்தையல் பட்டனவே. 15

(அகவல்)

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்
பரல்முரம் பதரும் அல்லது படுமழை
வரன்முறை அறியா வல்வெயிற் கானத்துத்
தேனிவர் கோதை செல்ல மானினம்
அஞ்சில் ஓதி நோக்கிற் கழிந்து
நெஞ்செரி வுடைமையின் விலக்காது விடுக

---

14. செவிலி கூற்று. நடந்து அடைந்தாளாகுக. செவிலி தன் மகள் ஆரூரை இனிது சென்றடைவாளாக என்று வாழ்த்துகிறாள்.

15. செவிலி கூற்று. மடப்பால் மடந்தை - பேதைமைப் பகுதியை உடைய பெண் சேக்கையில் - படுக்கையில் பாசம் பிரீஇ - பிணைப்புப் பிரிந்து; தழுவுதலை விட்டு படுக்கையில் கான் கட்டிக் கொள்வதை விட்டு இடப் பக்கத்தில் திரும்பிப் படுத்தால் அஞ்சுவாள்.

16. செவிலி குரவை நோக்கிக் கூறுதல். அடி, 1 - 3. பட்டோர் - போரிற் பொருது பட்டவர். நட்டகல் - வீரக்கல். பரல் முரம்பு அதரும் - சிறிய கற்களை உடைய மேட்டு நிலத்தி லுள்ள வழியும். 5 - 7. மான் கண்ணுக்குத் தோற்று விலக்காமல் இருந்தாலும் இருக்கட்டும்.

கொங்கைக் கழிந்து குன்றிடை அடைந்த
கொங்கிவர் கோங்கமுஞ் செலவுடன் படுக
மென்றோட் குடைந்து வெயில்நிலை நின்ற
குன்ற வேய்களும் கூற்றடைத் தொழிக
மாயிருங் கடற்றிடை வைகல் ஆயிரம்
பாவையை வளர்ப்போய் நீநனி பாவையை
விலக்காது பிழைத்தனை மாதோ நலத்தகும்
அலைபுனல் ஆரூர் அமர்ந்துறை அமுதன்
கலையார் கையன் கண்ணுதல் எந்தை
தொங்கலஞ் சடைமுடிக் கணிந்த
கொங்கலர் கண்ணி ஆயின குரவே. 16

(வெண்பா)

குரவங் கமழ்கோதை கோதைவே லோன்பின்
விரவுங் கடுங்கானம் வெவ்வாய்—அரவம்
சடைக்கணிந்த சங்கரன் தார்மதனன் றன்னைக்
கடைக்கணித்த தீயிற் கடிது. 17

(கட்டளைக்கலித்துறை)

கடிமலர்க் கொன்றையுந் திங்களுஞ்
செங்கண் அரவும்அங்கே
முடிமலர் ஆக்கிய முக்கண்நக்
கன்மிக்க செக்கர்ஒக்கும்

---

11. கூற்று அடைத்து-பேச்சின்றி. பாவையென்றது குரா மலரை. பாவையை - என் மகளை. பிழைத்தனை - குற்றம் செய்தாய்.

17. கண்டோர் கூறியது. கோதை - கூந்தலையுடையாள். கோதைவேலோன் - கைச்சல்லடத்தையும் வேலையும் உடையவன்; மாலையை யணிந்த வேலுமாம்.

படிமலர் மேனிப் பரமன்
அடிபர வாதவர்போல்
அடிமலர் நோவ நடந்தோ
கடந்ததெம் அம்மனையே. 18

(அகவல்)

மனைஉறை குருவி வளைவாய்ச் சேவல்
சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி ஆனா
அன்புபொறை கூர மென்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
பெருவளந் தழீஇய பீடுசால் கிடக்கை
வருபுன லூரன் பார்வை யாகி
மடக்கொடி மாதர்க்கு வலையாய்த் தோன்றிப்
படிற்று வாய்மொழி பலபா ராட்டி
உள்ளத் துள்ளது தெள்ளிதிற் கரந்து
கள்ள நோக்கமொடு கைதொழு திறைஞ்சி
எம்பி லோயே பாண அவனே
அமரரும் அறியா ஆதி மூர்த்தி
குமரன் தாதை குளிர்சடை இறைவன்
அறைகழல் எந்தை ஆரூர் ஆவணத்
துறையிற் றாக்கும் எழில்மென் காட்சிக்
கண்ணடி அனைய நீர்மைப்
பண்ணுடைச் சொல்லியர் தம்பா லோனே. 19

---

18. செவிலி கூற்று. படி - திருவுருவம்.

19. வாயிலாகப் புக்க பாணனுக்குத் தலைவி கூறியது. அடி, 1-5. குருவியின் சேவல். செவ்வி - ஈனும் பருவம். ஈனில் - குஞ்சைப் பொறிக்கும் இடம். அன்பும் பொறுமையும் மிக. தோடு - தோகை. 6-9. பார்வை - பார்வை மிருகம்; பிறரை வசப்படுத்தும் கருவியாயிருப்பவன் என்றபடி. படிற்று வாய்மொழி - உண்மை போலத் தோன்றும் வஞ்சக வார்த்தை. 12. அவன் - தலைவன். 15-8. ஆவணத்துறையில் - கடைவீதியில். கண்ணடி - கண்ணாடி. யார் எதிர் நின்றாலும் அவர் நிழலைக் கொள்ளும் கண்ணாடி போல, யாரை எதிர்ப்பட்டாலும் தம் வசப்படுத்தும் பொதுமகளிர்.

(வெண்பா)

பாலாயீ சொல்லியர்க்கே சொல்லுபோய்ப் பாண்மகனே
ஏலாஇங் கென்னுக் கிடுகின்றாய்—மேலாய
தேந்தண் கமழ்கொன்றைச் செஞ்சடையான் தாள்சூடும்
பூந்தண் புனலூரன் பொய். 20

(கட்டளைக்கலித்துறை)

பொய்யால் தொழினும் அருளும்
இறைகண்டம் போல்இருண்ட
மையார் தடங்கண் மடந்தையர்
கேட்கிற்பொல் லாதுவந்துன்
கையால் அடிதொடல் செல்லல்மில்
புல்லல் கலைஅளையல்
ஐயா இவைநன்கு கற்றாய்
பெரிதும் அழகியதே. 21

(அகவல்)

அழகுடைக் கிங்கிணி அடிமிசை அரற்றக்
தொழிலுடைச் சிறுபறை பூண்டு தேர்ஈர்த்
தொருகளி றுருட்டி ஒண்பொடி ஆடிப்
பொருகளி றனைய பொக்கமொடு பிற்றாழ்ந்து
பூங்குழற் சிறாரொடு தூங்குநடை பயிற்றி
அக்கரை உடுத்தி ஐம்படை கட்டி
ஒக்கரை இருக்கும் ஒளிர்புன் குஞ்சிக்
குதலையங் கிளவிப் புதல்வன் றன்னை

---

20. **தலைமகள்** பாணனுக்குரைத்தது. **சொல்லிய**பென் றது பரத்தையரை ஏலா இங்கு - இவ்விடத்தில் **செல்லா.** பொய்யை அங்கே சொல்; இங்கே ஏலா.

21. **தலைவன்** ணிதல் **கண்டு தலைவி கூறியது.** மடந்தையர் - பரத்தையர். செல்லல் - அணுகி வாராதே புல்லல் - தழுவாதே. கலை - ஆடை.

22. பரத்தையிற் பிரிவில் தலைவி நெஞ்சோடு **கூறியது.** அடி,3-6. களிறு-மரயானை. பொக்கம் - பொலிவு அக்கு - சங்கு

உள்ளச் சொரிந்த வெள்ளத் தீம்பால்
உடைய வாகிய தடமென் கொங்கை
வேண்டாது பிரிந்த விரிபுனல் ஊரன்
பூண்தாங் ககலம் புல்குவன் எனப்போய்ப்
பெருமடம் உடையை வாழி வார்சடைக்
கொடுவெண் திங்கட் கொழுநில வேய்க்கும்
சுடுபொடி அணிந்த துளங்கொளி அகலத்
தண்ணல் ஆரூர் திண்ணிதிற் செய்த
சிறைகெழு செம்புனல் போல
நிறையொடு நீங்காய் நெஞ்சம் நீயே. 22

(வெண்பா)

நீஇருந்திங் கென்போது நெஞ்சமே நீள்இருட்கண்
ஆயிரங்கை வட்டித் தனலாடித்—தீஅரங்கத்
தைவாய் அரவசைத்தான் நன்பணைத்தோட் கன்பமைத்த
செய்வான்நல் ஊரன் திறம். 23

(கட்டளைக்கலித்துறை)

திறமலி சின்மொழிச் செந்துவர்
வாயினர் எங்கையர்க்கே
மறமலி வேலோன் அருளுக
வார்சடை யான்கடவூர்த்
துறைமலி ஆம்பல்பல் லாயிரத்
துத்தமி யேஎழினும்
நறைமலி தாமரை தன்னதென்
றேசொல்லும் நற்கயமே. 24

மணி. ஒக்கரை - இடையில். 12. அகலம் - மார்பு.

23. வட்டித்து - சுழற்றி. அசைத்தான் - கட்டியவன்.

24. தோழிக்குத் தலைவி கூறியது. எங்கையரென்றது பரத்தையரை. தமியே தனியாக. கயத்தில் ல்லாயிரம் ஆம்பல் எழுந்தாலும் தனியொரு தாமரையைக் கொண்டு தாமரைப் பொய்கை என்று சொல்லும் உலகம்.

(அகவல்)

கயங்கெழு கருங்கடல் முதுகு தெருவுபட
இயங்குதிமில் தடவி எறிஒளி நுளையர்
நெய்ம்மீன் கவரல் வேண்டிக் கைம்மிகுத்
தால வட்டம் ஏய்ப்ப மீமிசை
முடிகெழு தருவலை வீசி முந்நீர்க்
குடரென வாங்கிக் கொள்ளை கொண்ட
சுரிமுகச் சங்கும் சுடர்விடு பவளமும்
எரிகதிர் நித்திலத் தொகுதியுங் கூடி
விரிகதிர் நிலவுஞ் செக்கருந் தாரகை
உருவது காட்டும் உலவாக் காட்சித்
தண்ணந் துறைவன் தடவரை அகலம்
கண்ணுறக் கண்டது முதலா ஒண்ணிறக்
காள மாசுணங் கதிர்மதிக் குழவியைக்
கோள்இழைத் திருக்குங் கொள்கை போல
களைதிகழ் மிடற்று வானவன் மருவும்
அணிதிகழ் அகலத் தண்ண லாரூர்
ஆர்கலி விழவின் அன்னதோர்
பேரலர் சிறந்தது சிறுநல் லூரே. 25

(வெண்பா)

ஊரெலாந் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெலாம் பாடவிந்த பாயிருட்கண்—சீருலாம்
மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக்காட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள். 26

---

25. தலைவி அலர்மிகுதியை உரைத்தல். அடி, 1 - 2. கயம் – பள்ளம். திமில் - மீன் படகு. நுளையர் - வலையர். 13. காளம் - கருமை. 18. அலர் – பழிமொழி

26. தலைவி கூற்று பாடு - ஒலி.

(கட்டளைக் கலித்துறை)

புள்ளுந் துயின்று பொழுதிறு
மாந்து கழுதுறங்கி
நள்ளென்ற கங்குல் இருள்வாய்ப்
பெருகிய வார்பனிநாட்
டுள்ளுங் கலைக்கைச் சுடர்வண்ண
னைத்தொழு வார்மனம்போன்
றுள்ளும் உருக ஒருவர்திண்
டேர்வந் துலாத்தருமே. 27

(அகவல்)

உலாநீர்க் கங்கை ஒருசடைக் கரந்து
புலால்நீர் ஒழுகப் பொருகளி றுரித்த
பூத நாதன் ஆதி மூர்த்தி
திருமட மலைமகட் கொருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர் நண்பகல்
வலம்புரி அடுப்பா மாமுத் தரிசி
சலஞ்சலம் நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடாஅ தட்ட அமுதம் வாய்மடுத்
திடாஅ ஆயமோ டுண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே
விருந்தின் அடியேற் கருளுதி யோஎன
முலைமுகம் நோக்கி முறுவலித் திறைஞ்சலின்
நறைகமழ் எண்ணெய்ச் சிறுநுண் துள்ளி
பொங்குபுனல் உற்றது போலஎன்
அங்கம் எல்லாந் தானா யினளே. 28

---

27. **தலைவன் வந்தமை தலைவிக்குத் தோழி உணர்த்தல்.** கழுது - பேய்

28. **தலைவன் கூற்று.** அ. 7. சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு. 10. அடாஅது அட்ட அமுதம் - சிறு சோறு.

(வெண்பா)

ஆயினஅன் பாரே அழிப்பர் அனலாடி
பேயினவன் பாரோம்பும் பேரருளான்—தீயினவன்
கண்ணுளன் ஆரூர்க் கடலார் மடப்பாவை
தண்ணருங் கொங்கைக்கே தாழ்ந்து. 29

(கட்டளைக்கலித்துறை)

தாழ்ந்து கிடந்த சடைமுடிச்
சங்கரன் தாள்பணியா
தாழ்ந்து கிடந்துநை வார்கிளை
போல்அயர் வேற்கிரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல்
திரைஎன்னுங் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி
லாதிவ் விரிகடலே. 30

திருச்சிற்றம்பலம்

8

சேரமான்பெருமாள்நாயனார்

அருளிச்செய்த

திருக்கைலாய ஞானஉலா

திருச்சிற்றம்பலம்

திருமாலும் நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமால் உறஅழலாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினன் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்—முறைமையால்

---

29. தலைவன் கூற்று. பேய் இனவன் - பேயைக் கணமாகக் கொண்டவன்.

30. தலைவி கூற்று.

1. மால் உற - மயக்கத்தை அடைய.

ஆழாதே ஆழ்ந்தான் அகலா தகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான்—சூழொளிநூல்
ஓதா துணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதும் அணுகா தணுகியான்—ஆதி
அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே—பரனாய
தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான்—ஓவாதே
எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்—எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய எம்பெருமான்—ஆனாத
சீரார் சிவலோகந் தன்னுட் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயி லுள்ளிருப்ப—ஆராய்ந்து
செங்கண் அமரர் புறங்கடைக்கட் சென்றீண்டி
எங்கட்குக் காட்சிஅருள் என்றிரப்ப—அங்கொருநாட்
பூமங்கை பொய்தீர் தரணி புகழ்மங்கை
நாமங்கை என்றிவர்கள் நன்கமைத்த—சேமங்கொள்
ஞானக் கொழுந்து நகராசன் றன்மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேற் சித்திரிப்ப—ஊனமில்சீர்
நந்தா வனமலரும் மந்தா கினித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நா றாயிரத்தால்—நொந்தா
வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப்—பயன்கொள்
குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தங் கொண்டு
நலமலிய ஆகந் தழீஇக்—கலைமலிந்த

---

11 பூமங்கை - திருமகள்
12. நகராசன் - மலையரசன்.
13. மந்தாகினி - கங்கை
14. வாசிகை - மாலை. உறுப்பு - வாசனைத் திரவியங்கள்.

கற்பகம் ஈன்ற கமழ்பட் டினைஉடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து—விற்பகரும்
சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத்—தோளா
மணிமகர குண்டலங்கள் காதுக் கணிந்தாங்
கணிவயிரக் கண்டிகை பொன்னூண்—பணிபெரிய
ஆரம் அவைபூண் டணிதிக ழுஞ்சன்ன
வீரந் திருமார்பில் வில்லிலக—ஏருடைய
எண்டோட்கும் கேயூரம் பெய்துதர பந்தனமும்
கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக்—கொண்டு
கடிசூத் திரம்புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்—கடிநிலைமேல்
நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப—அந்தமில்சீர்
எண்ணருங் கீர்த்தி எழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாம்உணர்த்த—ஒண்ணிறத்த
பன்னிருவர் ஆதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப
மன்னும் அகத்தியன்யாழ் வாசிப்பப்—பொன்னியலும்
அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச்—செங்கண்
நிருதி முதலோர் நிழற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத்—தெருவெலாம்
வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடைஎடுப்ப—மேவியசீர்
ஈசானன் வந்தடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத்—தூய

---

21. அடிநிலை மேல் - பாதுகையின்மேல்.
22. கடை - திருவாசல், இருக்கு - வேதம்.
26. நிழற்கலன்கள் - கண்ணாடிகள்.
27. சோமன் - சந்திரன்.

உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக்—கருத்தமைந்த
கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடைஇரட்டத்—தங்கிய
பைந்நாகம் எட்டும் சுடர்எடுப்பப் பைந்தறுகட்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க—மெய்ந்நாக
மேகம் விதானமாய் மின்னெலாஞ் சூழ்கொடியாய்
மேகத் துருமு முரசறையப்—போகஞ்சேர்
தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட—எம்பெருமான்
விண்ணோர் பணிய உயர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்—கெண்ணார்
கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கழிந்த போதிற்—செருக்குடைய
சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர—ஆனாத
அன்னத்தேர் ஏறி அயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலுந் திண்டோட் கருடன்மேல்—மன்னிய
மால்இடப்பாற் செல்ல மலரார் கணைஐந்து
மேலிடப்பால் மென்கருப்பு வில்லிடப்பால்—ஏல்வுடைய
சங்கணையும் முன்கைத் தடமுலையார் மேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த—ஐங்கணையான்
காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய—நாமஞ்சேர்
வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச் [கூந்தல்
சூழ்வளைக்கைத் தொண்டைவாய்க் கெண்டைஒண்கட்—டாழ்

---

31. பைந் நாகம் - படத்தையுடைய நாகங்கள். கைந் நாகம் - திக்கயங்கள்.
35. பாரிடங்கள்-பூதகணங்கள். கடைகள்-திருவாசல்கள்.
36. சேனாபதி - முருகன்.
40. காரி - ஐயனார்.

மங்கை எழுவருஞ் சூழ மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத்—தங்கிய

விச்சா தரர்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர்—எச்சாரும்

சல்லரி தாளந் தகுணிதந் தத்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை—நல்லிலயத்

தட்டழி சங்கஞ் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம்—கொட்டும்

குடமுழவங் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம்—இடவிய

மத்தளந் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப—ஒத்துடனே

மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத்—தங்கிய

ஆறும் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும்—ஈறார்ந்த

காலங்கள் மூன்றுங் கணமுங் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி—மேலை

இமையோர் பெருமானே போற்றி எழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி—எமைஆளும்

தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி—தூயசீர்ச்

சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி—அங்கொருநாள்

ஆய விழுப்போர் அருச்சுனனு தாற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி—தூய

மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி—சிலைபோற்றி

48. கிங்கரர் - ஏவலாளர்.

போற்றிஎனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றிசையும் எங்கும் நலம்பெருக—ஏற்றுக்
கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலுஞ் சூழக்—கடிகமழும்
பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற்—சேமேலே

குழாங்கள்

வாமான ஈசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கங் கேட்டலுமே—தூமாண்பில்
வானநீர் தாங்கி மறைஓம்பி வான்பிறையோ
டூனமில் சூலம் உடையவாய்—ஈனமிலா
வெள்ளை அணிதலால் வேழத் துரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய—ஒள்ளிய
மாட நடுவில் மலரார் அமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக்—கேடில்
சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா—நலந்திகழும்
கூழைபின் தாழ வளைஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாந் தேருந்திச்—சூழொளிய
கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார்—செங்கேழற்
பொற்கலசத் துள்ளால் மணிநீர் முகஞ்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைந்து—பொற்புடைய
பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சேர மகிழ்ந்தீண்டிச்—சோதிசேர்
சூளிகையுஞ் சூட்டுஞ் சுளிகையுஞ் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக—மாளிகையின்

---

58. சே - இடபம்.
62. அமளி - படுக்கை.
64. கூழை-கூந்தல், ஒருவகைப்படை. வளை-கைவளை, சங்கு.

மேல்ஏறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மால்ஏறி நின்று மயங்குவார்—நூல்ஏறு
தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமேல் எம்மை அடுமென்பார்—காமவேள்
ஆமென்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையெறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார்—பூமன்னும்
பொன்னரி மாலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூட்டுவார்—முன்னம்
ஒருகண் எழுதிவிட் டொன்றெழுதா தோடித்
தெருவம் புகுவார் திகைப்பார்—அருகிருந்த
கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளிஎன்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார்—அண்ணல்மேற்
கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ண நிறைத்தாழ் திறந்திட்டார்—ஒண்ணிறத்த

பேதை

பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள்—தீதில்
இடையாலும் ஏக்கழுத்த மாட்டாள் நலஞ்சேர்
உடையாலும் உள்ளுருக்க கில்லாள்—நடையாலும்
கௌவைநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யுந் தொழில்பூணாள்—செவ்வனேர்
நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள்தன் செவ்வாயின்
வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள்—பூக்குழலும்

---

73. எழுதி - மை எழுதி.
74. பஞ்சு - செம்பஞ்சுக்குழம்பு.
75. சாலம் - வலை. நிறையாகிய தாழை.
76. தூதை - சிறு பானை.
77. ஏக்கழுத்தம் - செருக்கு.

பாடவந் தோன்ற முடியாள் இளவேய்த்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள்—நாடொறும்

ஒன்றுரைத் தொன்றுன்னி ஒன்றுசெய் தொன்றின்கட்
சென்ற மனத்தினளாஞ் சேயிழையாள்—நன்றாகத்

தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக்—கோலஞ்சேர்

பந்தலிற் பாவைகொண் டாடும்இப் பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ—அந்தமில்சீர்

ஈசன் எரியாடி என்ன அவனையோர்
காய்சின மால்விடைமேற் கண்ணுற்றுத்—தாய்சொன்ன

இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமன்நூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள்—பொற்புடைய

பெதும்பை

பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவின்இயலாள்—சீரொளிய

தாமரை ஒன்றின் இரண்டு குழைஇரண்டு
காமரு கெண்டையோர் செந்தொண்டை—தாமருவு

முத்த முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
வைத்தது போலும் மதிமுகத்தாள்—ஒத்தமைந்த

சங்கணஞ் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள்—ஒண்கேழல்

அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியிற்
சந்தனந் தோய்ந்த தடந்தோளாள்—வந்து

திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள்—மடல்பட்ட

---

80. பாடவம் - வல்லமை.
82. அறுவை - ஆடை.
87. தொண்டை - கோவைப் பழம்.

மாலை வளாய குழலாள் மணம்நாறு
சோலை இளங்கிளிபோல் தூமொழியாள்—சாலவும்
வஞ்சனை செய்து மனங்கவரும் வாட்கண்ணுக்
கஞ்சனத்தை இட்டங் கழகாக்கி—எஞ்சா
மணியாரம் பூண்டாழி மெல்விரலிற் சேர்த்தி
அணியார் வளைதோள்மேல் மின்ன—மணிஆர்த்த
தூவெண் மணற்கொண்டு தோழியருந் தானுமாய்க்
காமன் உருவம் வரஎழுதிக்—காமன்
கருப்புச் சிலையும் மலரம்புந் தேரும்
ஒருப்பட் டுடன்எழுதும் போழ்தில்—விருப்பூரும்
தேனமருங் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் ஏற்றின்மேல் வந்தணையத்—தான்அமர
நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்தோற்று
நின்றறிவு தோற்று நிறைதோற்று—நன்றாகக்
கைவண்டுங் கண்வண்டும் ஓடக் கலையோட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள்—மொய்கொண்ட

மங்கை

மங்கை இடங்கடவா மாண்பினள் வான்இழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள்—தங்கிய
அங்கை கமலம் அடிகமலம் மான்நோக்கி
கொங்கை கமலம் முகங்கமலம்—பொங்கெழிலார்
இட்டிடையும் வஞ்சி இரும்பணைத்தோள் வேய்எழிலார்
பட்டுடைய அல்குலுந் தேர்த்தட்டு—மட்டுவிரி
கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம்—வாய்ந்தசீர்
வண்டு வளாய வளர்வா சிகைசூட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக்—குண்டலங்கள்

---

94. ஆழி - மோதிரம்.
99. கைவண்டு - கைவளை.

காதுக் கணிந்து கனமே கலைதிருத்தித்
தீதில் செழுங்கோலஞ் சித்திரித்து—மாதராள்
பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்
சொற்கோட்டி கொண்டிருந்த எல்லைக்கண்—நற்கோட்டு
வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு—தெள்ளியநீர்
தாழுஞ் சடையான் சடாமகுடந் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தளாய்ச்—சூழ்ஒளியான்
தார்நோக்குந் தன்தாரும் நோக்கும் அவனுடைய
ஏர்நோக்கும் தன்ன தெழில்நோக்கும்—பேரருளான்
தோள்நோக்குந் தன்தோளும் நோக்கும் அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து—நாண்நோக்கா
துள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடைஅழுந்தி வெய்துயிர்த்தாள்—ஒள்ளிய

மடந்தை

தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள்—ஏய்ந்தசீர்
ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலுந் திரள்முத்தும்—பாசிலைய
வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோல் மண்டலமும்—எஞ்சாப்
புருவமுஞ் செவ்வாயுங் கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென் தோளும்—மருவினிய
கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள்—ஒண்கேழல்

---

108. மம்மர் - மயக்கம்.

114-116. ஈசன் சிலை முதலியவற்றை முறையே புருவம் முதலியனவாகக் கொண்டவள்.

வாழைத்தண் டன்ன குறங்கினுள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள்—ஊழித்
திருமதியம் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போற்—பெருகொளிய
முத்தாரங் கண்டத் தணிந்தாள் அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப்பெருகி—வித்தகத்தாற்
கள்ளுங் கடாமுங் கலவையுங் கைபோந்திட்
டுள்ளும் புறமுஞ் செறிவமைத்துத்—தெள்ளொளிய
காளிங்கஞ் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளிம்பத் தாமம் நுதல்சேர்த்தித்—தோளெங்கும்
தண்ணறுஞ் சந்தனங்கொண் டப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங்—கொண்ணுதலாள்
தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்
பின்னுமோர் காமரம் யாழ்அமைத்து—மன்னு
விடவண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதீண்—டடல்வல்ல
வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க்கெஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின்—கோல
மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணியேறு தோளானைக் கண்டாங்—கணிஆர்ந்த
கோட்டி ஒழிய எழுந்து குழைமுகத்தைக்
கோட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி - நாட்டார்கள்
எல்லோருங் கண்டார் எனக்கடவுள் இங்காய
நல்லாய் படுமேற் படுமென்று—மெல்லவே
செல்ல லுறுஞ்சரணங் கம்பிக்குந் தன்னுறுநோய்
சொல்லலுறுஞ் சொல்லி உடைசெறிக்கும்—நல்லாகம்

---

123. **காமரம் - ஒரு பண்.**
126. **மணியேறு - மணி ஓசை.**
127. **கோட்டி - கூட்டம்.**
129. **கம்பிக்கும் - நடுங்கும்.**

காண லுறுங்கண்கள் நீர்மல்குங் காண்பார்முன்
நாண லுறும்நெஞ்சம் ஒட்டாது—பூணாகம்

புல்லலுறும் அண்ணல்கை வாரானென் றிவ்வகையே
அல்ல லுறும்அழுந்தும் ஆழ்துயரால்—மெல்லியலாள்

தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்னுருவங் கொண்டு புலம்புற்றாள்—பின்னொருத்தி

அரிவை

செங்கேழற் றாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கேழ் அரிவைப் பிராயத்தாள்—ஒண்கேழல்

திங்களுந் தாரகையும் வில்லுஞ் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையாற்—பொங்கொளிசேர்

மின்னார்வான் காட்டும் முகஒளியாள் மெய்ம்மையே
தன்னாவார் இல்லாத் தகைமையாள்—எந்நாளும்

இல்லாரை எல்லாரும் எள்குவார் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னும்—சொல்லாலே

அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து—நல்கூர்

இடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள்—அடியிணைமேற்

பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள்—கேடில்சீர்ப்

பொன்னரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள்—பொன்னனாள்

---

132. தன் அழகு மாறிப் பசலை நிறம் பெற்றாள்.

136. குறள், 752. இல்லாரென்றது இடையையும், செல்வரென்பது பிற உறுப்புக்களையும் குறிப்பித்தன.

139. பாடகம் - பாதசரம். சூடகம் - கைவளை.

இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தானிட்ட ஆசையால்—முன்னமே
பாடல் தொடங்கும் பொழுதிற் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும்—கூடிய
இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையுங் கைவிட்டுப் - பொன்னனையீர்
இன்றன்றே காண்ப தெழில்நலங் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று—சென்றவன்றன்
ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோற் கட்டுரைத்தும் - ஒண்கேழற்
கூந்தல் அவிழ்க்கும் முடிக்குங் கலைதிருத்தும்
சாந்தந் திமிரும் முலைஆர்க்கும்—பூந்துகிலைச்
சூழும் அவிழ்க்குந் தொழும்அழுஞ் சோர்துயருற்
றுழும் அழுந்தும் அயாவுயிர்க்கும்—சூழொளிய
அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை இவளும் நலந்தோற்றாள்—அங்கொருத்தி

தெரிவை

ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள்—ஓரா
மருளோசை இன்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்தீர் புலரியே ஒப்பாள்—அருளாலே
வெப்பம் இளையவர்கட் காக்குதலால் உச்சியோ
டொப்பமையக் கொள்ளும் உருவத்தாள்—வெப்பந்தீர்ந்

---

147. அயாவுயிர்க்கும் - பெருமூச்சு விடுவாள்.

148. கையைச் சேர்த்துத் தொழுது, வளைகளை நழுவாமல் பாதுகாத்தாள். கலை - ஆடை.

150. புலரி - விடியற்காலை.

தந்தளிர்போற் சேவடியும் அங்கையுஞ் செம்மையால்
அந்திவான் காட்டும் அழகினாள்—அந்தமில்
சீரார் முகம்மதியம் ஆதலாற் சேயிழையாள்
ஏரார் இரவின் எழில்கொண்டாள்—சீராரும்
கண்ணார் பயோதரமும் நுண்ணிடையும் உண்மையால்
நண்ணிளங் காரின் சவிகொண்டாள்—வண்ணஞ்சேர்
மாந்தளிர் மேனி முருக்கிதழ்வாய் ஆதலால்
வாய்ந்த இளவேனில் வண்மையாள்—மாந்தர்
அறிவுடையீர் நின்மின்கள் அல்லார்போம் என்று
பறைஅறைவ போலுஞ் சிலம்பு—முறைமையார்
சீரார் திருந்தடிமேற் சேர்த்தினாள் தேரல்குல்
ஓரா தகலல் உறுமென்று—சீராலே
அந்துகிலும் மேகலையுஞ் சூழ்ந்தாள் அணிமுலைகள்
மைந்தர் மனங்கவரும் என்பதனால்—முந்துறவே
பூங்கச்சி னால்அடையப் பூட்டுறீஇப் பொற்றொடியால்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி—வாய்ந்தசீர்
நற்கழுத்தை நல்லாரத் தால்மறைத்துக் காதுக்கு
விற்பகருங் குண்டலங்கள் மேவுவித்து—மைப்பகரும்
காவியங் கண்ணைக் கதந்தணிப்பாள் போலத்தன்
ஏவிய அஞ்சனத்தை முன்னூட்டி—யாவரையும்
ஆகுலம் ஆக்கும் அழகினாள் அன்னமும்
கோகிலமும் போலுங் குணத்தினாள்—ஆகிப்
பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய ஆகிக்—கலைகரந்
தள்யாதும் இன்றிப் புறங்கமழ்ந்து கீழ்தாழ்ந்து
கள்ளாவி நாறுங் கருங்குழலாள்—தெள்ளொளிய

---

154. பயோதரம் - நகில், நீரைத் தாங்குதல். நுண் இடை - நுண்ணிய இடுப்பு, நுண்ணிய இடம். சவி - ஒளி.

161. கதம் - கோபம்.

செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங் குமமெழுதி
அங்கழுநீர்த் தாமம் நுதல்சேர்த்திப்—பொங்கெழிலார்

பொற்கவற்றின் வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில்—விற்பகிரும்

தோளான் நிலைபெறு தோற்றங்கே டாய்நின்ற
தாளான் சடாமகுடந் தோன்றுதலும்—கேளாய

நாணார் நடக்க நலத்தார்க் கிடைஇல்லை
ஏணார் ஒழிக எழிலொழிக—பேணும்

குலத்தார் அகன்றிடுக குற்றத்தார் வம்மின்
நலத்தீர் நினைமினீர் என்று—சொலற்கரிய

தேவாதி தேவன் சிவனாயிற் றேன்கொன்றைப்
பூவார் அலங்கல் அருளாது—போவானேற்

கண்டால் அறிவனெனச் சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள்—ஒண்டாய

பேரிளம்பெண்

பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணாரும் இன்சொற் பணிமொழியாள்—மண்ணின்மேற்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளஎன்று—பண்டையோர்

கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணாடி மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள்—கட்டரவம்

அஞ்சப் பரந்தகன்ற அல்குலாள் ஆய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கும் நுண்ணிடையாள்—எஞ்சாத

பொற்செப் பிரண்டு முகடு மணிஅழுத்தி
வைத்தன போல வளர்ந்தேந்தி—ஒத்துச்

சுணங்கும் திதலையுஞ் சூழ்போந்து கண்டார்க்
கணங்கும் அமுதமுமாய்த் தோன்றி—இணங்கொத்த

---

166. **பொற்கவறு - பொன்னாலாகிய காய்.**
173. குறள்.
177. **இணங்கு ஒத்த - சரியாக ஒத்திருக்கும்.**

கொங்கையாள் கோலங்கட் கெல்லாமோர் கோலமாம்
நங்கையாள் நாகிளவேய்த் தோளினாள்—அங்கையாற்
காந்தட் குலம்பழித்தாள் காமவேள் காதலாள்
சாந்தம் இலங்கும் அகலத்தாள்—வாய்ந்துடனே
ஏய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்த செழும்பவளம்—காய்ந்திலங்கி
முத்தமுந் தேனும் பொதிந்து முனிவரையும்
சித்தந் திறைகொள்ளுஞ் செவ்வாயாள்—ஒத்து
வரிகிடந் தஞ்சனம் ஆடி மணிகள்
உருவ நடுவுடைய வாகிப்—பெருகிய
தண்ணங் கயலுஞ் சலஞ்சலமுந் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள்—ஒண்ணிறத்த
குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலும் மதிமுகத்தாள்—வண்டலம்ப
யோசனை நாறு குழலாள் ஒளிநுதல்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள்—மாசில்சீர்ப்
பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள்—மாதார்ந்த
பண்கவருஞ் சொல்லார்பல் லாண்டேத்தப் பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடைஇருந்து—ஒண்கேழற்
கண்ணவனை அல்லது காணா செவிஅவன
தெண்ணருஞ்சீர் அல்ல திசைகொள்ளா—அண்ணல்
கழலடி அல்லது கைதொழா அஃதான்
றழலங்கைக் கொண்டான்மாட் டன்பென்—றெழிலுடைய
வெண்பா விரித்துரைக்கும் போழ்தில் விளங்கொளிசேர்
கண்பாவும் நெற்றிக் கறைக்கண்டன்—விண்பால்

---

186. சீதாரி - நறும்புகை.

அரிஅரணஞ் செற்றுங் கலேபுனலும் பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராணன்—எரிஇரவில்
ஆடும் இறைவன் அமரர்குழாம் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு—கேடில்சீர்
வண்ணச் சிலம்படி மாதரார் தாம்உண்ட
கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான்—அண்ணலே
வந்தாய் வளேகவர்ந்தாய் மாலும் அருந்துயரும்
தந்தாய் இதுவோ தகவென்று—நொந்தாள்போற்
கட்டுரைத்துக் கைசோர்ந் தகம்உருகி மெய்வெளுத்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள்—கொட்டிமைசேர்
பண்ணுரும் இன்சொற் பணேப்பெருந்தோட் செந்துவர்
பெண்ணுர வாரம் பெரிதன்றே—விண்ணோங்கி [வாய்ப்
மஞ்சடையும் நீள்குடுமி வாள்நிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு.

பெண்ணீர்மை காமின் பெருந்தோள் இணேகாமின்
உண்ணீர்மை மேகலேயும் உள்படுமின்—தெண்ணீரக்
காரேறு கொன்றையந்தார்க் காவாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா.

திருச்சிற்றம்பலம்

9

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

கயிலேபாதி காளத்திபாதி அந்தாதி

திருச்சிற்றம்பலம்

சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலே மேல்இருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று. 1

---

191. அரி - பகைமையையுடைய
வெண்பா : **காமின் - பாதுகாப்புச் செய்யுங்கள்.**
1. இடிஞ்சில் – அகல்.

பெற்ற பயன்இதுவே அன்றே பிறந்தியான்
கற்றவர்கள் ஏத்துஞ்சீர்க் காளத்திக்—கொற்றவர்க்குத்
தொண்டாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்
காளாகப் பெற்றேன் அடைந்து. 2

அடைந்துய்ம்மின் அம்மானை உம்ஆவி தன்னைக்
குடைந்துண்ண எண்ணியவெங் கூற்றம் - குடைந்துநும்
கண்ணுளே பார்க்கும் பொழுது கயிலாயத்
தண்ணலே கண்டீர் அரண். 3

அரணம் ஒருமூன்றும் ஆரழலாய் வீழ
முரண்அம்பு கோத்த முதல்வன்—சரணமே
காணுமால் உற்றவன்றன் காளத்தி கைதொழுது
பேணுமால் உள்ளம் பெரிது. 4

பெரியவர்கா ணீரென் உள்ளத்தின் பெற்றி
தெரிவரிய தேவாதி தேவன்—பெரிதும்
திருத்தக்கோர் ஏத்துந் திருக்கயிலைக் கோனை
இருத்தத்தான் போந்த திடம். 5

இடப்பாகம் நீள்கோட் டிமவான் பயந்த
மடப்பாவை தன்வடிவே ஆனால்—விடப்பாற்
கருவடிசேர் கண்டத்தெங் காளத்தி ஆள்வார்க்
கொருவடிவே அன்றால் உரு. 6

உருவு பலகொண் டுணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால் இருக்கை—மருவினிய
பூக்கையிற்கொண் டெப்பொழுதும் புத்தேளிர் வந்திறைஞ்சு
மாக்கயிலை என்னும் மலை. 7

மலைவரும்போல் வானவருந் தானவரும் எல்லாம்
அலைகடல்வாய் நஞ்செழல்கண் டஞ்சி—நிலைதளரக்
கண்டமையால் தண்சாரற் காளத்தி ஆள்வார்நஞ்
சுண்டமையால் உண்டிவ் வுலகு. 8

---

4. முரண் - வலி. காணும் மால் உற்று - தரிசிக்கும் ஆவலை அடைந்து.

7. இருக்கை - உறைவிடம்.

உலகம் அனைத்தினுக்கும் ஒண்ணுதல்மேல் இட்ட
திலகம் எனப்பெறினுஞ் சீசீ—இலகியசீர்
ஈசா திருக்கயிலை எம்பெருமான் என்றென்றே
பேசா திருப்பார் பிறப்பு. 9

பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றும்
சிறப்புடையர் ஆனாலுஞ் சீசீ—இறப்பில்
கடியார் நறுஞ்சோலைக் காளத்தி ஆள்வார்
அடியாரைப் பேணா தவர். 10

அவரும் பிறந்தவராய்ப் போவார்கொல் ஆவி
எவரும் தொழுதேத்தும் எந்தை—சிவமன்னு
தேக்குவார் சோலைத் திருக்கயிலை ஏத்தாதே
போக்குவார் வாளா பொழுது. 11

வாளா பொழுது கழிக்கின்றார் மானிடவர்
கேளார்கொல் அந்தோ கிறிபட்டார்—கீளாடை
அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்ப ராவார் கதை. 12

கதையிலே கேளீர் கயிலாயம் நோக்கிப்
புதையிருட்கண் மாலோடும் போகிச்—சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற் பாசுபதம் பெற்றுச் செருக்களத்திற்
பார்த்தன்போர் வென்றிலனோ பண்டு. 13

பண்டு தொடங்கியும் பாவித்துநின் கழற்கே
தொண்டு படுவான் தொடர்வேணைக்—கண்டுகொண்
டாளத் தயாவுண்டோ இல்லையோ சொல்லாயே
காளத்தி யாயுன் கருத்து. 14

---

9. பிறப்பு சீ சீ ; இழிந்த தென்றபடி.

11. தேக்கு - ஒருவகை மரம்.

13. மாலோடும் - கண்ணபிரானோடும்.

கருத்துக்குச் சேயையாய்க் காண்டக்கோர் காண
இருத்தி திருக்கயிலை என்றால்—ஒருத்தர்
அறிவான் உறுவார்க் கறியுமா றுண்டோ
நெறிவார் சடையாய் நிலை. 15

நிலையில் பிறவி நெடுஞ்சுழியிற் பட்டுத்
தலைவ தடுமாறு கின்றேன்—தொலைவின்றிப்
போந்தேறக் கைதாராய் காளத்திப் புத்தேளிர்
வேந்தேஇப் பாசத்தை விட்டு. 16

பாசத்தை விட்டுநின் பாதத்தின் கீழேஎன்
நேசத்தை வைக்க நினைகண்டாய்—பாசத்தை
நீக்குமா வல்ல கயிலாயா நீஎன்னைக்
காக்குமா றித்தனையே காண். 17

காணா தலக்கின்றார் வானோர்கள் காளத்திப்
பூணார மார்பன்றன் பொற்பாதம்—நாணாதே
கண்டிடுவான் யான்இருந்தேன் காணீர் கடல்நஞ்சை
உண்டிடுவான் றன்னை ஒருங்கு. 18

ஒருங்கா துடனேநின் றோரைவர் எம்மை
நெருங்காமல் நித்தம் ஒருகால்—நெருங்கிக்
கருங்கலோங் கும்பற் கயிலாயம் மேயான்
வருங்கொலோ நம்பால் மதித்து. 19

நம்பான் மதித்துறையுங் காளத்தி நண்ணாதே
வம்பார் மலர்தூய் வணங்காதே—நம்பாநின்
சீலங்கள் ஏத்தாதே தீவினையேன் யான்இருந்தேன்
காலங்கள் போன கழிந்து. 20

---

18. அலக்கின்றார் - வருந்துகின்றார்.

19. ஒருங்காது - ஒருமைப்பாடு பெறாமல். ஐவர் - ஐம்பொறிகள். உம்பல் - வலிமை.

கழிந்த கழிகிடாய் நெஞ்சே கழியா
தொழிந்தநாள் மேற்பட் டுயர்ந்தோர்—மொழிந்தசீர்க்
கண்ணுலான் எந்தை கயிலாய மால்வரையே
நண்ணுதலாம் நன்மை நமக்கு. 21

நமக்கிசைந்த வாநாளும் ஏத்தினல் நம்பர்
தமக்கழகு தாமே அறிவர்—அமைப்பொதும்பிற்
கல்லவா நீட்டருவிக் காளத்தி ஆள்வாரை
வல்லவா நெஞ்சமே வாழ்த்து. 22

வாழ்த்துவாய் வாழ்த்தா தொழிவாய் மறுசுழியிட்
டாழ்த்துவாய் அஃதறிவாய் நீயன்றே—யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கயிலை வாழ்கென் றிருப்பதே
கண்டாய் அடியேன் கடன். 23

கடநாகம் ஊடாடும் காளத்திக் கோனைத்
கடனுகக் கைதொழுவார்க் கில்லை—இடம்நாடி
இந்நாட்டிற் சேவந்திங் கீண்டிற்றுக் கொண்டுபோய்
அந்நாட்டில் உண்டுழலு மாறு. 24

மாறிப் பிறந்து வழியிடை ஆற்றிடை
ஏறி இழியும் இதுவல்லால்—தேறித்
திருக்கயிலை ஏத்தீரேற் சேமத்தால் யார்க்கும்
இருக்கையிலைக் கண்டீர் இனிது. 25

இனிதே பிறவி இனமரங்கள் ஏறிக்
கனிதேர் கடுவன்கள் தம்மில்—முனிவாய்ப்
பிணங்கிவருந் தண்சாரற் காளத்தி பேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து. 26

---

21. கழிகிடாய் - கழியட்டும். நண்ணுதல் நமக்கு நன்மை ஆம்.

22. அமைப்பொதும்பின் - மூங்கிற் காட்டையுடைய. வல்லவா - இயன்றபடி.

24. கடநாகம் - யானை. ஈண்டிற்று - கூடிய வினையை. அந்நாட்டில் - தேவலோகத்தில்.

25. இருக்கை இல்லை - இருத்தல் இல்லை.

மகிழ்ந்தலரும் வண்கொன்றை மேலே மனமாய்
நெகிழ்ந்து நெகிழ்ந்துள்ளே நெக்குத்—திகழ்ந்திலங்கும்
விண்ணிறங்கா ஓங்கும் வியன்கயிலை மேயாய்என்
பெண்உறங்காள் என்செய்கேன் பேசு. 27

பேசும் பரிசறியாள் பேதை பிறர்க்கெல்லாம்
ஏசும் பரிசானாள் ஏபாவம்—மாசுணைநீர்க்
காம்பையலைத் தாலிக்குங் காளத்தி என்றென்று
பூம்பயலை மெய்ம்முழுதும் போர்த்து. 28

போர்த்த களிற்றுரியும் பூண்ட பொறியரவும்
தீர்த்த மகளிருந்த செஞ்சடையும்—மூர்த்தி
குயிலாய மென்மொழியாள் கூறாய வாறும்
கயிலாயா யான்காணக் காட்டு. 29

காட்டில் நடமாடிக் கங்காள ராகிப்போய்
நாட்டிற் பலிதிரிந்து நாடோறும்—ஓட்டுண்பார்
ஆனாலும் என்கொலோ காளத்தி ஆள்வாரை
வானோர் வணங்குமா வந்து. 30

வந்தமரர் ஏத்தும் மடைகூழும் வார்சடைமேற்
கொந்தவிழு மாலை கொடுத்தார்கொல்—வந்தித்து
வாளுகுத்த வண்கயிலைக் கோனார்தம் மாமுடிமேற்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு. 31

பண்டிதுவே அன்றாயிற் கேளீர்கொல் பல்சருகு
கொண்டிலங்கத் தும்பிநூற் கூடிழைப்பக்—கண்டு
நலந்திக் கெலாம்ஏத்துங் காளத்தி நாதர்
சிலந்திக்குச் செய்த சிறப்பு. 32

---

27. நற்றாய் கூற்று.
28. காம்பை - மூங்கில்.
29. தீர்த்த மகள் - கங்கை.
30. ஓட்டுண்பார் - பிரமகபாலத்தில் பிச்சை ஏற்று உண்பார்.
31. மாணி - சண்டேசர்.
32. சிலந்திக்குச் செய்த சிறப்பென்றது, சிலந்தியைக் கோச்செங்கட் சோழராகப் பிறக்கச் செய்த சிறப்பை.

செய்த சிறப்பெண்ணில் எங்குலக்குஞ் சென்றடைந்து
கைதொழுவார்க் கெங்கள் கயிலாயர்—நொய்தளவிற்
காலற்காய்ந் தார்அரன்றே காணீர் கழல்தொழுத
பாலற்காய் அன்று பரிந்து. 33

பரிந்துரைப்பார் சொற்கேளாள் எம்பெருமான் பாதம்
பிரிந்திருக்க கில்லாமை பேசும்—புரிந்தமரர்
நாதாவா காளத்தி நம்பாவா என்றென்று
மாதாவா உற்ற மயல். 34

மயலைத் தவிர்க்கநீ வாராய் ஒருமூன்
றெயிலைப் பொடியாக எய்தாய்—கயிலைப்
பருப்பதவா நின்னுடைய பாதத்தின் கீழே
இருப்பதவா உற்றாள் இவள். 35

இவளுக்கு நல்லவா றெண்ணுதிரேல் இன்றே
தவளப் பொடிஇவள்மேற் சாத்தி—இவளுக்குக்
காட்டுமின்கள் காளத்தி காட்டிக் கமழ்கொன்றை
சூட்டுமின்கள் தீரும் துயர். 36

துயர்க்கெலாங் கூடாய தோற்குரம்பை புக்கு
மயக்கி வழிகாண மாட்டேன்—வியற்கொடும்போர்
ஏற்றானே வண்கயிலை எம்மானே என்கொலோ
மேற்றான் இதற்கு விளைவு. 37

விளையும் வினையரவின் வெய்ய விடத்தைக்
களைமினோ காளத்தி ஆள்வார் - வளைவில்
திருந்தியசீர் ஈசன் திருநாமம் என்னும்
மருந்தினைநீர் வாயிலே வைத்து. 38

---

33. பாலற்காய் - மார்க்கண்டேயனுக்காக.
34. மாது ஆவா உற்ற மயல்; ஆவா - அந்தோ.
35. இருப்பதை அவாவினாள்.
38. வினையாகிய அரவு:

வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித்
தீய பிறவிநோய் தீர்க்குமே—தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்
தெம்பெருமான் ஓரஞ் செழுத்து. 39

அஞ்செழுத்தும் கண்டீர் அருமறைகள் ஆவனவும்
அஞ்செழுத்துங் கற்க அணித்தாகும்—நஞ்சவித்த
காளத்தி யார்யார்க்குங் காண்டற் கரிதாய்ப்போய்
நீளத்தே நின்ற நெறி. 40

நெறிவார் சடையாய் நிலையின்மை நீயொன்
றறியாய்கொல் அந்தோ அயர்ந்தாள்—நெறியிற்
கனைத்தருவி தூங்குங் கயிலாயா நின்னை
நினைத்தருவி கண்சோர நின்று. 41

நின்றும் இருந்துங் கிடந்தும் நடந்தும்யாம்
என்றும் நினைந்தாலும் என்கொலோ—சென்றுதன்
தாள்வா னவர்இறைஞ்சுந் தண்சாரற் காளத்தி
ஆள்வான் அருளாத வாறு. 42

அருளாத வாறுண்டே யார்க்கேனும் ஆக
இருளார் கறைமிடற்றெம் ஈசன்—பொருள்ஆய்ந்து
மெய்ம்மையே உன்னில் வியன்கயிலை மேயான்வந்
திம்மையே தீர்க்கும் இடர். 43

இடரீர் உமக்கோர் இடம்நாடிக் கொண்டு
நடவீரோ காலத்தால் நாங்கள்—கடல்வாய்க்
கருப்பட்டோங் கொண்முகில்சேர் காளத்தி காண
ஒருப்பட்டோங் கண்டீர் உணர்ந்து. 44

---

39. ஏகமாகிய பெரிய தேவி.

44. கடலினிடத்தில் உள்ள நீரை உண்டு சூல்கொண்டு மேலே சென்ற மேகம்.

உணருங்கால் ஒன்றை உருத்தெரியக் காட்டாய்
புணருங்கால் ஆரமுதே போன்றும்—இணரிற்
கனியவாஞ் சோலைக் கயிலாயம் மேயாய்
இனியவா காண்நின் இயல்பு. 45

நின்னியல்பை யாரே அறிவார் நினையுங்கால்
மன்னியசீர்க் காளத்தி மன்னவனே—நின்னில்
வெளிப்படுவ தேழுலகும் மீண்டே ஒருகால்
ஒளிப்பதுவும் ஆனால் உரை. 46

உரையும் பொருளும் உடலும் உயிரும்
விரையும் மலரும்போல் விம்மிப்—புரையின்றிச்
சென்றவா றெங்குந் திருக்கயிலை எம்பெருமான்
நின்றவா றெங்கும் நிறைந்து. 47

நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும் ஒன்றின்
மறைந்தைம் புலன்காண வாராய்—சிறந்த
கணியாருந் தண்சாரற் காளத்தி ஆள்வாய்
பணியாயால் என்முன் பரிசு. 48

பரிசறியேன் பற்றிலேன் கற்றிலேன் முற்றும்
கரிஉரியான் பாதமே கண்டாய்—திரியும்
புரம்மாளச் செற்றவனே பொற்கயிலை மன்னும்
பரமா அடியேற்குப் பற்று. 49

பற்றாவான் எவ்வுயிர்க்கும் எந்தை பசுபதியே
முற்றாவெண் திங்கள் முளைசூடி—வற்றாவாங்
கங்கைசேர் செஞ்சடையான் காளத்தி யுண்ணின்ற
மங்கைசேர் பாகத்து மன். 50

மன்னா கயிலாயா மாமுத்தம் மாணிக்கம்
பொன்னார மாக்கொண்டு பூணாதே—எந்நாளும்
மின்செய்வார் செஞ்சடையாய் வெள்ளெலும்பு பூண்கின்ற
தென்செய்வான் எந்தாய் இயம்பு. 51

47. **விரை** - மணம் புரை - குற்றம்.
48. **கணி** - வேங்கைமரம்.

இயம்பாய் மடநெஞ்சே ஏனோர்பால் என்ன
பயம்பார்த்துப் பற்றுவான் உற்றாய்—புயம்பாம்பால்
ஆர்த்தானே காளத்தி அம்மானே என்றென்றே
ஏத்தாதே வாளா இருந்து. 52

இருந்தவா காணீர் இதுவென்ன மாயம்
அருந்தண் கயிலாயத் தண்ணல்—வருந்திப்போய்த்
தான்நாளும் பிச்சை புகும்போலுந் தன்அடியார்
வான்ஆள மண்ஆள வைத்து. 53

வைத்த இருநிதியே என்னுடைய வாழ்முதலே
நித்திலமே காளத்தி நீள்சுடரே—மொய்த்தொளிசேர்
அக்காலத் தாசை அடிநாயேன் காணுங்கால்
எக்காலத் தெப்பிறவி யான். 54

யானென்று தானென் றிரண்டில்லை என்பதனை
யானென்றுங் கொண்டிருப்பன் ஆனாலும்—தேனுண்
டளிகள்தாம் பாடும் அகன்கயிலை மேயான்
தெளிகொடான் மாயங்கள் செய்து. 55

மாயங்கள் செய்தைவர் சோன்ன வழிநின்று
காயங்கொண் டாடல் கணக்கன்று—காயமே
நிற்பதன் முதலாற் காளத்தி நின்மலர்சீர்
கற்பதே கண்டீர் கணக்கு. 56

கணக்கிட்டுக் கொண்டிருந்து காலனார் நம்மை
வணக்கி வலைப்படா முன்னம்—பிணக்கின்றிக்
காலத்தால் நெஞ்சே கயிலாயம் மேவியநற்
சூலத்தான் பாதந் தொழு. 57

தொழுவாள் பெருளே தன் தோள்வளையுந் தோற்றாள்
மழுவாளன் காளத்தி வாழ்த்தி—எழுவாள்
நறுமா மலர்க்கொன்றை நம்முன்னே நாளைப்
பெறுமாறு காணீர்என் பெண். 58

---

52. பயம் - பயன்.

56. கணக்கு - நியாயம்.

பெண்ணின் றயலார்முன் பேதை பிறைசூடி
கண்ணின்ற நெற்றிக் கயிலைக்கோன்—உண்ணின்ற
காமந்தான் மீதூர நைவாட்குன் கார்க்கொன்றைத்
தாமந்தா மற்றிவளைச் சார்ந்து. 59

சார்ந்தாரை எவ்விடத்துங் காப்பனவுஞ் சார்ந்தன்பு
கூர்ந்தார்க்கு முத்தி கொடுப்பனவும்—கூர்ந்துள்ளே
மூளத் தியானிப்பார் முன்வந்து நிற்பனவும்
காளத்தி யார்தம் கழல். 60

தங்கழல்கள் ஆர்ப்ப விளக்குச் சலன்சலனென்
றங்கழல்கள் ஆர்ப்ப அனலேந்திப்—பொங்ககலத்
தார்த்தா டரவம் அகன்கயிலை மேயாய்நீ
கூத்தாடல் மேவியவா கூறு. 61

கூறாய்நின் பொன்வாயாற் கோலச் சிறுகிளியே
வேறாக வந்திருந்து மெல்லெனவே—நீறாவும்
மஞ்சடையும் நீள்குடுமி வாளருவிக் காளத்திச்
செஞ்சடைஎம் ஈசன் திறம். 62

ஈசன் திறமே நினைந்துருகும் எம்மைப்போல்
மாசில் நிறத்த மடக்குருகே—கூசி
இருத்தியால் நீயும் இருங்கயிலை மேயாற்
கருத்தியாய்க் காமுற்றா யாம். 63

காமுற்றா யாம்அன்றே காளத்தி யான்கழற்கே
யாமுற்ற துற்றாய் இருங்கடலே—யாமத்து
ஞாலத் துயிரெல்லாங் கண்துஞ்சும் நள்ளிருள்கூர்
காலத்துந் துஞ்சாதுன் கண். 64

கண்ணுங் கருத்துங் கயிலாய ரேஎமக்கென்
றெண்ணி இருப்பன்யான் எப்பொழுதும்—நண்ணும்
பொறியா டரவசைத்த பூதப் படையார்
அறியார்கொல் நெஞ்சே அவர். 65

---

59. பிறைசூடி, கயிலைக்கோன் : விளி.
61. தங்கு அழல்கள், அம் கழல்கள்.
62. நீல் தாவு - நீலநிறம் பரவிய.

நெஞ்சே அவர்கண்டாய் நேரே நினைவாரை
அஞ்சேலென் றாட்கொண் டருள்செய்வார்—நஞ்சேயும்
கண்டத்தார் காளத்தி ஆள்வார் கழல்கண்டீர்
அண்டத்தார் சூடும் அலர். 66

அலரோன் நெடுமால் அமரர்கோன் மற்றும்
பலராய்ப் படைத்துக்காத் தாண்டு—புலர்காலத்
தொன்றாகி மீண்டு பலவாகி நிற்கின்றான்
குன்றாத சீர்க்கயிலைக் கோ. 67

கோத்த மலர்வாளி கொண்டநங்கன் காளத்திக்
கூத்தன்மேல் அன்று குறித்தெய்யப்—பார்த்தலுமே
பண்பொழியாக் கோபத்தீச் சுற்றுதலும் பற்றற்று
வெண்பொடியாய் வீழ்ந்திலனோ வெந்து. 68

வெந்திறல்வேற் பார்த்தற் கருள்செய்வான் வேண்டிஓர்
செந்தறுகட் கேழல் திறம்புரிந்து—வந்தருளும்
கானவனாங் கோல மியான்காணக் கயிலாயா
வானவர்தங் கோமானே வா. 69

வாமான்தேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமார் உலகில் தவமுடையார்—தாமியார்க்கும்
காண்டற் கரியராய்க் காளத்தி ஆள்வாரைத்
தீண்டத்தாம் பெற்றமையாற் சென்று. 70

சென்றிறைஞ்சும் வானோர்தஞ் சிந்தைக்குஞ் சேயராய்
என்றும் அடியார்க்கு முன்னிற்பர்—நன்று
கனியவாஞ் சோலைக் கயிலாயம் மேயார்
இனியவா பத்தர்க் கிவர். 71

இவரே முதல்தேவர் எல்லார்க்கும் மிக்கார்
இவரல்லர் என்றிருக்க வேண்டாம்—கவராதே
காதலித்தின் றேத்துதிரேற் காளத்தி ஆள்வார்நீர்
ஆதரித்த தெய்வமே ஆம். 72

---

66. அண்டத்தார் - தேவர்.

ஆமென்று நாளை உளஎன்று வாழ்விலே
தாம்இன்று வீழ்கை தவம்அன்று—யாம்என்றும்
இம்மாய வாழ்வினையே பேணு திருங்கயிலை
அம்மானைச் சேர்வ தறிவு. 73

அறியாம லேனும் அறிந்தேனுஞ் செய்து
செறிகின்ற தீவினைகள் எல்லாம்—நெறிநின்று
நன்முகில்சேர் காளத்தி நாதன் அடிபணிந்து
பொன்முகரி ஆடுதலும் போம். 74

போகின்ற மாமுகிலே பொற்கயிலை வெற்பளவும்
ஏகின் றெமக்காக எம்பெருமான்—ஏகினால்
உண்ணப் படாநஞ்சம் உண்டாற்கென் உள்ளுறுநோய்
விண்ணப்பஞ் செய்கண்டாய் வேறு. 75

வேறேயுங் காக்கத் தகுவேனை மெல்லியலாள்
கூறேயுங் காளத்திக் கொற்றவனே—ஏறேறும்
அன்பா அடியேற் கருளா தொழிகின்ற
தென்பாவ மேஅன்றோ இன்று. 76

இன்று தொடங்கிப் பணிசெய்வேன் யான்உனக்
கென்றும் இளமதியே எம்பெருமான்—என்றும்என்
உட்காதல் உண்மை உயர்கயிலை மேயாற்குத்
திட்காதே விண்ணப்பஞ் செய். 77

செய்ய சடைமுடிஎன் செல்வனையான் கண்டெனது
கையறவும் உண்மெலிவும் யான்காட்டப்—பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி ஆள்வார்தம்
போரேறே இத்தெருவே போது. 78

போது நெறியனவே பேசிநின் பொன்வாயால்
ஊதத் தருவன் ஒளிவண்டே—காதலாற்
கண்டார் வணங்குங் கயிலாயத் தெம்பெருமான்
வண்டார்மோந் தென்குழற்கே வா. 79

---

74. பொன்முகரி - காளத்தியில் உள்ள ஆறு.
75. இன்று எமக்காக ஏகு.
76. கூறு ஏயும் - பாகம் பொருந்திய.
79. போது தருவன்; போது - மலர்.

வாவா மணிவாயால் மாவின் தளிர்கோதிக்
கூவா திருந்த குயிற்பிள்ளாய்—ஓவாதே
பூமாம் பொழில்உடுத்த பொன்மதில்சூழ் காளத்திக்
கோமான் வரஒருகாற் கூவு. 80

கூவுதலும் பாற்கடலே சென்றவனைக் கூடுகஎன்
றேவினான் பொற்கயிலை எம்பெருமான்—மேவியசீர்
அன்பாற் புலிக்காலன் பாலன்பால் ஆசையினால்
தன்பாற்பால் வேண்டுதலுந் தான். 81

தானே உலகாள்வான் தான்கண்ட வாவழக்கம்
ஆனால்மற் றார்இதனை அன்றென்பார்—வானோர்
களைகண்டா னாய்நின்ற காளத்தி ஆள்வார்
வளைகொண்டார் மால்தந்தார் வந்து. 82

வந்தோர் அரக்கனார் வண்கயிலை மால்வரையைத்
தந்தோள் வலியினையே தாம்கருதி—அந்தோ
இடந்தார் இடந்திட் டிடார்க்கீழ் எலிபோற்
கிடந்தார் வலியெலாங் கெட்டு. 83

கெட்ட அரக்கரே வேதியரே கேளீர்கொல்
பட்டதுவும் ஓராது பண்டொருநாள்—ஒட்டக்
கலந்தரனார் காளத்தி ஆள்வார்மேற் சென்று
சலந்தரனார் பட்டதுவுந் தாம். 84

தாம்பட்ட தொன்றும் அறியார்கொல் சார்வரே
காம்புற்ற செந்நெற் கயிலைக்கோன்—பாம்புற்ற
ஆரத்தான் பத்தர்க் கருகணையார் காலனார்
தூரத்தே போவார் தொழுது. 85

---

81. கூவுதலும் - அழுதவுடன். புலிக்காலன் பாலன் - வியாக்கிரபாத முனிவருடைய குமாரராகிய உபமன்யு.

83. இடார் - பொறி.

84. ஒட்ட - போர் செய்ய. கலந்து அரனார்.

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக என்று. 86

வென்றைந்துங் காமாதி வேர்அறுத்து மெல்லவே
ஒன்ற நினைதிரேல் ஒன்றலாம்—சென்றங்கை
மானுடையான் என்னை உடையான் வடகயிலை
தானுடையான் தன்னுடைய தாள். 87

தாளொன்றாற் பாதாளம் ஊடுருவத் தண்விசும்பில்
தாளொன்றால் அண்டங் கடந்துருவித்—தோளொன்றால்
திக்கனைத்தும் போர்க்குந் திறற்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம். 88

நடமாடுஞ் சங்கரன்தாள் நான்முகனுங் காணான்
படமாடு பாம்பணையான் காணான்—விடமேவும்
காரேறு கண்டன் கயிலாயன் தன்உருவை
யாரே அறிவார் இசைந்து. 89

இசையுந்தன் கோலத்தை யான்காண வேண்டி
வசையில்சீர்க் காளத்தி மன்னன்—அசைவின்றிக்
காட்டுமேற் காட்டிக் கலந்தென்னைத் தன்னோடும்
கூட்டுமேற் கூடலே கூடு. 90

கூடி யிருந்து பிறர்செய்யுங் குற்றங்கள்
நாடித்தங் குற்றங்கள் நாடாதே—வாடி
வடகயிலை ஏத்தாதே வாழ்ந்திடுவான் வேண்டில்
அடகயில ஆரமுதை விட்டு. 91

---

87. ஐந்தும் வென்று; ஐந்து - ஐம்பொறி. காமாதி - காமம் முதலிய அறுபகை.

90. ஒரு பெண் கூடல் இழைக்கும்போது சொல்வது.. கூடல் - மணலில் சுழித்துப் பார்க்கும் நிமித்தம்.

91. அடகு அயில - இலையை உண்பாராக.

விட்டாவி போக உடல்கிடந்து வெந்தீயிற்
பட்டாங்கு வேமாறு பார்த்திருந்தும்—ஒட்டாதாம்
கள்ளலைக்கும் பூஞ்சோலைக் காளத்தி யுண்ணின்ற
வள்ளலைச்சென் றேத்த மனம். 92

மனமுற்றும் மையலாய் மாதரார் தங்கள்
கனமுற்றுங் காமத்தே வீழ்வர்—புனமுற்
றினக்குறவர் ஏத்தும் இருங்கயிலை மேயான்
தனக்குறவு செய்கலார் தாழ்ந்து. 93

தாழ்ந்த சடையுந் தவளத் திருநீறும்
சூழ்ந்த புலியதளும் சூழ்அரவும்—சேர்ந்து
நெருக்கிவா னோர்இறைஞ்சுங் காளத்தி ஆள்வார்க்
கிருக்குமா கோலங்கள் ஏற்று. 94

ஏற்றின் மணியே அமையாதோ ஈர்ஞ்சடைமேல்
வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ—ஆற்றருவி
சுன்மேற்பட் டார்க்குங் கயிலாயத் தெம்பெருமான்
என்மேற் படைவிடுப்பாற் கீங்கு. 95

ஈங்கேவா என்றருளி என்மனத்தில் எப்பொழுதும்
நீங்காமல் நீவந்து நின்றாலும்—தீங்கை
அடுகின்ற காளத்தி ஆள்வாய்நான் நல்லை
படுகின்ற வண்ணம் பணி. 96

பணியாது முன்இவனைப் பாவியேன் வாளா
கணியாது காலங் கழித்தேன்—அணியும்
கருமா மிடற்றெங் கயிலாயத் தெங்கள்
பெருமானை தில்லை பிழை. 97

பிழைப்புவாய்ப் பொன்றறியேன் பித்தேறி னாற்போல்
அழைப்பதே கண்டாய் அடியேன்—அழைத்தாலும்
என்னு தரவேகொண் டின்பொழில்சூழ் காளத்தி
மன்னு தருவாய் வரம். 98

---

95. **படை விடுப்பான்** - காமன்.
97. **கணியாது** - நினையாமல்.
98. **பிழைப்பு வாய்ப்பு** - லாப நஷ்டம்.

வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்
பரமாஉன் பாதார விந்தம்—பிரமார
எற்றிடும்போ தாகவந் தென்மனத்தில் எப்பொழுதும்
வைத்திடுநீ வேண்டேன்யான் மற்று. 99

மற்றும் பலபிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடைஅண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்
சோராமல் எப்பொழுதுஞ் சொல். 100

திருச்சிற்றம்பலம்

10

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருவீங்கோய்மலை எழுபது

திருச்சிற்றம்பலம்

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி—நொடியுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே ஓங்கார
மன்னதென நின்றான் மலை. 1

அந்தஇள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர்—சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை. 2

அம்பவள வாய்மகளிர் அம்மனைக்குத் தம்மனையைச்
செம்பவளந் தாவென்னச் சீர்க்குறத்தி—கொம்பின்
இறுதலையி னாற்கிளைக்கும் ஈங்கோயே நம்மேல்
மறுதலைநோய் தீர்ப்பான் மலை. 3

---

1. நொடியுங்கால் - சொல்லும் பொழுது.
2. இளமாக்குழவி - இளைய மான். சந்தின் இலை: சந்தனத்தழை.
3. அம்மனைக்கு - அம்மானை விளையாடுவதற்கு.

அரிகரியைக் கண்டஇடத் தச்சலிப்பாய் ஓடப்
பிரிவரிய தன்பிடியைப் பேணிக்—கரிபெரிதும்
கையெடுத்து நீட்டிக் கதஞ்சிறக்கும் ஈங்கோயே
மையடுத்த கண்டன் மலை. 4

அரியும் உழுவையும் ஆளியுமே ஈண்டப்
பரியிட்டுப் பன்மலர்கொண் டேறிச்—சொரிய
எரியாடி கண்டுகக்கும் ஈங்கோயே கூற்றம்
திரியாமற் செற்றான் சிலம்பு. 5

ஆளி தொடர அரிதொடர ஆங்குடனே
வாளி கொடுதொடரும் மாக்குறவர்—கோளின்
இடுசிலையி னாற்புடைக்கும் ஈங்கோயே நம்மேற்
கொடுவினைகள் வீட்டுவிப்பான் குன்று. 6

இடுதினைதின் வேழங் கடியக் குறவர்
வெடிபடு வெங்கவண்கல் ஊன்ற—நெடுநெடென
நீண்டகழை முத்துதிர்க்கும் ஈங்கோயே ஏங்குமணி
பூண்டகழை யேறி பொருப்பு. 7

ஈன்ற குறமகளிர்க் கேழை முதுகுறத்தி
நான்றகறிக் கேறசலை நற்கிழங்—கூன்றவைத்
தென்னன்னை உண்ணென் றெடுத்துரைக்கும் ஈங்கோயே
மின்னன்ன செஞ்சடையான் வெற்பு. 8

ஈன்ற குழவிக்கு மந்தி இறுவரைமேல்
நான்ற நறவத்தைத் தான்நணுகித்—தோன்ற
விரலால்தேன் தோய்த்தூட்டும் ஈங்கோயே நம்மேல்
வரலாம்நோய் தீர்ப்பான் மலை. 9

உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்க்-கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு. 10

---

4. **அரி** - சிங்கம். **கதம்** - கோபம்.
9. **நான்ற நறவம்** - தொங்கும் தேனடை.
10. **அறுபதங்கள்** – வண்டுகள். **பூமயிலி** - அழகிய மயில்

ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்
நாடிக் களிறு நயந்தெடுத்துக்—கூடிக்
குணமருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே வானோர்
குணமருட்டுங் கோளரவன் குன்று. 11

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
கையிற் கணைகளைந்து கன்னிமான்—பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு. 12

ஏழை இளமாதே என்னொடுநீ போதென்று
கூழை முதுவேடன் கொண்டுபோய்—வேழ
இனக்குவால் வீட்டுவிக்கும் ஈங்கோயே நந்தம்
வினைக்குவால் வீட்டுவிப்பான் வெற்பு. 13

ஏனம் உழுத புழுதி இனமணியைக்
கானவர்தம் மக்கள் கனலென்னக்—கூனல்
இறுக்கங் கதிர்வெதுப்பும் ஈங்கோயே நம்மேல்
மறுக்கங்கள் தீர்ப்பான் மலை. 14

ஏனங் கிளைத்த இனபவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி—யானை
இனம்இரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினைஇரியச் செற்றுகந்தான் வெற்பு. 15

ஒருகணையுங் கேழல் உயிர்செகுத்துக் கையில்
இருகணையும் ஆனைமேல் எய்ய—அருகணையும்
ஆளரிதான் ஓட அரிவெருவும் ஈங்கோயே
கோளரிக்குங் காண்பரியான் குன்று. 16

வாகனனாகிய முருகன்.

13. வினைக்குவால் - வினையின் தொகுதியை.

14. இறுக்கங்கதிர் - மலைச்சோளக் கதிரை. மறுக்கங்கள் தீர்ப்பான் - கவலைகளைப் போக்குவான்.

15. ஏனம் - காட்டுப் பன்றி.

16. கோளரிக்கும் - வீரத்தையுடைய திருமாலுக்கும்.

ஓங்கிப் பரந்தெழுந்த ஒள்ளிலவத் தண்போதைத்
தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன்—மூங்கில்
தழைஇறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே சங்கக்
குழையிறுத்த காதுடையான் குன்று. 17

ஓடும் முகிலை உகிரால் இறவூன்றி
மாடுபுக வான்கை மிகமடுத்து—நீடருவி
மாச்சீயம் உண்டு மனங்களிக்கும் ஈங்கோயே
கோச்சீயங் காண்பரியான் குன்று. 18

கண்ட கனிநுகர்ந்த மந்தி கருஞ்சுனைநீர்
உண்டு குளிர்ந்திலஎன் றாடிப்போய்க்—கொண்டல்
இறைக்கீறி வாய்மடுக்கும் ஈங்கோயே நான்கு
மறைக்கீறு கண்டான் மலை. 19

கருங்களிற்றின் வெண்கொம்பாற் கல்லுரல்வாய் நல்லார்
பெருந்தினைவெண் பிண்டி இடிப்ப—வருங்குறவன்
கைக்கொணருஞ் செந்தேன் கலந்துண்ணும் ஈங்கோயே
மைக்கொணருங் கண்டன் மலை. 20

கனைய பலாங்கனிகள் கல்லிலையர் தொக்க
நனைய கலத்துரத்தில் ஏந்தி—மனைகள்
வரவிரும்பி யாய்பார்க்கும் ஈங்கோயே பாங்கார்
குரவரும்பு செஞ்சடையான் குன்று. 21

கடக்களிறு கண்வளரக் கார்நிறவண் டார்ப்பச்
சுடர்க்குழையார் பாட்டெழவு கேட்டு—மடக்கிளிகள்
கீதந் தெரிந்துரைக்கும் ஈங்கோயே ஆற்கீழ்நால்
வேதந் தெரிந்துரைப்பான் வெற்பு. 22

---

18. சீயம் - சிங்கம். கோச்சீயம் - நரசிங்கமூர்த்தியாகிய திருமால்.
19. இறைக் கீறி - சிறிதளவு கிழித்து.
20. நல்லார் - மகளிர். பிண்டி - மா.
21. கனைய - மிகுதியான.
22. பாட்டு எழவு பாட்டு எழுதலை.

கறுத்தமுலைச் சூற்பிடிக்குக் கார்யானை சந்தம்
இறுத்துக்கை நீட்டுமீங் கோயே—செறுத்த
கடதடத்த தோலுரிவைக் காப்பமையப் போர்த்த
விடமிடற்றி னன்மருவும் வெற்பு. 23

கங்குல் இரைதேருங் காகோ தரங்கேழற்
கொம்பி னிடைக்கிடந்த கூர்மணியைப்—பொங்கி
உருமென்று புற்றடையும் ஈங்கோயே காமன்
வெருவொன்றக் கண்சிவந்தான் வெற்பு. 24

கலவிக் களிறசைந்த காற்றெங்குங் காணு
திலைகைக்கொண் டேந்திக்கால் வீச—உலவிச்சென்
றெண்பிடிகாற் றேற்றுகக்கும் ஈங்கோயே பாங்காய
வெண்பொடிநீற் றான்மருவும் வெற்பு. 25

கன்னிப் பிடிமுதுகிற் கப்பருவ முட்பருகி
அன்னைக் குடிவர லாறஞ்சிப்—பின்னரே
என்றருக்கி மாதவஞ்செய் ஈங்கோயே நீங்காத
மான்தரித்த கையான் மலை. 26

கள்ள முதுமறவர் காட்டகத்து மாவேட்டை
கொள்ளென் றழைத்த குரல்கேட்டுத்—துள்ளி
இனக்கவலை பாய்ந்தோடும் ஈங்கோயே நந்தம்
மனக்கவலை தீர்ப்பான் மலை. 27

கல்லைப் புனம்மேய்ந்து கார்க்கொன்றைத் தார்போர்த்துக்
கொல்லை எழுந்த கொழும்புறவின்—முல்லையங்கண்
பல்லரும்பு மொய்த்தீனும் ஈங்கோயே மூவெயிலும்
கொல்லரும்பக் கோல்கோத்தான் குன்று. 28

கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடனீண்டி—வல்லே
இருந்துகிராற் கற்கிளைக்கும் ஈங்கோயே மேனிப்
பொருந்தஅராப் பூண்டான் பொருப்பு. 29

---

23. சந்தம் - சந்தனத்தழையை.
24. காகோதரம் - பாம்பு. வெரு - அச்சம்.
29. உகிரால் கற்கிளைக்கும்-நகத்தினால் கல்லைப் பறிக்கும்.

கண்கொண் டவிர்மணியின் நாப்பட் கருங்கேழல்
வெண்கோடு வீழ்ந்த வியன்சாரல்—தண்கோ
டிளம்பிறைசேர் வான்கடுக்கும் ஈங்கோயே வேதம்
விளம்பிறைசேர் வான்கடுக்கும் வெற்பு. 30

காந்தளங் கைத்தலங்கள் காட்டக் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாடச்—சாய்ந்திரங்கி
ஏர்க்கொன்றை பொன்கொடுக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
கார்க்கொன்றை ஏன்றான் கடறு. 31

குறமகளிர் கூடிக் கொழுந்தினைகள் குத்தி
நறவமாக் கஞ்சகங்கள் நாடிச்—சிறுகுறவர்
கைந்நீட்டி உண்ணக் களித்துவக்கும் ஈங்கோயே
மைந்நீட்டுங் கண்டன் மலை. 32

கூழை முதுமந்தி கோல்கொண்டு தேன்பாய
ஏழை இளமந்தி சென்றிருந்து—வாழை
இலையால்தேன் உண்டுவக்கும் ஈங்கோயே இஞ்சி
சிலையால்தான் செற்றான் சிலம்பு. 33

கொல்லை இளவேங்கைக் கொத்திறுத்துக் கொண்டுசுனை
மல்லைநீர் மஞ்சனமா நாட்டிக்கொண்—டொல்லை
இருங்கைக் களிறேறும் ஈங்கோயே மேனேய்
வருங்கைக் களைவான் மலை. 34

கொவ்வைக் கனிவாய்க் குறமகளிர் கூந்தல்சேர்
கவ்வைக் கடிபிடிக்குங் காதன்மைபாற்—செவ்வை
எறித்தமலர் கொண்டுவிடும் ஈங்கோயே அன்பர்
குறித்தவரந் தான்கொடுப்பான் குன்று. 35

கொடுவிற் சிலைவேடர் கொல்லை புகாமற்
படுகுழிகள் கல்லுதல்பார்த் தஞ்சி—நெடுநாகம்
கண்டேன்றிச் செல்லுஞ்சீர் ஈங்கோயே தாழ்சடைமேல்
வண்டேன்றுந் தாரான் மலை. 36

---

30. வேதத்தை விளம்பிய இறைவன்.
31. கடறு - காடு.

கோங்கின் அரும்பழித்த கொங்கைக் குறமகளிர்
வேங்கைமணி நீழல் விளையாடி—வேங்கை
வரவதனைக் கண்டிரியும் ஈங்கோயே தீங்கு
வரவதனைக் காப்பான் மலை. 37

சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்த மடப்பிடியின் வாய்க்கொடுப்ப—வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு. 38

சந்தின் இலையதனுள் தண்பிண்டி தேன்கலந்து
கொந்திஇனி துண்ணக் குறமகளிர்— மந்தி
இளமகளிர் வாய்க்கொடுத்துண் ஈங்கோயே வெற்பின்
வளமகளிர் பாகன் மலை. 39

சாரற் குறத்தியர்கள் தண்மருப்பால் வெண்பிண்டி
சேரத் தருக்கி மதுக்கலந்து—வீரத்
தமர்இனிதா உண்ணுஞ்சீர் ஈங்கோயே இன்பக்
குமரன்முது தாதையார் குன்று. 40

தாயோங்கித் தாமடருந் தண்சாரல் ஒண்கானம்
வேயோங்கி முத்தம் எதிர்பிதுங்கித்—தீயோங்கிக்
கண்கன்றித் தீவிளைக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
வண்கொன்றைத் தாரான் வரை. 41

செடிமுட்டச் சிங்கத்தின் சீற்றத்தீக் கஞ்சிப்
பிடியட்ட மாக்களிறு பேர்ந்து—கடமுட்டி
என்னேசீ என்னுஞ்சீர் ஈங்கோயே ஏந்தழலிற்
பொன்னேர் அனையான் பொருப்பு. 42

சுனைநீடு தாமரையின் தாதளைந்து சோதிப்
புனைநீடு பொன்னிறத்த வண்டு—மனைநீடி
மன்னி மணம்புணரும் ஈங்கோயே மாமதியம்
சென்னி அணிந்தான் சிலம்பு. 43

---

41. **கண் கன்றி - கணுக்கள் உராய்ந்து.**

செந்தினையின் வெண்பிண்டி பச்சைத்தே னுற்குழைத்து
வந்தவிருந் தூட்டு மணிக்குறத்தி—பந்தியாத்
தேக்கிலைகள் இட்டுச் சிறப்புரைக்கும் ஈங்கோயே
மாக்கலைகள் வைத்தான் மலை. 44

தடங்குடைந்த கொங்கைக் குறமகளிர் தங்கள்
இடம்புகுந்தங் கின்னறவம் மாந்தி—உடன்கலந்து
மாக்குரவை ஆடி மகிழ்ந்துவரும் ஈங்கோயே
கோக்குரவை ஆடிகொழுங் குன்று. 45

தாமரையின் தாள்தகைத்த தாமரைகள் தாள்தகையத்
தாமரையிற் பாய்ந்துகளுந் தண்புறவில்—தாமரையின்
ஈட்டம் புலிசிதறும் ஈங்கோயே எவ்வுயிர்க்கும்
வாட்டங்கள் தீர்ப்பான் மலை. 46

தெள்ளகட்ட பூஞ்சுனைய தாமரையின் தேமலர்வாய்
வள்ளவட்டப் பாழி மடலேறி—வெள்ளகட்ட
காராமை கண்படுக்கும் ஈங்கோயே வெங்கூற்றைச்
சேராமற் செற்றான் சிலம்பு. 47

தேன்மருவும் பூஞ்சுனைக்கட் புக்குச் செழு.... 48

* * * 49—61

....

கலைகள் வருவனகள் கண்டு—சிலையை
இருந்தெடுத்துக் கோல்தெரியும் ஈங்கோயே மானைப்
புரிந்திடத்துக் கொண்டான் பொருப்பு. 62

மத்தக் கரிமுகத்தை வாளரிகள் பீறஒளிர்
முத்தம் பனிநிகர்க்கும் மொய்ம்பிற்றால்—அத்தகைய
ஏனற் புனம்நீடும் ஈங்கோயே தேங்குபுனல்
கூனற் பிறைஅணிந்தான் குன்று. 63

---

46. தாம் மரையின் தாள் தகைத்த - தாவுகின்ற மானின் காலைத்தடுத்த. தாமரைகள் தாள் தகைய - தாமரைக்கொடிகள் காலைத் தடுக்க.

63. வாளரிகள் - சிங்கங்கள். முத்தம் - யானைமத்தகத்தில் இருந்த முத்து.

மந்தி இனங்கள் மணிவரையின் உச்சிமேல்
முந்தி இருந்து முறைமுறையே—நந்தி
அளைந்தாடி ஆலிக்கும் ஈங்கோயே கூற்றம்
வளைந்தோடச் செற்றான் மலை. 64

மந்தி மகவினங்கள் வண்பலவின் ஒண்சுளைக்கண்
முந்திப் பறித்த முறியதனுட்—சிந்திப்போய்த்
தேனாறு பாயுஞ்சீர் ஈங்கோயே செஞ்சடைமேல்
வானாறு வைத்தான் மலை. 65

முள்ளார்ந்த வெள்ளிலவம் ஏறி வெறியாது
கள்ளார்ந்த பூப்படியுங் கார்மயில்தான்—ஒள்ளார்
எரிநடுவுட் பெண்கொடியார் ஏய்க்கும்ஈங் கோயே
புரிநெடுநூல் மார்பன் பொருப்பு. 66

வளர்ந்த இளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை
அளைந்து வடுப்படுப்பான் வேண்டி—இளந்தென்றல்
எல்லிப் புகநுழையும் ஈங்கோயே தீங்கருப்பு
வில்லிக்குக் கூற்றானான் வெற்பு. 67

வான மதிதடவல் உற்ற இளமந்தி
கான முதுவேயின் கண்ணேறித்—தானங்
கிருந்துயரக் கைநீட்டும் ஈங்கோயே நம்மேல்
வருந்துயரந் தீர்ப்பான் மலை. 68

வேய்வனத்துள் யானை தினைகவர வேறிருந்து
காய்வனத்தே வேடன் கணைவிசைப்ப—வேயணைத்து
மாப்பிடிமுன் ஒட்டுமீங் கோயே மறைபரவு
பூப்பிடிபொற் றாளான் பொருப்பு. 69

---

67. கொங்கை - பூந்தாதை. வடுப்படுப்பான் வேண்டி - மாவடுவை உண்டாக்கும் பொருட்டு.

வழுகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி—பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று. 70

திருச்சிற்றம்பலம்

11

நக்கீரதேவநாயனார்

அருளிச் செய்த

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(அகவல்)

வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படவர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவி குணகடல்
மடுக்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணல தடியே. 1

(வெண்பா)

அடிப்போது தந்தலைவைத் தவ்வடிகள் உன்னிக்
கடிப்போது கைக்கொண்டார் கண்டார்—முடிப்போதா
வாணாகஞ் சூடும் வலஞ்சுழியான் வானோரும்
காணாத செம்பொற் கழல். 2

---

1. குடவரை – மேற்குமலையில். குணகடல் - கீழ்கடல்.
2. கடிப்போது - மணமலர்.

(கட்டளைக்கலித்துறை)

கழல்வண்ண முஞ்சடைக் கற்றையும்
மற்றவர் காணகில்லார்
தழல்வண்ணங் கண்டே தளர்ந்தார்
இருவரந் தாமரையின்
நிழல்வண்ணம் பொன்வண்ணம் நீர்நிற
வண்ணம் நெடியவண்ணம்
அழல்வண்ண முந்நீர் வலஞ்சுழி
ஆள்கின்ற அண்ணலையே. 3

(அகவல்)

அண்ணலது பெருமை கண்டனங் கண்ணுதற்
கடவுள் மன்னிய தடமல்கு வலஞ்சுழிப்
பணிப்பொருட் பயந்து பல்லவம் பழிக்கும்
திகழொளி முறுவல் தேமொழிச் செவ்வாய்த்
திருந்திருங் குழலியைக் கண்டு
வருந்திஎன் உள்ளம் வந்தவப் போதே. 4

(வெண்பா)

போதெலாம் பூங்கொன்றை கொண்டிருந்த பூங்கொன்றைத்
தாதெலாந் தன்மேனி தைவருமால்—தீதின்
மறைக்கண்டன் வானோன் வலஞ்சுழியான் சென்னிப்
பிறைக்கண்டங் கண்டணைந்த பெண். 5

(கட்டளைக்கலித்துறை)

பெண்கொண் டிருந்து வருந்துங்கொ
லாம்பெரு மான்திருமால்
வண்கொண்ட சோலை வலஞ்சுழி
யான்மதி சூடிநெற்றிக்

---

4. பாங்கன் தலைவனை வியத்தல்.
5. தோழி கூற்று.
6. தலைவன் கார்வரவு கண்டு பாகனொடு கூறல். பெண் – தலைவி.

கண்கொண்ட கோபங் கலந்தன
போல்மின்னிக் கார்ப்புனத்துப்
பண்கொண்டு வண்டினம் பாடநின்
றூர்த்தன பன்முகிலே. 6

(அகவல்)

முகிற்கணம் முழங்க முனிந்த வேழம்
எயிற்றிடை அடக்கிய வெகுளி ஆற்ற
அணிநடை மடப்பிடி அருகுவந் தணைதரும்
சாரல் தண்பொழில் அணைந்து சேரும்
தேனுகு தண்தழை செறிதரு வனத்திற்
சருவரி வாரல்எம் பெருமநீர் மல்கு
சடைமுடி ஒருவன் மருவிய வலஞ்சுழி
அணிதிகழ் தோற்றத் தங்கயத் தெழுந்த
மணிநீர்க் குவளை அன்ன
அணிநீர்க் கருங்கண் ஆயிழை பொருட்டே. 7

(வெண்பா)

பொருட்டக்கீர் சில்பலிக்கென் றில்புகுந்தீ ரேனும்
மருட்டக்கீர் யாதும்ஊர் என்றேன்—மருட்டக்க
மாமறையம் என்றார் வலஞ்சுழிநம் வாழ்வென்றார்
தாம்மறைந்தார் காணேன்கைச் சங்கு. 8

(கட்டளைக்கலித்துறை)

சங்கம் புரளத் திரைசுமந்
தேறுங் கழியருகே
வங்கம் மலியுந் துறையிடைக்
காண்டிர் வலஞ்சுழியா
றங்கம் புலன்ஐந்தும் ஆகிய
நான்மறை முக்கணக்கன்
பங்கன் றிருவர்க் கொருவடி
வாகிய பாவையையே. 9

---

7. தோழி கூற்று. சருவரி - இரவில்.
8. தலைவி கூற்று. சங்கு - வளை.
9. தலைவன் இவ்விடத்து, இவ்வியற்றென்றல்.

(அகவல்)

பாவை ஆடிய துறையும் பாவை
மருவொடு வளர்ந்த அன்னமும் மருவித்
திருவடி அடியேன் தீண்டிய திறனும்
கொடியேன் உள்ளங் கொண்ட சூழலுங் கள்ளக்
கருங்கண் போன்ற காவியும் நெருங்கி
அவளே போன்ற தன்றே தவளச்
சாம்ப லம்பொடி சாந்தெனத் தைவந்து
தேம்பல் வெண்பிறை சென்னிமிசை வைத்த
வெள்ளேற் றுழவன் வீங்குபுனல் வலஞ்சுழி
வண்டினம் பாடுஞ் சோலைக்
கண்ட அம்மஅக் கடிபொழில் தானே. 10

(வெண்பா)

தான்ஏறும் ஆனேறு கைதொழேன் தன்சடைமேல்
தேன்ஏறு கொன்றைத் திறம்பேசேன்—வான்ஏறு
மையாருஞ் சோலை வலஞ்சுழியான் என்கொல்என்
கையார் வளைகவர்ந்த வாறு. 11

(கட்டளைக்கலித்துறை)

ஆறுகற் றைச்சடைக் கொண்டொரோற்
றைப்பிறை சூடிமற்றைக்
கூறுபெண் ணாயவன் கண்ணார்
வலஞ்சுழிக் கொங்குதங்கு
நாறுதண் கொம்பரன் னீர்கள்இன்
னேநடந் தேகடந்தார்
சீறுவென் றிச்சிலைக் கானவர்
வாழ்கின்ற சேண்நெறியே. 12

---

10. தலைவன் கூற்று.
11. தலைவி கூற்று.
12. கண்டோர் செவிலிக் குரைத்தல். கானவர் - வேடர்.

(அகவல்)

நெறிதரு குழலி விறலியொடு புணர்ந்த
செறிதரு தமிழ்நூற் சீறியாழ்ப் பாண
பொய்கை யூரன் புதுமணம் புணர்தர
மூவோம் மூன்று பயன்பெற் றனமே, நீஅவன்
புனைதார் மாலை பொருந்தப் பாடி
இல்லதும் உள்ளதும் சொல்லிக் கல்லல்
வாசகம் வழாமற் பேச வண்மையில்
வானர மகளிர் வான்பொருள் பெற்றனை, அவரேல்
எங்கையர் கொங்கைக் குங்குமந் தழீஇ
விழையா இன்பம் பெற்றனர் யானேல்
அரன்அமர்ந் துறையும் அணிநீர் வலஞ்சுழிச்
சுரும்பிவர் நறவயிற் சூழ்ந்தெழு தரும்பிற்
றீநீர் அன்ன வாய்நீர் சோரும்
சிலம்புகுரற் சிறுபறை பூண்ட
அலம்புகுரற் கிண்கிணிக் களிறுபெற் றனனே. 13

(வெண்பா)

தனம்ஏறிப் பீர்பொங்கித் தன்அங்கம் வேறாய்
மனம்வேறு பட்டொழிந்தாள் மாதோ—இனம்ஏறிப்
பாடலம் வண்டலம்பும் பாய்நீர் வலஞ்சுழியான்
கோடாலங் கண்டணைந்த கொம்பு. 14

(கட்டளைக்கலித்துறை)

கொம்பார் குளிர்மறைக் காடனை
வானவர் கூடிநின்று
நம்பா எனவணங் கப்பெறு
வானை நகர்எரிய

---

13. தலைவி பாணனை நோக்கிக் கூறியது. நீ பொருள் பெற்றனை. அவர் - தலைவர். களிறு என்றது புதல்வனை.

14. தோழி கூற்று. பீர் – பசலை. பாடலம் - பாதிரி மரம். கோடாலம் - மாலை.

அம்பாய்ந் தவனை வலஞ்சுழி
யானை அண்ணாமலைமேல்
வம்பார் நறுங்கொன்றைத் தாருடை
யானை வணங்குதுமே.

திருச்சிற்றம்பலம்

12

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருவெழுகூற்றிருக்கை

திருச்சிற்றம்பலம்

ஓருடம் பீருரு ஆயினை ஒன்றுபுரிந்
தொன்றி நீரிதழ்க் கொன்றை சூடினை
மூவிலைச் சூலம் ஏந்தினை
சுடருஞ் சென்னி மீமிசை
இருகோட் டொருமதி எழில்பெற மிலைச்சினை
ஒருகணை இருதோள் செவியுற வாங்கி
மூவெயில் நாற்றிசை முரணரண் செகுத்தனை
ஆற்ற முன்னெறி பயந்தனை
செறிய இரண்டும் நீக்கி
ஒன்று நினைவோர்க் குறுதி ஆயினை

1. ஓருடம்பில் ஆணும் பெண்ணுமாகிய இரண்டு உருவம் உடையவனானாய்.
5. கோடு - முனை. மதி - பிறை.
9. இரண்டு - இருவினை.

அந்நெறி ஒன்று
மனம்வைத் திரண்டு நினைவி லோர்க்கு
முன்னெறி உலகங் காட்டினை அந்நெறி
நான்கென ஊழி தோற்றினை
சொல்லும் ஐந்தலை அரவசைத் தசைந்தனை
நான்முகன் மேன்முகங் கபாலம் ஏந்தினை
நூன்முக முப்புரி மார்பில்
இருவர் அங்கம் ஒருங்குடன் ஏந்திய
ஒருவநின் ஆதி காணா திருவர்
மூவுல குழன்று நாற்றிசை உழிதர
ஐம்பெருங் குன்றத் தழலாய்த் தோன்றினை
ஆறுநின் சடையது ஐந்துநின் நிலையது
நான்குநின் வாய்மொழி மூன்றுநின் கண்ணே
இரண்டுநின் குழையே ஒன்றுநின் ஏறே
ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க
இருங்களிற் றுரிவை போர்த்தனை நெருங்கி
முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய
அறுதொழி லாளர்க் குறுதி பயந்தனை
ஏழில் இன்னரம் பிசைத்தனை
ஆறில் அமுதம் பயந்தனை ஐந்தில்
விறலியர் கொட்டு மழுத்த வேந்தினை
ஆல நீழல் அன்றிருந் தறநெறி
நால்வர் கேட்க நன்கினி துரைத்தனை
நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்
கொன்றங் கிருவரை எறிந்த ஒருவன்

---

12. இரண்டு நினைவு இல்லோர் ஒருமைப்பாடுடையார்.
14. நான்கு யுகங்களை உண்டாக்கினாய்.
18. இருவர் அங்கம் ஏந்தியது, காயாரோகணத் திருக்கோலத்தில்.
21. ஐம் பெருங்குன்றத்து - அழகிய பெரிய மலையில்.
22. ஐந்து நிலை என்றது ஐவகைப் பூதங்களை.
23. நான்கு - நான்மறை

தாதை ஒருமிடற் றிருவடி வாயினை
தருமம் மூவகை உலகம் உணரக்
கூறுவன நால்வகை
இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை
ஐங்கணை யவனொடு காலனை அடர்த்தனை
அறுவகைச் சமயமும் நெறிமையில் வகுத்தனை
ஏழின் ஓசை இராவணன் பாடத்
தாழ்வாய்க் கேட்டவன் தலையளி பொருத்தினை
ஆறிய சிந்தை யாகி ஐங்கதித்
தேரொடு திசைசெல விடுத்தோன்
நாற்றோள் நலனே நந்திபிங் கிருடியென்
றேற்ற பூதம் மூன்றுடன் பாட
இருகண் மொந்தை ஒருகணங் கொட்ட
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப அதனாற்
சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே.

(வெண்பா)

பணிந்தேன்நின் பாதம் பரமேட்டி பால்நீ
றணிந்தால வாயில் அமர்ந்தாய்—தணிந்தென்மேல்
மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே
ஐயுறவொன் றின்றி அமர்ந்து.

திருச்சிற்றம்பலம்

---

46. பிங்கிருடி - பிருங்கிரிஷி.
48. மொந்தை - ஒருவகைத் தோற்கருவி.

வெண்பா: மெய்யெரிவு - சிவபிரான் நெற்றிக் கண்ணால் பார்க்க அதனால் வந்த எரிச்சல்.

13

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

பெருந்தேவபாணி

திருச்சிற்றம்பலம்

சூல பாணியை சுடர்தரு வடிவனை
நீல கண்டனை நெற்றியோர் கண்ணனை
பால்வெண் ணீற்றனை பரம யோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற் றண்ணலை
நூலணி மார்பனை நுண்ணிய கேள்வியை
கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்தோய் முடியனை
ஞாலத் தீயினை நாதனைக் காய்ந்தனை
தேவ தேவனை திருமறு மார்பனை
கால மாகிய கடிகமழ் தாரனை
வேத கீதனை வெண்டலை ஏந்தியை
பாவ நாசனை பரமேச் சுவரனை
கீதம் பாடியை கிளர்பொறி அரவனை
போதணி கொன்றைஎம் புண்ணிய ஒருவனை
ஆதி மூர்த்தியை அமரர்கள் தலைவனை
சாதி வானவர் தம்பெரு மானை
வேத விச்சையை விடையுடை அண்ணலை
ஓத வண்ணனை உலகத் தொருவனை
நாத னாகிய நன்னெறிப் பொருளினை
மாலை தான்எரி மயானத் தாடியை

---

1. சூலபாணியை என்பது முதலியன முன்னிலை ஒருமைக் குறிப்புவினைமுற்றுக்கள்; சூலபாணியாக இருக்கிறாய் என்றபடி.

7. வேல் - சூலம்.

9. திருமறு மார்பனை - திருமாலாகி இருக்கிறாய்.

வேலை நஞ்சினை மிகஅமு தாக்கியை
வேத வேள்வியை விண்ணவர் தலைவனை
ஆதி மூர்த்தியை அருந்தவ முதல்வனை
ஆயிர நூறுக் கறிவரி யானையேய்
உருவு தந்த பிறையணி சடையனை
மாசறு சோதியை மலைமகள் கொழுநனை
கூரிய மழுவனை கொலற்கருங் காலனைச்
சீரிய அடியாற் செற்றருள் சிவனை
பூதிப் பையினை புண்ணிய மூர்த்தியை
பீடுடை யாற்றை பிராணி தலைவனை
நீடிய நிமலனை நிறைமறைப் பொருளினை
ஈசனை இறைவனை ஈறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத் துள்ளனை
தாதணி மலரினை தருமனை பிரமனை
காதணி குழையனை களிற்றின் உரியனை
சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை
தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை
வித்தக விதியனை
தீதமர் செய்கைத் திரிபுரம் எரித்தனை
பிரமன் பெருந்தலை நிறைய தாகக்
கருமன் செந்நீர் கபாலம் நிறைத்தனை
நிறைத்த கபாலச் செந்நீர் நின்றும்
உறைத்த உருவா ரையனைத் தோற்றினை
தேவருஞ் சுரருந் திறம்படக் கடைந்த
ஆர்வமுண் நஞ்சம் அமுத மாக்கினை
ஈரமில் நெஞ்சத் திராவணன் றன்னை
வீரம் அழித்து விறல்வாள் கொடுத்தனை
திக்கமர் தேவருந் திருந்தாச் செய்கைத்
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை
வேதமும் நீயே வேள்வியும் நீயே

---

29. **பூதிப்பையினை** திருநீற்றுப்பையை உடையாய்.
41. கருமன் - திருமால். செந்நீர் - இரத்தம்.

நீதியும் நீயே நிமலன் நீயே
புண்ணியம் நீயே புனிதன் நீயே
பண்ணியல் நீயே பழம்பொருள் நீயே
ஊழியும் நீயே உலகமும் நீயே
வாழியும் நீயே வரதனும் நீயே
தேவரும் நீயே தீர்த்தமும் நீயே
மூவரும் நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகடல் நீயே
இன்பமும் நீயே துன்பமும் நீயே
தாயும் நீயே தந்தையும் நீயே
விண்முதற் பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே முத்தியும் நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே, அதனாற்
கூடல் ஆலவாய்க் குழகன் ஆவ
தறியா தருந்தமிழ் பழித்தனன் அடியேன்
ஈண்டிய சிறப்பில் இணையடிக் கீழ்நின்று
வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே.

(வெண்பா)

விரைந்தேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தேன் அடியேன்—விரைந்தென்மேற்
சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே
ஆற்றவும்நீ செய்யும் அருள்.

திருச்சிற்றம்பலம்

---

62. புத்தி - போகங்கள்.

14

நக்கீரதேவநாயனார்

அருளிச் செய்த

கோபப் பிரசாதம்

திருச்சிற்றம்பலம்

தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே
வெண்திரைக் கருங்கடல் மேற்றுயில் கொள்ளும்
அண்ட வாணனுக் காழியன் றருளியும்
உலக மூன்றும் ஒருங்குடன் படைத்த
மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும்
கான வேடுவன் கண்பரிந் தப்ப
வான நாடு மற்றவற் கருளியும்
கடிபடு பூங்கணைக் காம னாருடல்
பொடிபட விழித்தும் பூதலத் திசைந்த
மானுட னாகிய சண்டியை
வானவன் ஆக்கியும்
மறிகடல் உலகின் மன்னுயிர் கவரும்
கூற்றுவன் றனக்கோர் கூற்றுவ னாகியும்
கடல்படு நஞ்சங் கண்டத் தடக்கியும்
பருவரை சிலையாப் பாந்தள் நாணாத்
திரிபுரம் எரிய ஒருகணை துரந்தும்
கற்கொண் டெறிந்த சாக்கியன் அன்பு
தற்கொண் டின்னருள் தான்மிக அளித்தும்
கூற்றெனத் தோன்றியுங் கோளரி போன்றும்

அநுக்கிரகமும் நிக்கிரகமும் மாறி மாறி வரப் பாடியது.

3. அண்டவாணன் - திருமால்.

6. வேடுவன் - கண்ணப்பன்.

தோற்றிய வாரணத் தீருரி போர்த்தும்
நெற்றிக் கண்ணும் நீள்புயம் நான்கும்
நற்றா நந்தீச் சுவரர்க் கருளியும்
அறிவின் ஓரா அரக்க னுருடல்
நெறநெற இறுதர ஒருவிரல் ஊன்றியும்
திருவுரு வத்தொடு செங்கண் ஏறும்
அரியன திண்டிறல் அசுரனுக் கருளியும்
பல்கதிர் உரவோன் பற்கெடப் பாய்ந்து
மல்குபிருங் கிருடிக்கு மாவரம் ஈந்தும்
தக்கன் வேள்வி தகைகெடச் சிதைத்தும்
மிக்கவரம் நந்தி மாகாளர்க் கருளியும்
செந்தீக் கடவுள்தன் கரதலஞ் செற்றும்
பைந்தார் நெடும்படை பார்த்தற் கருளியும்
கதிர்மதி தனையோர் காற்பயன் கெடுத்தும்
நிதிபயில் குபேரற்கு நீள்நகர் ஈந்தும்
சலந்தரன் உடலந் தான்மிகத் தடிந்தும்
மறைபயில் மார்க்கண் டேயனுக் கருளியும்
தாரகற் கொல்லமுன் காளியைப் படைத்தும்
சீர்மலி சிலந்திக் கின்னர சளித்தும்
கார்மலி உருவக் கருடனைக் காய்ந்தும்
ஆலின் கீழ்இருந் தறநெறி அருளியும்
இன்னவை பிறவும் எங்கள் ஈசன்
கோபப் பிரசாதங் கூறுங் காலைக்
கடிமலர் இருந்தோன் கார்க்கடற் கிடந்தோன்
புடமுறு சோலைப் பொன்னகர் காப்போன்
உரைப்போ ராகிலும் ஒண்கடல் மாநீர்
அங்கைகொண் டிறைக்கும் ஆதன் போன்றுளர்
ஒடுங்காப் பெருமை உம்பர் கோனை
அடங்கா ஐம்புலத் தறிவில் சிந்தைக்
கிருமி நாவாற் கிளத்தும் பரமே, அதாஅன்

44. புடம் - இடம்.

ஒருருவகைத் தேவரும் இருவகைத் திறமும்
மூவகைக் குணமும் நால்வகை வேதமும்
ஐவகைப் பூதமும் அறுவகை இரதமும்
எழுவகை ஓசையும் எண்வகை ஞானமும்
ஒன்பதின் வகையாம் ஒண்மலர்ச் சிறப்பும்
பத்தின் வகையும் ஆகிய பரமனை
இன்பனை நினைவோர்க் கென்னிடை அமுதினைச்
செம்பொனை மணியினைத் தேனினைப் பாலினைத்
தஞ்சமென் றுருகுந் தன்னடி யார்தம்
நெஞ்சம் பிரியா நிமலனை நீடுயர்
செந்தழற் பவளச் சேணுறு வரையனை
முக்கட் செல்வனை முதல்வனை மூர்த்தியைக்
கள்ளங் கைவிட் டுள்ளம துருகிக்
கலந்து கசிந்துதன் கழலிணை யவையே
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனைத்
தேவ தேவனைத் திகழ்சிவ லோகனைப்
பாவ நாசனைப் படரொளி உருவனை
வேயார் தோளி மெல்லியல் கூறனைத்
தாயாய் மன்னுயிர் தாங்குந் தந்தையைச்
சொல்லும் பொருளும் ஆகிய சோதியைக்
கல்லுங் கடலும் ஆகிய கண்டனைத்
தோற்றம் நிலைஈ றாகிய தொன்மையை
நீற்றிடைத் திகழும் நித்தனை முத்தனை
வாக்கும் மனமும் இறந்த மறையனைப்
பூக்கமழ் சடையனைப் புண்ணிய நாதனை
இனைய தன்மையன் என்றறி வரியவன்

---

52. **இரதம் - சுவை.**

53. **எழுவகை ஓசை - சப்தஸ்வரம்.**

70. கல் - மலை.

71. தோற்றம் நிலை ஈறு - தோன்றுதல், நிற்றல், **அழிதல்.**

73. மறையனை - **இரகசியப் பொருளாக இருப்பவனை.**

தனைமுன் விட்டுத் தாம்மற்று நினைப்போர்
மாமுயல் விட்டுக்
காக்கை பின்போங் கலவர் போலவும்
விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்
அளப்பருஞ் சிறப்பில் ஆதர் போலவும்
கச்சங் கொண்டு கடுந்தொழில் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென் றெண்ணிப்
பிச்சரைப் போலவோர்
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
வட்டணை பேசுவர் மானுடம் போன்று
பெட்டினை உரைப்போர் பேதை யர்நிலத்
துன்தலை பீன்தலை எண்பலமென் றால்அதனை
அறுத்து நிறுப்போர் ஒருத்தர் இன்மையின்
மத்திர மாகுவர் மாநெறி கிடப்பஓர்
சித்திரம் பேசுவர் தேவ ராகில்
இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க் கருளினர் என்றறிய
உலகின் முன்னே உரைப்ப தில்லை ஆகினும்
ஆடு போலக் கூடிநின் றழைத்து
மாக்கள் போல வேட்கையீ டுண்டும்
இப்படி ஞானம் அப்படி அமைத்தும்
இன்ன தன்மையன் என்றிரு நிலத்து
முன்னே அறியா மூர்க்க மாக்களை
இன்னேகொண் டேகாக் கூற்றம்
தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே.

திருச்சிற்றம்பலம்

---

76. மற்று - வேறு பொருள்களை.

80. ஆதர் - அறிவிலார்.

81. கச்சங்கொண்டு - ஆடையைக் கச்சமாகக் கட்டிக் கொண்டு.

82. கொச்சை - இழிவையுடைய.

15

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

கார் எட்டு

திருச்சிற்றம்பலம்

அரவம் அரைக்கசைத்த அண்ணல் சடைபோல்
விரவி எழுந்தெங்கும் மின்னி—அரவினங்கள்
அச்சங்கொண் டோடி அணைய அடைவுற்றே
கைச்சங்கம் போல்முழங்குங் கார். 1

மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்றன்
கையார் சிலைவிலகிக் காட்டிற்றே—ஐவாய்
அழலரவம் பூண்டான் அவிர்சடைபோல் மின்னிக்
கழலரவங் காண்புற்ற கார். 2

ஆலமர் கண்டத் தரன்றன் மணிமிடறும்
கோலக் குழற்சடையுங் கொல்லேறும்—போல
இருண்டொன்று மின்தோன்றி அம்பொனவ் வானம்
கருண்டொன்று கூருதலிற் கார். 3

இருள்கொண்ட கண்டத் திறைவன்றன் சென்னிக்
குருள்கொண்ட செஞ்சடைபோல் மின்னிச்—சுருள்கொண்டு
பாம்பினங்கள் அஞ்சிப் படம்ஒடுங்க ஆர்த்ததே
காம்பினங்கள் தோள்ஏயக் கார். 4

---

1. கார் முழங்கும்
2. கழல் அரவம் - கழலின் ஒலி.
4. காம்பினங்கள் - மூங்கில் தொகுதிகள்.

கோடரவங் கோடல் அரும்பக் குருமணிகான்
றூடரவம் எல்லாம் அளை அடைய—நீடரவப்
பொற்பகலம் பூண்டான் புரிசடைபோல் மின்னிற்றே
கற்பகலங் காண்புற்ற கார். 5

பாரும் பனிவிசும்பும் பாசுபதன் பல்சடையும்
ஆரும் இருள்கீண்டு மின்விலகி—ஊரும்
அரவஞ் செலவஞ்சும் அஞ்சொலார் காண்பார்
கரவிந்த மென்பாரக் கார். 6

செழுந்தழல் வண்ணன் செழுஞ்சடைபோல் மின்னி
அழுந்தி அலர்போல் உயர—எழுந்தெங்கும்
ஆவிசோர் நெஞ்சினரை அன்பளக்க உற்றதே
காவிசேர் கண்ணாய்அக் கார். 7

காந்தள் மலரக் கமழ்கொன்றை பொன்சொரியப்
பூந்தளவம் ஆரப் புகுந்தன்றே—ஏந்தொளிசேர்
அண்டம்போல் மீதிருண்ட ஆதியான் ஆய்மணிசேர்
கண்டம்போல் மீதிருண்ட கார். 8

திருச்சிற்றம்பலம்

---

5. கோடல் கோடு அரவம் அரும்ப - காந்தள் வளைந்த பாம்பைப்போல அரும்ப. அகலம் - திருமார்பில். கற்பு அகலம் - தலைவர் வருமளவும் இருந்து அறம் செய்யும் தலைவியரது கற்பின் விரிவை.

8. தளவம் - முல்லை. புகுந்தன்றே - புகுந்தது.

16

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

போற்றித் திருக்கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

திருத்தங்கு மார்பிற் றிருமால் வரைபோல்
எருத்தத் திலங்கியவெண் கோட்டுப்—பருத்த

குறுத்தாள் நெடுமூக்கிற் குன்றிக்கண் நீல
நிறத்தாற் பொலிந்த நிலமே—ழுறத்தாழ்ந்து

பன்றித் திருவுருவாய்க் காணாத பாதங்கள்
நின்றவா நின்ற நிலைபோற்றி—அன்றியும்

புண்டரிகத் துள்ளிருந்த புத்தேள் கழுகுருவாய்
அண்டரண்டம் ஊடுருவ ஆங்கோடிப்—பண்டொருநாள்

காணான் இழியக் கனக முடிகவித்துக்
கோணாது நின்ற குறிபோற்றி—நாணாளும்

பேணிக்கா லங்கள் பிரியாமைப் பூசித்த
மாணிக்கா அன்று மதிற்கடவூர்க்—காண

வரத்திற் பெரிய வலிதொலைத்த காலன்
உரத்தில் உதைத்தஉதை போற்றி—கரத்தாமே

வெற்பன் மடப்பாவை கொங்கைமேற் குங்குமத்தின்
கற்பழியும் வண்ணங் கசிவிப்பான்—பொற்புடைய

வாமன் மகனாய் மலர்க்கணையேன் றொட்டியஅக்
காமன் அழகழித்த கண்போற்றி—தூமப்

---

1. திருமால்: எழுவாய். எருத்தத்து - பிடரியில்.

4. பிரமன் கழுகுருவாகப் பறந்து இறைவன் திருமுடி காணச் சென்றானென்பது ஒரு வரலாறு.

6. மாணிக்கா - மார்க்கண்டேயனுக்காக.

படம்எடுத்த வாளரவம் பார்த்தாடப் பற்றி
விடம்எடுத்த வேகத்தால் மிக்குச்—சடலம்
முடங்க வலிக்கும் முயலகன்றன் மொய்ம்பை
அடங்க மிதித்தஅடி போற்றி—நடுங்கத்
திருமால் முதலாய தேவா சுரர்கள்
கருமால் கடல்நாகம் பற்றிக்—குருமாற
நீலமுண்ட நீண்முகில்போல் நெஞ்சழல வந்தெழுந்த
ஆலமுண்ட கண்ட மதுபோற்றி—சாலமண்டிப்
போருகந்த வானவர்கள் புக்கொடுங்க மிக்கடர்க்கும்
தாரகன்றன் மார்பில் தனிச்சூலம்—வீரம்
கொடுத்தெறியும் மாகாளி கோபந் தவிர
எடுத்த நடத்தியல்பு போற்றி—தடுத்து
வரையெடுத்த வாளரக்கன் வாயா றுதிரம்
நிரையெடுத்து நெக்குடலம் இற்றுப்—புரையெடுத்த
பத்தனைய பொன்முடியுந் தோளிருப துந்நெரிய
மெத்தெனவே வைத்த விரல்போற்றி—அத்தகத்த
வானவர்கள் தாங்கூடி மந்திரித்த மந்திரத்தை
மேன்வில ஓடி விதிர்விதிர்த்துத்—தானவருக்
கொட்டிக் குறளை உரைத்த அயன்சிரத்தை
வெட்டிச் சிரித்த விறல்போற்றி—மட்டித்து
வாலுகத்தால் நல்லிலிங்க மாவகுத்து மற்றதன்மேற்
பாலுகுப்பக் கண்டு பதைத்தோடி—மேலுதைத்தங்
கோட்டியவன் தாதை இருதாள் எறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக—நாட்டின்கட்
பொற்கோயி லுள்ளிருத்திப் பூமாலை போனகமும்
நற்கோலம் ஈந்த நலம்போற்றி—நிற்க

---

19. குறளை - புறங்கூறுதல்.

20. வாலுகத்தால் - மணலால்.

வலந்தருமால் நான்முகனும் வானவருங் கூடி
அலந்தருமால் கொள்ள அடர்க்கும்—சலந்தரனைச்

சக்கரத்தால் ஈர்ந்தரிதன் தாமரைக்கண் சாத்துதலும்
மிக்கவஃ தீந்த விறல்போற்றி—அக்கணமே

நக்கிருந்த நாமகளை மூக்கரிந்து நால்வேதம்
தொக்கிருந்த வண்ணந் துதிசெய்ய—மிக்கிருந்த

அங்கைத் தலத்தே அணிமானை ஆங்கணிந்த
செங்கைத் திறத்த திறல்போற்றி—திங்களைத்

தேய்த்தருதவே செம்பொற் செழுஞ்சடைமேற் சேர்வித்து
வாய்த்திமையோர் தம்மையெல்லாம் வான்சிறையிற்-பாய்த்திப்

பிரமன் குறையிரப்பப் பின்னும் அவர்க்கு
வரமன் றளித்தவலி போற்றி—புரமெரித்த

அன்றுய்ந்த மூவர்க் கமர்ந்து வரமளித்து
நின்றுய்ந்த வண்ணம் நிகழ்வித்து—நன்று

நடைகாவல் மிக்க அருள்கொடுத்துக் கோயிற்
கடைகாவல் கொண்டவா போற்றி—விடைகாவல்

தானவர்கட் காற்றாது தன்னடைந்த நன்மைவிறல்
வானவர்கள் வேண்ட மயிலூரும்—கோனவனைச்

சேனா பதியாகச் செம்பொன் முடிகவித்து
வானாள வைத்த வரம்போற்றி—மேனாள்

அதிர்த்தெழுந்த அந்தகனை அண்டரண்டம் உய்யக்
கொதித்தெழுந்த சூலத்தாற் கோத்துத்—துதித்தங்

கவனிருக்கும் வண்ணம் அருள்கொடுத்தங் கேழேழ்
பவமறுத்த பாவனைகள் போற்றி—கவைமுகத்த

பொற்பாக ரைப்பிளந்து கூறிரண்டாப் போகட்டும்
எற்பா சரைப்போக மேல்விலகி—நிற்பால

மும்மதத்து வெண்கோட்டுக் கார்நிறத்துப் பைந்தறுகண்
வெம்மதத்த வேகத்தால் மிக்கோடி—விம்மி

24 அஃது - அந்தச் சக்கரத்தை.

அடர்த்திரைத்துப் பாயும் அடுகளிற்றைப் போக
எடுத்துரித்துப் போர்த்தஇறைபோற்றி—தொடுத்தமைத்த
நாண்மாலை கொண்டணிந்த நால்வர்க்கன் றால்நிழற்கீழ்
வாண்மாலை ஆகும் வகையருளித்—தோண்மாலை
விட்டிலங்கத் தக்கிணமே நோக்கி வியந்தகுணம்
எட்டிலங்க வைத்த இறைபோற்றி—ஒட்டி
விசையன் விசையளப்பான் வேடுருவம் ஆகி
அசைய உடல்திரிய நின்று—வசையினார்
பேசு பதப்பாற் பிழைபொறுத்து மற்றவற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி—நேசத்தால்
வாயினீர் கொண்டு மகுடத் துமிந்திறைச்சி
ஆயசீர்ப் போனகமா அங்கமைத்துத்—தூயசீர்க்
கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலகம் ஈந்த விறல்போற்றி—மண்ணின்மேற்
காளத்தி போற்றி கயிலைமலை போற்றிஎன
நீளத்தி னால்நினைந்து நிற்பார்கள்—தாளத்தோ
டெத்திசையும் பன்முரசம் ஆர்த்திமையோர் போற்றிசைப்ப
அத்தனடி சேர்வார்க ளாங்கு.

திருச்சிற்றம்பலம்

---

41. பதப்பாற் பிழை - சொல்லிலே உள்ள குற்றம்.

17

நக்கீரதேவநாயனார்

அருளிச் செய்த

திருமுருகாற்றுப்படை

திருச்சிற்றம்பலம்

(திருப்பரங்குன்றம்)

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்

---

1. வலன் ஏர்பு - வலமாக எழுந்து.

3. ஓ அற - நீக்கமின்றி. சேண் - நெடுந்தூரம்.

4. உறுநர்த் தாங்கிய- தன்பால் வந்து அடைந்தவர்களைப் பாதுகாத்த. மதன் உடை - அறியாமையை உடைக்கின்ற.

5. செல் - இடி.

7. கார்கோள் - கடல். கமஞ்சூல் - நிறைந்த கருப்பத்தை உடைய.

8. உறை - துளி.

9. தலைப்பெயல் - முதல் முதலாகப் பெய்யும் மழை. தலைஇய - பெய்த.

10. பொதுளிய-செறிந்த. பராஅரை மராஅத்து - பருத்த அடிமரத்தையுடைய கடம்பினது.

மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை

---

12. வரைநிவந்த - மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்த.
13. கவைஇய - சூழ்ந்த.
15. கோபத்து அன்ன - இந்திரகோபப் பூச்சியைப் போன்ற. தோயா - ஒருவரால் நிறந்தோய்க்கப் பெறாத.
16. காசு - மணி. சில்காழ் - ஒருவகை மேகலை.
18. சாம்பூநதப்பொன்னாற் செய்த. ஆபரணங்களை அணிந்த.
19. செயிர் தீர் - குற்றம் நீங்கிய.
23. தெய்வ உத்தி - சீதேவி என்னும் தலைக்கலன்.
25. மகரப்பகுவாய் - ஓர் ஆபரணம். மண்ணுறுத்து - அலங்காரம் செய்து. 31. பிண்டி - அசோகு.
33. சந்தனக்கட்டையை அரைத்த குழம்பை.

தேங்கழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடுஞ் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்குங் காதிற் பிணர்மோட்
டுருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபே ருருவின் ஒருபே ரியாக்கை

---

37. விளாமரத்தினது சிறிய தளிரைக் கிள்ளித் தெறித்து.

40. சிலம்ப - எதிரொலி செய்ய.

48. சூர்த்த - அச்சத்தைத் தரும்.

50. பிணர்மோட்டு-சொரசொரப்பான வயிற்றை உடைய.

53. கண்ணைத் தோண்டி உண்ட மிக்க புலால் நாற்றத்தை யுடைய கரிய தலை.

56. துணங்கை - கைகோத்தாடும் கூத்து.

அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந் துறைதலும் உரியன் அதாஅன்று.

(திருச்சீரலைவாய்)

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழம் மேல்கொண்
டைவே றுருவிற் செய்வினை முற்றிய

---

62. செம்மல் - நிறைவு.
65. நசை - விருப்பம்.
70. நியமம் - கடைவீதி.
74. எற்பட - உதயம் ஆனவுடன்.

முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனனேர் பெழுதரு வாள்நிற முகனே
மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருளை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை

---

85. பொற்ப - விளங்க.

94. கொடுத்தன்றே - கொடுத்தது.

99. செறுநர் - பகைவரை. சமம் - போர்.

107. விண்செலல் மரபின் ஐயர் - வானத்தில் சூரியனோடு சென்று அவன் வெம்மையைத் தாங்கும் முனிவர்.

108. உக்கம் - இடை.

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய தொருகை
அங்குசங் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை நரல
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பா றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதாஅன்று.

(திருவாவினன்குடி)

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு

---

109. கலிங்கத்துக் குறங்கு - ஆடையை அணிந்த துடை.
111. ஐ இரு வட்டம் - அழகிய கரிய கிடுகு. எஃகு-வேல்.
117. வதுவை - மணமாலை.
119. கறங்க - ஒலிக்க- 120. வயிர் - ஊதுகொம்பு.
125. அலைவாய் - திருச்செந்தூர்.
126. சீரை - மரவுரி.
131. பலவுடன் கழிந்த உண்டியர் - பலநாட்கள் உண்ணாது விரதம் பூண்டவர்.

செற்றம் நீக்கிய மனத்தின ரியாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்

---

137. துனி - வெறுப்பு. காட்சி - அறிவு.
140. திவவு - நரம்புக் கட்டு.
145. திதலையர் தேமலை உடையவர்.
146. பருமம் - மேகலை.
148. கடு - விடம். தூம்பு - துளை.
151. புள் - கருடன். செல்வன் - திருமால்.
154. மூவெயில் முருக்கிய - திரிபுரத்தை அழித்த. முரண் - வலிமை.
155. ஆயிரம் கண்ணையுடைய.

ஈரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெருமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன் அதாஅன்று.

(திருவேரகம்)

இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்

---

159. செல்வன் - இந்திரன்.

167. ஏகாதசருத்திரர், துவாதசாதித்தர், அட்ட வசுக்கள், அச்சுவினி தேவர் என்ற நான்கு வகுப்புடைய முப்பத்து மூன்று தேவர்கள்.

176. அசைதல் - தங்கியிருத்தல்

திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலும் உரியன் அதாஅன்று.

(குன்றுதோறாடல்)

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

---

182. இருபிறப்பாளர் - அந்தணர்.
184. காழகம் - ஆடை. உடீஇ - உடுத்து.
189. ஏரகம் - சுவாமிமலை.
190. நறைக்காய் - சாதிக்காய்.
191. அம்பொதிப் புட்டில் - தக்கோலம். குளவி - மலைமல்லிகை
194. கானவர் - வேடர்.
195. மூங்கிற் குழாய்க்குள்ளே புளித்த கள்.

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொழுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே அதாஅன்று.

(பழமுதிர்சோலை)

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர

---

207. செயலை - அசோகு. துயல்வரும் - அசையும்.
210. தகரன் - ஆட்டுவாகனத்தை உடையவன்.
216. தலைத்தந்து - முதற்கை கொடுத்து.
218. மறி - ஆடு.
219. வாரணக்கொடி - கோழிக்கொடி.
223. துருத்தி - ஆற்றின் இடையில் உள்ள தீவு.
225. சதுக்கம் - நான்கு தெரு சந்திக்கும் இடம். சந்தி - தெருக்கள்கூடும் இடம்.
226. மன்றம் - மரத்தடியிற் பலர் கூடும் இடம். பொதியில் - சபை.
227. மாண்டலைக் கொடி - கோழிக் கொடி.

நெய்யோ டையவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியோ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற் றுப் படுத்த உருகெழு வியனகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண் டாயினும் ஆக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்

---

228. ஐயவி - வெள்ளைக் கடுகு.
229. குடந்தம் பட்டு - கைகுவித்து.
232. கொழுவிடை - கொழுத்த ஆட்டுக்கிடாய்.
234. பிரப்பு - தானியம் நிறைத்து வைத்த கூடை.
236. கணவீரம் - அலரி.
243. முருகு இயம் - முருகனுக்கு உரிய வாத்தியம்.
244. முருகு ஆற்றுப் படுத்த - முருகனை ஆவேசரூபமாக வரச் செய்த.
246. கோடு - ஊது கொம்பு.
247. பூட்கை - வலிமை. பிணிமுகம் - முருகனது யானை.

கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க் கார்த்தும் இசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்

---

253. நீலப் பைஞ்சுனை - சரவணப் பொய்கை.

255. அறுவர் - கார்த்திகைமாதர் அறுவர்.

258. கொற்றவை - துர்க்கை.

262. மள்ள - வீரனே.

263. வெறுக்கை - செல்வமாக இருப்பவனே.

269. பிறர் யாரும் பெறுவதற் கரிய இலக்கணத்தை யுடைய பெரும் பெயராகிய முருகன் என்னும் திருநாமத்தை உடையோய்.

270. நசையினர்க்கு - விரும்பி வந்தோருக்கு.

271. அலந்தோர்க்கு - ஏங்கினவர்களுக்கு.

பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்
றிருள்நிற முந்நீர் வளைஇய உலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்

---

274. இயவுள் - கடவுளே.

280. புரைகுநர் - ஒப்பானவர்.

282. கூளியர் - ஏவலாளர்.

283. சாறு அயர் களத்து - விழாக் கொண்டாடும் இடத்தில்.

289. கண்டார் வருத்தமடைவதற்குக் காரணமாகிய தன்னுடைய விசுவரூபத்தை அடக்கிக்கொண்டு.

290. முருகன் என்னும் திருநாமத்தின் பொருள்களாகிய மணமுடையோன், தெய்வத்தன்மையுடையோன், அழகுடையோன், இளமையுடையோன் என்பவற்றை இங்கே நினைக்க.

295. பெறுவதற்கரிய பரிசிலாகிய முத்தியின்பத்தை வழங்குவான்.

வேறுபஃ றுகிலின் நுடங்கி அகில்சுமந்
தார முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரை பரிதியிற் றொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

---

297. ஆரமுழு முதல் - சந்தனமரத்தை. வேரல் - மூங்கில்.
299. பரிதியின் - சூரியமண்டலத்தைப் போல.
300. இறால் - தேனடை.
301. ஆசினி - பலா. கலாவ - கலக்க.
302. நாகம் - சுரபுன்னை. யூகம் - கருங்குரங்கு.
303. பனிப்ப - நடுங்க. 307. தாழை - தென்னை.
309. கறிக்கொடிக் கருந்துணர் - மிளகுகொடியின் கரிய காய்க்கொத்து.
312. வெளிறு - சோறு. சாய் - சிலாம்பு.
313. குடா அடி உளியம்-வளைந்த அடியையுடைய கரடி.
315. ஆமா - காட்டுப் பசு. சிலைப்ப - முழங்க.

(நேரிசைவெண்பா)

குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை. 1

குன்றம் எறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 5

வெண்பாக்கள்: 1 உளையாய் - வலிமையையுடையவனே; என்றும் உள்ளவனாக எனலும் ஆம்.

2. கைவிடா நின்றதுவும் - கைவிடாமல் பாதுகாத்து நின்றதும். பொதும்பு - குகை.

3. தாரைவேல் - நீளமான வேல். வாரி - கடல்.

4. இடும்பைக் குன்றுக்கு - துன்பமாகிய மலையை எறிந்து அழிக்க. 5. கோல அப்பா என்றது கோலப்பா என நின்றது.

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும் 6
வெஞ்சமரந்தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

முருகனே செந்தில் முதல்வனே மாயோன் 7
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால் 8
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம் 9
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையாய் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத் 10
தற்கோல நாள்தோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

திருச்சிற்றம்பலம்

---

7. ஒருகைமுகன் - விநாயகர்.
8. கடவிய - கடமைப்பட்ட. பரம் - பாரம்.
10. தற்கோல - தன்னைப் பாதுகாத்துக் கொள்ள.

18

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

திருச்சிற்றம்பலம்

திருக்கண் ணப்பன் செய்தவத் திறத்து
விருப்புடைத் தம்ம விரிகடல் உலகே, பிறந்தது
தேன்அழித் தூன்உண் கானவர் குலத்தே, திரிவது
பொருபுலி குமிறும் பொருப்பிடைக் காடே, வளர்ப்பது
செங்கண் நாயொடு தீவகம் பலவே, பயில்வது
வெந்திறற் சிலையொடு வேல்வாள் முதலிய
அந்தமில் படைக்கல மவையே உறைவது
குறைதசை பயின்று குடம்பல நிரைத்துக்
கறைமலி படைக்கலங் கலந்த புல்லொடு
பீலி மேய்ந்தவை பிரிந்த வெள்ளிடை
வாலிய புலித்தோல் மறைப்ப வெள்வார்
இரவும் பகலும் இகழா முயற்றியொடு
மடைத்த தேனும் வன்னாய் விட்டும்
சிலைவிடு கணையினுந் திண்சுரி கையினும்
பலகிளை யவையொடும் பதைப்பப் படுத்துத்
தொல்லுயிர் கொல்லுந் தொழிலே வடிவே
மறப்புலி கடித்த வன்திரள் முன்கை
திறற்படை கிழித்த திண்வரை அகலம்

---

3. கானவர் - வேடர்.

5. தீவகம் - காட்டுமிருகங்களைப் பிடிப்பதற்காகப் பழக்கப்படுத்திவைத்திருக்கும் மிருகம்; பார்வைமிருகம் என்றும் கூறுவர்.

12. முயற்றி - முயற்சி.

14. சுரிகை - உடைவாள்;

எயிற்றெண்கு கவர்ந்த இருந்தண் நெற்றி
அயிற்கோட் டேனம் படுத்தெழு குறங்கு
செடித்தெழு குஞ்சி செந்நிறத் துறுகண்
கடுத்தெழும் வெவ்வுரை அவ்வாய்க் கருநிறத்
தடுபடை பிரியாக் கொடுவிற லதுவே, மனமே
மிகக்கொலை புரியும் வேட்டையில் உயிர்கள்
அகப்படு துயருக் ககனமர்ந் ததுவே, இதுவக்
கானத் தலைவன் தன்மை கண்ணுதல்
வானத் தலைவன் மலைமகள் பங்கன்
எண்ணரும் பெருமை இமையவர் இறைஞ்சும்
புண்ணிய பாதப் பொற்பார் மலரிணை
தாய்க்கட் கன்றெனச் சென்றுகண் டல்லது
வாய்க்கிடும் உண்டி வழக்கறி யானே, அதாஅன்று
கட்டழல் விரித்த கனற்கதிர் உச்சியிற்
சுட்டடி இடந்தொறுஞ் சுறுக்கொளும் சுரத்து
முதுமரம் நிரந்த முட்பயில் வளாகத்
தெதிரினங் கடவிய வேட்டையில் விரும்பி
எழுப்பிய விருகத் தினங்களை மறுக்குறத்
தன்னாய் கடித்திரித் திடவடிக் கணைதொடுத்
தெய்து துணித்திடும் துணித்த விடக்கினை
விறகினிற் கடைந்த வெங்கனற் காய்ச்சி
நறுவிய இறைச்சி நல்லது சுவைகண்
டண்ணற் கமிர்தென் றதுவே றமைத்துத்
தண்ணறுஞ் சுனைநீர் தன்வாய்க் குடத்தால்
மஞ்சன மாக முகந்து மலரெனக்
குஞ்சியில் துவர்க்குலை சொருகிக்
குனிசிலை கடுங்கணை யதனொடும் ஏந்திக்
கனல்விழிக் கடுங்குரல் நாய்பின் தொடர, யாவரும்
வெருக்கோ ளுற்ற வெங்கடும் பகலில்

---

19. எண்கு - கரடி.
34. நிரந்த - வரிசையாக வளர்ந்த. வளாகம் - பரப்பு.
36. விருகத்தினங்களை - மிருகக் கூட்டங்களை.
38. விடக்கினை - ஊனை.

திருக்கா ளத்தி எய்திய சிவற்கு
வழிபடக் கடவ மறையோன் முன்னம்
துகிலிடைச் சுற்றியிற் றானீர் ஆட்டி
நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி
சொல்லின பரிசிற் சுருங்கலன் பூவும்
பட்ட மாலையுந் தூக்கமும் அலங்கரித்
தருச்சனை செய்தாங் கவன்அடி இறைஞ்சித்
திருந்த முத்திரை சிறப்பொடு காட்டி
மந்திரம் எண்ணி வலமிடம் வந்து
விடைகொண் டேகின பிற்றொழிற்
பூசனை தன்னைப் புக்கொரு காலில்
தொடுசெருப் படியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித்
தன்தலைத் தங்கிய துவர்ப்பூ ஏற்றி இறைச்சியிற்
பெரிதும் போனகம் படைத்துப் பிரானைக்
கண்டுகண் டுள்ளங் கசிந்து காதலிற்
கொண்டதோர் கூத்துமுன் ஆடிக் குரைகழல்
அன்பொடும் இறுக இறைஞ்சி ஆரா
அன்பொடு கானகம் அடையும் அடைந்த
அற்றை அயலினிற் கழித்தாங் கிரவியும்
உதித்த போழ்தத் துண்ணீர் மூழ்கி
ஆத ரிக்கும் அந்தணன் வந்து
சீரார் சிவற்குத் தான்முன் செய்வதோர் பொற்புடைப்
பூசனை காணான் முடிமிசை ஏற்றிய
துவர்கண் டொழியான் மறித்தும் இவ்வா
றருச்சனை செய்பவ ரியாவர்கொல் என்று
கரந்திருந் தவண்அக் கானவன் வரவினைப்
பரந்த காட்டிடைப் பார்த்து நடுக்குற்று
வந்தவன் செய்து போயின வண்ணம்
சிந்தையிற் பொருது சேர்விடம் புக்கு

---

49. மறையோன் - சிவகோசரியார்.
51. **நறும்புகை விளக்கு அவி** - தூபதீப நைவேத்தியங்கள்.
61. **துவர்ப்பூ - செந்நிறப்பூ.**

மற்றை நாளும்அவ் வழிப்பட் டிறைவ
உற்றது கேட்டருள் உன்றனக் கழகா
நாடொறும் நான்செய் பூசனை தன்னை
ஈங்கொரு வேடுவன்
நாயொடும் புகுந்துமிதித் துழக்கித்
தொடுசெருப் படியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித்
தன்தலை தங்கிய சருகிலை உதிர்த்தோர் இறைச்சியை
நின்திருக் கோயிலில் இட்டுப் போமது
என்றும் உன்றனக் கினிதே எனையுருக்
காணிற் கொன்றிடும் யாவ ராலும்
விலக்குறுங் குணத்தன் அல்லன் என்னும்
திருக்குறும் பென்றவன் சென்ற வல்லிடைக்
கனவில்ஆ தரிக்கும் அந்தணன் றனக்குச்
சீரார் திருக்கா ளத்தியுள் அப்பன்
பிறையணி இலங்கு பின்னுபுன் சடைமுடிக்
கறையணி மிடற்றுக் கனல்மழுத் தடக்கை
நெற்றி நாட்டத்து நிறைநீற் றுருக
ஒற்றை மால்விடை உமையொடு மருங்கில்
திருவுருக் காட்டி யருளிப்
புரிவொடு பூசனை செய்யும்
குனிசிலை வேடன் குணமவை ஆவன
உரிமையிற் சிறந்தநன் மாதவன் என்றுணர்
அவனுகந் தியங்கிய இடம்முனி வனமதுவே, அவன்
செருப்படி யாவன விருப்புறு துவலே
எழிலவன் வாயது தூயபொற் குடமே
அதனிற் றங்குநீர் கங்கையின் புனலே
புனற்கிடு மாமணி அவன்நிரைப் பல்லே
அதற்கிடு தூமலர் அவனது நாவே

---

87. இனிதே - இனியதா?
102. துவல் - தாவும் பூ.
105. அவன் வரிசையானபல்லே கும்பரத்தினம்.

உப்புனல் விடும்பொழு தூரிஞ்சிய மீசைப்
புன்மயிர் குசையினும் நம்முடிக் கினிதே அவன்தலை
தங்கிய சருகிலை தருப்பையிற் பொதிந்த
அங்குவி கற்பகத் தலரே அவனுகந்
திட்ட இறைச்சி எனக்குநன் மாதவர்
இட்ட நெய்பால் அவியே
இதுவெனக் குனக்கவன்
கலந்ததோர் அன்பு காட்டுவன் நாளை
நலந்திகழ் அருச்சனை செய்தாங் கிருவென்
றிறையவன் எழுந்தரு ளினன்அருளலும்
மறையவன் அறிவுற் றெழுந்து
மனமிகக் கூசி வைகறைக் குளித்துத்
தான்முன் செய்வதோர்
பொற்புடைப் பூசனை புகழ்தரச் செய்து
தோன்றா வண்ணம் இருந்தன னாக இரவியும்
வான்றனி முகட்டில் வந்தழல் சிந்தக்
கடும்பகல் வேட்டையிற் காதலித் தடித்த
உடும்பொடு சிலைகணை உடைத்தோல் செருப்புத்
தொடர்ந்த நாயொடு தோன்றினன் தோன்றலும்
செல்வன் திருக்கா ளத்தியுள் அப்பன் திருமேனியின்
மூன்று கண்ணாய் ஆங்கொரு கண்ணிலும்
உதிரம் ஒழியா தொழுக இருந்தன னாகப்
பார்த்து நடுக்குற்றுப் பதைத்து மனஞ்சுழன்று
வாய்ப்புனல் சிந்தக் கண்ணீர் அருவக்
கையில் ஊனொடு கணைசிலை சிந்த
நிலப்படப் புரண்டு நெடிதினிற் றேறிச்
சிலைக்கொடும் படைகடிந் தெடுத்திது படுத்தவர்
அடுத்தஇவ் வனத்துளர் எனத்திரிந் தாஅங்
கின்மை கண்டு நன்மையில்
தக்கன மருந்துகள் பிழியவும் பிழிதொறும்

---

108. குசை - தருப்பை.
130. அருவ - வழிய.

நெக்கிழி குருதியைக் கண்டுநிலை தளர்ந்தென்
அத்தனுக் கடுத்ததென் அத்தனுக் கடுத்ததென் றென்
றன்பொடுங் கனற்றி
இத்தனை தரிக்கிலன் இதுதனைக் கண்டஎன்
கண்தனை இடந்து கடவுள்தன் கண்ணுறு
புண்ணில் அப்பியுங் காண்பன் என்றொரு கண்ணிடைக்
கணையது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர அப்பினன் அப்பலுங் குருதி
நிற்பதொத் துருப்பெறக் கண்டுநெஞ் சுகந்து
மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன் மடுத்தலும்
நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பஎன்
அன்புடைத் தோன்றல் நில்லுகண் ணப்பஎன்
றின்னுரை யதனொடும் எழிற்சிவ லிங்கந்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் றன்கை அம்பொடும் அகப்படப்பிடித்
தருளினன் அருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழை பொழிந்தனர் வளையொலி படகம்
துந்துபி கறங்கின தொல்சீர் முனிவரும்
ஏத்தினர் இன்னிசை வல்லே
சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே.

(வெண்பா)

தத்தையாந் தாய்தந்தை நாகனுந் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனும்—தித்திக்கும்
திண்ணப்ப னுஞ்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்
கண்ணப்ப னாயினான் காண்.

திருச்சிற்றம்பலம்

19

கல்லாடதேவநாயனூர்

அருளிச்செய்த

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

திருச்சிற்றம்பலம்

பரிவின் தன்மை உருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த காழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சையன்
தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து
வாரில் வீச்கிய வரிக்கைக் கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலைஉத் தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்
முடுகு நாறு குடிலை யாக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் றன்னினத் தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனங் காற்றில் இயங்கிக்
கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்
தன்றலைச் சொருகிய தண்பள்ளித் தாமமும்

---

1. பரிவு - அன்பு.
2. போழ்ந்த வாரால் மூடிய கரிய செருப்பை உடையவன்.
3. சுரிகை எஃகம் - உடைவாட்படை.
10. கவடி - சோழி.
16. கருமா - பன்றி.
19. பள்ளித்தாமம் - கடவுளுக்கு இடும் மாலை.

வாய்க்கல சத்து மஞ்சன நீரும்
கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை அடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக் கன்றவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக் கொருகணில் உதிரம்
தக்கி ணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந் தரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்
நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியங் கெடுமே.

திருச்சிற்றம்பலம்

20

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைக்கூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலார் கூப்புவர்தங் கை. 1

---

1. திருவை ஆக்கும்.

கைக்கும் பிணியொடு காலன்
தலைப்படும் எல்லையினில்
எய்க்குங் கவலைக் கிடைந்தடைந்
தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த
பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கட்டிரு
வாளன் திருவடியே. 2

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடிஅவலோ டெள்ளுண்டை கன்னல்—வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்அடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ். 3

வாழைக் கனிபல வின்கனி
மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள்
ளுண்டைஎல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
மேனி விநாயகனே. 4

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து. 5

கனிய நினைவொடு நாடொறுங்
காதற் படும்அடியார்க்
கினியன் இனியொரு இன்னுங்
கிலம்எவ ரும்வணங்கும்

---

2. எல்வையினில் - சமயத்தில். இடைந்து தளர்ந்து.
3. இடி - மா. கன்னல் - கரும்பு
6. இன்னுங்கு - துன்பம். முனிவன் - சிவபெருமான்.

பனிவெண் பிறைநறுங் கொன்றைச்
சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல்
யானை முகத்தவனே. 6

யானை முகத்தான் பொருவிடையான் சேய்அழகார்
மான மணிவண்ணன் மாமருகன்—மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன். 7

உளதள வில்லதோர் காதலென்
நெஞ்சில்வன் னஞ்சம்உண்ட
வளரிள மாமணி கண்டன்வண்
டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணிஎம்
மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி
யானைக் கணபதியே. 8

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல்—மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம். 9

போகபந் தத்தந்தம் இன்றிநிற்
பீர்புனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாளம்
பிறைஇறை யான்பயந்த

---

9. போதகம் - யானை.

10. உலக இன்பங்களில் உள்ள பற்றில் முடிவின்றி ஆழ்ந் திருப்பவர்களே. நாகபந்தத்து- அரவை ஆபரணமாகக் கட்டு தலையுடைய. மாக பந்தத்து - வானில் ஒன்றனோடு ஒன்று இணைந்துள்ள.

மார்கபந் தத்தந்த மாமழை
போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்தெந்தை செந்தாள்
இணைபணிந் தேத்துமினே. 10

ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத்—தூத்தழல்போற்
செக்கர்த் திருமேனிச் செம்பொற் கழல்அங்கை
முக்கட் கடாயானை முன். 11

முன்னிளங் காலத்தி லேபற்றி
னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன்றன் மைத்துன
னேமணி நீலகண்டத்
தென்னிளங் காய்களி றேஇமை
யோர்சிங்க மேஉமையாள்
தன்னிளங் காதல னேசர
ணுஉன் சரணங்களே. 12

சரணுடை யேன்என்று தலைதொட் டிருக்க
முரணுடையேன் அல்லேனுன் முன்னம்-திரள்நெடுங்கோட்
டண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத் தான்அமரர்
பண்டத்தான் தாள்பணியாப் பண்டு. 13

பண்டந்த மாதரைத் தாமென்
றினியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக்
குறுகுவர் கூருணர்விற்
கண்டந்த நீண்முடிக் கார்மத
வார்சடைக் கற்றைஒற்றை
வெண்டந்த வேழ முகத்தெம்
பிரானடி வேட்கையரே. 14

---

12. காமன்றன் மைத்துனன் - காமனுக்கு அத்தை மகன். சரணுகப் பற்றினேன்.

வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண் டருளும் அரன்சேயை—வாட்கதிர்கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண். 15

விண்ணுதல் நுங்கிய விண்ணுமண்
ணுஞ்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய்
அன்பர்கள் பாய்மதமா
கண்ணுதல் நுங்கிய நஞ்சம்உண்
டார்கரு மாமிடற்றுப்
பெண்ணுத னும்பிரி யாவொரு
பாகன் பெருமகனே. 16

பெருங்காதல் என்னோடு பொன்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள் வீசி—ஒருங்கே
திருவார்ந்த செம்முகத்துக் கார்மதங்கள் சோர
வருவான்றன் நாமம் வரும். 17

வருகோட் டருபெருந் தீமையும்
காலன் தமரவர்கள்
அருகோட் டருமவ ராண்மையும்
காய்பவன் கூர்ந்தஅன்பு
தருகோட் டருமர பிற்பத்தர்
சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கட்செம்
மேனிய ஒண்களிறே. 18

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்—அளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றாள்
நண்ணுவதும் நல்லார் கடன். 19

---

18. கோள் தரும் - கிரகங்கள் தருகின்ற.

நல்லார் பழிப்பில் எழிற்செம்
பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக
மேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயக
னேஎன்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள்
இருக்க மலர்த்திருவே. 20

திருச்சிற்றம்பலம்

21

கபிலதேவநாயனார்

அருளிச்செய்த

சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

அந்தி மதிமுகிழான் அந்தியஞ் செந்நிறத்தான்
அந்தியே போலும் அவிர்சடையான்—அந்தியில்
தூங்கிருள்சேர் யாமமே போலும் சுடுநீற்றான்
வீங்கிருள்சேர் நீல மிடறு. 1

மிடற்றாழ் கடல்நஞ்சம் வைக்கின்ற
ஞான்றுமெல் லோதிநல்லாள்
மடற்றா மரைக்கைகள் காத்தில
வேமழு வாளதனால்
அடற்றா தையைஅன்று தாளெறிந்
தாற்கருள் செய்தகொள்கைக்
கடற்றாழ் வயற்செந்நெல் ஏறும்வெண்
காட்டெங் கரும்பினையே. 2

---

1. மதிமுகிழ் - **பிறை.** சுடுநீற்றானுடைய **மிடறு** யாமமே போலும்.

2. காத்திலவே - **காக்கவில்லையா?**

கருப்புச் சிலைஅநங்கன் கட்டழகு சுட்ட
நெருப்புத் திருநெற்றி நாட்டம்—திருச்சடையில்
திங்கள் புரையுந் திரள்பொற் றிருமேனி
எங்கள் இமையோர் இறைக்கு. 3

இறைக்கோ குறைவில்லை உண்டிறை
யேஎழி லாரெருக்கு
நறைக்கோ மளக்கொன்றை துன்றுஞ்
சடைமுடி நக்கர்சென்னிப்
பிறைக்கோர் பிளவும் பெறுவிளிக்
கொண்டெம் பிரான்உடுக்கும்
குறைக்கோ வணம்ஒழிந் தாற்பின்னை
ஏதுங் குறைவில்லையே. 4

இல்லை பிறவிக் கடல்ஏறல் இன்புறவில்
முல்லை கமழும் முதுகுன்றிற்—கொல்லை
விடையானை வேதியனை வெண்மதிசேர் செம்பொற்
சடையானைச் சாராதார் தாம். 5

தாமரைக் கோவும்நன் மாலும்
வணங்கத் தலைப்பிடத்துத்
தாமரைக் கோவணத் தோடிரந்
துண்ணினுஞ் சார்ந்தவர்க்குத்
தாமரைக் கோமளத் தோடுல
காளத் தருவர்கண்டீர்
தாமரைக் கோமளக் கைத்தவ
ளப்பொடிச் சங்கரரே. 6

---

4. இறைவனுக்கு ஒரு குறையும் இல்லை; சிறிதளவு மாத்திரம் உண்டு.

5. புறவில் - காட்டில். கொல்லை - முல்லை நிலத்துக்குரிய.

6. தாமரைக் கோவும் - பிரமதேவனும். அரைக் கோவணத் தோடு - இடையிலுள்ள கோவணத்தோடு. தாமரைக் கோமளம் - திருமகள். தாமரையைப் போன்ற மென்மையான திருக்கரத்தையுடைய.

சங்குகோள் எண்ணுவரே பாவையரைத் தம்அங்கம்
பங்குபோய் நின்றாலும் பாய்கலுழிக்—கங்கை
வரியராப் போதும் வளர்சடையாய் நின்போற்
பெரியரா வாரோ பிறர். 7

பிறப்பாழ் குழியிடை வீழ்ந்துழை
வேற்குநின் பேரருளின்
சிறப்பார் திருக்கை தரக்கிற்றி
யேதிரி யும்புரமூன்
றறப்பாய் எரியுற வான்வரை
வில்வளைத் தாய்இரவாய்
மறப்பா வரியர நாணிடைக்
கோத்தகை வானவனே. 8

வானம் மணிமுகடா மால்வரையே தூணாக
ஆன பெரும்பார் அரங்காகக்—கானகத்தில்
அம்மா முழவதிர ஆடும் பொழுதாரூர்
எம்மானுக் கெய்தா திடம். 9

இடப்பா கமும்உடை யாள்வரை
யீன்இள வஞ்சிஅன்ன
மடப்பால் மொழிஎன்பர் நின்வலப்
பாகத்து மான்மழுவும்
விடப்பா சனக்கச்சும் இச்சைப்
படநீ றணிந்துமிக்க
கடப்பார் களிற்றுரி கொண்டெங்கும்
மூடும்எங் கண்ணுதலே. 10

கண்ணி இளம்பிறையுங் காய்சினத்த மாசுணமும்
நண்ணி இருந்தால் நலமில்லை—தண்ணலங்கற்

---

7. சங்கு கோள் - கைவளையைக் கொள்ளுதல். அங்கம் - திருமேனி.

8. அரநாண் - பாம்பாகிய நாண்.

9. எய்தாது - போதாது.

10. பாசனம்-ஆடை. விடப்பாசனக் கச்சென்றது பாம்பை.

பூங்கொன்றை யின்றேன் பொதியுஞ் சடைப்புனிதா
வாங்கொன்றை இன்றே மதித்து. 11

மதிமயங் கப்பொங்கு கோழிருட்
கண்டவவ் விண்டவர் தம்
பதியைமங் கச்செற்ற கொற்றவில்
வானவ நற்றவர்சூழ்
அதிகைமங் கைத்திரு வீரட்ட
வாரிட்ட தேனுமுண்டு
கதியைமங் கச்செல்வ தேசெல்வ
மாகக் கருதுவதே. 12

கருதுங் கருத்துடையேன் கையுடையேன் கூப்பப்
பெரிதும் பிறதிறத்துப் பேசேன்—அரிதன்றே
யாகப் பிறையான் இனியென் அகம்புகுந்து
போகப் பெறுமோ புறம். 13

புறமறை யப்புரி புன்சடை
விட்டெரி பொன்திகழும்
நிறமறை யத்திரு நீறு
துதைந்தது நீள்கடல்நஞ்
சுறமறை யக்கொண்ட கண்டமுஞ்
சால உரப்புடைத்தால்
அறமறை யச்சொல்லி வைத்தையம்
வேண்டும் அடிகளுக்கே. 14

அடியோமைத் தாங்கியோ ஆடை உடுத்தோ
குடியோம்ப மாநிதியங் கொண்டோ—பொடியாடு
நெற்றியூர் வாளரவ நீள்சடையாய் நின்னூரை
ஒற்றியூ ராக்கிற் றுரை. 15

---

11. வாங்கு ஒன்றை - ஏதேனும் ஒன்றை எடுத்து விடு.

12. அதிகை மங்கை - திருவதிகை.

13. யாகப் பிறையான் - யாகத்திலே தோன்றிய பிறையை அணிந்தவன்.

15. ஒற்றியூர் - கடன் கொண்ட இடத்தில் ஒற்றியாக வைத்த ஊர்.

உரைவந் துறும்பதத் தேஉரை
மின்கள்அன் றாயின்இப்பால்
நரைவந் துறும்பின்னை வந்துறுங்
காலன்நன் றூத்திடறித்
திரைவந் துறுங்கரைக் கேகலம்
வந்துறத் திண்கைவன்றாள்
வரைவந் துறுங்கடல் மாமறைக்
காட்டெம் மணியினையே. 16

மணியமரும் மாமாட வாய்மூரான் றன்னை
அணிஅமர ரோடயனும் மாலும்—துணிசினத்த
செஞ்சூட்ட சேவற் கொடியானு மாய்நின்று
நஞ்சூட்ட எண்ணியவா நன்று. 17

நன்றைக் குறும்இரு மற்பெரு
மூச்சுநண் ணாதமுன்னம்
குன்றைக் குறுவது கொண்டழி
யாதறி வீர்செறிமின்
கொன்றைக் குறுநறுங் கண்ணியி
னான்றன்கொய் பூங்கயிலைக்
குன்றைக் குறுகரி தேனும் உள்
ளத்திடைக் கொண்மின்களே. 18

கொண்ட பலிநுமக்குங் கொய்தார்க் குமரர்க்கும்
புண்டரிக மாதினுக்கும் போதுமே—மண்டி
உயிரிழந்தார் சேர்புறங்காட் டோரிவாய் ஈர்ப்ப
மயிரிழந்த வெண்டலைவாய் வந்து. 19

---

16. பதத்தே - பக்குவத்தில். கலம் - கப்பல். திண்கை வன்தாள் வரை - யானை.

18. நன்றைக் குறும் - உடல் கலத்தைச் சிதைக்கும்.

19. வெண்டலைவாய்க் கொண்ட பலி போதுமோ ?

வந்தா றலைக்கும் வலஞ்சுழி
 வானவ வானவர்தம்
அந்தார் மகுடத் தடுத்தபைம்
 போதில்அந் தேன்உழக்கிச்
செந்தா மரைச்செவ்வி காட்டும்
 திருவடிக் குஞ்செல்லுமே
எந்தாய் அடித்தொண்டர் ஓடிப்
 பிடித்திட்ட இன்மலரே. 20

மலர்ந்த மலர்தூவி மாமனத்தைக் கூப்பிப்
புலர்ந்தும் புலராத போதும்—கலந்திருந்து
கண்ணீர் அரும்பக் கசிவார்க்குக் காண்பெளியன்
தெண்ணீர் சடைக்கரந்த தேவு. 21

தேவனைப் பூதப் படையனைக்
 கோதைத் திருவிதழிப்
பூவனைக் காய்சினப் போர்விடை
 தன்னொடும் போற்றநின்ற
மூவனை ஈருரு வாயமுக்
 கண்ணனை முன்னுமறை
நாவனை நான்மற வேன்இவை
 நான்வல்ல ஞானங்களே. 22

நானும்என் நல்குரவும் நல்காதார் பல்கடையிற்
கானிமிர்த்து நின்றிரப்பக் கண்டிருக்கும்—வானவர்கள்
தம்பெருமான் மூவெயிலும் வேவச் சரந்துரந்த
எம்பெருமான் என்னு இயல்பு. 23

இயலிசை நாடக மாய்எழு
 வேலைக ளாய்வழுவாப்
புயலியல் விண்ணொடு மண்முழு
 தாய்ப்பொழு தாகிநின்ற

---

22. இதழிப்பூ – கொன்றைமலர். மூவனை - மும்மூர்த்தியாக இருப்பவனை. ஈருருவாய - ஆணும் பெண்ணுமாகிய உருவத்தை உடைய.

மயிலியல் மாமறைக் காடர்வெண்
காடர்வண் தில்லைமல்கு
கயலியல் கண்ணியங் கார்அன்பர்
சித்தத் தடங்குவரே. 24

அடங்காதார் ஆரொருவர் அங்கொன்றை துன்று
மடங்காதல் என்வளைகொள் வார்த்தை—நுடங்கிடையீர்
ஊரூரன் சென்றக்கால் உண்பலிக்கென் றங்ஙனே
ஆரூரன் செல்லுமா றங்கு. 25

அங்கை மறித்தவ ரால்அவி
உண்ணும்அவ் வானவர்கள்
தங்கை மறித்தறி யார்தொழு
தேநிற்பர் தாழ்சடையின்
கங்கை மறித்தண வப்பண
மாசுணக் கங்கணத்தின்
செங்கை மறித்திர விற்சிவன்
ஆடுந் திருநட்டமே. 26

நட்டம்நீ ஆடும் பொழுதத்து நல்லிலயம்
கொட்டக் குழிந்தொழிந்த வாகொல்லோ—வட்டுக்
கடுங்குன்ற மால்யானைக் காருரிவை போர்த்த
கொடுங்குன்ற பேயின் கொடிறு. 27

கொடிறு முரித்தன்ன கூன்முள்
அலவன் குருகினஞ்சென்
றிடறுங் கழனிப் பழனத் தரசை
எழிலிமையோர்
படிறு மொழிந்து பருகக்
கொடுத்துப் பரவைநஞ்சம்
மிடறு தடுத்ததும் அடி
யேங்கள் விதிவசமே. 28

---

24 மயில் இயல் - மயில்கள் அசைகின்ற.
25. ஊரூரன் - ஊரூராக.
27. இலயம் - தாளம். கொடிறு – கன்னம்.
28. குறட்டை முறித்தாற் போன்ற வளைந்த காலையுடைய நண்டு. படிறு - வஞ்சக மொழி.

விதிகரந்த செய்வினையேன் மென்குழற்கே வாளா
மதுகரமே எத்துக்கு வந்தாய்—நதிகரந்த
கொட்டுக்காட் டான்சடைமேற் கொன்றைக் குறுந்தெரியல்
தொட்டுக்காட் டாய்சுழல்வாய் தொக்கு. 29

தொக்கு வருங்கணம் பாடத்தொன்
னீறணிந் தேநிலவு
நக்கு வருங்கண்ணி சூடிவந்
தார்நறும் புன்னைமுன்னம்
அக்கு வருங்கழிக் கானல்ஐ
யாறரைக் காணஅன்பு
மிக்கு வரும்வரும் போதவ
ரைக்காண வெள்குவனே. 30

வெள்காதே உண்பலிக்கு வெண்டலைகொண் டேர்திரிந்தால்
எள்காரே வானவர்கள் எம்பெருமான்—வள்கூர்
வடதிருவீ ரட்டானத் தென்னதிகை மங்கைக்
குடதிருவீ ரட்டானங் கூறு. 31

கூறு பெறுங்கண்ணி சேர்கருங்
கூந்தல்சுண் ணந்துதைந்து
நீறு பெறுந்திரு மேனி
நெருப்புப் புரைபொருப்பொத்
தாறு பெறுஞ்சடை அங்கொன்றை
யந்தேன் துவலைசிந்த
வீறு பெறுஞ்சென்று சென்றெம்
பிரானுக்கு வெண்ணிறமே. 32

நிறம்பிறிதாய் உண்மெலிந்து நெஞ்சுருகி வாளா
புறம்புறமே நாள்போக்கு வாளோ—நறுந்தேன்
படுமுடியாப் பாய்நீர் பரந்தொழுகு பாண்டிக்
கொடுமுடியாய் என்றன் கொடி. 33

30. கணம் - பூதகணம்.
31. வெள்காதே - நாணாமல். எள்காரே - இழித்துக் கூற மாட்டார்களா? 33. நற்றாய் கூற்று.

கொடிக்குல வும்மதிற் கோவலூர்
வீரட்ட கோள்அரவம்
பிடிக்கில அம்முடிப் பூணலை
யத்தொடு மால்விடையின்
இடிக்குரல் கேட்டிடி என்றிறு
கக்கடி வாளெயிற்றுற்
கடிக்க லுறும்அஞ்சி நஞ்சம்
இருந்தநின் கண்டத்தையே. 34

கண்டம் நிறங்கறுப்பக் கவ்வைக் கருங்கடல்நஞ்
சுண்டல் புரிந்துகந்த உத்தமற்குத்—தொண்டடைந்தார்
கூசுவரே கூற்றைக் குறுகுவரே தீக்கொடுமை
பேசுவரே மற்றொருவர் பேச்சு. 35

பேய்ச்சுற்றம் வந்திசை பாடப்
பிணமிடு காட்டயலே
தீச்சுற்ற வந்துநின் றுடல்என்
னுஞ்செப்பு முப்பொழுதும்
கோச்சுற்ற மாக்குடை வானவர்
கோன்அயன் மால்முதலா
மாச்சுற்றம் வந்திறைஞ் சுந்திருப்
பொற்சடை மன்னவனே. 36

மன்னும் பிறப்பறுக்கும் மாமருந்து வாள்அரக்கன்
துன்னுஞ் சுடர்முடிகள் தோள்நெரியத்—தன்னைத்
திருச்சத்தி முற்றத்தான் சித்தத்துள் வைத்தான்
திருச்சத்தி முற்றத்தான் தேசு. 37

திருச்சிற்றம்பலம்

---

35. கூற்றைக் கூசுவரே- காலனைக் கண்டு அஞ்சுவார்களா?

22

கபிலதேவநாயனார்

அருளிச் செய்த

சிவபெருமான் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

ஒன்று முதலாக நூறளவும் ஆண்டுகள்வாழ்ந்
தொன்றும் மனிதர் உயிரையுண்—டொன்றும்
மதியாத கூற்றுதைத்த சேவடியான் வாய்ந்த
மதியான் இடப்பக்கம் மால். 1

மாலை ஒருபால் மகிழ்ந்தானை வண்கொன்றை
மாலை ஒருபால் முடியானை—மாலை
ஒளியானை உத்தமனை உண்ணநஞ் சுண்டற்
கொளியானை ஏத்தி உளம். 2

உளமால்கொண் டோடி ஒழியா தியாமும்
உளமாகில் ஏத்தாவா றுண்டே—உளம்மாசற்
றங்கமலம் இல்லா அடல்வெள்ளே றூர்ந்துழலும்
அங்கமல வண்ணன் அடி. 3

அடியார்தம் ஆருயிரை அட்டழிக்குங் கூற்றை
அடியால் அருவாகச் செற்றான்—அடியார்தம்
அந்தரத்தால் ஏத்தி அகங்குழைந்து மெய்யரும்பி
அந்தரத்தார் சூடும் அலர். 4

அலராளுங் கொன்றை அணியலா ரூரற்
கலராகி யானும் அணிவன்—அலராகி
ஓதத்தான் ஒட்டினேன் ஓதுவன்யான் ஓங்கொலிநீர்
ஓதத்தான் நஞ்சுண்டான் ஊர். 5

---

1. இடப்பக்கத்தில் மால் உள்ளான்.

2 உண்டற்கு ஒளியானை - உண்பதற்கு மறையாமல் முன் நிற்பவனை. ஏத்தி - துதிப்பாயாக. உளம்: விளி.

3. மால் – மயக்கம். அங்கம் மலம் இல்லா; மலம் - அழுக்கு. அம் கமலவண்ணன்.

ஊரும தொற்றியூர் உண்கலனும் வெண்டலையே
ஊரும் விடையொன் றுடைதோலே—ஊரும்
படநாகம் மட்டார் பணமாலை ஈதோ
படநாகம் அட்டார் பரிசு. 6

பரியானை ஊராது பைங்கணை றாரும்
பரியானைப் பாவிக்க லாகா—பரியானைக்
கட்டங்கம் ஏந்தியாக் கண்டுவாழ் நன்னெஞ்சே
கட்டங்க மேந்தியாக் கண்டு. 7

கண்டங் கரியன் உமைபாலுந் தன்பாலும்
கண்டங் கரியன் கரிகாடன்—கண்டங்கள்
பாடியாட் டாடும் பரஞ்சோதிக் கென்னுள்ளம்
பாடியாக் கொண்ட பதி. 8

பதியார் பழிதீராப் பைங்கொன்றை காவேன்
பதியான் பலநாள் இரக்கப்—பதியாய
அம்மானார் கையார் வளைகவர்ந்தார் அஃதேகொல்
அம்மானார் கையார் அறம். 9

அறமான நோக்கா தநங்கனையும் செற்றங்
கறமாநஞ் சுண்ட அமுதன்—அறமான
ஓதியாள் பாகம் அமர்ந்தான் உயர்புகழே
ஓதியான் தோற்றேன் ஒளி. 10

ஒளியார் சுடர்மூன்றுங் கண்மூன்றாக் கோடற்
கொளியான் உலகெல்லாம் ஏத்தற்—கொளியாய
கள்ளேற்றான் கொன்றையான் காப்பிகந்தான் நன்னெஞ்சே
கள்ளேற்றான் கொன்றை கடிது. 11

---

6. படத்தோடு கூடிய பாம்பே, கள்ளையும் படத்தையும் உடைய மாலை. பட நாகம் அட்டார் - இறந்து படும்படி யானையைச் சங்கரித்தவர்.

7. பரியும் யானையும் ஊராது. பரியானை - பெரியவனை. கட்டங்கம் ஏந்தி - கட்வாங்கத்தை ஏந்தியவன், கட்டிய எலும்பை ஆபரணமாக ஏந்தியவன்.

8. உமையின் பாகமும் தன்பாகமும் தன்னிடத்தே தங்கிய அருமையானவன். பாடியா - தங்கும் இடமாக.

9. அம் மான் ஆர் கையார்; அம்மானார் கை ஆர்.

கடியரவர்....கரிதாடு கோயில்
கடியரவர் கையதுமோர் சூலம்—கடியரவர்
ஆனேற்றூர்க் காட்பட்ட நெஞ்சமே அஞ்சல்நீ
ஆனேற்றூர்க் காட்பட்டேம் யாம். 12

யாமான நோக்கா தலர்கொன்றைத் தார்வேண்ட
யாமானங் கொண்டங் கலர்தந்தார்—யாமாவா
ஆவூரா ரூரும் அழகா அனலாடி
ஆவூரார்க் கென்னுரைக்கோம் யாம். 13

யானென்றங் கண்ணு மலையான் அகம்புகுந்து
யானென்றங் கையறிவுங் குன்றுவித்து—யானென்றங்
கார்த்தானே யாயிடினும் அம்பரன்மேல் அங்கொன்றை
ஆர்த்தானேல் உய்வ தரிது. 14

அரியாரும் பூம்பொழில்சூழ் ஆமாத்தூர் அம்மான்
அரியாரும் பாகத் தமுதன்—அரியாரும்
வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம்
வேங்கடத்து நோயால் வியந்து. 15

வியந்தாழி நன்னெஞ்சே மெல்லியலார்க் காளாய்
வியந்தாசை யுண்மெலிய வேண்டா—வியந்தாய
கண்ணுதலான் எந்தைகா பாலி கழலடிப்பூக்
கண்ணுதலாம் நம்பாற் கடன். 16

கடனாகம் ஊராத காரணமுங் கங்கை
கடனாகீ கவர்ந்த வாறும்—கடனாகப்
பாரிடந்தான் மேவிப் பயிலும் பரஞ்சோதி
பாரிடந்தான் மேயாய் பணி. 17

---

13. யாம் மானத்தை நோக்காமல்.
15. அரி - வண்டு, திருமால், சிங்கம். உயிரெல்லாம் கடத்து நோயால் வேம்; கடம் - உடல்,
16. நம்பாற் கடன் அடிப்பூவைக் கண்ணுதலாகும்; கண்ணுதல் - தியானித்தல்.
17. பாரிடம் - பூதம், பூமியாகிய இடம்.

பணியாய் மடநெஞ்சே பல்சடையான் பாதம்
பணியாத பத்தர்க்குஞ் சேயன்—பணியாய
ஆகத்தான் செய்துமேல் நம்மை அமரர்கோ
னாகத்தான் செய்யும் அரன். 18

அரன்காய நைவேற் கநங்கவேள் அம்பும்
அரன்காயும் அந்தியுமற் றந்தோ—அரங்காய
வெள்ளில்சேர் காட்டாடி வேண்டான் களிறுண்ட
வெள்ளில்போன் றுள்ளம் வெறிது. 19

வெறியானை ஊர்வேந்தர் பின்செல்லும் வேட்கை
வெறியார்பூந் தாரான் விமலன்—வெறியார்தம்
அல்லனோய் தீர்க்கும் அருமருந்தாம் ஆரூர்க்கோன்
அல்லனோ நெஞ்சே அயன். 20

அயமால்ஊண் ஆடரவம் நாண்அதள தாடை
அயமாவ தானேறார் ஆரூர்—அயமாய
என்னக்கன் தாழ்சடையன் நீற்றன் எரியாடி
என்னக்கன் றாழும் இவள். 21

ஆழும் இவளையுங் கையகல ஆற்றேனென்
றாழும் இவளை அயராதே—ஆழும்
சலமுடியாய் சங்கரனே சங்கக் குழையாய்
சலமுடியா தின்றருளுன் தார். 22

தாராய தண்கொன்றை யான்இரப்பத் தானிதனைத்
தாராதே சங்கஞ் சரிவித்தான்—தாராவல்
ஆனைமேல் வைகும் அணிவுயல்ஆ ரூர்க்கோன்நல்
லானையும் வானோர்க் கரசு. 23

அரசுமாய் ஆள்விக்கும் ஆட்பட்டார்க் கம்மான்
அரசுமா மங்கொன்று மாலுக்—கரசுமான்
ஊர்தி எரித்தான் உணருஞ் செவிக்கின்பன்
ஊர்தி எரித்தான் உரு. 24

---

20. வெறி – மதம், வாசனை, பித்து.

21. அயமால் ஊண் - உணவு பிச்சை யெடுக்கும் சோறு; அயம் - ஐயம். அதளது - தோல். அயம் ஆவது - குதிரையைப் போன்ற வாகனமாக இருப்பது.

உருவேஎன் சொற்கள் ஒளிவளைநின் உள்ளத்
துருவேதீ உற்றனகள் எல்லாம்—உருவேபோய்க்
காவாலி தார்நினைந்து கைசோர்ந்து மெய்மறந்தாள்
காவாலி தானின் கலை. 25

கலைகாமின் ஏர்காமின் கைவளைகள் காமின்
கலைசேர் நுதலீர்நாண் காமின்—கலையாய
பான்மதியன் பண்டரங்கன் பாரோம்பு நான்மறையன்
பான்மதியன் போந்தான் பலிக்கு. 26

பலிக்குத் தலைஏந்திப் பாரிடங்கள் சூழப்
பலிக்கு மனைப்புகுந்து பாவாய்—பலிக்குநீ
ஐயம்பெய் என்றானுக் கையம்பெய் கின்றேன்மேல்
ஐயம்பெய் தான்அநங்கன் ஆய்ந்து. 27

ஆயம் அழிய அலர்கொன்றைத் தார்வேண்டி
ஆயம் அழிய அயர்வேன்மேல்—ஆயன்வாய்த்
தீங்குழலுந் தென்றலுந் தேய்கோட் டிளம்பிறையும்
தீங்குழலும் என்னையே தேர்ந்து. 28

தேரோன் கதிரென்னுஞ் செந்தழலால் வெந்தெழுபேய்த்
தேரோன் கதிரென்னுஞ் செய்பொருள்நீ—தேராதே
கூடற்கா வாலி குரைகழற்கா நன்னெஞ்சே
கூடற்கா வாலிதரக் கூர். 29

---

26. கலை காமின் - ஆடையை நழுவாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏர் – அழகு. கலைசேர் - பிறையைப் போன்ற.

27. ஐயம் பெய் - பிச்சையிடு, ஐயம்பு எய்தான் - ஐந்து மலரம்புகளை எய்தான்.

28. தீங்குழலும் - இனிய புல்லாங்குழலும். தீங்கு உழலும்- தீமையைச் செய்து திரியும்.

29. தேரோன் - சூரியன். பேய்த் தேரோன் கதிர் - கானலின் எழுச்சி. செய்பொருள் கானலைப் போன்றது. கூடற்கா ஆலிதர - சேரும்பொருட்டு உருகிக் கண்ணீர் ஒழுக

கூரால மேயாக் குருகோடு கைவேற்குக்
கூரார்வேற் கையார்க்காய்க் கொல்லாமே—கூரார்
பனிச்சங்காட் டார்சடைமேற் பால்மதியைப் பாம்பே
பனிச்சங்காட் டாய்கடிக்கப் பாய்ந்து. 30

பாயும் விடைஊர்தி பாசுபதன் வந்தெனது
பாயிற் புகுதப் பணைமுலைமேற்—பாயிலனாற்
கொன்றாய் குளிர்சடையாற் கென்னிலைமை கூறாதே
கொன்றாய் இதுவோ குணம். 31

குணக்கோடி கோடாக் குளிர்சடையான் வில்லின்
குணக்கோடிக் குன்றஞ்சூழ் போகிக்—குணக்கோடித்
தேரிரவில் வாரான் சிவற்காளாஞ் சிந்தனையே
தேரிரவில் வாழுந் திறம். 32

திறங்காட்டுஞ் சேயாள் சிறுகிளியைத் தான்தன்
திறங்காட்டுந் தீவண்ணன் என்னும்—திறங்காட்டின்
ஊரரவம் ஆர்த்தானோ டென்னை யுடன்கூட்டின்
ஊரரவஞ் சால உடைத்து, 33

உடையோடு காடாடி ஊர்ஐயம் உண்ணி
உடைஆடை தோல்பொடிசந் தென்னை—உடையானை
உன்மத் தகமுடிமேல் உய்த்தானை நன்னெஞ்சே
உன்மத் தகமுடிமேல் உய். 34

உய்யாதென் ஆவி ஒளிவளையும் மேகலையும்
உய்யா தடம்பழிக்கும் ஒண்திதலை—உய்யாம்
இறையானே ஈசனே எம்மானே நின்னை
இறையானுங் காண்கிடாய் இன்று. 35

---

33. ஊர் அரவம் – ஊர்கின்ற பாம்பு, ஊரார் கூறும் பழி மொழியின் ஓசை.

34. பொடி சந்து - திருநீறே பூசும் சந்தனம். உன் - நினை.

35. இறையானும் - சிறிதளவேனும்.

இன்றியாம் உற்ற இடரும் இருந்துயரும்
இன்றியாந் தீர்தும் எழில்நெஞ்சே—இன்றியாம்
காட்டாநஞ் சேற்றான் காமரு வெண்காட்டான்
காட்டான்அஞ் சேற்றான் கலந்து. 36

கலம்பெரியார்க் காஞ்சிரங்காய் வின்மேரு என்னும்
கலம்பெரிய ஆற்கீழ் இருக்கை—கலம்பிரியா
மாக்கடல்நஞ் சுண்டார் கழல்தொழார்க் குண்டாமோ
மாக்கடனஞ் சேரும் வகை. 37

கையா றவாவெகுளி அச்சங் கழிகாமம்
கையாறு செஞ்சடையான் காப்பென்னும்—கையாறு
மற்றிரண்ட தோளானைச் சேர்நெஞ்சே சேரப்போய்
மற்றிரண்ட தோளான் மனை. 38

மனையாய் பலிக்கென்று வந்தான்வண் காமன்
மனையா சறச்செற்ற வானோன்—மனையாய
என்பாவாய் என்றேனுக் கியானல்லேன் நீதிருவே
என்பாவாய் என்றான் இறை. 39

இறையாய வெண்சங் கிவைதருவேன் என்னும்
இறையாகம் இன்றருளாய் என்னும்—இறையாய்
மறைக்காட்டாய் மாதவனே நின்னுருவம் இங்கே
மறைக்காட்டாய் என்னும்இம் மாது. 40

மாதரங்கத் தன்னரங்கஞ் சேர்த்தி வளர்சடைமேல்
மாதரங்கக் கங்கைநீர் மன்னுவித்து—மாதரங்கத்
தேரானை யூரான் சிவற்காளாஞ் சிந்தனையே
தேரானை யூரானைத் தேர். 41

தேரு....ளிலா ரென்னுவார் காவிரிவந்
தேரு மருகிற் சிராமலையான்—தேரமர்க்கட்
செல்லுமதில் மூன்றெரித்தான் சேவடியே யாம்பரவிச்
செல்லுமெழில் நெஞ்சே தெளி. 42

தெளியாய் மடநெஞ்சே செஞ்சடையான் பாதம்
தெளியாதார் தீநெறிக்கட் செல்வர்—தெளியாய
பூவார் சடைமுடியான் பொன்னடிக்கே ஏத்துவனற்
பூவாய வாசம் புனைந்து. 43

புனைகடற்குப் பொன்கொடுக்கும் பூம்புகார் மேயான்
புனைகடுக்கை மாலைப் புராணன்—புனைகடத்து
நட்டங்க மாட்டயரும் நம்பன் திருநாமம்
நட்டங்க மாட்டினேன் நக்கு. 44

நக்கரை சாளும் நடுநாளை நாரையூர்
நக்கரை வக்கரையோம் நாமென்ன—நக்குரையாம்
வண்டாழங் கொன்றையான் மால்பணித்தான் மற்றவர்க்காய்
வண்டாழங் கொண்டான் மதி. 45

மதியால் அடுகின்ற தென்னும்மால் கூரும்
மதியாதே வைதுரப்பர் என்னும்—மதியாதே
மாதெய்வ மேத்து மறைக்காடா ஈதேகொல்
மாதெய்வங் கொண்ட வனப்பு. 46

வனப்பார் நிறமும் வரிவளையும் நாணும்
வனப்பார் வளர்சடையான் கொள்ள—வனப்பாற்
கடற்றிரையு மீருமிக் கங்குல்வாய்....
கடற்றிரையு மீருங் கனன்று. 47

கனன்றாழி நன்னெஞ்சே கண்ணுதலார்க் காளாய்க்
கனன்றார் களிற்றுரிமால் காட்டக்—கனன்றார்
உடம்பட்ட நாட்டத்தர் என்னையுந்தன் ஆளா
உடம்பட்ட நாட்டன் உரு. 48

உருவியலுஞ் செம்பவளம் ஒன்னார் உடம்பில்
உருவியலுஞ் சூலம் உடையன்—உருவியலும்
மாலேற்றான் நான்முகனும் மண்ணோடு விண்ணும்போய்
மாலேற்றாற் கீதோ வடிவு. 49

வடிவார் அறப்பொங்கி வண்ணக்கச் சுந்தி
வடிவார் வடம்புனைந்தும் பொல்லா—வடிவார்வேல்
முக்கூட லம்மா முருகமருங் கொன்றையந்தார்
முக்கூட மாட்டா முலை, 50

முலைநலஞ்சேர் கானப்பேர் முக்கணன் என்னும்
முலைநலஞ்சேர் மொய்சடையான் என்னும் - முலைநலஞ்சேர்
மாதேவா என்று வளர்கொன்றை வாய்சோர
மாதேவா சோரல் வளை. 51

வளையாழி யோடகல மால்தந்தான் என்னும்
வளையாழி நன்னெஞ்சே காணில் - வளையாழி
வன்னஞ்சைக் கண்டமரர் வாய்சோர வந்தெதிர்ந்த
வன்னஞ்சக் கண்டன் வரில். 52

வரிநீல வண்டலம்பு மாமறைக்காட் டங்கேழ்
வரிநீர் வலம்புரிகள் உந்தி—வரிநீர்
இடுமணல்மே லன்னலங்கொண் டின்னாநோய் செய்தான்
இடுமணல்மேல் ஈசன் எமக்கு. 53

அக்காரம் ஆடரவம் நாண்அறுவை தோல்பொடிசாந்
தக்காரந் தீர்ந்தேன் அடியேற்கு—வக்காரம்
பண்டரங்கன் எந்தை படுபிணஞ்சேர் வெங்காட்டுப்
பண்டரங்கன் எங்கள் பவன். 54

பவன்அடிபார் விண்நீர் பகலோன் மதிதீப்
பவனஞ்சேர் ஆரமுதம் பெண்ஆண் - பவனஞ்சேர்
காலங்கள் ஊழி அவனே கரிகாட்டிற்
காலங்கை ஏந்தினான் காண். 55

---

50. முருகு - நறுமணம்.

54. அக்கு ஆரம் - எலும்பே மாலை. ஆடரவம் நாண் - பாம்பே அரைஞாண். அறுவை தோல் - ஆடை தோல். பொடி சாந்து - திருநீறே பூசும் சந்தனம்,

காணங்கை இன்மை கருதிக் கவலாதே
காணங்கை யாற்றொழுது நன்னெஞ்சே—காணங்கை
பாவனையாய் நின்றான் பயிலும் பரஞ்சோதி
பாவனையாய் நின்ற பதம். 56

பதங்க வரையுயர்ந்தான் பான்மகிழ்ந்தான் பண்டு
பதங்கன் எயிறு பறித்தான்—பதங்கையால்
அஞ்சலிகள் அன்பாலும் ஆக்குதிகாண் நெஞ்சேகூர்ந்
தஞ்சலிகள் அன்பாலும் ஆக்கு. 57

ஆக்கூர் பனிவாடா ஆவிசோர்ந் தாழ்கின்றேன்
ஆக்கூ ரலர்ந்தான் அழகிதா—ஆக்கூர்
மறையோம்பு மாடத்து மாமறையோர் நான்கு
மறையோம்பு மாதவர்க்காய் வந்து. 58

வந்தியான் சீறினு மாழி மடநெஞ்சே
வந்தியாய் உள்ளத்து வைத்திராய்—வந்தியாய்
நம்பரனை யாடும் நளிர்புன் சடையானை
நம்பரனை நாடோறும் நட்டு. 59

நட்டமா கின்றன வொண்சங்கம் நான்அவன்பால்
நட்டமா நன்னீர்மை வாடினேன்—நட்டமா
டீயா னெரியாடி எம்மான் இருங்கொன்றை
ஈயானேல் உய்வ திலம். 60

இலமலரஞ் சேவடியார் ஏகப் பெறாரே
இலமலரே ஆயினும் ஆக—இலமலரும்
ஆம்பல்சேர் செவ்வாயார்க் காடாதே ஆயினேன்
ஆம்பல்சேர் வெண்டலையார்க் காள். 61

---

56. காணம் கையின்மை கருதி - கையிலே பொருள் இல்லாமையை எண்ணி. அங்கையால் தொழுது காண்.
57. பதங்கன் - சூரியன்.
59. நம்பு அரனை, நம் பரனை
60. ஒள்ளிய வளைகள் இழக்கப்படுகின்றன.

ஆளாளஞ் சேர்களிறுந் தேரும் அடல்மாவும்
....
நாடகங்க ளாட்டயரும் நம்பன் திருநாமம்
நாடகங்கள் ஆடி நயந்து. 62

நயந்தநாள் யான்இரப்ப நற்சடையான் கொன்றை
நயந்தநாள் நன்னீர்மை வாட—நயந்தநாள்
அம்பகலஞ் செற்றான் அருளான் அநங்கவேள்
அம்பகலம் பாயும் அலர்ந்து. 63

அலங்காரம் ஆடரவம் என்புதோல் ஆடை
அலங்கார அண்ணற் கழகார்—அலங்காரம்
மெய்காட்டு வார்குழலார் என்னுவார் வெள்ளேற்றான்
மெய்காட்டும் வீடாம் விரைந்து. 64

விரையார் புனற்கங்கை சேர்சடையான் பொன்னார்
விரையார் பொழிற்புறந்தை மேயான்—விரையானீ
றென்பணிந்தான் ஈசன் இறையான் எரியாடி
என்பணிந்தான் ஈசன் எனக்கு. 65

எனக்குவளை நில்லா எழில்இழந்தேன் என்னும்
எனக்குவளை நில்லாநோய் செய்தான்—இனக்குவளைக்
கண்டத்தான் நால்வேதன் காரோணத் தெம்மானைக்
கண்டத்தால் நெஞ்சேகாக் கை. 66

காக்கைவளை என்பார்ப்பார்க் கன்பாப்பா னையாதே
காக்கைவளை யென்பார்ப்பா னூர்குரக்குக்—காக்கைவளை
ஆடானை யீருரியன் ஆண்பெண் அவிர்சடையன்
ஆடானை யான தமைவு. 67

அமையாமென் தோள்மெலிவித் தம்மாமை கொண்டிங்
கமையாநோய் செய்தான் அணங்கே—எமையாளும்
சாமத்த கண்டன் சடைசேர் இளம்பிறையன்
சாமத்தன் இந்நோய்செய் தான். 68

---

68. சாமத்த கண்டன் - சாமகானம் செய்யும் திருக்கழுத்தை உடையவன். சாமத்தன் - நள்ளிரவில் ஆடுபவன்.

தானக்கன் நக்க பிறையன் பிறைக்கோட்டுத்
தானக் களிற்றுரியன் தண்பழனன்—தானத்
தரையன் அரவரையன் ஆயிழைக்கும் மாற்கும்
அரையன் உடையான் அருள். 69

அருணம்பாற் செஞ்சடையன் ஆமாத்தூர் அம்மான்
அருணம்பால் நல்கும் அமுதன்—அருணம்பால்
ஓராழித் தேரான் எயிறட்ட உத்தமனை
ஓராழி நெஞ்சே உவ. 70

உவவா நறுமலர்கொண் டுத்தமனை உள்கி
உவவா மனமகிழும் வேட்கை—உவவா
றெழுமதிபோல் வாண்முகத் தீசனார்க் கென்னே
எழுமதிபோல் ஈசன் இடம். 71

இடமால் வலமாலை வண்ணமே தம்பம்
இடமால் வலமானஞ் சேர்த்தி—இடமாய
மூவா மதிபுரையும் முன்னிலங்கு மொய்சடையான்
மூவா மதியான் முனி. 72

முனிவன்மால் செஞ்சடையான் முக்கணான் என்னும்
முனிவன்மால் செய்துமுன் நிற்கும்—முனிவன்மால்
போற்றார் புரமெரித்த புண்ணியன்றன் பொன்னடிகள்
போற்றுநாள் இன்று புலர்ந்து. 73

புலர்ந்தால்யான் ஆற்றேன் புறனுரையும் அஃதே
புலர்ந்தானூர் புன்கூரான் என்னும்—புலர்ந்தாய
மண்டளியன் அம்மா னவர்தம் மடியார்தம்
மண்டளியன் பின்போம் மனம். 74

மனமாய நோய்செய்தான் வண்கொன்றை தாரான்
மனமாய உள்ளார வாரான்—மனமாயப்
பொன்மாலை சேரப் புனைந்தான் புனைதருப்பைப்
பொன்மாலை சேர்சடையான் போந்து. 75

---

70. ஓர் - நினை. ஆழி - ஆழ்வாயாக.
72. இடம் மால் - இடப்பக்கத்தே கரிய நிறம். வலம் மாலை வண்ணம் - வலப்பக்கத்தில் மாலை வானத்தைப் போன்ற நிறம்

போந்தார் புகஅணைந்தார் பொன்னேர்ந்தார் பொன்னுமை
போந்தா ரொழியார் புரமெரித்தார்—போந்தார்
இலங்கோல வாண்முகத் தீசனுற் கெல்லே
இலங்கோலந் தோற்ப தினி. 76

இனியாரும் ஆளாக எண்ணுவர்கொல் எண்ணார்
இனியானஞ் சூணிருக்கைக் குள்ளான்—இனியானைத்
தாளங்கை யாற்பாடித் தாழ்சடையான் றனுடைய
தாளங்கை யாற்றொழுவார் தாம். 77

தாமரைசேர் நான்முகற்கும் மாற்கும் அறிவரியார்
தாமரைசேர் பாம்பர் சடாமகுடர்—தாமரைசேர்
பாணியார் தீர்ந்தளிப்பர் பாரோம்பு நான்மறையார்
பாணியார் தீர்ந்தளிப்பர் பார். 78

பார்கால்வான் நீர்தீப் பகலோன் பனிமதியன்
பார்கோல மேனிப் பரன்அடிக்கே—பார்கோலக்
கோகரணத் தான்அறியக் கூறுதியே நன்னெஞ்சே
கோகரணத் தானைய கோ. 79

கோப்பாடி ஓடாதே நெஞ்சம் மொழிகூத்தன்
கோப்பாடிக் கோகரணங் குற்றாலம்—கோப்பாடிப்
பின்னைக்காய் நின்றார்க் கிடங்கொடுக்கும் பேரருளான்
பின்னைக்காம் எம்பெருமான் பேர். 80

பேரானை ஈருரிவை போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை யீருருவம் பெற்றானைப்—பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க் கெஞ்ஞான்றும்
உண்டாம்நா ளல்ல உயிர். 81

---

78. தாம் அரை சேர் பாம்பர். தாம மரைசேர் பாணியர் - தாவும் மான் இருக்கும் திருக்கரமுடையவர்.

80. பின்னைக்காய் நின்றார்க்கு - திருமகளின் அன்புக்காக நின்ற திருமாலுக்கு. இடம் இடப்பாகம். பேர் பின்னைக்கு ஆம் - அவன் திருநாமம் மரணம் அடையும் சமயத்தில் பயன் தரும்.

உயிராய மூன்றொடுக்கி ஐந்தடக்கி உள்ளத்
துயிராய ஒண்மலர்த்தா ளூடே—உயிரான்
பகர்மனத்தான் பாசுபதன் பாதம் பணியப்
பகர்மனமே ஆசைக்கட் பட்டு. 82

பட்டாரண் பட்டரங்கன் அம்மான் பரஞ்சோதி
பட்டார் எலும்பணியும் பாசுபதன்—பட்டார்ந்த
கோவணத்தான் கொல்லேற்றன் என்றென்று நெஞ்சமே
கோவணத்து நம்பனையே கூறு. 83

கூற்றும் பொருளும்போற் காட்டிஎன் கோல்வளையைக்
கூற்றின் பொருள்முயன்ற குற்றாலன்—கூற்றின்
செருக்கழியச் செற்ற சிவற்கடிமை நெஞ்சே
செருக்கழியா முன்னமே செய். 84

செய்யான் கருமிடற்றான் செஞ்சடையான் தென்பொழில்சூழ்
செய்யான் பழனத்தான் மூவுலகும்—செய்யாமுன்
நாட்டுணாய் நின்றானை நாடுதும்போய் நன்னெஞ்சே
நாட்டுணாய் நின்றானை நாம். 85

நாவாய் அகத்துளதே நாம்உளமே நம்மீசன்
நாவாய்போல் நன்னெறிக்கண் உய்க்குமே—நாவாயால்
துய்க்கப் படும்பொருளைக் கூட்டுதும் மற்றவர்க்காள்
துய்க்கப் படுவதாஞ் சூது. 86

சூதொன் றுனக்கறியச் சொல்லினேன் நன்னெஞ்சே
சூதன் சொலற்கரிய சோதியான்—சூதின்
கொழுந்தேன் கமழ்சோலைக் குற்றாலம் பாடிக்
கொழுந்தே இழந்தேன் குருகு. 87

குருகிளவேய்த் தோள்மெலியக் கொங்கைமார் புல்கிக்
குருகிளையார் கோடுகொடாமே—குருகிளரும்
போதார் கழனிப் புகலூர் அமர்ந்துறையும்
போதாநின் பொன்முடிக்கட் போது. 88

---

83. பட்டார் - இறந்தவருடைய.
84. கூற்றும் பொருளும் - சொல்லும் அதன் பொருளும்.

போதரங்க வார்குழலார் என்னாவார் நன்னெஞ்சே
போதரங்க நீர்கரந்த புண்ணியனைப்—போதரங்கக்
கானகஞ்சேர் சோதியே கைவிளக்கா நின்றாடும்
கானகஞ்சேர் வாற்கடிமை கல். 89

கற்றானஞ் சாடுகா வாலி களந்தைக்கோன்
கற்றானைக் கல்லாத நாளெல்லாம்—கற்றான்
அமரர்க் கமரர் அரர்க்கடிமை பூண்டார்
அமரர்க் கமரரா வார். 90

ஆவா மனிதர் அறிவிலரே யாதொன்றும்
ஆவார்போற் காட்டி அழிகின்றார்—ஆவா
பகல்நாடிப் பாடிப் படர்சடைக்குப் பல்பூப்
பகல்நாடி ஏத்தார் பகர்ந்து. 91

பகனாட்டம் பாட்டயரும் பாட்டோடாட் டெல்லி
பகனாட்டம் பாழ்படுக்கும் உச்சி—பகனாட்டம்
தாங்கால் தொழுதெழுவார் தாழ்சடையார் தம்முடைய
தாங்கால் தொழுதல் தலை. 92

தலையாலங் காட்டிற் பலிதிரிவர் என்னும்
தலையாலங் காடர்தாம் என்னும்—தலையாய
பாகீ ரதிவளரும் பல்சடையீர் வல்விடையீர்
பாகீ ரதிவளரும் பண்பு. 93

பண்பாய நான்மறையான் சென்னிப் பலிதேர்ந்தான்
பண்பாய பைங்கொன்றைத் தார்அருளான் பண்பால்
திருமாலு மங்கைச் சிவற்கடிமை செய்வான்
திருமாலு மங்கைச் சிவன். 94

---

90. கன்று ஆன் அஞ்சு ஆடும் - கன்றையுடைய பசுவினிடத்திலிருந்து பெறும் ஐந்து பொருள்களால் அபிடேகம் கொள்ளும்.

93. தலையால் அம் காட்டு இல் பலிதிரிவர் - அழகைக் காட்டும் வீடுகளில் கபாலத்திலே பிச்சை யேற்றுத் திரிவர்.

சிவன்மாட் டுகவெழுதும் நாணும் நகுமென்னும்
சிவன்மேய செங்குன்றூர் என்னும்—சிவன்மாட்டங்
காலிங் கனம்பிணையும் ஆயிழையீர் அங்கொன்றை
யாலிங் கனம்பிணையு மாறு. 95

ஆறுவெங் கூற்றுதைத் தானைத்தோல் போர்த்துகந்தங்
காறூர் சடையீர்க் கமையாதே—ஆறுத
ஆனினத்தார் தாந்தம் அணியிழையி னூர்க்கடிமை
ஆனினத்தார் தாந்தவிர்ந்த தாட்டு. 96

ஆட்டும் அரவர் அழிந்தார் எலும்பணிவார்
ஆட்டும் இடுபலிகொண் டார்அமரர்—ஆட்டுமோர்
போரேற்றான் கொன்றையான் போந்தான் பலிக்கென்று
போரேற்றான் போந்தான் புறம். 97

புறந்தாழ் குழலார் புறனுரைஅஞ் சாதே
புறந்தாழ் புலிப்பொதுவுள் ஆடி—புறந்தாழ்பொன் [யான்
மேற்றளிக்கோன் வெண்பிறையான் வெண்சுடர்போல் மேனி
மேற்றளிக்கோன் என்றுரையான் மெய். 98

மெய்யன் பகலாத வேதியன் வெண்புரிநூல்
மெய்யன் விரும்புவார்க் கெஞ்ஞான்றும்—வெய்ய
துணையகலா நோக்ககலா போற்றகலா நெஞ்சே
துணையிகலா கூறுவா னூறு. 99

நூறான் பயன்ஆட்டி நூறு மலர்சொரிந்து
நூறு நொடிவதனின் மிக்கதே—நூறு
உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளே
றுடையானைப் பாடலால் ஒன்று. 100

திருச்சிற்றம்பலம்

---

95. ஆலிங்கனம் – தழுவுதல். கொன்றையால் இங்கனம்.
100. நூறு பசுவின்பாலைப் பொழிந்து நூறு மலர்களை அருச்சித்து நூறு தோத்திரங்களைச் சொல்வதைக் காட்டிலும் சிறந்தது.

23

பரணதேவநாயனார்

அருளிச் செய்த

சிவபெருமான் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

ஒன்றுரைப்பீர் போலப் பலஉரைத்திட் டோயாதே
ஒன்றுரைப்பீ ராயின் உறுதுணையாம்—ஒன்றுரைத்துப்
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
பேரரவம் பூணும் பிரான். 1

பிரானிடபம் மால்பெரிய மந்தாரம் வில்லுப்
பிரானிடபம் பேரொலிநா ணாகம்—பிரானிடபம்
பேணு முமைபெரிய புன்சடையின் மேலமர்ந்து
பேணு முமையிடவம் பெற்று. 2

பெற்றும் பிறவி பிறந்திட் டொழியாதே
பெற்றும் பிறவி பிறந்தொழிமின்—பெற்றுங்
குழையணிந்த கோளரவக் கூற்றுதைத்தான் றன்னைக்
குழையணிந்த கோளரவ நீ. 3

நீயேயா ளாவாயும் நின்மலற்கு நன்னெஞ்சே
நீயேயா ளாவாயும் நீள்வாளி—னீயே
ஏறார் புனற்சடையா எங்கள் இடைமருதா
ஏறார் புனற்சடையா என்று. 4

என்று மலர்தூவி ஈசன் திருநாமம்
என்று மலர்தூற்றி யேயிருந்தும்—என்றும்
....
புகலூரா புண்ணியனே என். 5

---

1. அரவம் - ஒலி, பாம்பு.
2. மந்தரம் என்பது மந்தாரம் என்று நின்றது. புன் சடை - சிவந்த சடை.
5. என் - என்று சொல்வாயாக.

என்னே இவளுற்ற மாலென்கொல் இன்கொன்றை
என்னே இவளொற்றி யூரென்னும் - என்னே
தவளப் பொடியணிந்த சங்கரனே என்னும்
தவளப் பொடியானைச் சார்ந்து. 6

சார்ந்துரைப்ப தொன்றுண்டு சாவாமூ வாப்பெருமை
சார்ந்துரைத்த தத்துவத்தி னுட்பொருளைச்—சார்ந்துரைத்த
ஆதியே அம்பலவா அண்டத்தை ஆட்கொள்ளும்
ஆதியேன் றென்பால் அருள். 7

அருள்சேரா தாரூர்தீ ஆறுமல் எய்தாய்
அருள்சேரா தாரூர்தீ யாடி—அருள்சேரப்
பிச்சைஏற் றுண்டு பிறர்கடையிற் கால்நிமிர்த்துப்
பிச்சைஏற் றுண்டுழல்வாய் பேச்சு. 8

பேச்சுப் பெருகுவதென் பெண்ஆண் அலிஎன்று
பேச்சுக் கடந்த பெருவெளியைப்—பேச்சுக்
குரையானை ஊனுக் குயிரானை ஒன்றற்
குரியானை நன்னெஞ்சே உற்று. 9

உற்றுரையாய் நன்னெஞ்சே ஓதக் கடல்வண்ணன்
உற்றுரையா வண்ணமொன் றுணனை—உற்றுரையா
ஆனை உரித்தானை அப்பனை எப்பொழுதும்
ஆனையுரித் தானை அடைந்து. 10

அடைந்துன்பால் அன்பாய் அணிமணிகொண் டர்ச்சித்
தடைந்துன்பால் மேலுகுத்த மாணிக்—கடைந்துன்பால்
அவ்வமுதம் ஊட்டி அணிமலருஞ் சூழ்ந்தன்று
வவ்வமுத மாக்கினாய் காண். 11

காணாய் கவாலி கதிர்முடிமேற் கங்கைதனைக்
காணாயக் காருருவிற் சேருமையைக் - காணாய்
உடைதலைகொண் டூரூர் திரிவானை நச்சி
உடைதலைகொண் டூரூர் திரி. 12

---

11. மாணிக்கு - சண்டீசருக்கு. அமுதம் ஊட்டி - தன்னுடைய நிவேதனத்தைப் பெறச் செய்து.

திரியும் புரமெரித்த சேவகனார் செவ்வே
திரியும் புரமெரியச் செய்தார்—திரியும்
அரியான் திருக்கயிலை என்னுதார் மேனி
அரியான் திருக்கயிலை யாம். 13

....

ஆம்பரிசே செய்தங் கழியாக்கை—ஆம்பரிசே
ஏத்தித் திரிந்தானை எம்மானை அம்மானை
ஏத்தித் திரிந்தானை ஏத்து. 14

ஏத்துற்றுப் பார்த்தன் எழில்வான் அடைவான்போல்
ஏத்துற்றுப் பார்த்தன் இறைஞ்சுதலும்—ஏத்துற்றுப்
பாசுபதம் அன்றளித்த பாசூரான் பால்நீற்றான்
பாசுபதம் இன்றளியென் பால். 15

பாலார் புனல்பாய் சடையானுக் கன்பாகிப்
பாலார் புனல்பாய் சடையானுள்—பாலாடி
ஆடுவான் பைங்கண் அரவூர்வான் மேனிதீ
ஆடுவான் என்றென்றே ஆங்கு. 16

ஆங்குரைக்க லாம்பொன் மலர்ப்பாதம் அஃதன்றே
ஆங்குரைக்க லாம்பொன் அணிதில்லை - ஆங்குரைத்த
அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலு மாய்நின்ற
அம்பலத்தும் அண்டத்தும் ஆம். 17

மாயனைஓர் பாகம் அமர்ந்தானை வானவரும்
மாயவரு மால்கடல்நஞ் சுண்டானை - மாய
வருவானை மாலை ஒளியானை வானின்
உருவானை ஏத்தி உணர். 18

உணரா வளைகழலா உற்றுன்பாற் சங்கம்
உணரா வளைகழல ஒட்டி—உணரா
அளைந்தான மேனி அணிஆரூ ரேசென்
றளைந்தானை ஆமாறு கண்டு. 19

கண்திறந்து காய்எரியின் வீழ்ந்து கடிதோடிக்
கண்டிறந்து காமன் பொடியாகக்—கண்டிறந்து
கானின் உகந்தாடுங் கருத்தர்க்குக் காட்டினான்
கானினுகந் தாடுங் கருத்து. 20

கருத்துடைய ஆதி கறைமிடற்றெம் ஈசன்
கருத்துடைய கங்காள வேடன்—கருத்துடைய
ஆனேற்றான் நீற்றான் அனலாடி ஆமாத்தூ
ரானேற்றா னீற்றா னெரி. 21

எரியாடி ஏகம்பம் என்னுதார் மேனி
எரியாடி யேகம்ப மாகும்—எரியாடி
ஈமத் திடுங்காடு தேரும் இறைபணிப்ப
ஈமத் திடுங்காடு தான். 22

தானயன் மால்ஆகி நின்றான் தனித்துலகில்
தானயன் மாலாய தன்மையான்—தானக்
கரைப்படுத்தான் நான்மறையைத் தண்புலித்தோ லாடைக்
கரைப்படுத்தான் றன்பாதஞ் சார். 23

சாராவார் தாழுளரேற் சங்கரன்றன் மேனிமேற்
சாராவார் கங்கை உமைநங்கை—சார்வாய்
அரவமது செஞ்சடைமே லக்கொன்றை ஒற்றி
அரவமது செஞ்சடையின் மேல். 24

மேலாய தேவர் வெருவ எழுநஞ்சம்
மேலாயம் இன்றிவே றுண்பொழுதில்—மேலாய
மங்கை உமைவந் தடுத்திலளே வாணுளும்
மங்கை உமைவந் தடுத்து. 25

அடுத்தபொன் அம்பலமே சார்வும் அதனுள்
அடுத்த திருநட்டம் அஃதே—அடுத்ததிரு
ஆனைக்கா ஆடுவதும் மேல்என்பு பூண்பதுவும்
ஆனைக்கா வான்றன் அமைவு. 26

---

20. கண் திறந்து, கண்டு இறந்து.

22. எரி ஆடியே கம்பம் ஆகும் - தீயில் எரிந்து நடுக்க முறும்.

அமைவும் பிறப்பும் இறப்புமா மற்றுங்
கமைவும் பரமான ஆதி—அமையும்
திருவால வாய்சென்று சேராது மாக்கள்
திருவால வாய்சென்று சேர். 27

சென்றுசெருப் புக்காலாற் செல்ல மலர்நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச்—சென்றுதன்
கண்ணிடந்தன் றப்புங் கருத்தற்குக் காட்டினன்
கண்ணிடந்தன் றப்பாமைப் பார்த்து. 28

பார்த்துப் பரியாதே பால்நீறு பூசாதே
பார்த்துப் பரிந்தங்கம் பூணாதே—பார்த்திட்
டுடையானஞ் சோதாதே ஊனுரைக் கைவிட்
டுடையானஞ் சோதாதார் ஊண். 29

ஊனொன்றும் இல்லை உறக்கில்லை உன்மாலின்
ஊனொன்று பேசவோர் சங்கிழந்தாள்—ஊனொன்றும்
விட்டானே வேள்வி துரந்தானே வெள்ளநீர்
விட்டானே புன்சடைமேல் வேறு. 30

வேறுரைப்பன் கேட்டருளும் வேதம்நான் காறங்கம்
வேறுரைத்த மேனி விரிசடையான்—வேறுரைத்த
பாதத்தாய் பைங்கண் அரவூர்வாய் பாருரும்
பாதத்தாய் என்னும் மலர். 31

மலரணைந்து கொண்டு மகிழ்வாய்உன் பாத
மலரணைந்து மால்நயன மாகும்—மலரணைந்து
மன்சக் கரம்வேண்ட வாளா அளித்தனையால்
வன்சக்க ரம்பரனே வாய்த்து. 32

வாய்த்த அடியார் வணங்க மலரோன்மால்
வாய்த்த அடியுமுடி யுங்காணார்—வாய்த்த
சலந்தரனைக் கொன்றிட்டுச் சங்கரனார் என்றே
சலந்தரனாய் நின்றவா தாம். 33

---

29. அங்கம் - எலும்பு. உடையான் அஞ்சு ஓதாதே - இறைவனுடைய பஞ்சாட்சரத்தைச் செபிக்காமல்.
32. மால் நயனம் ஆகும் மலரை அணைந்து.

தாமென்ன நாமென்ன வேறில்லை தத்துறவில்
தாமென்னை வேறாத் தனித்திருந்து—தாமென்
கழிப்பாலை சேருங் கறைமிடற்றார் என்னை
கழிப்பாலை சேருங் கடன். 34

கடனாகக் கைதொழுமின் கைதொழவல் லீரேற்
கடனாகைக் காரோணம் மேயார்—கடநாகம்
மாளஉரித் தாடுவார் நம்மேலை வல்வினைநோய்
மாளஇரித் தாடுமால் வந்து. 35

வந்தார் வளைகழல்வார் வாடித் துகில்சோர்வார்
வந்தார் முலைமெலிவார் வார்குழல்கள்—வந்தார்
சுரிதருவா ரைங்கொன்றைத் தாராரைக் கண்டு
சுரிதருவா ரைங்கொன்றைத் தார். 36

தாரான் எனினுஞ் சடைமுடியான் சங்கரனந்
தாரான் தசமுகனைத் தோள்நெரித்துத்—தாராய
நாளுங் கொடுத்தந்த வானவர்கள் தம்முன்னே
வாளுங் கொடுத்தான் மதித்து. 37

மதியாருஞ் செஞ்சடையான் வண்கொன்றைத் தாரான்
மதியாரு மாலுடைய பாகன்—மதியாரும்
அண்ணா மலைசேரார் ஆரோடுங் கூடாகி
அண்ணா மலைசேர்வ ரால். 38

ஆல நிழற்கீழ் இருப்பதுவாம் ஆய்வதறம்
ஆலம் அமுதுசெய்வ தாடுவதீ—ஆலந்
துறையுடையான் ஆனை உரியுடையான் சோற்றுத்
துறையுடையான் சோராத சொல்லு. 39

---

35. கடன் ஆக - கடமையாக எண்ணி. கட நாகம் - மத யானையை.

37. நாளும் கொடுத்து - முக்கோடி வாழ்நாளை அளித்து.

39. இருப்பதுவாம் ஆலநிழற்கீழ். அமுது செய்வது ஆலம்.

சொல்லாயம் இன்றித் தொலைவின்றித் தூநெறிக்கட்
சொல்லாய்ப் பெருத்த சுடரொளியாய்ச்—சொல்லாய
வீரட்டத் தானை விரவார் புரம்அட்ட
வீரட்டத் தானை விரை. 40

விரையாரு மத்தம் விரகாகச் சூடி
விரையாரும் வெள்ளெலும்பு பூண்டு—விரையாரும்
நஞ்சுண்ட வாதி நலங்கழல்கள் சேராதார்
நஞ்சுண்ட வாதி நலம். 41

நலம்பாயு மாக்க நலங்கொண்டல் என்றன்
நலம்பாயு மானன் குருவ—நலம்பாய்செய்
தார்த்தார்க்கு மண்ணு மலையா னிடங்........
தார்த்தார்க்கு மண்ணு மலை. 42

மலையார் கலையோட வாரோடக் கொங்கை
மலையார் கலைபோய்மால் ஆனாள்—மலையார்
கலையுடையான் வானின் மதியுடையான் காவாத்
தலையுடையான் என்றுதொழு தாள். 43

தாளார் கமல மலரோடு தண்மலரும்
தாளார வேசொரிந்து தாமிருந்து—தாளார்
சிராமலையாய் சேமத் துணையேயென் றேத்தும்
சிராமலையார் சேமத் துளார். 44

ஆர்துணையா ஆங்கிருப்ப தம்பலவா அஞ்சலுமை
ஆர்துணையா ஆனை உரிமூடி—ஆர்துணையாம்
பூவணத்தாய் பூதப் படையாளி பொங்கொளியாய்
பூவணத்தா யென்னின் புகல். 45

புகலூ ருடையாய் பொறிஅரவம் பூணி
புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே—புகலூராய்
வெண்காடா வேலை விடமுண்டாய் வெள்ளேற்றாய்
வெண்காடா என்பேனோ நான். 46

---

41. மத்தம் - ஊமத்த மலரை.

நானுடைய மாடேஎன் ஞானச் சுடர்விளக்கே
நானுடைய குன்றமே நான்மறையாய்—நானுடைய
காடுடையாய் காலங்கள் ஆனாய் கனலாடும்
காடுடையாய் காலமா னாய். 47

ஆயன் றமரர் அழியா வகைசெய்தாய்
ஆயன் றமரர் அழியாமை—ஆயன்
திருத்தினான் செங்கண் விடையூர்வான் மேனி
திருத்தினான் சேதுக் கரை. 48

கரையேனு மாதர் கருவான சேதுக்
கரையேனு மாது கரையாம்—கரையேனும்
கோளிலியெம் மாதி குறிபரவ வல்லையே
கோளிலியெம் மாதி குறி. 49

குறியார் மணிமிடற்றுக் கோலஞ்சேர் ஞானக்
குறியாகி நின்ற குணமே—குறியாகும்
ஆலங்கா டெய்தா அடைவேன்மேல் ஆடரவம்
ஆலங்கா டெய்தா அடை. 50

அடையும் படைமழுவுஞ் சூலமிலம் பங்கி
அடையும் இறப்பறுப்ப தானால்—அடைய
மறைக்காடு சேரும் மனாளரென்பார் சேரா
மறைக்காடு சேர்மக்கள் தாம். 51

தாமேய ஆறு சமய முதற்பரமும்
தாமேய வாறு தழைக்கின்றார்—தாமேல்
தழலுருவர் சங்கரவர் பொங்கரவம் பூண்ட
தழலுருவர் சங்கரர்என் பார். 52

பார்மேவு கின்ற பலருருவர் பண்டரங்கர்
பார்மேவு கின்ற படுதலையர்—பார்மேல்
வலஞ்சுழியைச் சேர்வர் மலரடிகள் சேர்வார்
வலஞ்சுழியைச் சேர்வாகு வார். 53

---

47. மாடே - செல்வமே.
52. தாமே அவ்வாறு தழைக்கின்றார்.

வாரணிந்த கொங்கை உமையாள் மணவாளா
வாரணிந்த கொன்றை மலர்சூடி—வாரணிந்த
செஞ்சடையாய் சீர்கொள் சிவலோகா சேயொளியாய்
செஞ்சடையாய் செல்ல நினை. 54

நினைமால்கொண் டோடி நெறியான தேடி
நினைமாலே நெஞ்சம் நினைய—நினைமால்கொண்
டேர்தேடி யும்பாரால் அம்பரமா காளாவென்
றூர்தேடி என்றுரைப்பான் ஊர். 55

ஊர்வதுவும் ஆனே றுடைதலையில் உண்பதுவும்
ஊர்வதுவு மெல்லுரக மூடுவர்கோல்—ஊர்வதுவும்
ஏகம்ப மென்றும் இடைமருதை நேசித்தார்க்
கேகம்ப மாய்நின்ற ஏறு. 56

ஏறேய வாழ்முதலே ஏகம்பா எம்பெருமான்
ஏறேறி யூரும் எரியாடி—ஏறேய
ஆதிவிடங் காகாறை அண்டத்தாய் அம்மானே
ஆதிவிடங் காவுமைநன் மாட்டு. 57

மாட்டும் பொருளை உருவை வருகாலம்
வாட்டும் பொருளாய் மறையானை—வாட்டும்
உருவானைச் சோதி உமைபங்கா பங்காய்
உருவான சோதி உரை. 58

உரையா இருப்பதுவும் உன்னையே ஊனின்
உரையாய் உயிராய்ப் பொலிந்தாய்—உரையாய
அம்பொனே சோதி அணியாரூர் சேர்கின்ற
அம்பொனே சோதியே ஆய்ந்து. 59

ஆய்ந்துன்றன் பாதம் அடைய வரும்என்மேல்
ஆய்ந்தென்றன் பாச மலமறுத்—தாய்ந்துன்றன்
பாலணையச் செய்த பரமா பரமேட்டி
பாலணையச் செய்த பரம். 60

---

56. நேசித்தார்க்கே கம்பமாம்; கம்பம் - பற்றுக்கோடாகும் தூண்.

பரமாய பைங்கட் சிரமேயப் பூண்ட
பரமாய பைங்கட் சிரமே—பரமாய
ஆறடைந்த செஞ்சடையாய் ஐந்தடைந்த மேனியாய்
ஆறடைந்த செஞ்சடையாய் அன்பு. 61

அன்பே உடைய அரனே அணையாத
அன்பே உடைய அனலாடி—அன்பே
கழுமலத்து ளாடுங் கரியுரிபோர்த் தானே
கழுமலத்து ளாடுங் கரி. 62

கரியார்தாஞ் சேருங் கலைமறிகைக் கொண்டே
கரியார்தாஞ் சேருங் கவாலி—கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான்நாமம்
நின்ற கழிப்பாலை சேர். 63

சேரும் பிரான்நாமஞ் சிந்திக்க வல்லீரேற்
சேரும் பிரான்நாமஞ் சிந்திக்கச்—சேரும்
மலையான் மகளை மகிழ்ந்தாரூர் நின்றான்
மலையான் மகளை மகிழ்ந்து. 64

மகிழ்ந்தன்பர் மாகாளஞ் செய்யு மகளிர்
மகிழ்ந்தம் பரமாகி நின்றார்—மகிழ்ந்தங்கம்
ஒன்றாகி நின்ற உமைபங்கன் ஒற்றியூர்
ஒன்றாகி நின்ற உமை. 65

உமைகங்கை என்றிருவர் உற்ற உணர்வும்
உமைகங்கை என்றிருவர் காணார்—உமைகங்கை
கார்மிடற்றம் மேனிக் கதிர்முடியான் கண்மூன்று
கார்மிடற்றம் மேனிக் கினி. 66

இனியவா காணீர்கள் இப்பிறவி எல்லாம்
இனியவா ஆகாமை யற்றும்—இனியவா
றாக்கை பலசெய்த ஆமாத்தூர் அம்மானை
ஆக்கை பலசெய்த அன்று. 67

---

61. ஐந்து - பஞ்ச கவ்வியம்.
62. கழுமலம் — சீகாழி.

அன்றமரர் உய்ய அமிர்தம் அவர்க்கருளி
அன்றவுணர் வீட அருள்செய்தோன்—அன்றவுணர்
சேராமல் நின்ற அடிகள் அடியார்க்குச்
சேராமல் நின்ற சிவம். 68

சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்சேர்வ தாக்கும்
சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்ணும்—சிவனந்தம்
சேரும் உருவுடையீர் செங்காட் டங்குடிமேற்
சேரும் உருவுடையீர் செல். 69

செல்லு மளவுஞ் சிதையாமற் சிந்திமின்
செல்லு மளவுஞ் சிவனும்மைச்—செல்லும்
திருமீச்சூர்க் கேறவே செங்கணே றாரும்
திருமீச்சூர் ஈசன் திறம். 70

திறமென்னுஞ் சிந்தை தெரிந்தும்மைக் காணும்
திறமென்னுஞ் சிந்தைக்கு மாமே—திறமென்னும்
சித்தத்தீர் செல்வத் திருக்கடவூர் சேர்கின்ற
சித்தத்தீ ரேசெல்லும் நீர். 71

நீரே எருதேறும் நின்மலனார் ஆவீரும்
நீரே நெடுவானில் நின்றீரும்—நீரே
நெருப்பாய தோற்றத்து நீளாறும் பூண்டு
நெருப்பாய தோற்றம் நிலத்து. 72

நிலத்திவ் வுலகனைத்தும் நீரேயாய் நின்றீர்
நிலத்திவ் வுலகனைத்தும் நீரே—நிலத்தீரக்
கானப்பே ரீர்கங்கை சூடினீர் கங்காளீர்
கானப்பே ரீர்கங்கை யீர். 73

ஈர முடைய இளமதியஞ் சூடினீர்
ஈர முடைய சடையினீர்—ஈர
வருங்காலம் ஆயினீர் இவ்வுலகம் எல்லாம்
வருங்கால மாயினீர் வாழ்வு. 74

வாழ்வார் மலரணைவார் வந்த வருநாகம்
வாழ்வார் மலரணைவார் வண்கங்கை—வாழ்வாய
தீயாட வாளுள்வான் வான்கழல்கள் சேராதார்
தீயாட வாளுரு மாறு. 75

மாறாத ஆனையின்தோல் போர்த்து வளர்சடைமேல்
மாறாத நீருடைய மாகாளர்—மாறா
விடுங்கையர் சேரும் எழிலவாய் முன்னே
விடுங்கையர் சேர்வாக வீ. 76

ஈயும் பொருளே எமக்குச் சிவலோகம்
ஈயும் பொருளே இடுகாட்டி—னீயும்
படநாகம் பூணும் பரலோகி ரென்னீர்
படநாகம் பூணும் படி. 77

படியேறும் பார்த்துப் பரத்தோடுங் கூட்டிப்
படியேறும் பார்த்துப் பரனைப்—படியேனைப்
பாருடையாய் பைங்கண் புலியதளாய் பால்நீற்றாய்
பாருடையாய் யானுன் பரம். 78

பரமாய விட்டுநின் பாதம் பணிந்தேன்
பரமாய ஆதிப் பரனே—பரமாய
நீதியே நின்மலனே நேரார் புரமூன்றும்
நீதியே செய்தாய் நினை. 79

நினைஅடைந்தேன் சித்தம் நிலையாகும் வண்ணம்
நினைஅடைந்தேன் சித்த நிமலா—நினைஅடைந்தேன்
கண்டத்தாய் காளத்தி யானே கனலாரும்
கண்டத்தாய் காவாலி கா. 80

காவார் பொழிற்கயிலை ஆதீ கருவேளம்
காவாய்ப் பொலிந்த கடுவெளியே—காவாய
ஏறுடையாய் என்னை இடைமருதி லேயென்றும்
ஏறுடையாய் நீயே கரி. 81

---

78. பரம் – பாரம்
79. பரம் ஆய விட்டு – வினைச்சுமைகளாகியவற்றை விட்டு.

கரியானும் நான்முகனு மாய்நின்ற கண்ணன்
கரியாருங் கூற்றங் கனியே—கரியாரும்
காடுடையாய் காலங்க ளானாய் கனலாடும்
காடுடையாய் காலமா னாய். 82

ஆனாய னாய அடலேறே ஆரூர்க்கோன்
ஆனாய னாஅமுத மேஆனாய்—ஆனாய்
கவரெலும்போ டேந்தி கதநாகம் பூணி
கவரெலும்பு தார்கை வளை. 83

வளைகொண்டாய் என்னை மடவார்கண் முன்னே
வளைகொண்டாய் மாசற்ற சோதி—வளைகொண்டாய்
மாற்றார் கதுவ மதிலாரூர் சேர்கின்ற
மாற்றாரூர் கின்ற மயல். 84

மயலான தீரும் மருந்தாகும் மற்று
மயலானா ராரூர் மயரார்—மயலான
கண்ணியர்தம் பாகா கனியே கடிக்கொன்றைக்
கண்ணியலான் பாதமே கல். 85

கலைமான்கை ஏனப்பூண் காண்கயிலை மானின்
கலைமான் கறைகாண் கவாலி—கலைமானே
ஆடுவதும் பாடுவதுங் கால்ணைப்பொன் னம்பலத்துள்
ஆடுவது மாடா னரன். 86

அரனே அணியாரூர் மூலட்டத் தானே
அரனே அடைந்தார்தம் பாவம்—அரனே
அயனார்தம் அங்கம் அடையாகக் கொண்டாய்
அயனாக மாக அடை. 87

அடையுந் திசைஈசன் திண்டோள்ஆ காசம்
அடையுந் திருமேனி அண்டம்—அடையும்
திருமுடிகால் பாதாளம் ஆடைகடல் அங்கி
திருமுடிநீர் கண்கள்சுடர் மூன்று. 88

---

85. மயரார் – மயங்கார்.
88. திசைகளே தோள், ஆகாசமே மேனி, அண்டமே திருமுடி, பாதாளமே திருவடி, கடலே ஆடை.

மூன்றரணம் எய்தானே மூலத் தனிச்சுடரே
மூன்றரண மாய்நின்ற முக்கணனே—மூன்றரண
மாய்நின்ற சோதி அணியாரூர் சேர்கின்ற
வாய்நின்ற சோதி அறம். 89

அறமாய்வ ரேனும் அடுகாடு சேர
அறமாறு ரங்கம் அணிவர்—அறமாய
வல்வினைகள் வாரா எனுமருக லாரென்ன
வல்வினைகள் வாராத வாறு. 90

ஆறுடையர் நஞ்சுடையர் ஆடும் அரவுடையர்
ஆறுடையர் காலம் அமைவுடையர்—ஆறுடைய
சித்தத்தீர் செல்வத் திருக்கயிலை சேர்கின்ற
சித்தத்தீர் எல்லார்க்குஞ் சேர்வு. 91

சேர்வும் உடையர் செழுங்கொன்றைத் தாரார்நஞ்
சேர்வு முடையர் அரவுடையர்—சேரும்
திருச்சாய்க்காட் டாடுவரேற் செய்தக்க என்றும்
திருச்சாய்க்காட் டேநின் உருவு. 92

உருவு பலகொண் டொருவ ராய் நின்றார்
உருவு பலவாம் ஒருவர்—உருவு
பலவல்ல ஒன்றல்ல பைஞ்ஞீலி மேயார்
பலவல்ல ஒன்றாப் பகர். 93

பகரப் பரியானை மேலூரா தானைப்
பகரப் பரிசடைமேல் வைத்த—பகரப்
பரியானைச் சேருலகம் பல்லுயிர்கள் எல்லாம்
பரியானைச் சேருலகம் பண். 94

பண்ணுகப் பாடிப் பலிகொண்டாய் பாரேழும்
பண்ணுகச் செய்த பரஞ்சோதீ—பண்ணு
எருதேறி யூர்வாய் எழில்வஞ்சி எங்கள்
எருதேறி யூர்வாய் இடம். 95

---

95. **பண்ணு** - அலங்காரம் செய்து.

இடமாய எவ்வுயிர்க்கும் ஏகம்பம் மேயார்
இடமானார்க் கீந்த இறைவர்—இடமாய
ஈங்கோய் மலையார் எழிலார் சிராமலையார்
ஈங்கோய் மலையார் எமை. 96

எமையாள வந்தார் இடரான தீர
எமையாளும் எம்மை இமையோர்—எமையாளும்
வீதிவிடங் கர்விடம துண்டகண் டர்விடையூர்
வீதிவிடங் கர்விடையூர் தி. 97

தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே—தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராய்என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர். 98

சேர்கின்ற சிந்தை சிதையாமற் செய்வானே
சேர்கின்ற சிந்தை சிதையாமற்—சேர்கின்றோம்
ஒற்றியூ ரானே உறவாரும் இல்லைஇனி
ஒற்றியூ ரானே உறும். 99

உறுமுந்த முன்னே உடையாமல் இன்னம்
உறுமுந்த முன்னே யுடையாமல்—உறுமுந்தம்
ஓரைந் துரைத்துற் றுணர்வோ டிருந்தொன்றை
ஓரைந் துரைக்கவல்லார்க் கொன்று. 100

ஒன்றைப் பரணர் உரைத்தஅந் தாதிபல
ஒன்றைப் பகரில் ஒருகோடி—ஒன்றைத்
தவிரா துரைப்பார் தளரார் உலகில்
தவிரார் சிவலோகந் தான்.

திருச்சிற்றம்பலம்

24

இளம்பெருமான் அடிகள்
அருளிச் செய்த
சிவபெருமான் திருமும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(அகவல்)

முதல்வன் வகுத்த மதலை மாடத்
திடவரை ஊன்றிய கடவுட் பாண்டிற்
பள்ளிச் செம்புய லுள்விழு தறீஇப்
புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர்
எறிவளி எடுப்பினுஞ் சிறுநடுக் குறுநின்
அடிநிழல் அளியவோ வைத்த முடிமிசை
இலங்குவளைத் தனிப்போது விரித்த
அலங்குகதிர் ஒலியல்நீ அணிந்ததென் மாறே. 1

(வெண்பா)

மாறு தடுத்த மனைக்கங்கை திங்களின்
கீறு தடுப்பக் கிடக்குமே—நீறடுத்த
செந்தாழ் வரையின் திரள்போல் திருமேனி
எந்தாய்நின் சென்னி யிடை. 2

(கட்டளைக்கலித்துறை)

இடைதரில் யாமொன் றுணர்த்துவ
துண்டிடை யோர்சிமையத்
தடைதரு மூரிமந் தாரம்
விராய்நதி வெண்ணிலவின்
தொடைதரு துண்டங் கிடக்கினுந்
தொண்டர் ஒதுக்கியிட்ட
புடைதரு புல்லெருக் குஞ்செல்லு
மோநின் புரிசடைக்கே. 3

1. அடி, 1. மதலை – தூண்.

(அகவல்)

சடையே, நீரகந் ததும்பி நெருப்புக் கலிக்குமே
மிடறே, நஞ்சகந் துவன்றி அமிர்து பிலிற்றுமே
வடிவே, முளிஎரி கவைஇத் தளிர்தயங் கும்மே
அடியே, மடங்கல்மதஞ் சீறி மலர்பழிக் கும்மே
அஃதான், றினையஎன் றறிகிலம் யாமே முனைதவத்
தலைமூன்று வகுத்த தனித்தாட்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே. 4

(வெண்பா)

வேலை முகடும் விசும்பகடுங் கைகலந்த
காலைநீர் எங்கே கரந்தனையால்—மாலைப்
பிறைக்கீற்று கண்ணுதலா பெண்பாகா ஐயோ
இறைக்கூற்ய் எங்கட் கிது. 5

(கட்டளைக்கலித்துறை)

இதுநீர் ஒழிமின் இடைதந்
துமைஇமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியத
ளேஉடை பொங்குகங்கை
முதுநீர் கொழித்த இளமணல்
முன்றில்மென் றோட்டதிங்கட்
செதுநீர் ததும்பத் திவளஞ்செய்
செஞ்சடைத் தீவண்ணரே. 6

(அகவல்)

வண்ணம், ஐஞ்சுதலை கவைஇப் பவள மால்வரை
மஞ்சுமிசை விலகிப் பகல்செகுக் கும்மே

---

4. அடி, 1. கலிக்கும் - கொழுந்து விடும்.
6. புதுமணம் செய்த காலத்தும் புலித்தோலையே உடையாகக் கொண்டீர்; இதனை நீங்கும்.

என்னைப், பழமுடைச் சிறுகலத் திடுபலி பெய்வோள்
நெஞ்சகம் பிணிக்கும் வஞ்சமோ உடைத்தே
அஃதான்று, முளையெயிற்றுக் குருளை இன்றுயில் எடுப்ப
நடுங்குதலைச் சிறுநிலா விதிர்க்குங் கொடும்பிறைத்
தேமுறு முதிர்சடை இறைவ
மாமுறு கொள்கை மாயமோ உடைத்தே. 7

(வெண்பா)

உடைதலையின் கோவை ஒருவடமோ கொங்கை
புடைமலிந்த வெள்ளெருக்கம் போதோ—சடைமுடிமேல்
முன்னநாள் பூத்த முகிழ்நிலவோ முக்கணு
இன்னநாள் கண்ட திவள். 8

(கட்டளைக்கலித்துறை)

இவளப் பனிமால் இமையத்
தணங்குகற் றைச்சடைமேல்
அவளப்புத் தேளிர் உலகிற்
கரசி அதுகொண்டென்னை
எவளுக்கு நீநல்ல தியாரைமுன்
எய்திற்றெற் றேயிதுகாண்
தவளப் பொடிச்செக்கர் மேனிமுக்
கண்ணுடைச் சங்கரனே. 9

(அகவல்)

கரதலம் நுழைத்த மரகதக் கபாடத்
தயில்வழங்கு குடுமிக் கயிலை நாடநின்
அணங்குதுயில் எடுப்பிற் பிணங்குநிலாப் பிணையல்
யாமே கண்டதும் இலமே தாமா
மூவா எஃகமும் முரணும்
ஓவாது பயிற்றும் உலகம்மால் உளதே. 10

---

7. அடி, 3. பழ முடை - பழைய புலால் நாற்றத்தை உடைய. சிறுகலத்து - கபாலமாகிய சிறிய பிச்சைப் பாத்திரத்தில்.

9. உமை, கங்கை என்னும் இருவருள் யாரை முதலில் அடைந்தாய்.

(வெண்பா)

உளரொளிய கங்கை ஒலிதிரைகள் மோத
வளரொளிதேய்ந் துள்வளர்ந்த தொக்கும்—கிளரொளிய
பேதைக் கருங்கட் பிணாவின் மணாளனார்
கோதைப் பிறையின் கொழுந்து. 11

(கட்டளைக்கலித்துறை)

கொழுந்திரள் தெண்ணில வஞ்சிநின்
கூரிருள் வார்பளிங்கின்
செழுந்திரட் குன்றகஞ் சென்றடைந்
தாலொக்குந் தெவ்வர்நெஞ்சத்
தழுந்திரட் கண்டத் தவளப்
பொடிச்செக்கர் மேனிநின்றோர்
எழுந்திரட் சோதிப் பிழம்பும்என்
உள்ளத் திடங்கொண்டவே. 12

(அகவல்)

கொண்டற் கார்எயிற்றுச் செம்மருப் பிறலின்
புண்படு சிமையத்துப் புலவுநாறு குடுமி
வரையோன் மருக புனலாள் கொழுந
இளையோன் தாதை முதுகாட்டுப் பொருநநின்
நீறுபடு பொலங்கழல் பரவ
வேறுங்கு கவர்க்குமோ வீடுதரு நெறியே. 13

(வெண்பா)

நெறிவிரவு கொன்றை நெடும்படற்கீழ்க் கங்கை
எறிதிரைகள் ஈர்த்தெற்ற ஏறிப்—பொறிபிதிர
ஈற்றராக் கண்படுக்கும் இண்டைச் சடைச்செங்கண்
ஏற்றரால் தீரும் இடர். 14

---

11. பிணா - பெண். பிறைக்கொழுந்து கங்கையின் அலைகள் மோத உள்ளே வளைந்ததுபோல இருக்கும்.

13. அடி, 2. சிமையம் - உச்சி. 3. வரையோன் – இமவான். புனலாள் – கங்கை. 4. இளையோன் – முருகன். முதுகாடு - மயானம்.

14. இண்டை – தலையில் அணியும் மாலை.

(கட்டளைக்கலித்துறை)

இடர்தரு தீவினைக் கெள்ளிநை
வார்க்குநின் ஈரடியின்
புடைதரு தாமரைப் போதுகொ
லாஞ்சரண் போழுருவிப்
படர்தரு கொம்பைப் பவளவண்
ணாபரு மாதைமுயங்
கடைதரு செஞ்சுடர்க் கற்றையொக்
குஞ்சடை அந்தணனே. 15

(அகவல்)

அந்த ணாளர் செந்தொடை ஒழுக்கமும்
அடலோர் பயிற்றும்நின் சுடர்மொழி ஆண்மையும்
அவுணர் நன்னாட் டிறைவன் ஆகிக்
குறுநெடுந் தானை பரப்பித் தறுகண்
மால்விடை அடரத் தாள்நிமிர்ந் துக்க
காய்சின அரவுநாண் பற்றி நீயோர்
நெடுவரை நெளிய வாங்கிச்
சுடுகணை எரிநிமிர்த்துத் துரந்த ஞான்றே. 16

(வெண்பா)

ஞான்ற புனமாலை தோளலைப்ப நாண்மதியம்
ஈன்ற நிலவோடும் இவ்வருவான்—மூன்றியங்கு
மூதூர் வியன்மாடம் முன்னொருகால் துன்னருந்தீ
மீதூரக் கண்சிவந்த வேந்து. 17

(கட்டளைக்கலித்துறை)

வேந்துக்க மாக்கடற் சூரன்முன்
னாள்பட வென்றிகொண்ட
சேந்தற்குத் தாதைஇவ் வையம்
அளந்ததெய் வத்திகிரி

---

17. மூன்று இயங்கு மூதூர் - மூன்றாகிய பறந்து திரிந்த பழைய புரங்கள்; திரிபுரங்கள்.

18. சேந்தற்கு - முருகவேளுக்கு. ஏந்தல் - திருமால்.

ஏந்தற்கு மைத்துனத் தோழன்இன்
தேன்மொழி வள்ளியென்னும்
கூந்தற் கொடிச்சிதன் மாமன்வெம்
மால்விடைக் கொற்றவனே. 18

(அகவல்)

கொற்றத் துப்பில் ஒற்றை ஈன்ற
துணங்கையஞ் செல்வத் தணங்குதரு முதுகாட்டுப்
பேய்முதிர் ஆயத்துப் பிணவின் கொழுநின்
நேர்கழல் கவைஇ இலங்கிதழ்த் தாமம்
தவழ்தரு புனல்தலைப் படுநர்
அவல மாக்கடல் அழுந்தலோ இலரே. 19

(வெண்பா)

இலர்கொலாம் என்றிளைஞர் ஏசப் பலிக்கென்
றுலகெலாஞ் சென்றுழல்வ ரேனும்—மலர்குலாம்
திங்கட் குறுந்தெரியல் தேவர்க்காட் செய்வதே
எங்கட் குறுந்தெரியின் ஈண்டு. 20

(கட்டளைக்கலித்துறை)

ஈண்டுமுற் றத்தொற்றை மால்விடை
ஏறியை அம்முனைநாள்
வேண்டிமுற் றத்திரிந் தெங்கும்
பெறுது வெறுங்கைவந்தார்
பூண்டஒற் றைச்செங்கண் ஆரமும்
கற்றைச் சடைப்புனலும்
நீண்டஒற் றைப்பிறைக் கீளும்எப்
போதும்என் நெஞ்சத்தவே. 21

(அகவல்)

நெஞ்சிற் கொண்ட வஞ்சமோ உடைத்தே
மடவோர் விரும்புநின் விளையாட் டியல்போ

---

19. பிணவு – துர்க்கை. கவைஇ – கட்டி.
20. திங்கள் குறுந்தெரியல் – பிறையாகிய கண்ணியை அணிந்த.

மருள்புரி கொள்கையின் தெருளா மையோ
யாதா கியதோ எந்தை நீதியென்
றுடைதலை நெடுநிலா வெறியல்
கடைதலென் றருளிச் சூடிய பொருளே. 22

(வெண்பா)

பொருளாக யான்இரந்தாற் புல்லெருக்கின் போதும்
அருளான்மற் றல்லாதார் வேண்டின்—தெருளாத
பான்மரு மான்மறிக்கைப் பைங்கட் பகட்டுரியான்
தான்மருன் பைங்கொன்றைத் தார். 23

(கட்டளைக்கலித்துறை)

தாரிளங் கொன்றைநல் ஏறு
கடாவித் தலைமைமிக்க
ஏரிள மென்முலைப் பொன்மலை
யாட்டிக்கெற் றேஇவனோர்
பேரிளங் கொங்கைப் பிணாவொடுங்
கூட்டிப் பிறைக்கொழுந்தின்
ஓரிளந் துண்டஞ் சுமந்தையம்
வேண்டி உழிதருமே. 24

(அகவல்)

உழிதரல் மடிந்து கழுதுகண் படுக்கும்
இடருறு முதுகாட்டுச் சீரியல் பெரும
புகர்முகத் துளைக்கை உரவோன் தாதை
நெடியோன் பாகநின் சுடர்மொழி ஆண்மை
பயிற்று நாவலர்க்
கிடர்தரு தீவினை கெடுத்தலோ எளிதே. 25

---

23. பகடு உரியான் – யானைத்தோலைப் போர்த்தவன்.
24. பொன்மலையாட்டி – பார்வதிதேவி.
25. உழிதரல் மடிந்து – திரிவதை விட்டு. கழுது - பேய். உரவோன் – விநாயகர். நெடியோன் பாக – திருமாலை இடப் பாகத்தில் உடையவனே.

(வெண்பா)

எளியமென் றெள்கி இகழாது நாளும்
அளியம்ஆட் செய்தாலும் ஐயோ—தெளிவரிய
வள்கயிலை நீள்பொருப்ப வான்தோய் மதிச்சடையாய்
கொள்கையிலை எம்மாற் குறை. 26

(கட்டளைக்கலித்துறை)

குறையாப் பலிஇவை கொள்களென்
கோல்வளை யுங்கலையும்
திறையாக்கொண் டாயினிச் செய்வதென்
தெய்வக்கங் கைப்புனலில்
பொறையாய் ஒருகடல் நஞ்சுண்ட
கண்ட பொடியணிந்த
இறைவா இடுபிணக் காடசெம்
மேனிஎம் வேதியனே. 27

(அகவல்)

வேதியர் பெரும விண்ணோர் தலைவ
ஆதி நான்முகத் தண்ட வாண
செக்கர் நான்மறைப் புத்தேள் நாட
காய்சின மழவிடைப் பாகநின்
மூவிலை நெடுவேல் பாடுதும்
நாவலம் பெருமை நல்குவோய் எனவே. 28

(வெண்பா)

எனவே உலகெலாம் என்றிளைஞர் ஏச
நனவே பலிதிரிதி நாளும்—சினவேங்கைக்
கார்க்கயிலை நாட களிற்றீ ருரியலாற்
போர்க்கையிலை பேசல்நீ பொய். 29

---

28. மூவிலை நெடுவேல் – திரிசூலம். நாவலம் பெருமை – நாவன்மையாகிய சிறப்பு

29. போர்க்கை இலை - போர்வையாகப் போர்த்துக்கொள்ளுதல் இல்லை.

(கட்டளைக்கலித்துறை)

பொய்நீர் உரைசெய்தீர் பொய்யோம்
    பலியெனப் போனபின்னை
இந்நீள் கடைக்கென்று வந்தறி
    யீரினிச் செய்வதென்னே
செந்நீர் வளர்சடைத் திங்கட்
    பிளவொடு கங்கைவைத்த
முந்நீர்ப் பவளத் திரட்செக்கர்
    ஒக்கும் முதலவனே. 30

திருச்சிற்றம்பலம்

25

அதிராவடிகள்

அருளிச்செய்த

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(அகவல்)

ஒருநெடுங் கங்கை இருகுறும் பைம்புகர்
மும்முகச் செந்நுதி நாலிணர் வெண்ணிணக்
குடற்புலவு கமழும் அடற்கழுப் படையவன்
மதலை மாமதந் துவன்றிய கதனுடைக்
கடதடக் கபோலத் தோரிட மருப்பிற்
கரண்டக உதரத்து முரண்டரு குழவிதன்
சேவடி யுகளம் அல்ல
தியாவையும் இலமினி இருநிலத் திடையே. 1

---

1. கழுப்படை - சூலாயுதம். கரண்டக உதரத்து - குடலை போன்ற வயிற்றையுடைய. சேவடி யுகளம் - இரண்டு திருவடிகள்.

(வெண்பா)

நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும்—கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி. 2

(கட்டளைக்கலித்துறை)

மணிசிந்து கங்கைதன் மானக்
குருளையை வாள்அரக்கர்
அணிசிந்த வென்றஎம் ஐயர்க்
கிளங்கன்றை அங்கரும்பின்
துணிசிந்த வாய்ப்பெய்த போதகத்
தைத்தொடர்ந் தோர்பிறவிப்
பிணிசிந்து கார்முளை யைப்பிடித்
தோர்க்கில்லை பேதுறவே. 3

(அகவல்)

பேதுறு தகையம் அல்லது தீதுறச்
செக்கர்க் குஞ்சிக் கருநிறத் தொக்கல் நாப்பண்
புக்கவண் இரும்பொறித் தடக்கையும்
முரணிய பெருந்தோட்
கொட்ட நாவி தேவிதன்
மட்டுகு தெரியல் அடிமணந் தனமே. 4

(வெண்பா)

மேய கருமிடற்றர் வெள்ளெயிற்றர் திண்சேனை
ஓய மணியூசல் ஆடின்றே—பாய
மழைசெவிக்காற் றுந்திய வாளமர்க்கண் எந்தை
தழைசெவிக்காற் றுந்தத் தளர்ந்து. 5

---

2. கட தடத்த மாமாரி - மதச்சுவட்டிலிருந்து பெருகும் மதமழை.

4. பேதுறு தகையம் - மயங்கும் இயல்பையுடையேம்.

(கட்டளைக்கலித்துறை)

உந்தத் தளரா வளைத்தனம்
முன்னம்மின் ஓடைநெற்றிச்
சந்தத் தளரா ஒருதனித்
தெவ்வர்தந் தாளிரியூர்
விந்தத் தளரா மருங்கிற்
கிளிபெற்ற வேழக்கன்றின்
மந்தத் தளரா மலர்ச்சர
ணங்கள் வழுத்துமின்னே. 6

(அகவல்)

மின்னெடுங் கொண்ட லங்கெடு முழக்கத்
தோவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாமிக வழுத்துவ தெவனோ அவனேற்
பிறந்ததிவ் வுலகின் பெருமூ தாதை
உரந்தரு சிரமரிந் தவற்கே வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச் செல்வன் மகள்மகன் மொழியே. 7

(வெண்பா)

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே—செழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு. 8

(கட்டளைக்கலித்துறை)

அன்பு தவச்சுற்று காரழல்
கொண்டெயில் மூன்றெரிய
வன்புத வந்துந்தை மாட்டுநின்
றுன்மதஞ் சூழ்மருப்பிற்

---

8. முந்நயனத்து - மூன்று கண்களையுடைய.

கன்பு தவக்கரத் தாளமிட்
டோடிக் கடுநடையிட்
டின்பு தவச்சென்று நீயன்று
காத்த தியம்புகவே. 9

(அகவல்)

கவவுமணிக் கேடகக் கங்கணக் கரவணு
அறைகழல் அவுணரொடு பொருத ஞான்றுநீள்
புழைக்கரம் உயிர்த்த அழற்பே ரூதை
விரைநனி கீறி மூரி
அஞ்சேறு புலர்த்தும் என்பர்
மஞ்சேறு கயிலை மலைகிழ வோயே. 10

(வெண்பா)

மலைசூழ்ந் திழிகின்ற மாசுணப்பொற் பாறை
தலைசூழ்ந்து தானினைப்ப தொக்கும்—கலைசூழ்
திரண்டகங்கொள் பேரறிவன் திண்வயிற்றி னும்பர்க்
கரண்டகங்கொள் காலுயிர்க்குங் கை. 11

(கட்டளைக்கலித்துறை)

காலது கையது கண்ணது
தீயது கார்மதநீர்
மேலது கீழது நூலது
வெற்பது பொற்பமைதீம்
பாலது தேனது தானது
மென்மொழிப் பாவைமுப்பூண்
வேலது வாளது நான்மறைக்
கீன்ற விடுசுடர்க்கே. 12

---

10. ஊதை - காற்று. ஊதை சேற்றைப் புலர்த்தும்.

(அகவல்)

சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேற்
சேய்மூ வுலகம் வலம்வர வேய
கொன்றையம் படலந் துன்றுசடைக் கிடந்த
ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளற் றீஞ்சுவை அருந்திய
வள்ளற் கிங்கென் மனங்கனிந் திடுமே. 13

(வெண்பா)

இக்கயங்கொள் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்
திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை—புக்கியங்கு
தேனாட வண்டாடச் செங்கீரை ஆடின்றே
வானாடன் பெற்ற வரை. 14

(கட்டளைக்கலித்துறை)

பெற்றமெல் லோதிச் சிலம்பின்
மகள்பெறப் பிச்சுகந்த
மற்றவள் பிச்சன் மயங்கன்முன்
னோன்பின் னிணைமைமிகக்
கற்றவ னையன் புறங்காட்
டிடைநடம் ஆட்டுகந்தோ
செற்றவெண் தந்தத் தவன்நம்மை
ஆட்கொண்டு செய்தனவே. 15

(அகவல்)

செய்தரு பொலம்படை மொய்தரு பரூஉக்
குருளை, வெள்ளெயிறு பொதிந்த வள்ளுகிர்த் திரள்வாய்ப்

---

13. வளாய் - வலம் வந்து.
14. ஆடின்று - ஆடியது.

பெருந்திரட் புழைக்கை
மண்முழை வழங்குந் திண்முரண் ஏற்றின்
பனையடர்ப் பாகன் றனதிணையடி
நெடும்பொற் சரணம் ஏத்த
இடும்பைப் பௌவம் இனிநீங் கலமே. 16

(வெண்பா)

அலங்கல் மணிகனகம் உந்தி அருவி
விலங்கல் மிசைஇழிவ தொக்கும்—பலங்கனிகள்
உண்டளைந்த கோன்மகுடத் தொண்கடுக்கைத் தாதளைந்து
வண்டணைந்து சோரும் மதம். 17

(கட்டளைக்கலித்துறை)

மதந்தந்த மென்மொழி மாமலை
யாட்டி மடங்கல்கொன்ற
மதந்தந்த முக்கண் ணரற்குமுன்
ஈன்றவம் மாமலைபோல்
மதந்தந்த கும்பக் குழவிமந்
தாரப்பொன் னட்டிருந்து
மதந்தந்த செம்மலன் றேவையம்
உய்ய வளர்கின்றதே. 18

(அகவல்)

வளர்தரு கவட்டின் கிளரொளிக் கற்பகப்
பொதும்பர்த் தும்பி ஒழிகின் றேச்சும்
பாரிடைக் குறுநடைத் தோடி ஞாங்கர்
இட்ட மாங்கனி
முழுவதும் விழுங்கிய முளைப்பனைத் தடக்கை
எந்தை அல்லது மற்றி யாவுள
சிந்தை செய்யுந் தேவதை நமக்கே. 19

---

17. கடுக்கைத்தாது - கொன்றைப் பூந்தாது; அதற்குப் பொன்னும் மதத்துக்கு நீலமணியும் உவமை.
18. மடங்கல் - சிங்கத்தை. மந்தாரம் - ஒருவகைக்கற்பகம்.

(வெண்பா)

கேளூற்றி யான்தளர ஒட்டுமே கிம்புரிப்பூண்
வாளூற்ற கேயூர வாளரக்கர்—தோளூற்
றறுத்தெறிந்துகொன்றழித்த அங்கயங்கண் மீண்டே
இறுத்தெறிந்து கொன்றழித்த ஏறு. 20

(கட்டளைக்கலித்துறை)

ஏறு தழீஇயவெம் புத்தேள்
மருகஎங் குந்தவள
நீறு தழீஇயஎண் தோளவன்
செல்வவண் டுண்ணநெக்க
ஆறு தழீஇய கரதலத்
தையநின் றன்னை அல்லால்
வேறு தழீஇத்தொழு மோவணங்
காத வியன்சிரமே. 21

(அகவல்)

சிரமே, விசும்பு போத உயரி இரண்டசும்புபொழி யும்மே
கரமே, வரைத்திரண் முரணிய விரைத்து விழும்மே
புயமே, திசைவிளிம்பு கிழியச் சென்றுசெறிக் கும்மே
அடியே, இடுந்தொறும் இவ்வுல கம்பெய ரும்மே
ஆயினும், அஞ்சுடர்ப் பிழம்பு தழீஇ
நெஞ்சகத் தொடுங்குமோ நெடும்பனைச் சூரே. 22

(வெண்பா)

சூர்தந்த பொற்குவட்டின் சூளிகையின் வானயிர்த்து
வார்தந் தெழுமதியம் மன்னுமே—சீர்தந்த
மாமதலை வான்மதியங் கொம்பு வயிறுதித்த
கோமதலை வாண்மதியங் கொம்பு. 23

24—30..................................

திருச்சிற்றம்பலம்

---

21. **ஏறு தழீஇய எம் புத்தேள்** - திருமால். நெக்க ஆறு என்றது மதநீரை. 22. அசும்பு - துளி.

26

பட்டினத்துப்பிள்ளையார்
அருளிச்செய்த
கோயில் நான்மணிமாலை

திருச்சிற்றம்பலம்

(வெண்பா)

பூமேல் அயன்அறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. 1

(கட்டளைக்கலித்துறை)

குடைகொண்டிவ் வையம் எலாங்குளிர்
வித்தெரி பொற்றிகிரிப்
படைகொண் டிகல்தெறும் பார்த்திவர்
ஆவதிற் பைம்பொற்கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை அம்பலத்
தான்தொண்டர்க் கேவல்செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. 2

(ஆசிரியவிருத்தம்)

களிவந் தமுதூறிக் கல்மனத்தை எல்லாம்
கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
விரிசடையும் வெண்ணீறுஞ் செவ்வானம் என்ன

---

1. மோலி - திருமுடி. ஏத்து - துதி.
2. இகல் தெறும் - பகையை அழிக்கும். இங்கு - இவ்வுலகத்தில்.

ஒளிவந்த பொன்னிறமுந் தொல்நடமுங் காட்டும்
உடையான் உயர்தில்லை அம்பலமொன் றல்லால்
எளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
டிடைமிடைந்த புன்மொழியால் இச்சைஉரை யோமே.

(இணைக்குறள் ஆசிரியப்பா)

உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையுங் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாண நீடு
குன்றக் கோமான் தன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்
தழங்குந் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை ஆறும் பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல்தில்லை யாகியதொல்பெரும் பதியுமென்
றொருபதி னாயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர் முன்புகுந் தறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்

---

4. அடி, 1. வரை - எல்லை. 11. தழங்கும் - ஒலிக்கும். 15. வேழம் - அயிராவணமென்னும் யானை. 16. வைதிகப் புரவி - வேதமாகிய குதிரை. 22. தமர் - அடியார்.

தென்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பிற் காணுறு அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்
கானில்வால் நுளம்புங் கருடனு தலினே. 4

(வெண்பா)

ஆதரித்த மாலும் அறிந்திலனென் றஃதறிந்தே
காதலித்த நாயேற்குங் காட்டுமே—போதகத்தோற்
கம்பலத்தான் நீள்நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி. 5

(கட்டளைக்கலித்துறை)

அடியொன்று பாதலம் ஏழிற்கும்
அப்புறம் பட்டதிப்பால்
முடியொன்றிவ் வண்டங்கள் எல்லாங்
கடந்தது முற்றும்வெள்ளைப்
பொடியொன்று தோள்எட்டுத் திக்கின்
புறத்தன பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத்
தான்றன் திருநடமே. 6

(ஆசிரியவிருத்தம்)

நடமாடி ஏழுலகம் உய்யக் கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடும்
திடமாட மதிற்றில்லைக் கோயில் கொண்ட
செல்வரே உமதருமை தேரா விட்டீர்

அடி, 26. வால் நுளம்பு - வெள்ளிய கொசு.

5. போதகத்தோற் கம்பலத்தான் - ஆனைத் தோலைப் போர்வையாக உடையவன்

6. வெள்ளைப்பொடி ஒன்று தோள் - திருநீறுபொருந்திய திருத்தோள்கள்.

இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடனிற்க இயல்வ தன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா அங்கருநீர் நஞ்சுண் டாரே. 7

(நேரிசை ஆசிரியப்பா)

நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க நென்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கி யாம்முன்
கருவிடை வந்த ஒருநாட் டொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயிற்றலை அன்ன எயிற்றிடைக் கிடந்தாங்
கருள்நனி இன்றி ஒருவயி றோம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனம் இருந்தும் போலும் பெயர்த்துநின்
றெண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே. 8

(வெண்பா)

இலவிதழ்வாய் வீழ்வார் இகழ்வார் அவர்தம்
கலவி கடைக்கணித்துங் காணேன்—இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார் நின்றாடும்
நாடகங்கண் டன்பான நான். 9

---

7. **தஞ்சு உண்டா** - பற்றுக்கோடு உண்டாகும்படி.
8. **அடி**, 1. **மாசுணம்** பெரும் பாம்பு. **தன் முதல்முருக்க - தன்** அடிப்பாகத்தைப் பறித்துத் துன்புறுத்த. 6. **மறலி** - யமன். 10. **அயர்த்தனம்** - உன்னை மறந்தோமாகி.

(கட்டளைக்கலித்துறை)

நானே பிறந்து பயன்படைத்
தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத்
தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன்
தீமையெல் லாம்அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே. 10

(ஆசிரியவிருத்தம்)

சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தஞ்சொல் நலிய மெலிந்து கிளியொடு
பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து நிறையொடு
பண்பு தவிர அனங்க னவனொடு
நண்பு பெருக விளைந்த இனையன
நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயலகன்
நைந்து நரல அலைந்த பகிரதி
அந்தி மதியொ டணிந்து தில்லைநகர்
அம்பொ னணியும் அரங்கின் நடநவில்
அங்க ணரசை அடைந்து தொழுதிவள்
அன்று முதலெ திர்இன்று வரையுமே. 11

---

11. தலைவியின் நிலையைத் தோழி உரைத்தல். சந்து - சந்தனம். கலை - ஆடை. அயலவர் தம் சொல் - அலர். தழங்க - ஒலிக்க. நரல - புலம்ப. தில்லைநகர் - சிதம்பரத்தில். இன்று வரையுமே விளைந்த இனையன.

(நிலைமண்டில ஆசிரியப்பா)

வரையொன்று நிறுவி அரவொன்று பிணித்துக்
கடல்தட வாக மிடலொடும் வாங்கித்
திண்டோள் ஆண்ட தண்டா அமரர்க்
கமிர்தூண் அளித்த முதுபெருங் கடவுள்
கடையுகஞ் சென்ற காலத்து நெடுநிலம்
ஆழிப் பரப்பில் ஆழ்வது பொறாஅ
தஞ்சேல் என்று செஞ்சே லாகித்தன்
தெய்வ உதரத்துச் சிறுசெலுப் புரையிற்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோ
டுலகு குழைத்தொருநாள் உண்டதும்
உலக மூன்றும் அளந்துழி ஆங்கவன்
ஈரடி நிரம்பிற்றும் இலவே தேரில்
உரைப்போர்க் கல்ல தவன்குறை வின்றே
இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு ஆகி யாழத்
தடுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்
தாழி ஊழி கீழுறக் கிளைத்தும்
காண்பதற் கரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய
பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
கண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவில் மறுவின்றி விளங்கி
ஏவருங் காண ஆடுதி அதுவெனக்

---

12. **அடி.** 2. **தடவு - தாழி.** 8. **செலு - செதிள். புரை - இடைவெளி.** 17. **கிளைத்தும் - தோண்டியும்.** 21. **பொன்னிறக் கடவுள் - பிரமதேவன்.** 24. **சிறிய பொதுவில் - சிற்றம்பலத்தில்.**

கதிசயம் விளைக்கும் அன்றே அதிசயம்
விளையாது மொழிந்த தெந்தை வளையாது
கல்லினும் வலிதது நல்லிதிற் செல்லாது
தான்சிறி தாயினும் உள்ளிடை நிரம்ப
வான்பொய் அச்சம் மாயா ஆசை
மிடைந்தன கிடப்ப இடம்பெறல் அருமையின்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு சுழற்ற
வாடுபு கிடந்த பீடில் நெஞ்சத்து
நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையும்
செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமுந் தடுத்தசெங் கையும்
புள்ளி ஆடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி நம்ப கூடும்
வேதம் நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திறம் ஆதலின் மொழிவது
பெரியதிற் பெரியை என்றும் அன்றே
சிறியதிற் சிறியை என்றும் அன்றே
நிறைபொருள் மறைகள் நான்கும்நின் அறைகழல்
இரண்டொடும் அறிவினில் ஆர்த்து வைத்த
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே. 12

(வெண்பா)

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்
துழவரும்போய் ஓயுமா கண்டோம்—மொழிதெரிய
வாயினால் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனார் என்றுரைப்போம் நாம். 13

அடி,28. மனத்தின் இயல்பு. 32. ஐவர் கள்வர்-ஐம்புலவாசை. 33. மண் மகன் திகிரியின் - குலாலனது சக்கரத்தைப் போல. 39. புள்ளி ஆடை - புலித்தோலாடை. 45—6. மறையையும் கழலையும் அறிவிலே கட்டி வைத்த.

13. நோயின்கீழும் மூப்பின்கீழும் பட்டு.

(சட்டளைக்கலித்துறை)

நாமத்தி னல்என்றன் நாத்திருத்
தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னல்உன் சரண்பணி
யேன்சார்வ தென்கொடுநான்
வாமத்தி லேஒரு மானைத்
தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னல்உன் திருத்தில்லை
சேர்வதோர் செந்நெறியே. 14

(சந்தவிருத்தம்)

நெறிதரு குழலை அறலென்பர்கள்
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்
அறிகுவ தரிதிவ் விடையென்பர்கள்
அடியிணை கமல மலரென்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகிய ரமையு மவரென்செய
மறிமழு வுடைய கரனென்கிலர்
மறலியை முனியும் அரனென்கிலர்
மதிபொதி சடில தரனென்கிலர்
மலைமகள் மருவு புயனென்கிலர்
செறிபொழில் நிலவு தில்லையென்கிலர்
திருநடம் நவிலும் இறையென்கிலர்
சிவகதி அருளும் அரசென்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே. 15

---

14. சார்வது என்கொடு நான் - நான் எந்த உரிமையைக் கொண்டு அடைவது. மான் என்றது மான்மறியையும் உமாதேவியையும்.

15. அறல் - கருமணல்.

(நேரிசை ஆசிரியப்பா)

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோண்மீன் அல்மந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்கும்
துயர்த்திரை உவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாணநின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே. 16

(வெண்பா)

செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கென்
தையல் வளைகொடுத்தல் சாலுமே—ஐயன்தேர்
சேயே வருமளவிற் சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையிற் சங்கு. 17

---

16. உடம்பைக் கப்பலாக உருவகம் செய்கிறார். அடி, 2. இடும்பை ஈட்டமும் - துன்பத்தொகுதியும். 3. வினை - ஊழ். 4. மீகாமன் - கப்பலோட்டி. உய்ப்ப - செலுத்த. 5. கரு - கருப்பம். நீத்தம் - வெள்ளம். 8. உவட்டில் - பெருக்கில். அயர்த்து - மறந்து. 10. நிறை - மனத்தை அடக்கியாளும் தன்மை. 11. உணர்வு - அறிவு. 12. காயச் சிறைக்கலம் - தேகமாகிய சிறைப்படுத்துதலையுடைய கப்பல்.

17. செவிலி கூற்று.

(கட்டளைக்கலித்துறை)

சங்கிடத் தானிடத் தான்தன
தாகச் சமைந்தொருத்தி
அங்கிடத் தாள்தில்லை அம்பலக்
கூத்தற் கவிர்சடைமேற்
கொங்கிடத் தார்மலர்க் கொன்றையென்
றுய்எங்கை நீயுமொரு
பங்கிடத் தான்வல்லை யேல்இல்லை
யேநின் பசப்பொழியே. 18

(ஆசிரியவிருத்தம்)

ஒழிந்த தெங்களூற வென்கொ லோஎரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னோர்நாள்
விழுந்தெ ரிந்துதுக ளாக வென்றிசெய்த
வில்லி தில்லைநகர் போலியார்
சுழிந்த உந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநொந்
தழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமோர்
சிந்தை யாயொழிவ தல்லவே. 19

(நேரிசை ஆசிரியப்பா)

அல்லல் வாழ்க்கை வல்லிதிற் செலுத்தற்குக்
கைத்தேர் உழந்து கார்வரு மென்று
வித்து விதைத்தும் விண்பார்த் திருந்தும்
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டும்
முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்

---

18. **சங்கு இடத்தான் இடத்தான் - திருமாலை வாமபாகத்திலே வைத்தவன். பசப்பு - பசலை நிறம்.**

19. **ஒன்னலார்கள் - பகைவர்.**

20. **பலபிறவியில் பலவாறு அலைந்து இப்பிறவியில் தில்லைச் சிற்றம்பலத்தானை அடையப்பெற்றேன் என்று பெருமிதம் அடைந்து கூறுகின்றார்.**

அடி, 2. **கைத்து ஏர் உழந்து - ஏரைச் செலுத்தித் தொழில் செய்து.**

அருளா வயவர் அம்பிடை நடந்தும்
இருளுறு பவ்வத் தெந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியும்
ஆற்றல் வேந்தர்க்குச் சோற்றுக்கடன் பூண்டும்
தாளுழந் தோடியும் வாளுழந் துண்டும்
அறியா ஒருவனைச் செறிவந்து தெருட்டியும்
சொற்பல புனைந்துங் கற்றன கழறியும்
குடும்பப் பாச நெடுந்தொடர் பூட்டி
ஐவ ரைந்திடத் தீர்ப்ப நொய்திற்
பிறந்தாங் கிறந்தும் இறந்தாங்குப் பிறந்தும்
கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்கும்
கொப்புட் செய்கை ஒப்பின் மின்போல்
உலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்யெரி வளர்த்துப் பெய்முகிற் பெயல்தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
கடவுட் கண்ணுதல் நடமுயன் றெடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டும்
மீதியாத் தசைத்த வெள்ளெயிற் றரவும்
சேயுயர் அகலத் தாயிரங் குடுமி
மணிகிடந் திமைக்கும் ஒருபே ராரமும்
அருள்பொதிந் தலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியிற் றிகழ்ந்த ஒற்றை நாட்டமும்

அடி, 6. வயவர் - **வீரர்**. 7. **பவ்வத்து** - கடலில். **எந்திரம்** கடாஅய் - **கப்பலாகிய யந்திரத்தைச் செலுத்தி.** 9. **சோற்றுக்** கடன் - பெற்று **உண்ட உணவுக்குக் கைம்மாறாகச்** செய்வதற்குரிய கடமை. 10. தாள் உழந்து - முயற்சி **செய்து.** 13. **தொடர்** - சங்கிலி. 14. **ஐவர்** - **ஐம்பொறிகள்.** நொய்தில் - **எளிதில்.** 17. **கொப்புள்** செய்கை ஒப்பின் - மழைக் **கொப்புளத்தின்** செய்கைக்கு ஒப்பாக. மயங்கியும் (18) **தவஞ்செய்தனன்** (31) **என்க.** 19. **வேள்வி ஓம்பி** அதனால் மழையை **உண்டாக்கும்.** 21. ஆடகப் பொது - **பொன்னம்பலம்.** 23. **புலிப்பட்டு - புலித்தோலாகிய** ஆடை. 25-6. ஆயிரம் **தலையில் மாணிக்கம்** விளங்குகின்ற ஆதிசேடனாகிய **மாலையும்.**

கங்கை வழங்குந் திங்கள் வேணியும்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்தியாங்
குண்மகிழ்ந் துரைக்க உறுதவஞ் செய்தனன்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்
உறுதற் கரியதும் உண்டோ
பெறுதற் கரியதோர் பேறுபெற் றேற்கே. 20

(வெண்பா)

பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
சுற்றோட ஓடித் தொழாநிற்கும்—ஒற்றைக்கை
மாமறுகச் சிறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்
கோமறுகிற் பேதைக் குழாம். 21

(கட்டளைக்கலித்துறை)

பேதைஎங் கேஇனித் தேறிஉய்
வாள்பிர மன்றனக்குத்
தாதைதன் தாதைஎன் றேத்தும்
பிரான்தண் புலிசைப்பிரான்
கோதையங் தாமத்தண் கொன்றை
கொடான்இன்று கொல்லஎண்ணி
ஊதையுங் காருந் துளியொடுங்
கூடி உலாவியவே. 22

(ஆசிரியவிருத்தம்)

உலவு சலதி வாழ்விடம் அமரர் தொழவுணஎன
றுகரும் ஒருவர் ஊழியி னிறுதி யொருவர் ஆழிய
புலவு கமழ்க ரோடிகை உடைய புனிதர் பூசுரர் [தோர்
புலிசை யலர்செய் போதணி பொழிலின் நிழலின் வாழ்வ

21. ஒற்றைக்கை மா - யானை. மான்தேர் - குதிரை கட்டிய தேர்.

22. கார்ப்பருவம் வந்தது கண்டு தோழி கூவன்று உரைத்தல். பிரமன் றனக்குத் தாதை - திருமால். புலிசை - பெரும்பற்றப் புலியூராகிய சிதம்பரம். ஊதை - காற்று.

23. தலைவன் தலைவியின் இயல்பைப் பாங்கனுக்கு உரைத்தல். சலதி - கடல். கரோடிகை - தலைமாலை.

கலவ மயில னார்சுருள் கரிய குழலி னார்குயில்
கருது மொழியி னார்கடை நெடிய விழியி னாரிதழ்
இலவி லழகி யாரிடை கொடியின் வடிவி னார்வடி
வெழுதும் அருமை யாரென திதய முழுதும் ஆள்வரே. 23

(இணைக்குறள் ஆசிரியப்பா)

ஆளெனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத் தவையெஞ் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாடொறும் பழகிக்
கனவிலும் நவிற்றுங் காதலேம் வினைகெடக்
கேட்பது நின்பெருங் கீர்த்தி மீட்பது
நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதிஎன
அருத்திசெய் திடுவ துருத்திர சாதனம்
காலையும் மாலையும் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினிற்
கைகொடு குயிற்றுவ தைய நின்னது
கோயிற் பல்பணி குறித்தே ஓயா
துருகி நின்னினைந் தருவி சோரக்
கண்ணிற் காண்பதெவ் வுலகினுங் காண்பன எல்லாம்
நீயே யாகி நின்றதோர் நிலையே நாயேன்
தலைகொடு சார்வதுன் சரண்வழி அல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனாற்
பொய்த்தவ வேடர் கைத்தகப் படுத்தற்கு
வஞ்சச் சொல்லின் வார்வலை போக்கிச்

---

24. அடி, 1. புதிதாக அடிமையென்று வந்தேமிலம். மீட்பது (7) நெஞ்சத்தை (9.) 10. அருத்தி - அன்பு. உருத்திர சாதனம் - ருத்திராட்சம். 13. குயிற்றுவது - செய்வது. 20 - 25. பொய்யான சமயவாதிகளுடைய போக்கில் அகப்பட்டேன் என்கிறார். கைத் தகப் படுத்தற்கு - கையிலே தக்கபடி அமையச் செய்வதற்கு. மானுட மாக்களை - மனிதர்களாகிய விலங்குகளை.

சமயப் படுகுழி சமைத்தாங் கமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆறு விரதத் தகப்படுத் தாழ்த்து
வளைவுணர் வெனக்கு வருமோ உளர்தரு
நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்நீ
ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்
நான்மறை யாளர் நடுவுபுக் கடங்கிச்
செம்பொற் றில்லை மூதூர்
அம்பலத் தாடும் உம்பர்நா யகனே. 24

(வெண்பா)

நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய னாயருளுந் தம்பிரான்—தூயவிரை
மென்றுழாய் மாலொடயன் தேட வியன்தில்லை
மன்றுளே ஆடும் மணி. 25

(கட்டளைக்கலித்துறை)

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம்
வேர்ப்பஅம் மன்றுக்கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும்
பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போம்நெஞ்ச
மேஇனிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதிஎல்
லோரும் பிணமென்னவே. 26

அடி, 26. கொட்பு - சுழற்சி. சீகரவாரி - துளிகளின் வரவு.
25. விரை - வாசனை.
26. கடைவழி சாதி - இறுதியில் சாவாய்.

(ஆசிரியவிருத்தம்)

என்னாம் இனிமட வரலாய் செய்குவ
திணமாய் வண்டுகள் மலர்கிண்டித்
தென்னா எனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி அணிதாமம்
தன்னா லல்லது தீரா தென்னிடர்
தகையா துயிர்கரு முகிலேறி
மின்னா நின்றது துளிவா டையும்வர
வீசா நின்றது பேசாயே. 27

(இணைக்குறள் ஆசிரியப்பா)

பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்
நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன் றொருவழி நில்லா அன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறல் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையரெங் குலத்தினர் இறந்தோ ரனையவர்
பேரும் நின்றில போலுந் தேரின்
நீயும்அஃ தறிதி யன்றே மாயப்
பேய்த்தேர் போன்றும் நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்றும் நனவுப்பெயர் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்

---

27. கார்ப்பருவம் கண்டு கலங்கிய தலைவிக்குச் சொல்லியது.
28. அடி, 4. உண்ட பொருளெல்லாம் மலமாகி விடும்.
13. எனையர் - எத்தனை பேர்.

தன்மையர் இழிவு சார்ந்தனை நீயும்
நன்மையிற் றிரிந்த புன்மையை ஆதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்
ஆசையாம் பரிசத் தியானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறுவ துணராச் செறுவுழிச் சேர்ந்தனை
நுண்ணூல் நூற்றுத் தன்னகப் படுக்கும்
அறிவில் கீடத்து நுந்துழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்
டிடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடந்தி
கறவை நினைந்த கன்றென இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்
கருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்றுள் ஆடும்
இறையவன் என்கிலை என்னினைந் தனையே. 28

அடி, 22. இழுக்கத்தின் ஒழுகி - செய்யவேண்டியதைச் செய்யாது விடும் இயல்பிலே நடந்து. 27. யாழோசையைக் கேட்டு மயங்கி வேடர்கைப் பட்டு மாயும் அசுணம் என்னும் பறவையைப் போலவும். 23 - 29. சுவையால் கெடும் மீனைப் போலவும், காட்சியாற் கெடும் விட்டிலைப்போலவும், பரிசத்தாற் கெடும் யானையைப் போலவும், கேள்வியாற் கெடும் அசுணத்தைப் போலவும், மோத்தலால் கெடும் வண்டைப் போலவும் ஐம்பொறிகளின் வசப்பட்டுத் துன்புற்றாய். 31. கீடம் - சிலந்தி. 34. குடலோடு பொருந்திய சிறையின் அறைபோன்ற உடம்பினுள் வளைந்து கிடக்கிறாய். 35. கறவை - பசு.

(வெண்பா)

நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ—அனைவீரும்
மெச்சியே காண வியன்றில்லை யான்அருள்என்
பிச்சியே நாளைப் பெறும். 29

(கட்டளைக்கலித்துறை)

பெறுகின்ற எண்ணிலி தாயரும்
பேறுறும் யானும்என்னை
உறுகின்ற துன்பங்கள் ஆயிர
கோடியும் ஓய்வொடுஞ்சென்
றிறுகின்ற நாள்களும் ஆகிக்
கிடந்த இடுக்கணெல்லாம்
அறுகின் றனதில்லை ஆளுடை
யான்செம்பொன் அம்பலத்தே. 30

(ஆசிரியவிருத்தம்)

அம்பலவர் அங்கண ரடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்னுமிதென் ஆனையை உரித்துக்
கம்பலம்உ வந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய காதலறி யாதே
வம்பலர் நிறைந்துவசை பேசஒரு மாடே
வாடையுயி ரீரமணி மாமையும் இழந்தென்
கொம்பல மருந்தகைமை கண்டுதக வின்றிக்
கொன்றைஅரு ளீர்கொடியி ரென்றருளு வீரே. 31

---

29. நினைந்து மெலிந்து நிறையழிவாருக்கே கொன்றை உரிய தென்றபடி. பிச்சி – இறைவன்பால் காமப்பித் துடையவள்.

30. எண்ணிலி தாயரும் - எண்ணற்ற தாய்மாரும். பேறுறும் யானும் – பிறவிதோறும் அத்தாய்மார்களால் பெறு தலையுடைய அடியேனும்.

31. செவிலி கூற்று. கம்பலம் – போர்வை. வம்பலர் – புதியவர். ஒரு மாடே – ஒரு பக்கம். மாமை – அழகிய நிறம். என் கொம்பு அலமருந் தகைமை – என் மகள் கலங்குகின்ற இயல்பை.

(இணைக்குறள் ஆசிரியப்பா)

அருளா வாழி அருளா வாழி
புரிசடைக் கடவுள் அருளா வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்க ளியாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே இளமை நீக்கம்
அதனினுங் கடிதே மூப்பின் தொடர்ச்சி
அதனினுங் கடிதே கதுமென மரணம்
வாணாள் பருகி உடம்பைவறி தாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றம்
இனைய தன்மைய திதுவே இதனை
எனதெனக் கருதி இதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே அவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
ஒன்றினும் படாதன சிலவே என்றிவை
கணத்திடை நினைந்து களிப்பவுங் கலுழ்பவும்
கணக்கில் கோடித் தொகுதி அவைதாம்
ஒன்றொன் றுணர்வுழி வருமோ அனைத்தும்
ஒன்றா உணர்வுழி வருமோ என்றொன்று
தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய
மனத்தின் செய்கைமற் றிதுவே நீயே
அரியை சாலஎம் பெரும தெரிவுறின்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை அவைநினைக் காணா அதுதான்
நின்வயின் மறைத்தோய் அல்லை உன்னை
மாயாய் மன்னினை நீயே வாழி
மன்னியுஞ் சிறுமையிற் கரந்தோய் அல்லை

---

32. அடி, 3. நிலைத்தல் நீங்க. கறங்கும் — சுழலும். 4. புற்புதச்செவ்வியின் - நீர்க்குமிழியின் இயல்பைப் போல. 5. கடிது - வேகமாகச் செல்வது. 9. நல்காக் கூற்றம் - அருள் செய்யாத யமன். 10. இது — இவ்வுடல். 20. தேறல் செல்லேம் - தெளிய மாட்டேம்.

பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே
பெருகியுஞ் சேணிடை நின்றோ யல்லை
தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே
நண்ணியும் இடையொன்றின் மறைந்தோ யல்லை
இடையிட்டு நின்னை மறைப்பதும் இல்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே அஃதான்று
நினைப்பருங் காட்சி நின்னிலை இதுவே
நினைப்புறுங் காட்சி எம்நிலை யதுவே
இனிநனி இரப்பதொன் றுடையம் மனமருண்டு
புன்மையின் நினைத்துப் புலன்வழி படரினும்
நின்வயின் நினைந்தே மாகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுத லனைத்தொன்றும்
நீயே அருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலைபுல் லெனஎறி விசும்புவறி தாக
இம்பர் உய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதிவா னவனே. 32

(வெண்பா)

வானோர் பணியா மணியா சனத்திருக்கும்
ஆனாத செல்வத் தரசன்றே—மால்நாகம்
பந்திப்பார் நின்றாடும் பைம்பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு. 33

(கட்டளைக்கலித்துறை)

வாழ்வாக வுந்தங்கள் வைப்பாக
வும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை அம்பலத்
தாயுன்னை அன்றிஒன்றைத்

அடி, 30. அணியை - அருகில் உள்ளாய். 32. இடையிட்டு - நடுவே புகுந்து.

33. இந்திரபதவியையும் சிவனடியார் வேண்டார் என்றபடி. மால் நாகம் பந்திப்பார் - பெரிய நாகப்பாம்பை ஆபரணமாகக் கட்டிக்கொள்பவர்.

தாழ்வார் அறியாச் சடுலநஞ்
சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றேதெய்வ
மாக வணங்குவதே. 34

(ஆசிரியவிருத்தம்)

வணங்குமிடை யீர்வறிது வல்லியிடை யாள்மேல்
மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோ
டுணங்கியிவள் தானுமெலி யப்பெறும் இடர்க்கே
ஊதையெரி தூவிஉல வப்பெறு மடுத்தே
பிணங்கிஅர வோடுசடை ஆடநடம் ஆடும்
பித்தரென உம்மிதயம் இத்தனையும் ஓரீர்
அணங்குவெறி யாடுமறி யாடுமது ஈரும்
மையலையும் அல்லலையும் அல்லதறி யீரே. 35

(நேரிசை ஆசிரியப்பா)

ஈரவே ரித்தார் வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீ தசைய
வண்டியங்கு வரைப்பின் எண்டோட் செல்வ
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற் பட்ட மேனி எந்தை
ஒல்லொலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத் தொருபெருங் கடவுள்
வானவர் வணங்குந் தாதை யானே
மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்
தேனியங் கொருசிறைக் கானகத் தியற்றிய

34. சடுலம் - நடுக்கத்தைத் தரும்.

35. தோழி வெறிவிலக்கல். இடையீர் என்றது நற்றாய் முதலியோரை. வல்லி - கொடியைப் போன்ற. ஊதை - குளிர் காற்று. அணங்கு வெறியாடும் - தெய்வத்தை நினைந்து வெறியாடுகின்ற. அது ஈரும் - அந்த ஆட்டை வெட்டும். மையலையும் - அறியாமையால் வரும் செயலையும்.

36. அடி, 1. வேரி - தேன். 6. பழனம் - வயல். 10 மந்தாரம் - கற்பகவகையுள் ஒன்று.

தெய்வ மண்டபத் தைவகை அமளிச்
சிங்கஞ் சுமப்ப ஏறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கத்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்
ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதுமெனத்
தெறுசொ லாளர் உறுசினந் திருகி
எற்றியும் ஈர்த்துங் குற்றங் கொளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்
வார்ந்துங் குறைத்தும் மதநாய்க் கீந்தும்
செக்குரற் பெய்துந் தீநீர் வாக்கியும்
புழுக்குடை அழுவத் தழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் காலம் அழுத்தி இன்னா
வரையில்தண் டத்து மாறாக் கடுந்துயர்
நிரயஞ் சேரினுஞ் சேர்க உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க இல்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையா
தின்பத் தழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினுந் துதைக முன்பில்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகா
தென்றும் இருக்கினும் இருக்க அன்றி
இன்றே இறக்கினும் இறக்க ஒன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்டகைக் குரிசில்நின் அடியரொடுங் குழுமித்
தெய்வக் கூத்தும்நின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வம் கிடைத்த லானே. 36

அடி,18. திருகி - வருந்தி. 23.புழுக்குடை அழுவத்து - புழுக் நெளிகின்ற இடத்தில். 25. வரையில் தண்டத்து - எல்லை யில்லாத தண்டனையினால் உண்டாகிய. 26. நிரயம் - நரகம். 32. துதையினும் - பொருந்தினாலும்.

(வெண்பா)

ஆனேறே போந்தால் அழிவுண்டே அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே—வானோங்கு
வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு. 37

(கட்டளைக்கலித்துறை)

கொண்டல்வண் ணத்தவன் நான்முகன்
இந்திரன் கோமகுடத்
தண்டர்மிண் டித்தொழும் அம்பலக்
கூத்தனுக் கன்புசெய்யா
மிண்டர்மிண் டித்திரி வார்எனக்
கென்னினி நானவன்றன்
தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த்
திரியத் தொடங்கினனே. 38

(ஆசிரியவிருத்தம்)

தொடர நரைத்தங்க முன்புள வாயின
தொழில்கள் மறுத்தொன்று மொன்றி யிடாதொரு
சுளிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிந்தனை ஓய்வொடு
நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொறுவொரு
நடலை நமக்கென்று வந்தன பேசிட
நலியிரு மற்கஞ்சி உண்டி வெறுவிழு
நரக உடற்கன்பு கொண்டலை வேன்இனி

---

37. கோமானை இந்தத் தெருவழியே கொண்டு வந்தால் ஏதாவது நஷ்டம் உண்டோ?

38. இறைவனுக்கு அன்பு செய்யாதவர்கள் துன்புறுவார்கள்; அவனுடைய தொண்டருக்குத் தொண்டனாக உள்ள எனக்கு என்ன பயம்? மிண்டர் - முரடர். மிண்டி - நெருங்கி

39. அங்கங்களெல்லாம் முன்பு உள்ளபடி இயங்காமல். புலைவாரிகள் - இழிந்த அழுக்குத்தாரைகள். நடலை - தொல்லை. விரலின் அழுக்குண்டு - கால்விரலினால் அழுத்தப் பெற்று. விரகு - தந்திரம். சதுர் - அறிவுச் செயல்.

மிடலொடி யப்பண்டி லங்கையர் கோன்ஒரு
விரலின முக்குண்டு பண்பல பாடிய
விரகு செவிக்கொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்றி யிடாவகை
திடமருள் வைக்குஞ்செ ழுஞ்சுடர் ஊறிய
தெளிய முதத்தின்கொ ழுஞ்சுவை நீடிய
தில்லைநக ரிற்செம்பொன் அம்பல மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்சது ராவதே. 39

(நேரிசை ஆசிரியப்பா)

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர்கோ னுக்கு
மாநிதி இரண்டும் ஆனைப் பெருவளத்
தளகை ஒன்றும் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துப்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி
குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்றி விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒருநொடி பொடிபட
வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி

40. அடி, 1-2. திருமாலுக்குச் சக்கரத்தை அருளிய திருவருளுக்கு வணக்கம். கதிர் விடும் ஆழி, கடவுள் ஆழி. 3. இயக்கர் கோன் – குபேரன். 7 மாணிக்காக - பிரமசாரியாகிய மார்க்கண்டேயனுக்காக. 12. அவலம் - துயரத்தை.

தெய்வ யாளி கைமுயன் று கிழித்தெனக்
கரியொன் றுரித்த பெருவிறல் போற்றி
பண்டு பெரும்போர் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை எடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரற் றடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி
வெண்ணெய் உண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை அழல்வாய்ப் புகைவிழி ஒருதனிச்
சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற் றெறுழ்வலி மணியுகு பகுவாய்
உரகம் பூண்ட ஒப்பனை போற்றி
கங்கையுங் கடுக்கையுங் கலந்துழி ஒருபால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி
கடவுள் இருவர் அடியும் முடியும
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி

அடி, 22. கோலம் - வேட்டுவத் திருவுருவம். 25. விலங்கல் விண்டு - மலை பிளந்து. 27. வேதியச் சிறுவன் - சண்டேசர். 28. பரிகலம் - தாம் ஏற்ற நிவேதனத்தை. 30. தொண்டர் - சிறுத்தொண்டர். 31-34. கோச்செங்கட் சோழர் வரலாறு. 37. எறுழ்வலி - மிக்க வலிமை 38. ஒப்பனை - அலங்காரம். 39. கடுக்கையும் - கொன்றையும்.

ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் ஏறு போற்றி
ஏகல் வெற்பன் மகிழும் மகட்கிடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்
தாடும் நாடகம் போற்றி என்றாங்
கென்றும் போற்றினும் என்றனக் கிறைவ
ஆற்றல் இல்லை ஆயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே. 40

திருச்சிற்றம்பலம்

27

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச் செய்த

திருக்கழுமல மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(இணைக்குறள் ஆசிரியப்பா)

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல ஒருகூ
றிமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை இருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்டொறுங் காண்டொறும்

---

1. அடி, 4. முகிழ்த்த - தோன்றிய.

முதிரா இளமுலை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதற் றெய்வச் சிறுபிறை
இளநிலாக் காண்டொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதஞ் செவ்வி செய்யநின்
செங்கைக் கமலம் மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் றேந்த
மலைமகள் தனாது நயனக் குவளைநின்
பொலிவினொடு மலர மறையோர்
கழுமல நெறிநின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை உலகங் கீழ்முதற் றாழ்ந்திங்
கொன்றா வந்த குன்றா வெள்ளத்
துலகம்மூன் றுக்குங் களைகண் ஆகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் னின்று
ஞான போனகத் தருள்அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தா ரியாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானர்
தோடு டைய செவியன் என்றும்
பீடு டைய பெம்மான் என்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே. 1

அடி, 10-11. அம்மையின் திருமுகப் புன்னகையைக் காணுந் தோறும். 17. கழுமலம் – சீகாழி. 18. நாகர் நாடு – நாகலோகம். 19. மீமிசை உலகம்- தேவலோகம். 23 - 33. திருஞான சம்பந்தர் வரலாறு. 26. அருள் அட்டி - அருளை இட்டு. 27. திரளை - உணவு.

(வெண்பா)

அருளின் கடல்அடியேன் அன்பென்னும் ஆறு
பொருளின் திரள்புகலி நாதன்—இருள்புகுதும்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்
அண்டத்தார் நாமார் அதற்கு. 2

(கட்டளைக்கலித்துறை)

ஆரணம் நான்கிற்கும் அப்பா
லவன்அறி யத்துணிந்த
நாரணன் நான்முக னுக்கரி
யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப்
பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங்
கடந்த கருப்பொருளே. 3

(இணைக்குறள் ஆசிரியப்பா)

கருமுதற் றொடங்கிப் பெருநா ளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்

---

2. புகலி - சீகாழி.
3. பொழில் அத்தனைக்கும் காரணன் - உலகங்கள் எல்லா வற்றிற்கும் மூலகாரணமாக இருப்பவன்.
4. அடி, 5. மதன் - வலிமை. 6. ஐவகைக்கடா என்றது ஐந்து பொறிகளை. யாப்பு - கட்டு.

பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தைநீ இருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து
நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்
கெழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே. 4

(வெண்பா)

மானும் மழுவுந் திருமிடற்றில் வாழும்இருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. 5

(கட்டளைக்கலித்துறை)

ஒளிவந்த வாபொய் மனத்திருள்
நீங்கஎன் உள்ளவெள்ளம்
தெளிவந்த வாவந்து தித்தித்த
வாசிந்தி யாதவொரு

அடி, 12. சிந்தையாகிய தவிசு. 20-21. **பிரளயகாலத்தில் தோணிபோல மிதந்தது சீகாழி. அதனால் அதற்குத் தோணிபுரம்** என்ற **திருநாமம் உண்டாயிற்று**. 22. **பிரளய விடங்கர்: சீகாழியில் எழுந்தருளிய இறைவன் திருநாமங்களில் ஒன்று.**
6. **ஒளி** வந்தவா - **ஒளி வந்தவாறு என்ன வியப்பு!**

களிவந்த வாஅன்பு கைவந்த
வாகடை சாரமையத்
தெளிவந்த வாநம் கழுமல
வாணர்தம் இன்னருளே. 6

(இணைக்குறள் ஆசிரியப்பா)

அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத் தாடகக் குடுமி
மழைவயிறு கிழிக்குங் கழுமல வாணநின்
வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவையுடன் இருந்த பரம யோகி
யானொன் றுணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமுந் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்
தியாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியுந் தந்தைய ராகியும்
வந்தி லாதவர் இல்லை யான்அவர்
தந்தைய ராகியுந் தாய ராகியும்
வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை யானவை
தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை அனைத்தே
காலமுஞ் சென்றதி யானிதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே ஆயினும்

7. அடி,4. ஆடகக் குடுமி - பொன் கலசம்.

இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல்நின் கடனே. 7

(வெண்பா)

கடலான காமத்தே கால்தாழ்வர் துன்பம்
அடலாம் உபாயம் அறியார்—உடலாம்
முழுமலத்தை ஓர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். 8

(கட்டளைக்கலித்துறை)

தொழுவாள் இவள்வளை தோற்பாள்
இவள்இடர்க் கேஅலர்கொண்
டெழுவாள் எழுகின்ற தென்செய
வோஎன் மனத்திருந்தும்
கழுவா மணியைக் கழுமல
வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக்கண்டு வந்ததென்
றுலோர் வசைஇல்லையே. 9

(நேரிசை ஆசிரியப்பா)

வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பிற் றெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக
அமைநாண் மென்றோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்றோள் அவுணர்

---

8. கால் தாழ்வர் - பதிந்து தங்குவார். துன்பம் அடலாம் உபாயம் - துன்பத்தை அழிப்பதற்குரிய தந்திரத்தை.
9. கழுவா மணி - சாணையிடாத மாணிக்கம்
10. அடி,2-3. சீகாழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு.
6. மூங்கில் நாணுகின்ற அழகையுடைய மெல்லிய தோள்.

மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியிற் சிறந்த ஒற்றை நாட்டத்துக்
காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே
கல்லா மனத்துப் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுந்தண் ணாட்டத்துக்
காண்டொறுங் காண்டொறும் எல்லா மியாண்டை
ஆயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனைப்பல வாகி
இல்லன உளவாய் உள்ளது காணாது
பன்னாள் இருள்வயிற் பட்டேன் அன்னதும்
அன்ன தாதலின் அடுக்கும தென்னெனிற்
கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவர்க்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி
ஒழிவின் றொன்றின் ஒன்று தடுமாற
வந்தாற் போல வந்த தெந்தைநின்
திருவருள் நாட்டங் கருணையிற் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரு நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றும் துணிவுபோன் றனவே. 1(

அடி, 8. சேவகம் - வீரம். 24. கொட்புறும் - அலையும்.

(வெண்பா)

எனவே எழுந்திருந்தாள் என்செய்வாள் இன்னம்
சினவேறு காட்டுதிரேல் தீரும்—இனவேகப்
பாம்புகலி யால்நிமிரும் பன்னச் சடைமுடிநம்
பூம்புகலி யான்இதழிப் போது. 11

(கட்டளைக்கலித்துறை)

போதும் பெறுவிடிற் பச்சிலை
உண்டு புனல்உண்டெங்கும்
ஏதும் பெறுவிடின் நெஞ்சுண்டன்
றேஇணை யாகச்செப்பும்
சூதும் பெறுமுலை பங்கர்தென்
றோணி புரேசர்வண்டின்
தாதும் பெறுத அடித்தா
மரைசென்று சார்வதற்கே. 12

திருச்சிற்றம்பலம்

28

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(இணைக்குறள் ஆசிரியப்பா)

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றுது

---

11. போது எனவே எழுந்திருந்தாள் - போது என்று சொன்ன மாத்திரத்தில் மயக்கம் தீர்ந்து எழுந்திருந்தாள். **பாம்பு கலியால் நிமிரும்** - பாம்புகள் ஆரவாரத்தோடு எழும். **பன்னச் சடை** - பிரிவின்றி ஒன்றாக இசைந்த சடை.

வலம்புரி நெடுமால் ஏன மாகி நிலம்புக்
காற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி யகஞ்சேர்ந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறுத்துப்
பொலிந்துள தொருபால் திருவிடை இலங்கொளி
அரத்த ஆடை விரித்து மீதுறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றாகும் ஒருபால் திருவிடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையும்
கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்
நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்

1. அர்த்த நாரீசுவரத் திருக் கோலம். அடி, 1–9. இறைவன் பாகமாகிய வலப்பால் திருவடியைப் பற்றிக் கூறுகிறார். 9. ஒருபால் திருவடி திகழ்ந்துள்ளது. 9-16. அம்பிகையின் பாகமாகிய இடப்பால் திருவடியின் இயல்பு. 12. நூபுரம் - சிலம்பு. 15. பஞ்சி - பஞ்சு. 19. யாப்புறுத்து - கட்டி. 21. அரத்த ஆடை - செவ்வாடை. 25. கேழற்கோடும் - பன்றிக் கொம்பும். அக்கு - எலும்பு. 26. நூல் - முப்புரி நூல். 29. வடம் - முத்துமாலை.

பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகே ழீன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவும்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரம் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
நொம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்
தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்
இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்கும் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டுநீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்
றெம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்றுணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கட் டலையும்
அரவும் மதியமும் விரவித் தொடுத்துச்
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகங் கரந்த பால்நிற அன்னம்
காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
சேண்இகந் துளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்

அடி, 31. முகிழ் - அரும்பு. 34. அயில் - கூர்மை. 35. பூ - பொலிவு. 38. சூடகம் - வளை. 39. நொம்மென் பந்து - கனமில்லாத மெல்லிய பந்து. 48. மத்தம் - ஊமத்த மலர். 50. பசிய கண்ணையுடைய தலை.

கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து
வண்டுந் தேனுங் கிண்டு திளைப்பத்
திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி
இனையவண் ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி
வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாணுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலகம் ஏழும் பன்முறை ஈன்று
மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே. 1

(வெண்பா)

பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதாஎன் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும். 2

(கட்டளைக்கலித்துறை)

வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன்புகழ் மாமருதிற்

அடி. 73. சிறைக்கருப்பாசயம் - சிறை போன்ற கருப்பப் பையில். சேரா வாழ்வு, புகா வாழ்வு என்க.

2. ஒருவர் கருதா என்பு ஆர்க்கும் - வேறொருவரும் அணிதற்குரியது என்று கருதாத என்பை மாலையாகக் கட்டி அணிந்த. மருதா என்பார்க்குப் பொருள் முதலியன வரும்.

பெருந்தேன் முகந்துகொண் டுண்டு
பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே. 3

(நேரிசை ஆசிரியப்பா)

ஒன்றிணோ டொன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன் று வகுத்த
ஓவநூற் செம்மைப் பூவியல் வீதிக்
குயிலென மொழியும் மயிலியல் ஆயத்து
மான்மாற விழிக்கும் ஆணுச் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்த எந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்றல்
ஆரணந் தொடராப் பூரண புராண
நாரணன் அறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யானொன் றுணர்த்துவ துளதே யான்முன்
நனந்தலை உலகத் தனந்த யோனியிற்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழித்
தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்
தியாயுறு துயரமும் யானுறு துயரமும்
இறக்கும் பொழுதின் அறப்பெருந் துன்பமும்
நீயல தறிகுநர் யாரே அதனால்
யான்இனிப் பிறத்தல் ஆற்றேன் அஃதான்
றுற்பவந் துடைத்தல் கிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியின் இல்லைஅந் நெறிக்கு

4: அடி, 4. ஓவ நூல் - சித்திரக்கலை நூல். 12. ஏக நாயகர் : இடைமருதில் எழுந்தருளிய இறைவர் பெயர்களில் ஒன்று. 14. நனந்தலை - விரிந்த இடத்தையுடைய. 15. கறங்கென - காற்றாடியைப் போல. 16. ஈற்றுத் துன்பம் - பிரசவ வேதனை. 21. உற்பவம் - பிறவியை.

வேண்டலும் வெறுத்தலுமாண் டொன்றிற் படரா
உள்ளமொன் றுடைமை வேண்டுமஃ தன்றி
ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையும்
இதுவென துள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙனம் முன்னம்
கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
எற்பிற ருளரோ இறைவ கற்பம்
கடத்தல்யான் பெறவும் வேண்டுங் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உறையெயிற் றுரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே. 4

(வெண்பா)

கண்ணென்றும் எந்தமக்கோர் காப்பென்றுங் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூல எழுத்தென்றும்—மொண்ணை
மருதவப்பா என்றும்உனை வாழ்த்தாரேல் மற்றும்
கருதஅப்பால் உண்டோ கதி. 5

(கட்டளைக்கலித்துறை)

கதியா வதுபிறி தியாதொன்றும்
இல்லை களேவரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப்
போமிது போனபின்னர்
விதியாம் எனச்சிலர் நோவதல்
லால்இதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ
லேசென்று வாழ்த்துவதே. 6

---

6. களேவரம் - உடம்பு.

(நேரிசை ஆசிரியப்பா)

வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்கா
துண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவைபகர்ந் தேவி
ஆரா உண்டி அயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனும் ஒழுக்கமுங் கல்வியும்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதன் ஏவல் கேட்கும்
சிறாஅர்த் தொகுதியின் உறாஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஒரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய அந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைமையள் ஆயினும்
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி உண்டிவேட் டிருப்ப
எள்ளுக் கெண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்
ஆற்றல்செல் லாது வேற்றோர் மனைவயிற்
கற்புடை மடந்தையர் பொற்புநனி வேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியின்
அகமலர்ந் தீவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங் குதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்தவர்

---

7. அடி, 3. வெஃகி - விரும்பி. 4. அவி - சோறு. 6. தூராக் குழி - வயிறு. 10. தொகுதியின் - கூட்டத்தைப் போல. 20. அருளில் மடந்தையர் - விலை மகளிர்.

தாளின் ஆற்றலுந் தவிர்த்துக் கேள்இகழ்ந்
திகழும் பரமும் இல்லை என்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையும் ஒருவ ராக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்ந்
தியோசனை கமழும் உற்பல வாவியிற்
பாசடைப் பரப்பிற் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமுஞ் சூழ்ந்த மருத வாண
சுருதியுந் தொடராச் சுருதி நாயக
பத்தருக் கெய்ப்பினில் வைப்பென உதவும்
முத்தித் தாள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனைவியும் ஒக்கலுந் திருவும்
பொருளென நினையா துன்அரு ளினைநினைந்
திந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னக் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடொன் றுதவுழி எடுத்தாங்
கிடுவோர் உளரெனின் நிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி ஓவாத்

அடி, 29. **தாளின் ஆற்றலும் தவிர்த்து** – காலின் பலத்தைப் போக்கி. கேள் – உறவினரை. 31. பட்டிமை - புல்லறிவுடைமை. 35. உற்பலவாவி - குவளைப் பூம்பொய்கை. 37. பார்ப்பு - குஞ்சு. 42. முத்தித்தாள - முத்தியையே திருவடியாக உடையவனே. 44. ஒக்கல் - உறவினர். 48 சீரை - மரவுரி. துன்னக் கோவணம் – தையலையுடைய கோவணம். 50. சிதவல் ஓடு - சிதைந்த ஓடு. 51. நிலைமையில் நின்று அயின்று - நின்றபடியே உணவை உட்கொண்டு. 52. தரையாகிய படுக்கையிலே படுத்து.

தகவெனும் அரிவையைத் தழீஇ மகவெனப்
பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்குநின்
செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கின் உற்றநா யேற்குக்
குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப்
பிரளய சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற் றுதலின்
நின்சீர் அடியார் தஞ்சீர் அடியார்க்
கடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடைலை யாக்கையொடு புடைபட் டொழுகிஅவர்
காற்றலை ஏவல்என் நாய்த்தலை ஏற்றுக்
கண்டது காணி னல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே. 7

(வெண்பா)

பிறிந்தேன் நரகம் பிறவாத வண்ணம்
அறிந்தேன் அநங்கவேள் அம்பிற்—செறிந்த
பொருதவட்ட விற்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டந் தன்னுளே வந்து. 8

(கட்டளைக்கலித்துறை)

வந்திகண் டாய்அடி யாரைக்கண்
டால்மற வாதுநெஞ்சே
சிந்திகண் டாய்அரன் செம்பொற்
கழல்திரு மாமருதைச்
சந்திகண் டாயில்லை யாயின்
நமன்தமர் தாங்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை
வீழ்த்தி உழக்குவரே. 9

அடி, 57. குளப்படி நீரும் - குளம்பு மறையும் அளவுள்ள நீரும். 46 - 59. இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும் குளப்படி நீரையும், தொண்டர் வாழ்வு பிரளய சலதியையும் ஒத்தன. 62. முடைலை - நாற்றம். 63. கால் தலை ஏவல் - காலால் இடும் வேலையை.

8. பொருத வட்டமாகிய வில்லுக்குப் பிழைத்து.

(நேரிசை ஆசிரியப்பா)

உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்
தண்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சி நேர்நின்று
தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக் கஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட் டம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து புண்ணிய
அஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்குஞ் சுடர்முகம் ஐந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை யதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதரும்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதின் அருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது

---

10. அடி, 1. உழப்பு - உழைப்பு. கழப்பு - சோர்வு. 4. தூர்வை செய்து - குழியைத் தூர்த்து. 10. பட்டி அஞ்சினுக்கு - முரட்டு மாடுகளைப் போன்ற ஐந்து பொறிகளுக்கு. 13. அருகா - குறையாத.

மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தொழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
இச்சைவித் துகுத்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவா
திமைப்பிற் கழியும் இயற்கையோ ருடைத்தே. 10

(வெண்பா)

உடைமணியின் ஓசைக் கொதுங்கி அரவம்
படமொடுங்கப் பையவே சென்றங்—கிடைமருதர்
ஐயம் புகுவ தணியிழையார் மேல்அநங்கன்
கையம் புகவேண்டிக் காண். 11

(கட்டளைக்கலித்துறை)

காணீர் கதியொன் றும் கல்லீர்
எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ் ஆசைப்பட்டுப்

அடி, 27. செம்மாந்து இருப்ப - யாதொரு கவலையும் இன்றி இருக்க. 31. சிற்றின்பமாகிய கானல். 32. புல்வாய் மான். 41. ஓர்: அசைநிலை.

11. கை அம்பு உக வேண்டி. பிச்சைக்குப் புகுவது பெண்கள் மன்மதனது அம்பால் துன்புறுவதற்காகத்தான்.

பூணீர் உருத்திர சாதனம்
நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப்
பிரான்கழல் மேவுதற்கே. 12

(நேரிசை ஆசிரியப்பா)

மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்
றூரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குட்
பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா
தின்னது யானென் றறியேன் என்னை
எங்குந் தேடினன் யாதிலுங் காணேன் முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தைஅழல் ஊட்டிக்
கண்படை யாகக் காமனை ஒருநாள்
நுண்பொடி யாக நோக்கி அண்டத்து
வீயா அமரர் வியவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப

---

12. உருத்திரசாதனம் – ருத்திராட்சம்.
13. அடி, 7. வழும்பு - மச்சை. 14. மேருமலையாகிய வில்லினால். 21. வகுளம் - மகிழமரம்.

எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கை நாயகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையுங் கண்டேன் என்னே
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே. 13

(வெண்பா)

ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராயோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம் 14

(கட்டளைக்கலித்துறை)

நாமே இடையுள்ள வாறறி
வாம்இனி நாங்கள்சொல்ல
லாமே மருதன் மருத
வனத்தன்னம் அன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய்
தார்ஒரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம்
ஏற்றுதல் தக்கதன்றே. 15

15 இடை இந்தப் பாரத்தால் நில்லாது என்று அஞ்சிய படி. அன்ன மன்னவர் - தலைவி.

(நேரிசை ஆசிரியப்பா)

அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக் கொற்றத்து
நுண்பொடி அணிந்த எண்டோட் செல்வ
கயிலைநடந் தனைய உயர்நிலை நோன்றாட்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதிமிற்
பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமையச் செல்வன்
மணியெனப் பெற்ற அணியியல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற் றம்மைப் பிராட்டி
மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையா ளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பணைக்கைபோந் தனைய
தழைசெவி எண்டோள் தலைவன் தந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வேல்
அமரர்த் தாங்குங் குமரன் தாதை
பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி இடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
திறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு

16, அடி, 1. **அன்றினர் - பகைத்தவர்.** 4. **நோன்தாள் - வலிய காலையுடைய:** 15. **ஐய - அழகிய.** 20. **எண்டோள் தலைவன் - விநாயகர்.**

தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் பெறுக்கன் முப்பழங் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்று கண்ணகன்று
தேந்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழற்றீங் கன்றே. 16

(வெண்பா)

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும். 17

(கட்டளைக்கலித்துறை)

நோக்கிற்றுக் காமன் உடல்பொடி
யாக நுதிவிரலால்
தாக்கிற் றரக்கன் தலைகிழ்ப்
படத்தன் சுடர்வடிவாள்

அடி, 30. தேவர் ஆ - காமதேனு. 35 அயினி - சோறு. 37. மடாஅ - உண்ணாத. 39. துறுமி – செறிந்து. 40. வாலுகம் - மணல்.

17. ஆறு சமயங்களும் முடிவில் மருதனையே நோக்கி வந்து முடியும்.

ஓக்கிற்றுத் தக்கன் தலைஉருண்
டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயர்பொன்னி சூழ்மரு
தாளுடைப் புண்ணியமே. 18

(நேரிசை ஆசிரியப்பா)

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த கைலை நாயக
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக
வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினுங் கரந்தை யாயினும்
பச்சிலை இட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை உலகத்துப் பல்பல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவரும்
காடும் மலையும் புக்குக் கோடையிற்
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று
மாரி நாளினும் வார்பனி நாளினும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்
சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணு துழன்றும்

18. நுதி – நுனி. ஓக்கிற்று - ஓங்கியது. **புண்ணியம் – புண்ணிய உருவானவன்.**

19. அடி, 14. ஒக்கலை - சுற்றத்தாரை. 18. அழுவம் - பரப்பு. 21. தலையைப் பறித்தும் - மயிரைப் பறித்து மூண்டனமாக்கியும்.

காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்
களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித் தாங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்
பழுதின் றுயர்ந்த எழுநிலை மாடத்தும்
செந்தா துதிர்ந்த நந்தன வனத்தும்
தென்றல் இயங்கும் முன்றி லகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்
மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டாண் டிட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீது பரிபுரம் மிழற்றச்
சாயலன் னத்தின் தளர்நடை பயிற்றிப்
பொற்றோ ரணத்தைச் சுற்றிய துகிலென
அம்மென் குறங்கின் நொம்மென் கலிங்கம்
கண்ணும் மனமுங் கவற்றப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கிற் கிடப்ப
ஆடர வல்குல் அரும்பெறல் நுசுப்பு

அடி, 35. ஆல - நடமாட. குயிற்றிய குன்று - செய் குன்று. 37. மருப்பின் இயன்ற - தந்தத்தால் செய்யப் பெற்ற. 38 படுத்த - பரப்பிய. 40. வெண்மடி - வெள்ளைத் துணி. 42. நெட்டணை - நீண்ட படுக்கை. கொட்டைகள் - திண்டுகள். 46. நொம்மென் கலிங்கம் - மிகவும் மெல்லிய ஆடை. 49. நுசுப்பு - இடை.

வாட வீங்கிய வனமுலை கதிர்ப்ப
அணியியல் கமுகை அலங்கரித் ததுபோல்
மணியியல் ஆரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கிய அணிகெழு மென்றோள்
வரித்த சாந்தின்மிசை விரித்துமீ திட்ட
உத்தரீ யப்பட் டொருபால் ஒளிர்தர
வள்ளை வாட்டிய ஒள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்
கொழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலுங் காம பாணமும்
ஆல காலமும் அனைத்துமிட் டமைத்த
இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழன்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்
அறுசுவை அடிசில் வறிதினி தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசு நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்
மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்
திவ்வகை இருந்தோ மாயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை அன்றே என்னெனின்
வல்லான் ஒருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்

அடி, 58. குமிழென்றது நாசியை. 63. விரை - வாசனை.
70. தூசு - ஆடை. 71. ஆர ஆர்ந்து - நிரம்ப நுகர்ந்து.

நிலத்தின் வழாஅக்கல் லேபோல்
நலத்தின் வழாஅர்நின் நாமம்நவின் றோரே. 19

(வெண்பா)

நாமம்நவிற் றுய்மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல்—ஆமோ
பொருதவனத் தானைஉரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வளைந்து. 20

(கட்டளைக்கலித்துறை)

வளையார் பசியின் வருந்தார்
பிணியின் மதனன் அம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில்
லார்இப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கென்கட
வார்பொன் அலர்ந்தகொன்றைத்
தளையார் இடைமரு தன்னடி
யாரடி சார்ந்தவரே. 21

(நேரிசை ஆசிரியப்பா)

அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்

அடி, 80. நிலத்தின் வழாஅ - நிலத்திலே வந்து விழுவதினின்றும் தப்பாத

20. பொருதவனத்து ஆனை உரி - எதிர்த்த காட்டானையின் தோலை.

22. அடி, 6. துளக்கு அற - நடுக்கமின்றி.

எறுப்புத் துளையின் இருசெவிக் கெட்டா
துறுப்பினின் றெழுதரும் உள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்
ஏனைய தன்மையும் எய்தா தெவற்றையும்
தானே ஆகி நின்ற தற்பர
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்புரை கண்டத் தேக நாயக
சுருதியும் இருவருந் தொடர்ந்துமின் றமைர
மருதிடங் கொண்ட மருதமா ணிக்க
உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத் தென்தனி நாயக
அடியேன் உறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கல்மனக் கயவரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை ஈர்க்கப்
கருப்பா சயமெனும் இருட்சிறை அறையிற்
குடரென் சங்கிலி பூண்டு தொடர்பட்டுக்
கூட்டுச்சிறைப் புழுவின் ஈட்டுமலத் தழுந்தி
உடனே வருந்தி நெடுநாட் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லற் படுத்தும்
தண்ட லாளர் மிண்டிவந் தலைப்ப
உதர நெருப்பிற் பதைபதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டும்

அடி, 7. எறும்புத் துளையின் - எறும்பு வளை போன்று அமைந்த. 10. தேறல் - தேன். 11. துண்டத் துளையில் - மூக்குத் துவாரத்தில். 19. இருவரும் - பிரமாவும் திருமாலும். 26. கருப்பாசயம் - கருப்பப் பை. 31. தண்டலாளர் - வரியைத் தண்டுகிறவர்கள். மிண்டி - நெருங்கி. 33. வாதமத்திகையின் - வாயுவாகிய சவுக்கினால்.

கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லா
திடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்
பாவப் பகுதியில் இட்டுக் காவற்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவருங் கடுப்ப அவாவது கூட்டி
ஈண்டின கொண்டும் மீண்டு வந்துழி
இட்டுழி இடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்
நின்னை அடைந்த அடியார் அடியார்க்
கென்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்டபச் சிலைகொண் டொட்டி அறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமற்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. 22

(வெண்பா)

சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய—இடையேபோய்ச்
சங்கை கலையே மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே இருக்க இவள். 23

அடி, 37. ஐவர் - ஐம்பொறி. 42. பரியாது - பிறர் துன்பங் கண்டு இரங்காமல். 44. புல் இனம் - இழிந்தவர்களின் கூட்டத்தை.

23. எங்கே இருக்கலாமென்ற எண்ணத்தால் இடைமருதீசர்மேற் காதல் கொண்டாள்?

(கட்டளைக்கலித்துறை)

இருக்கும் மருதினுக் குள்ளிமை
யோர்களும் நான்மறையும்
நெருக்கு நெருக்கத்து நீளகத்
துச்சென்று மீளவொட்டாத்
திருக்கு மறுத்தைவர் தீமையுந்
தீர்த்துச்செவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தி னுள்ளே
முளைக்கின்ற ஒண்சுடரே. 24

(நேரிசை ஆசிரியப்பா)

சுடர்விடு சூலப் படையினை என்றும்
விடை உகந் தேறிய விமல என்றும்
உண்ணு நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணுற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்
கரியுரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்
சிரகஞ் செந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்
சலந்தரன் உடலந் தடிந்தனை என்றும்
அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலியுரி உடுத்தனை என்றும்
ஏனமும் அன்னமும் எட்டா திளைப்ப
வானங் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
செழுநீர் ஞாலஞ் செகுத்துயிர் உண்ணும்
அழல்விழிக் குறளை அமுக்கினை என்றும்

---

24. ஒண் சுடர் மருதினுக்குள் இருக்கும். திருக்கும் - மயக்கத்தையும். ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே-ஒருமைப்படுத்தித் தியானிக்கும் நிலையில்.

25. அடி, 8. சிரகம் - கமண்டலம்.

இனையன இனையன எண்ணில் கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயிற் புகழ்தல்
துளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலின்
அளப்பரும் பெருமைநின் அளவல தாயினும்
என்றன் வாயிற் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை
இடுக்கண் களையா அல்லற் படுத்தா
எழுநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகிற் பதாகை கொண்டுகொண் டுகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர்
அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்த
கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின்னினைந் தெறிந்த அதனால்
அன்னவன் றனக்கும் அருள்பிழைத் தின்றே. 25

(வெண்பா)

இன்றிருந்து நாளை இறக்குந் தொழிலுடைய
புன்றலைய மாக்கள் புகழ்வரோ—வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி. 26

(கட்டளைக்கலித்துறை)

அடியா யிரந்தொழில் ஆயின
ஆயிரம் ஆயிரம்பேர்
முடியா யிரங்கண்கள் மூவா
யிரம்முற்றும் நீறணிந்த

அடி, 18. குறளை - முயலகனை. 32. புத்தன் - சாக்கிய நாயனார். 34. பிழைத்தின்று - தவறாமல் கிடைத்தது.

தொடியா யிரங்கொண்ட தோள்இரண்
டாயிரம் என்றுநெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு
தாளியைப் பற்றிக்கொண்டே. 27

(நேரிசை ஆசிரியப்பா)

கொண்டலின் இருண்ட கண்டத் தெண்தோட்
செவ்வான் உருவிற் பையர வார்த்த
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கைலாய வாண கௌரி நாயக
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கட் டடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனும்
தாரகற் செற்ற வீரக் கன்னியும்
பூவின் கிழத்தியும் நாவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும்
ஆனைப் பெருந்திறல் வானோர் தலைவனும்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் சமனும் சுருதிகள் நான்கும்
வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்

---

28. **அடி,** 13. விநாயகர். 17. துர்க்கை. 22. துவாதசாதித்தர். 24. சமன் - எமன். 25. இருநிதிக் கிழவன் - குபேரன்.

எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன் றானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி ஊளைகேட் டரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் றன்னை ஏத்தின என்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்றுநாய்க் கட்டம் எடுத்தும்
காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

அடி, 30. தேவாரம் பாடிய மூவர். 31. மாணிக்கவாசகரும். 34 - 55. வரகுண பாண்டியன் பெருமை. 41. மஞ்சனத்து இயற்றிய – அபிடேகத்துக்காக விளைத்த. 50. கட்டம் - மலம்.

இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதோர் பாடும் இன்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையேன் நின்னை
இறைஞ்சில னாயினும் ஏத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்தும் நன்மை தீமை
ஆனவை நின்செய லாதலின்
நானே அமையும் நலமில் வழிக்கே. 28

(வெண்பா)

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம்—பொழில்சூழ்
மருதிடத்தான் என்றொருகால் வாய்கூப்ப வேண்டா
கருதிடத்தாம் நில்லா கரந்து. 29

(கட்டளைக்கலித்துறை)

கரத்தினில் மாலவன் கண்கொண்டு
நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதவப்
பாமதி ஒன்றும்இல்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையு
ளாகிவெண் காடனென்னும்
தரத்தினு மாயது நின்னடி
யாந்தெய்வத் தாமரையே. 30

திருச்சிற்றம்பலம்

---

29. வாயினால் சொல்லக்கூட வேண்டாம்; நினைத்தாலே போதும்.

29

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

மெய்த்தொண்டர் செல்லும் நெறிஅறி
யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்
டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற
மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி ஏகம்பனே. 1

ஏகம்ப னேஎன்னை ஆள்பவ
னேஇமை யோர்க்கிரங்கிப்
போகம்பன் னாளுங் கொடுக்கின்ற
நாயக பொங்குமைவாய்
நாகம்பொன் னாரம் எனப்பொலி
வுற்றுநன் னீறணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ
னேஎன்பன் ஆதரித்தே. 2

தரித்தேன் மனத்துன் திகழ்தரு
நாமம் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப
னேஎன்றன் வல்வினையை

---

1. புறம் புறமே - புறத்தில் மாத்திரம்.
2. ஆகம் - திருமார்பு.
3. வரித்தேன் - வரிகளையுடைய வண்டுகள். அரித்தேன் - ஒழித்தேன்.

அரித்தேன் உனைப்பணி யாதவர்
ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யார்அடி
பூணத் தெளிந்தனனே. 3

தெளிதரு கின்றது சென்றென்
மனம்நின் திருவடிவந்
தளிதரு நின்னருட் கையம்
இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனிஎம் ஏகம்ப
னேஎன் றுகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் றன்தலை
மேல்வைத்த தன்மைபெற்றே. 4

பெற்றுகந் தேன்என்றும் அர்ச்சனை
செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந் தேன்என் கருத்தினி
தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ
னேபட நாகக்கச்சின்
சுற்றுகந் தேர்விடை மேல்வரு
வாய்நின் துணையடியே. 5

அடிநின்ற சூழல் அகோசரம்
மாலுக் கயற்கலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி
தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை
ஏகம்ப யாம்எங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை
யாயை வணங்குவதே. 6

---

4. செக்கர் - செவ்வானம். தாளாகிய திருக்கோயிலிலே உள்ள புழுதி; தளி - கோயில்.

5. பற்று - வாழும் இடம். ஏறும் - இடப வாகனத்தையும்.

வணக்கந் தலைநின் திருவடிக்
கேசெய்யும் மையல்கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி
வோமல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி
ஏகம்பங் கூடினல்லாற்
கணக்கன்று மற்றொரு தேவரைப்
பாடுங் கவிநலமே. 7

நலந்தர நானொன்று சொல்லுவன்
கேண்மின்நல் லீர்கள்அன்பு
கலந்தர னார்கச்சி ஏகம்பம்
கண்டு கனற்றிகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத்
தாய்தக்கன் வேள்வியெல்லாம்
நிலந்தர மாகச்செய் தாயென்று
பூசித்து நின்மின்களே. 8

மின்களென் றார்சடை கொண்டலென்
றார்கண்டம் மேனிவண்ணம்
பொன்களென் றார்வெளிப் பாடுதம்
பொன்அடி பூண்டுகொண்ட
என்களென் றாலும் பிரிந்தறி
யார்கச்சி ஏகம்பத்தான்
றன்களென் றாருல கெல்லாம்
நிலைபெற்ற தன்மைகளே. 9

தன்மையிற் குன்றாத் தவத்தோர்
இமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி
ஏகம்பர் வண்கயிலைப்

---

6. மாலுக்கு அகோசரம் — திருமாலுக்குப் புலப்படாதது.
7. இணக்கு — நட்பு. அரவின் குணம் - அரவாகிய நாணை யுடைய. கணக்கு - நியாயம்.
8. அன்பு கலந்து. நிலந்தரமாக — அழியும்படி.

பொன்மயிற் சாயலுஞ் சேயரிக்
கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயும் மருங்குலுங்
காதல் விளைத்தனவே. 10

தனமிட் டுமைதழு வத்தழும்
புற்றவர் தம்அடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி
ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு
வினவியோர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம்
பொழுதும்நம் பூங்கொடியே. 11

பூங்கொத் திருந்தழை யார்பொழிற்
கச்சிஏ கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக்
கயிலைஎம் பொன்னொருத்தி
பாங்கொத் திருந்தனை ஆரணங்
கேபடர் கல்லருவி
ஆங்கத் திருந்திழை ஆடிவந்
தாற்கண் டடிவருத்தே. 12

வருத்தந் தருமெய்யுங் கையில்
தழையும்வன் மாவினவும்
கருத்தந் தரிக்கு நடக்கவின்
றைய கழல்நினையத்

---

10. தலைவன் பாங்கனிடம் கூறுதல்.
11. தலைவிக்குத் தோழி கூறியது. சேய் அனையார் – முருகவேளைப் போன்றவர்.
12. நாண நாட்டம். எம்மைச் சேர்ந்த தலைவியின் இயல்பை ஒத்திருந்தாய். அருவி ஆடி வந்தால். கண்டு அடி வருத்தே - அவளைக் கண்டு பிறகு செல்வாயாக.
13. பாங்கி எதிர்மொழி கொடுத்தல்.

திருத்தந் தருளுந் திகழ்கச்சி
ஏகம்பர் சீர்க்கயிலைத்
துருத்தந் திருப்பதன் றிப்புனங்
காக்குந் தொழில்எமக்கே. 13

எம்மையும் எம்மைப் பணிகொள்ளுங்
கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத்
தேவிற்று வந்தமைந்தர்
தம்மையும் மானையுஞ் சிந்தையும்
நோக்கங் கவர்வவென்றோ
அம்மையும் அம்மலர்க் கண்ணும்
பெரியீர் அருளுமினே. 14

அருளைத் தருகம்பர் அம்பொற்
கயிலையுள் எம்மையரம்
பிருளைக் கரிமறிக் கும்மிவ
ரைய ருறுத்திஎய்ய
வெருளக் கலைகணை தன்னொடும்
போயின வில்லிமைக்கும்
மருளைத் தருசொல்லி எங்கோ
விலையுண்டிவ் வையகத்தே. 15

வையார் மழுப்படை ஏகம்பர்
ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயா வருகலை ஏனங்
கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்ததெம்
பூங்கொடி கொங்கைபொருப்
பையார் அரவிடை யாயிற்று
வந்து பரிணமித்தே. 16

---

14. தலைவன் கூற்று.

16. அரவிடை யாயிற்றென்றது இல்லையாயிற்று என்ற குறிப்பினது. தோழி கூற்று.

பருமுத் துதிர்த்திடுஞ் சீர்மத்த
யானை நுதல்பகுந்திட்
டுருமொத்த திண்குரற் சியந்
திரிநெறி ஓங்குவைவாய்ப்
பொருமுத் தலைவேற் படைக்கம்பர்
பூங்கயி லைப்புனத்துள்
தருமுத் தனநகை தன்னசை
யால்வெற்ப சார்வரிதே. 17

அரிதன் திருக்கண் இடந்திரம்
பாயிரம் போதணிய
அரிதன் திருவடிக் கர்ச்சித்த
கண்ணுக் கருளுகம்பர்
அரிதன் திருக்கங் குலியால்
அழிந்த கயிலையல்லிங்
கரிதென் றிருப்பதெம் பால்வெற்ப
எம்மையர்க் கஞ்சுதுமே. 18

அஞ்சரத் தான்பொடி யாய்விழத்
தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி
ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங்
கொம்புய்யக் கும்பமூழ்கும்
வெஞ்சரத் தாரன வோஅல்ல
வோஇவ் வியன்முரசே. 19

---

17. தோழி இரவு வரல் விலக்கல். சீயம் – **சிங்கம். நசையால் - விருப்பத்தால்.**

18. தோழி கூற்று. அரிதன் திருக்கு **அங்குலியால் அழிந்த** - பகைவனாக வந்த இராவணனது மயக்கம் **இறைவன் விரலால்** அழிந்து போன.

19. அம் சரத்தான் - காமன்.

சேய்தந் தகைமை உமைகண
வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாய்உயிர் காப்போன்
கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊச
லொடும்விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்ட
தோசை பகடுவந்தே. 20

வந்தும் மணம்பெறிற் பொன்னனை
யீர்மன்னும் ஏகம்பர்தாம்
முந்து மருவிக் கயிலை
மலையுயர் தேன்இழிச்சித்
தந்து மலர்கொய்துந் தண்டினை
மேயுங் கிளிகடிந்தும்
சிந்தும் புகர்மலை கைச்சுமிச்
சாரல் திரிகுவனே. 21

திரியப் புரம்எய்த ஏகம்ப
னார்திக ழுங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத்
திடுதர ளம்வினையோம்
விரியச் சுருண்முத லானும்
அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முற்றி னீர்பெற்ற
தென்னங்குப் பேசுமினே. 22

---

20. யானை வேங்கை மரத்தைக் குத்தியதால் ஓசை உண்டாயிற்று. தலைவி கூற்று.

21. தலைவன் கூற்று. இழிச்சித்தந்தும் - இறக்கிக் கொடுத்தும். புகர்மலை கைச்சும் - யானையை ஓட்டியும். உம்மை மணக்கப் பெறின் இந்த ஏவல்களை யெல்லாம் செய்வேன்.

பேசுக யாவரு மைக்கணி
யாரென்று பித்தரெங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில்
ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பன்
பிரியும் பரிசிலரக்
கூசுகை யாதுமில் லாக்குலை
வேங்கைப் பெயர்நும்மையே. 23

பெயரா நலத்தெழில் ஏகம்ப
னூர்பிறை தோய்கயிலை
பெயரா திருக்கப் பெறுகிளி
காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மனமுமிங்
கோடித் தொழுதுசென்ற
தயரா துரையும்வெற் பற்கடி
யேற்கும் விடைதமினே. 24

தம்மைப் பிறவிக் கடல்கடப்
பிப்பவர் தாம்வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்தெழில்
ஏகம்பர் மொய்கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடின்
பந்தருந் தண்புனமே
எம்மைக் கவலை செயச்சொல்லி
யோவல்லி எய்தியதே. 25

---

23. கணியார் - வேங்கை மரம்; நினைக்காதவர் என்பது வேறு பொருள். நும்மையே பிரியும் பரிசிலர்.

24. தலைவி கூற்று. அயராது - மறவாமல்.

25 தலைவன் வரும் புனம் கண்டு வருந்துதல்.

இயங்குந் திரிபுரம் எய்தவ
கம்பர் எழிற்கயிலைத்
தயங்கு மலர்ப்பொழில் காள்தையல்
ஆடரு வித்தடங்காள்
முயங்கு மணியறை காள்மொழி
யீர்ஒழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னூர்சென்ற
சூழல் வகுத்தெமக்கே. 26

வகுப்பார் இவர்போல் மணத்துக்கு
நாள்மணந் தன்னொடின்பம்
மிகுப்பார்க ளாருயி ரொன்றும்
இருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பான் மலர்கொண்டு நின்றூர்
கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பான் மணிசிந் தருவிக்
கயிலைஇச் சூழ்புனத்தே. 27

புனங்குழை யாதென்று மென்தினை
கொய்ததும் போகலுற்ற
கனங்குழை யாடற் பிரிய
நமக்குறுங் கையறவால்
மனங்குழை யாவருங் கண்கனி
பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழை யாத்தொழும் ஏகம்பர்
இக்கயி லாயத்துள்ளே. 28

உள்ளம் பெரியரல் லாச்சிறு
மானுடர் உற்றசெல்வம்

---

26 தலைவன் கூற்று. தையல் ஆடு அருவி. மணி அறை — பளிங்குப் பாறை.

27. தோழி வரையும் நாள் உணர்த்தல். இந்த வேங்கை மரம் பூத்தது; இது மணம் செய்யத்தக்க நாள் என்பது குறிப்பு. இவரென்றது வேங்கையை.

28. தலைவன் கூற்று. குழையாது - தழைக்காது. திணை கொய்தவுடன் தலைவியை இற்செறித்து விட்டார்கள்.

கள்ளம் பெரிய சிறுமனத்
தார்க்கன்றிக் கங்கையென்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு
ஏகம்பர் விண்ணரணம்
தள்ளம் பெரிகொண் டமைத்தார்
அடியவர் சார்வதன்றே. 29

அன்றும் பகைஅடர்க் கும்பரி
மாவும் மதவருவிக்
குன்றும் பதாதியுந் தேரும்
குலவிக் குடைநிழற்கீழ்
நன்றும் பொலியினுங் கம்பர்நன்
னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும்
பொலியா இருநிலத்தே. 30

நிலத்திமை யோரில் தலையாய்ப்
பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியா
எரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள்
ஏகம்பங் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர்
தம்மின் நடுப்படையே. 31

படையால் உயிர்கொன்று தின்று
பசுக்களைப் போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நட்பிடைப்
பொய்த்துக் குலங்களினும்
கடையாய்ப் பிறக்கினுங் கச்சியுள்
ஏகம்பத் தெங்களை ஆ
ளுடையான் கழற்கன்ப ரேல்அவர்
யாவர்க்கும் உத்தமரே. 32

---

29. தள் அம்பு எரி கொண்ட. 30. அன்றும் - பகைக்கும்.
31. நிலத்திமையோர் - பூசுரர். இறைவனைத் தொழாதவர் அந்தணராயினும் வேடுவரே.

உத்துங்க யானை உரியார்
விரலால் அரக்கன்சென்னி
பத்துங்கை யான இருபதும்
சோர்தர வைத்திலயம்
ஒத்துங்கை யால்அவன் பாடக்
கயிலையி னூடுகைவாள்
எத்துங்கை யானென் றுகந்தளித்
தார்கச்சி ஏகம்பரே. 33

அம்பரங் கால்அனல் நீர்நிலம்
திங்கள் அருக்கன்அணு
அம்பரங் கொள்வதோர் வேழத்
துரியவன் றன்னுருவாம்
எம்பரன் கச்சியுள் ஏகம்பத்
தான்இடை யாதடைவான்
நம்பரன் றன்னடி யாரறி
வார்கட்கு நற்றுணையே.

துணைத்தா மரையடி யும்பவ
ளத்திரள் நன்குறங்கும்
பணைத்தோ ளகலமுங் கண்டத்து
நீலமும் அண்டத்துமின்
பிணைத்தா லனசடை யுந்திரு
முக்கணும் பெண்ணொர்பக்கத்
தணைத்தார் எழிற்கம்பர் எங்கள்
பிரானார்க் கழகியவே. 35

அழகறி விற்பெரி தாகிய
ஏகம்பர் அத்தர்கொற்றம்
பழகறி விற்பெரி யோர்தமைப்
பற்றலர் பற்றும்அன்பின்

---

33. இலயம் ஒத்தும் - தாளம் போடும்.

34. அம்பரம் - ஆகாசம். அணு - ஆன்மா. அம்பரம் கொள்வது - ஆடையாக அணிந்து கொள்வது. உரியவன் உரு அம்பரம் முதலியன. இடையாது தளராமல்.

குழகறி வேற்பினுள் ஒன்றறி
யாரறி யாமைதெய்வம்
கிழகெறி யப்பட் டுலந்தார்
உலகிற் கிடந்தனரே. 36

கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற
பாம்பொரு பால்மதியம்
தொடக்குண் டிலங்கும் மலங்கும்
திரைக்கங்கை சூடுங்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை
வாளால் மலைந்தவெம்போர்
கடக்கும் விடைத்திரு வேகம்பர்
கற்றைச் சடைமுடியே. 37

கற்றைப் பவளச் சடைவலம்
பூக்கமழ் கொன்றையந்தார்
முற்றுற் றிலாமதி யின்கொழுந்
தேகம்பர் மொய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற்
கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ
காகித் திகழ்தருமே. 38

தருமருட் டன்மை வலப்பாற்
கமலக்கண் ணெற்றியின்மேற்
திருமலர்க் கண்பிள வின்றிக
ழுந்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்ணிடப் பாலது
நீலங் கனிமதத்து
வருநுதற் பொட்டணங் குக்குயர்ந்
தோங்கும் மலர்க்குழலே. 39

---

36. அழகிலும் அறிவிலும் பெரிய. கிழகு எறியப்பட்டு - கீழே எறியப்பட்டு; கிழக்கு என்பது கிழகு என நின்றது.

மலர்ந்த படத்துச்சி ஐந்தினும்
செஞ்சுடர் மாமணிவிட்
டலர்ந்த மணிக்குண் டலம்வலக்
காதினில் ஆடிவரும்
நலந்திரு நீள்வயி ரம்வெயிற்
பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை
ஏகம்பர் காதிடமே. 40

காதலைக் கும்வலத் தோள்பவ
ளக்குன் றம் அங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை
நீற்றின் பொலியகலம்
தாதலைக் குங்குழல் சேர்பணைத்
தோள்நறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிடம்
ஏகம்பர் சுந்தரமே. 41

தரம்பொற் பழியும் உலகட்டி
எய்த்துத் தரந்தளரா
உரம்பொற் புடைய திருவயி
றும்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத்
தரத்திடும் பூண்முலையும்
நிரம்பப் பொறுது தளரிள
வஞ்சியும் நேர்வுடைத்தே. 42

உடைப்புலி ஆடையின் மேலுர
கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்தொரு கோவணந் தோன்றும்
அரைவலம் மற்றையல்குல்

---

43. முஞ்சி - தருப்பையால் அமைத்த அரைநாண்.

தொடக்குறு காஞ்சித் தொடுத்த
 அரசிலை தூநுண்டுகில்
அடற்பொலி ஏறுடை ஏகம்பம்
 மேய அடிகளுக்கே. 43

அடிவலப் பாலது செந்தா
 மரையொத் ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற் கூற்றின் எருத்திற
 வைத்த திளந்தளிரின்
படிஇடப் பாலது பஞ்சுற
 அஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்பம்
 மேய வரதருக்கே. 44

தருக்கவற் றான்மிக்க முப்புரம்
 எய்தயன் றன்தலையை
நெருக்கவற் றோட மழுவாள்
 விசைத்தது நெற்கொன்றும்
பருக்கவற் றுங்கச்சி ஏகம்ப
 ரத்தர்தம் பாம்புகளின்
திருக்கவற் றுலிட் டருளுங்
 கடகத் திருக்கரமே. 45

கரத்தத் தமருகத் தோசை
 கடுத்தண்டம் மீபிளப்ப
வரத்தத்த பாதம் நெரித்திட்
 டவனி தலம்நெரியத்
தரத்தத் திசைகளுக் கப்புறம்
 போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர் ஆடுவர்
 எல்லியும் மாநடமே. 46

---

46. எல்லியும் - இரவிலும்.

நடனம் பிரான்உகந் துய்யக்கொண்
டானென்று நான்மறையோர்
உடன்வந்து மூவா யிரவர்
இறைஞ்சி நிறைந்தஉண்மைக்
கடனன்றி மற்றறி யாத்தில்லை
அம்பலங் காளத்தியாம்
இடமெம் பிரான்கச்சி ஏகம்பம்
மேயாற் கினியனவே. 47

இனியவர் இன்னு ரவரைஒப்
பார்பிறர் என்னவொண்ணுத்
தனியவர் தைய லுடனு
மவர்தரு மம்பணித்த
முனியவர் ஏறும் உகந்தமுக்
கண்ணவர் சண்டிஅன்புக்
கினியவர் காய்மழு வாட்படை
யார்கச்சி ஏகம்பரே. 48

பரவித் தனைநினை யக்கச்சி
ஏகம்பர் பண்ணுமையல்
வரவித் தனையுள்ள தெங்கறிந்
தேன்முன் அவர்மகனர்
புரவித் தனையடிக் கக்கொடி
தாய்விடி யாவிரவில்
அரவித் தனையுங்கொண் டார்மட
வார்முன்றில் ஆட்டிடவே. 49

இடவஞ் சுறுக்கெனப் பாயுமுஞ்
சென்னி நகுதலைகண்
டிடவஞ் சுவர்மட வார்இரி
கின்றனர் ஏகம்பத்தீர்

---

50. இடவம் - இடபம்.

படமஞ்சு வாயது நாகம்
    இரைக்கும் அதனுக்குமுற்
படவஞ் சுவர்எங்ங னேபலி
    வந்திடும் பாங்குகளே. 50

பாங்குடை கோட்புலி யின்அதள்
    கொண்டீர் நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள
    வந்தீர் தடங்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி
    ஏகம்பங் கோயில்கொண்டீர்
ஈங்கிடை கொள்ளக் கலைகொள்ள
    வந்தீர் இடைக்குமின்றே. 51

இடைக்குமின் தோற்கும் இணைமுலை
    யாய்முதி யார்கள்தஞ்சொற்
கடைக்கணன் றுங்கச்சி ஏகம்பர்
    ஐயங் கொளக்கடவும்
விடைக்குமுன் தோற்றமில்லைமின்
    றினிஇந்த மொய்குழலார்
கிடைக்குமுன் தோற்றநஞ் சங்கிது
    வோதங் கிறித்துவமே. 52

கிறிபல பேசிச் சதிரால்
    நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி
    ஏகம்பர் ஐயங்கொள்ள
நெறிபல வார்குழ லார்மெலி
    வுற்ற நெடுந்தெருவிற்
செறிபல வெள்வளை போயின
    தாயர்கள் தேடுவரே. 53

---

51. கோள் - கொலை செய்யும். பாரிடங்கள் – பூதங்கள்.
53. விடங்கு - காமக்குறிப்பு.

தேடுற் றிலகள்ள நோக்கம்
தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை
பொடித்தில கூறும்இவள்
மாடுற் றிலமணி யின்மட
அல்குலும் மற்றிவள்பால்
நாடுற் றிலஎழில் ஏகம்ப
ஞர்க்குள்ளம் நல்கிடத்தே. 54

நல்கும் புகழ்க்கட வூர்நன்
மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங்
கூற்றம் குளிர்திரைகள்
மல்குந் திருமறைக் காட்டமிர்
தென்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம்
மேவிய பொன்மலையே. 55

மலையத் தகத்தியன் அர்ச்சிக்க
மன்னி வடகயிலை
நிலையத் தமரர் தொழஇருந்
தான்நெடு மேருஎன்னும்
சிலையத்தன் பைம்பொன் மதிற்றிரு
வேகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு
வையாற் றருமணியே. 56
மணியார் அருவித் தடஇம
யங்குட கொல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த
சிராமலை யைவனங்கள்

---

54. தோழி தலைவியின் இளமைத் தன்மையைக் கூறுதல். பொடித்தில - தோன்றவில்லை.

56. மலையத்து - பொதியமலையில். பார்வதி திருக்கல்யாண கால நிகழ்ச்சி.

அணியார் அருவி கவர்கிளி
ஒப்புமின் சாரல்விந்தம்
பணிவார் அருவினை தீர்க்குமெ
கம்பர் பருப்பதமே. 57

பருப்பதங் கார்தவழ் மந்தரம்
இந்திர நீலம்வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங்
கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்பதங் காகுதி நாறு
மகேந்திரம் என்றிவற்றில்
இருப்பதங் காவுகந் தான்கச்சி
ஏகம்பத் தெம்மிறையே. 58

மிறைத்தார் புரம்எய்த வில்லிமை
நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றஞ்
செங்குன்ற மன்னற்குன்றம்
நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக்
குன்றம்என் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் ஏகம்பர்
குன்றென்று கூறுமினே. 59

---

57. இமயம், கைலாசத்தைத் தன்பால் உடையது. கொல்லிமலை, அறைப்பள்ளி என்னும் தலத்தை உடையது. விந்தம் - விந்தமலை.

58. எம் இறை இருப்பது பருப்பதம் முதலிய இடம். பருப்பதம் ஸ்ரீ பருப்பதம். வெள்ளை மருப்பது அங்கு ஆர் கருங்குன்று - யானை. பரங்குன்றம் - மதுரையை யடுத்துள்ள திருப்பரங்குன்றம். நெருப்பது அங்கு ஆகுதி நாறும்.

59. மிறைத்தார் - எதிர்த்து நின்றவர். இமவான் மகட்குக் கருங்குன்றம் மறைத்தார்; கருங்குன்றம் - யானையை

கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த்
தானந் துருத்தியம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத்
தோணி புரம்பழனம்
மாறுமின் போல்சடை வைத்தவன்
ஆரூர் இடைமருதென்
றேறுமின் நீரெம் பிரான்கச்சி
ஏகம்பம் முன்நினைந்தே. 60

நினைவார்க் கருளும் பிரான்திருச்
சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர்
புறம்பயம் பூவணம்நீர்
புனைவார் பொழில்திரு வெண்காடு
பாச்சில் அதிகைஎன்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி
ஏகம்பம் நண்ணுமினே. 61

நண்ணிப் பரவுந் திருவா
வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணிற் பொலிகடம் பூர்கடம்
பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை
ஏர்கொள் எதிர்கொள்பாடி
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி
ஏகம்பம் காண்மின்சென்றே. 62

சென்றேறி விண்ணுறும் அண்ணா
மலைதிகழ் வல்லம்மென்பூ
வின்தேறல் பாய்திரு மாற்பேறு
பாசூர் எழில்அழுந்தூர்

61. பாச்சில் - பாச்சிலாச்சிராமம்.

வன்றே ரவன்திரு விற்பெரும்
பேறு மதில்ஒற்றியூர்
நின்றோர் தருகச்சி ஏகம்பம்
மேயார் நிலாவியவே. 63

நிலாவு புகழ்த்திரு வோத்தூர்
திருவாமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம்
வில்வலங் கொச்சைதொண்டர்
குலாவு திருப்பனங் காடுநன்
மாகறல் கூற்றம்வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி
ஏகம்பர் ஆலயமே. 64

ஆலயங் கார்கரு காவைகச்
சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி
யூர்திரு வூறல்மிக்க
சோலையங் கார்திருப் போந்தைமுக்
கோணந் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு வாலங்கா
டேகம்பம் வாழ்த்துமினே. 65

வாழப் பெரிதெமக் கின்னருள்
செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர்
தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுரம் ஆற்று
தளிரடி பூங்குழல்எம்
ஏழைக் கிடையிறுக் குங்குய
பாரம் இயக்குறினே. 66

---

64. கொச்சை – கொச்சைவயமென்னும் சீகாழி. அலாய் - இங்கே வரத்தகாதவன் நீ.

65. கருகாவை - திருக்கருகாவூர். திருப்போந்தை – திருப்பனந்தாள்.

உறுகின்ற வெவ்வழல் அக்கடம்
இக்கொடிக் குன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னால்ஐய
பேரருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழிற்
கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந்
தண்பணை என்றுகொளே. 67

கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி
தீச்சில வேஉலறி
விள்ளும் வெடிபடும் பாலையென்
பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுட்டிரு
ஏகம்பர் சேவடியை
உள்ளும் மதுமறந் தாரெனப்
போவ துரைப்பரிதே. 68

பரிப்பருந் திண்மைப் படையது
கானர் எனிற்சிறகு
விரிப்பருந் துக்கிரை ஆக்கும்வெய்
யேன்அஞ்சல் செஞ்சடைமேல்
தரிப்பருந் திண்கங்கை யார்திரு
வேகம்பம் அன்னபொன்னே
வரிப்பருந் திண்சினைக் கேயும
ராயின் மறைகுவனே. 69

---

66. தலைவன் கூற்று. தொழாதவர் போய் வாழுகின்ற அப் பரலையுடைய சுரம்; சுரம் - பாலை நிலம்.

67. தோழி உடன்படச் செய்தல். கடம் - பாலைநிலம். இளையோர் - இளைய பெண்கள். பணை - வயல். அந்தப் பாலை வனம் உன் பின்னே வருவதனால் குளிர்ந்த வயல்போலிருக்கும்.

68. செவிலி கூற்று. கள்ளி தீச்சு - கள்ளியைத் தீயச் செய்து. உலறி - ஈரம் காய்ந்து.

69. தலைவன் கூற்று. கானர் - பாலை நிலத்து வாழ்வார். சிறகை விரித்தலையுடைய பருந்துக்கு. சினைக்கே - மரக் கிளையில். உமராயின் - உன்னைச் சேர்ந்தோராயின்.

வனவரித் திண்புலி யின்னதள்
ஏகம்ப மன்னருளே
எனவரிற் பொன்னணங் கென்னணங்
கிற்கென் எழிற்கழங்கும்
தனவரிப் பந்துங் கொடுத்தெனைப்
புல்லியும் இற்பிரிந்தே
இனவரிக் கல்லதர் செல்வதெங்
கேஒல்கும் ஏழைநெஞ்சே. 70

நெஞ்சார் தரஇன்பஞ் செய்கழல்
ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை
ஆங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்செல
முன்செல் வெடுவெடென்ற
அஞ்சா அடுதிறற் காளைதன்
போக்கிவை அந்தத்திலே. 71

இலவவெங் கான்உனை யல்லால்
தொழுஞ்சரண் ஏகம்பனார்
நிலவுஞ் சுடரொளி வெய்யவ
னேதண் மலர்மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத்
தளிரடி செல்சுரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள்
செய்யுன் உறுதுணைக்கே. 72

துணையொத்த கோவையும் போலெழிற்
பேதையுந் தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையொ டேஒத்த
காதலொ டேகினரே

---

70. செவிலி கூற்று. பொன் அணங்கு என் அணங்கிற்கு - திருமகளை அழகினால் வருத்தும் என் மகளுக்கு.

71. செவிலி சுவடு கண்டு இரங்கல். பாங்கு - பக்கம்; இங்கே சுவடுகள். முன்செல் காளை.

72. நற்றாய் சுரந்தணிவித்தல். பருக்கை - சிறு கல்.

அணையத்தர் ஏறொருத்த காளையைக்
கண்டனம் மற்றவரேற்
பிணையொத்த நோக்குடைப்
பெண்ணிவள் தன்னொடும் பேசுமினே. 73

மின்னலிக் கும்வணக் கத்திடை
யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்திடு
வீரம் மனையிற்கண்டீர்
பின்னரிப் போக்கருங் குன்று
கடந்தவர் இன்றுகம்பர்
மன்னரி தேர்ந்து தொழுங்கச்சி
நாட்டிடை வைகுவரே. 74

உவரச்சொல் வேடுடைக் காடுகந்
தாடிய ஏகம்பனார்
அவரக்கன் போன விமானத்தை
ஆயிர முண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயஞ்
சூலந் துலங்குவிண்மேற்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி
காணினுங் கார்மயிலே. 75

கார்மிக்க கண்டத் தெழில்திரு
வேகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு
வோர்ஒலி பொன்மலைபோற்
போர்மிக்க செந்நெல் குவிப்போர்
ஒலிகருப் பாலையொலி
நீர்மிக்க மாக்கட லின்னொலி
யேயொக்கும் நேரிழையே. 76

---

73. கலந்துடன் வருவோர் செவிலியிடம் கூறுதல். மற்றவர் என்றது தலைவியை. இவள் என்றது தன் காதலியை.
74. கண்டோர் கூற்று. மின்னை நலிக்கும்; நலிக்கும் — நலிவிக்கும். **75.** தலைவன் கூற்று. அவ் வரக்கன்.

நேர்த்தமை யாமை விறற்கொடு
வேடர் நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமை யாலிமை தீந்தகண்
பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யால்உமை நோக்கருங்
கம்பர்கச் சிப்பொழிலுட்
சேர்த்தமை யால்இமைப் போதணி
சீதஞ் சிறந்தனவே. 77

சிறைவண்டு பாடுங் கமலக்
கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின்
பொழில்இவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புவை
புன்சடை ஏகம்பனார்
நிறைகொண்ட பூங்கச்சி நாடெங்கும்
இவ்வண்ணம் நன்னுதலே. 78

நன்னுத லார்கருங் கண்ணுஞ்செவ்
வாயும்இவ் வாறெனப்போய்
மன்னித ழார்திரு நீலமும்
ஆம்பலும் பூப்பவள்ளை
என்னவெ லாம்ஒப்புக் காதென்று
வீறிடும் ஏகம்பனார்
பொன்னுத லார்விழி யார்கச்சி
நாட்டுளிப் பொய்கையுளே. 79

உள்வார் குளிரி நெருங்கிக்
கருங்கிடங் கிட்டநன்னீர்
வள்வாளை களொடு செங்கயல்
மேய்கின்ற எங்களை ஆட்

---

77. தலைவன் கூற்று. இமை தீந்த கண் சீதம் சிறந்தன.
78. தலைவன் கூற்று. பழுக்காய் - பாக்கு.
79. தலைவன் கூற்று. 80. குளிரி - ஒருவகை நீர்ப்பூண்டு.

கொள்வார் பிறவி கொடாதவ
கம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டெழில்
ஏரிக் களப்பரப்பே. 80

பரப்பார் விசும்பிற் படிந்த
கருமுகி லன்னநன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்பொடு
சேம்படர் தண்பணைவாய்ச்
சுரப்பார் எருமை மலர்தின்னத்
துன்னு கராவொருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக்
கம்பர்தம் பூங்கச்சியே. 81

கச்சார் முலைமலை மங்கைகண்
ணாரஎண் ணான்கறமும்
வைச்சார் மகிழ்திரு வேகம்பர்
தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற
விமானமுந் தன்மமரு
அச்சாலையும்பரப் பாங்கணி
மாடங்கள் ஓங்கினவே. 82

ஓங்கின ஊரக முள்ளகம்
உம்பர் உருகிடமாம்
பாங்கினில் நின்ற தரிஉறை
பாடகந் தெவ்விரிய

---

81. தலைவன் கூற்று. கரா ஒருத்தல் ஆண் முதலை.

82. தன்மம் அரு அச்சாலை - முப்பத்திரண்டு அறங்களை வளர்க்கும் சாலைகள்.

83. ஊரகம், பாடகம்: திருமால் திருப்பதிகள். தெவ் இரிய - பகைவர் ஓட.

வாங்கின வாட்கண்ணி மற்றவர்
மைத்துனி வான்கவிகள்
தாங்கின நாட்டிருந் தாளது
தன்மனை ஆயிழையே. 83

இழையார ரவணி ஏகம்பர்
நெற்றி விழியின்வந்த
பிழையா வருணம் பிராட்டிய
தின்ன பிறங்கலுன்னும்
நுழையா வருதிரி சூலத்தள்
நோக்கரும் பொன்கடுக்கைத்
தழையார் பொழிலது பொன்னே
நமக்குத் தளர்வில்லையே. 84

தளரா மிகுவெள்ளங் கண்டுமை
ஓடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும்
ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு வேகம்பம்
மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்பட
வாய்இவ் வுலகத்துளே. 85

உலவிய மின்வடம் வீசி
உருமதிர் வுண்முழங்கிச்
சலவிய மாமதம் பாய்முகில்
யானைகள் வானில்வந்தாற்
சுலவிய வார்குழல் பின்னரென்
பாரி ரெனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற்
கொடியன்ன நீர்மையனே. 86

84. தலைவன் கூற்று.
85. தலைவன் கூற்று.

நீரென் னிலுமழுங் கண்முகில்
காண்நெஞ்ச மஞ்சலையென்
றூரென் னிலுந்தம ராயுரைப்
பாரம ராவதிக்கு
நேரென் னிலுந்தகுங் கச்சியுள்
ஏகம்பர் நீள்மதில்வாய்ச்
சேரென் னிலுந்தங்கும் வாட்கண்ணி
தான்அன்பர் தேர்வரவே. 87

வரங்கொண் டிமையோர் நலங்கொள்ளும்
ஏகம்பர் கச்சியன்னாய்
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம்
அன்பர்தந் தேரின்முன்னே
தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன்
னாகத்தண் காந்தட்கொத்தின்
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும்
போந்தன கார்முகிலே. 88

கார்முக மாரவண் கைக்கொண்ட
கம்பர் கழல்தொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென்
றார்வினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு
சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல்
நீந்து மயர்வுயிர்ப்பே. 89

உயிரா யினஅன்பர் தேர்வரக்
கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம்
பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யொடும் ஆடிய
ஏகம்பர் தம்மருள்போற்
கையிரா வளையமுந் தக்கச்
சிறுத்தன கார்மயிலே. 90

கார்விடை வண்ணத்தன் அன்றேழ்
தழுவினும் இன்று தனிப்
போர்விடை பெற்றெதிர் மாண்டார்
என அண்டர் போதவிட்டார்
தார்விடை ஏகம்பர் கச்சிப்
புறவிடைத் தம்பொனன்பூண்
மார்விடை வைகல் பெறுவார்
தழுவ மழவிடையே. 91

விடைபாய் கொடுமைஎண் ணாதுமே
லாங்கன்னி வேற்கருங்கட்
கடைபாய் மனத்தினங் காளையர்
புல்கொலி கம்பர்கச்சி
மடைபாய் வயலிள முல்லையின்
மான்கன்றொ டான்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றிற்
கடல்போற் கலந்தெழுமே. 92

எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர்
கச்சி இருங்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைக் குரவான்
மணற்குன்றிற் பாதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல
வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பி னோரிரண்
டாலு முகத்தனவே. 93

முகம்பாகம் பண்டமும் பாகமென்
றோதிய மூதுரையை
யுகம்பார்த் திரேலென் னலமுய
ரேகம்பர் கச்சிமுன்னீர்

---

91. ஏறு தழுவுதல். அண்டர் - இடையர்.
92. புல்கு - ஏற்றைத் தழுவும்.

அகம்பாக வார்வின் அளவில்லை
என்னின் பவளச்செவ்வாய்
நகம்பாற் பொழிற்பெற்ற நாமுற்ற
வாகொள்க நன்மயிலே. 94

மயக்கத்த நல்லிருட் கொல்லுஞ்
சுறவோ டெறிமகரம்
இயக்கத் திடுசுழி யோதங்
கழிகிள ரக்கழித்தார்
துயக்கத் தவர்க்கரு ளாக்கம்பர்
கச்சிக் கடலர்பொன்னால்
முயக்கத் தகல்வு பொருள்கொண்க
நீர்வரும் ஊர்க்கஞ்சுமே. 95

மேயிரை வைகக் குருகுண
ராமது உண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்புக்
கடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகங்கொண் டோன்தொழும்
கம்பர்கச் சிப்பவ்வநீர்
தூயிரை கானல்மற் றூர்அறி
வார்நந் துறைவர்பொய்யே. 96

பொய்வரு நெஞ்சினர் வஞ்சனை
யாரையும் போகவிடா
மெய்வரும் பேரருள் ஏகம்பர்
கச்சி விரையினவாய்க்
கைவரும் புள்ளொடு சங்கினம்
ஆர்ப்பநஞ் சேர்ப்பர்திண்தேர்
அவ்வரு தாமங் களினம்வந்
தார்ப்ப அணைகின்றதே. 97

---

95. துயக்கத்தவர்க்கு - பாசப் பிணிப்புடையவர்களுக்கு.
96. பாயாக இரைகின்ற நாகத்தைக் கொண்டவன்.

இன்றுசெய் வோம்இத னிற்றிரு
வேகம்பர்க் கெத்தனையும்
நன்றுசெய் வோம்பணி நாளைஎன்
றுள்ளிநெஞ் சேஉடலிற்
சென்று செயாரை விடுந்துணை
நாளும் விடாதடிமை
நின்றுசெய் வாரவர் தங்களி
னீணெறி காட்டுவரே. 98

காட்டிவைத் தார்தம்மை யாங்கடிப்
பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர்
ஏதும் இலாதஎம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது
பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு
தாம்அவர் பாதங்களே. 99

பாதம் பரவியோர் பித்துப்
பிதற்றிலும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள்
ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளாற் பொலியாத
புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாம்
எனக்கொள்வர் மெய்த்தொண்டரே. 100

திருச்சிற்றம்பலம்

---

99. பாட்டி - பாடச் செய்து.

30

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருவொற்றியூர் ஒருபா ஒருபது

திருச்சிற்றம்பலம்

(அகவல்)

இருநில மடந்தை இயல்பினின் உடுத்த
பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த
ஒற்றி மாநகர் உடையோய் உருவின்
பெற்றிஒன் றாகப் பெற்றோ ரியாரே
மின்னின் பிறக்கந் துன்னும்நின் சடையே
மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
பாவகன் பரிதி பனிமதி தன்னொடு
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ணொளி ஆரந் தாரா கணமே
விண்ணவர் முதலா வேறோர் இடமாக்
கொண்டுறை விசும்பே கோலநின் னாகம்
எண்டிசை திண்டோள் இருங்கடல் உடையே
அணியுடை அல்குல் அவனிமண் டலமே
மணிமுடிப் பாந்தள்நின் தாளிணை வழக்கே
ஒழியா தோடிய மாருதம் உயிர்ப்பே
வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில் ஞானத் தொகுதிநின் உணர்வே
நெருங்கிய உலகினில் நீர்மையும் நிற்றலும்
சுருங்கலும் விரிதலும் தோற்றநின் றொழிலே
அமைத்தலும் அழித்தலும் ஆங்கதன் பெயர்ச்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே

அடி, 7. பாவகன் - அக்கினி.

என்றிவை முதலா இயல்புடை வடிவினோ
டொன்றிய துப்புரு இருவகை ஆகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி
அத்திறத் தைம்பொறி அறுவகைச் சமயமோ
டேழுல காகி எண்வகை மூர்த்தியோ
டூழியோ டூழி எண்ணிறந் தோங்கி
எவ்வகை அளவினிற் கூடிநின்
றவ்வகைப் பொருளும்நீ ஆகிய இடத்தே. 1

இடத்துறை மாதரோ டூருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்
திருவமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றுந் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்
இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை ஆகி அடையப்
பற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே. 2

உருவாம் உலகுக் கொருவன் ஆகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி ஊட்டித்

---

2. அடி, 2. நள்ளிருளில் நடனம் செய்தாய். 9. அசோகினன் - அருகக் கடவுள். 10. போதி – அரசமரம். புராணன் புத்தன். 14. அணங்கிய - துன்பம் செய்த.

தொன்னீர் வையகந் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்
திறல்கெட அரக்கனைத் திருவிர லுறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்த நின்செய லாதலின்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யூர
பகர்வோர் நினக்குவே றின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழி னல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே. 3

பொருள்உணர்ந் தோங்கிய பூமகன் முதலா
இருள் துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினுந் திறலினுஞ் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியா
தொவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை ஆகியும்
பெருகியுஞ் சுருங்கியும் பெயர்ந்துந் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கும்
ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்அருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே. 4

---

3. அடி, 7. வேள்வி மூர்த்தி - யாக புருஷன். 8. நீள் விசும்பாளி - இந்திரன்.
4. அடி, 1. பூமகன் – பிரமன்.

மயக்கமில் சொன்னீ யாயினும் மற்றவை
துயக்க நின்றிறம் அறியாச் சூழலும்
உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது
கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகினிற் செய்வோய் எனினும்
அவ்வினைப் பயன்நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநிற் பணிவோர்
மனத்திடை வாரி ஆகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க் கணிமையும் நாடொறும்
என்பினை உருக்கும் இயற்கைய வாதலிற்
கண்டவர் தமக்கே ஊனுடல் அழிதல்
உண்டென உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவத்
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே. 5

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யானென அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவ னியானென இயற்று மாறே
அதவள் அவனென நின்றமை யார்க்கும்
பொதுநிலை யானென உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிலை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நானென நவிற்று மாறே
மூவிலை ஒருதாட் சூலம் ஏந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யானென உணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி உயர்வான் என்றும்
உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருளும்நற் பூதப் படையோய் என்றும்
தெருளநின் றுலகினில் தெருட்டு மாறே

ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத்
தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வன்மையிற் சுழலும் மாந்தர்க்
காதி யாகிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தஞ் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகப்படு மளவே. 6

அளவினில் இறந்த பெருமையை ஆயினும்
எனதுளம் அகலா தொடுங்கினின் றனையே
மெய்யினை இறந்த மெய்யினை ஆயினும்
வையகம் முழுதும் நின் வடிவெனப் படுமே
கைவலத் திலைநீ எனினுங் காத்தல்
செய்வோர் வேண்டுஞ் சிறப்பொழி யாயே
சொல்லிய வகையால் துணையலை யாயினும்
நல்லுயிர்க் கூட்ட நாயகன் நீயே
எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே அஃதான்று
பிறவாப் பிறவியை பெருகாப் பெருமையை
துறவாத் துறவியை தொடராத் தொடர்ச்சியை
நுகரா நுகர்ச்சியை நுணுகா நுணுக்கினை
அகலா அகற்சியை அணுகா அணிமையை
செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை
வெய்யை தணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை

---

6. இறைவனுடைய திருக்கோலத்தில் உள்ள பொருள்களுக்குக் கருத்து உரைக்கிறார். 26. முறுவலித்து - புன்னகை பூத்து.

7. அடி, 13. நுண்ணிதில் தேற மாட்டாத நுண்ணிய பொருளாய் இருப்பாய். 16. நொய்யை - இலேசானவனாக இருப்பாய்.

ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி
ஏனைய வாகிய எண்ணில் பல்குணம்
நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்குகடல் உடுத்த ஒற்றி யூர
ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅம்
சொன்னிலை சுருங்கின் அல்லது
நின்னியல் அறிவோர் யார்இரு நிலத்தே 7

நிலத்திடைப் பொறையாய் அவாவினில் நீண்டு
சொலத்தகு பெருமைத் தூரா ஆக்கை
மெய்வளி ஐயொடு பித்தொன் றாக
ஐவகை நெடுங்காற் றுங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்ப
திரையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் அரவக் கூட்டம்வந் தொலிப்ப
ஊன்தடி எலும்பி னூட்டிடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகஞ் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
மூழக்குடைத் துளையே முகங்க ளாக
வழுக்குடை மூக்கா றுதம்வந் தொலிப்ப
இப்பரி சியற்றிய உடலிருங் கடலுள்
துப்புர வென்னுஞ் சுழித்தலைப் பட்டுழி
ஆவா என்றுநின் அருளினைப் பெற்றவர்
நாவா யாகிய நாதநின் பாதம்

---

8. **உடம்பைக் கடலாக உருவகம் செய்கிறார்.**

அடி, 3. வளி ஐயொடு **பித்து - வாதம், கபம், பித்தம்.** 6. **திரையுடைத் தோல்** — **சுருக்கத்தையுடைய தோல்.** 11. **ஊன் தடி** — மாமிச பிண்டம். **திடல்** — மேடு.

முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித் தார்த்துப்
பெருகிய நிறையெனுங் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்க்கயி றறுத்து
மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
காமப் பாரெனுங் கடுவெளி அற்ற
தூமச் சோதிச் சுடர்க்குறி நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
நெருங்கா அளவின் நீள்கரை ஏற்ற
வாங்க யாத்திரை போக்குதி போலும்
ஓங்குகடல் உடுத்த ஒற்றியூ ரோயே. 8

ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி யாரப் பரவுதல் பொருட்டா
என்னிடைப் பிறந்த இன்னாப் புன்மொழி
நின்னிடை அணுகா நீர்மைய ஆதலின்
ஆவலித் தழுதலின் அகன்ற அம்மனை
கேவலஞ் செய்மையிற் கேளாள் ஆயினும்
பிரித்தற் கரிய பெற்றிய தாகிக்
குறைவினில் ஆர்த்துங் குழவிய தியல்பினை
அறியா தெண்ணில் ஊழி பிறவியின்
மயங்கிக் கண்ணிலர் கண்பெற் றாங்கே
தாய்தலைப் படநின் தாளிணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்
கட்டிய நீயே அவிழ்க்கின் அல்ல
தெட்டனை யாயினும் யான்அவிழ்க் கறியேன்

அடி, 24. நிறை - மனத்தை நிறுத்தும் ஆற்றல். 29. உணர்ச்சி - அறிவு.

9. அடி, 5. ஆவலித்து - வாய்விட்டு.

துன்னிடை இருளெனுந் தூற்றிடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையுந் தாயுஞ் சாதியும் அறிவும்நம்
சிந்தையுந் திருவுஞ் செல்கதித் திறனும்
துன்பமுந் துறவுந் தூய்மையு மறிவும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்
சுவைஒளி ஊறோசை நாற்றம் தோற்றம்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்
ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து
நின்றனன் தமியேன் நின்னடி அல்லது
சார்வுமற் றின்மையின் தளர்ந்தோர் காட்சிச்
சேர்விட மதனைத் திறப்பட நாடி
எய்துதற் கரியோய் யான்இனிச்
செய்வதும் அறிவனோ தெரியுங் காலே. 9

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வா போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி
அணைதொறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி
இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வஞ் செய்பவர்க் கணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை அமிர்தா நயந்தோய் போற்றி
விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துறை செம்மைக்
காணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென் றிவைகுணம் உடைமையிற்
பெண்ணொ டாணெனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்

10. அடி, 6. இணை - ஒப்பு.

தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி
சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றுனை
நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்ல
தேத்துதற் குரியோ ரியார்இரு நிலத்தே. 10

திருச்சிற்றம்பலம்

31

நம்பியாண்டார் நம்பி

அருளிச்செய்த

திருநாரையூர்

விநாயகர் திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1

---

1. **விரசு** – **கலந்த.**

முகத்தாற் கரியன்என் றூழும்
தனியே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை
உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர்
அம்மான் பயந்தஎம்மான்
உகத்தா னவன்றன் உடலம்
பிளந்த ஒருகொம்பனே. 2

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் — நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கை யாயென்நோய்
பின்னவலஞ் செய்வ தெனோ பேசு. 3

பேசத் தகாதெனப் பேயெரு
தும்பெருச் சாளியும்என்
றேசத் தகும்படி ஏறுவ
தேஇமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழில் நுங்கையும்
நுந்தையும் நீயும்இந்தத்
தேசத் தவர்தொழு நாரைப்
பதியுட் சிவக்களிறே. 4

களிறு முகத்தவனாய்க் காயஞ்செந் தீயின்
ஒளிறும் உருக்கொண்ட தென்னே — அளறுதொறும்
பின்னாரை யூர்ஆரல் ஆரும் பெருமபடுகர்
மன்னாரை யூரான் மகன். 5

---

2. வெளியன் - வெளிப்படுகிறவன். உக - இறந்து விழ. தானவன் - கயமுகாசுரன்.

5. அளறு - சேறு. படுகர் - குளம்.

மகத்தினின் வானவர் பற்கண்
சிரந்தோள் நெரித்தருளும்
சுகத்தினின் நீள்பொழில் நாரைப்
பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கைஅந் தக் கையது
மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது
போலும் அடுமருப்பே. 6

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால்—நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம். 7

மலஞ்செய்த வல்வினை நோக்கி
உலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு
முன்னே புரிசடைமேற்
சலஞ்செய்த நாரைப் பதிஅரன்
றன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி
றேஉன்னை வாழ்த்துவனே. 8

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சாய லைத்தருவா னன்றே—இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்டோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னும். 9

---

6. சூரியனது பல்லையும், பகனது கண்ணையும், தக்கனது சிரத்தையும், இந்திரனது தோளையும் தக்க யாகத்தில் இறைவன் போக்கியருளினான்.

7. அவரை என்றது அடியாரை. நெருப்பினிடம் எறும்பு செல்லாதது போல அடியாரிடம் மலம் சாராது.

9. தேரை ஊர் நம்பர் மகன் - சூரியன் மகனாகிய யமன்.

நாரணன் முன்பணிந் தேத்தநின்
றெல்லை நடாவியவத்
தேரண வுந்திரு நாரையூர்
மன்னு சிவன்மகனே
காரண னேஎம் கணபதி
யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேஎன்
பவர்க்கில்லை அல்லல்களே. 10

அல்லல் களைந்தான்றன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர்—நெல்லல்களை
செங்கழுநீர் கட்குந் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ. 11

கோவிற் கொடிய நமன்தமர்
கூடா வகைவிடுவன்
காவிற் றிகழ்திரு நாரைப்
பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய இருமதத்
தொற்றை மருப்பின்முக்கண்
ஏவிற் புருவத் திமையவன்
றன்பெற்ற யானையையே. 12

யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான்—தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலனேந்தி
எடுத்த மதமுகத்த ஏறு. 13

---

10. எல்லை – சூரியன்.
11. கட்கும் - களை எடுக்கும்.
12. தலை மாத்திரம் யானைத்தலையாதலின், கன்ன மதம், கபோல மதம் என்ற இருவகை மதங்களே விநாயகருக்கு உள வாயின.
13. சனார்த்தனன் – திருமால்.

ஏறிய சீர்வீ ரணக்குடி
 ஏந்திழைக் கும்மிருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும்
 முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தி
 னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் வாற்றொழு நாரைப்
 பதியுள் விநாயகனே. 14

கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி னன்பயந்த வாய்ந்த—சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றூர்க்கு
மாசார மோசொல்லு வான். 15

வானிற் பிறந்த மதிதவ
 ழும்பொழில் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு
 நாரைப் பதிதிகழும்
கோனிற் பிறந்த கணபதி
 தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென்
 றுரைப்பரிவ் வையகத்தே. 16

வையகத்தார் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து
பொய்யகத்தார் உள்ளம் புகலொழிந்து—கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தான்
ஆங்கனிநஞ் சிந்தைஅமர் வான். 17

அமரா அமரர் தொழுஞ்சரண்
 நாரைப் பதிஅமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ
 னேகொடித் தேர்அவுணர்

---

14. முன்னினை – தலைமயனை.
16. குலமலையின் மான் – பார்வதி தேவியார்.

தமரா சுறுத்தவன் றன்னுழைக்
 தோன்றின னேஎனக்கின்
றமரா மனத்தவர் ஆழ்நர
 கத்தில் அழுந்துவரே. 18

அவமதியா துள்ளமே அல்லலற நல்ல
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம்—நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். 19

நாந்தன மாமனம் ஏத்துகண்
 டாய்என்றும் நாண்மலரால்
தாந்தன மாக இருந்தனன்
 நாரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேஐந்து செங்கைய
 னேமின் திரண்மருப்பை
ஏந்தின னேஎன்னை ஆண்டவ
 னேஎனக் கென்னையனே. 20

திருச்சிற்றம்பலம்

---

18. ஆசு – பற்றுக்கோடு. அமரா மனத்தவர் – விரும்பாத உள்ளத்தை உடையவர்.

32

நம்பியாண்டார் நம்பி

அருளிச்செய்த

கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நெஞ்சந் திருவடிக் கீழ்வைத்து
நீண்மலர்க் கண்பனிப்ப
வஞ்சங் கடிந்துன்னை வந்தித்தி
லேன்அன்று வானர்உய்ய
நஞ்சங் கருந்து பெருந்தகை
யேநல்ல தில்லைநின்ற
அஞ்செம் பவளவண் ணாஅருட்
கியானினி யாரென்பரே. 1

என்புந் தழுவிய ஊனும்
நெகஅக மேஎழுந்த
அன்பின் வழிவந்த ஆரமிர்
தேஅடி யேன்உரைத்த
வன்புன் மொழிகள் பொறுத்திகொ
லாம்வளர் தில்லைதன்னுள்
மின்புன் மிளிர்சடை வீசிநின்
றாடிய விண்ணவனே. 2

---

1. பனிப்ப - நீர் அரும்ப.
2. மின்சடை, புன்சடை, மிளிர்சடை என்க.

அவநெறிக் கேவிழப் புக்கஇந்
நான்அழுந் தாமைவாங்கித்
தவநெறிக் கேஇட்ட தத்துவ
னேஅத் தவப்பயனும்
சிவநெறிக் கேஎன்னை உய்ப்பவ
னேசென னந்தொறுஞ்செய்
பவமறுத் தாள்வதற் கோதில்லை
நட்டம் பயில்கின்றதே. 3

பயில்கின் றிலேன்நின் திறத்திரு
நாமம் பனிமலர்த்தார்
முயல்கின் றிலேன்உன் திருவடிக்
கேஅப்ப முன்னுதில்லை
இயல்கின்ற நாடகச் சிற்றம்
பலத்துள்எந் தாய்இங்கனே
அயர்கின்ற நான்எங்ங னேபெறு
மாறுநின் னருளே. 4

அருதிக்கு விம்மி நிவந்ததோ
வெள்ளிக் குவடதஞ்சு
பருதிக் குழவி உமிழ்கின்ற
தேஒக்கும் பற்றுவிட்டோர்
கருதித் தொழுகழற் பாதமும்
கைத்தலம் நான்கும்மெய்த்த
சுருதிப் பதம்முழங் குந்தில்லை
மேய சுடரினுக்கே. 5

சுடலைப் பொடியும் படுதலை
மாலையுஞ் சூழ்ந்தஎன்பும்
மடலைப் பொலிமலர் மாலைமென்
தோள்மேல் மயிர்க்கயிறும்

---

3. பவம் - பாவம்.
6. அடலைப் பொலி தோள். மயிர்க்கயிறு - பஞ்சவடி.

அடலைப் பொலிஅயில் மூவிலை
வேலும் அணிகொள்தில்லை
விடலைக்கென் ஆனைக் கழகிது
வேத விநோதத்தையே. 6

வேத முதல்வன் தலையும்
தலையாய வேள்விதன்னுள்
நாத னவன்எச்சன் நற்றலை
யுந்தக்க னார்தலையும்
காதிய தில்லைச்சிற் றம்பலத்
தான்கழல் சூழ்ந்துநின்று
மாதவர் என்னோ மறைமொழி
யாலே வழுத்துவதே. 7

வழுத்திய சீர்த்திரு மால்உல
குண்டுவன் பாம்புதன்னின்
கழுத்தரு கேதுயின் றானுக்கப்
பாந்தளைக் கங்கணமாச்
செழுத்திரள் நீர்த்திருச் சிற்றம்
பலத்தான் திருக்கையிட
[redacted]ழுத்திய கல்லொத் தனன்ஆயன்
ஆகிய மாயவனே. 8

மாயவன் முந்நீர்த் துயின்றவன்
அன்று மருதிடையே
போயவன் காணாத பூங்கழல்
நல்ல புலத்தினர்நெஞ்
சேயவன் சிற்றம் பலத்துள்நின்
றாடுங் கழல்எவர்க்கும்
தாயவன் றன்பொற் கழல்என்
தலைமறை நன்னிழலே. 9

---

8. ஆதிசேடனை இறைவன் கையில் கங்கணமாக அணியத் திருமால் நீல மணியைப்போல அதில் தோன்றினான்.

நிழல்படு பூண்நெடு மால்அயன்
காணாமை நீண்டவரே
தழல்படு பொன்னகல் ஏந்தித்
தமருகந் தாடித்தமைத்
தெழில்பட வீசிக் கரமெறி
நீர்த்தில்லை அம்பலத்தே
குழல்படு சொல்வழி ஆடுவர்
யாவர்க்குங் கூத்தினையே. 10

கூத்தனென் றுந்தில்லை வாணனென்
றுங்குழ மிட்டிமையோர்
ஏத்தனென் றுஞ்செவி மாட்டிசை
யாதே இடுசுணங்கை
மூத்தவன் பெண்டீர் குணலையிட்
டாலும் முகில்நிறத்த
சாத்தனென் றாலும் வருமோ
இவளுக்குத் தண்ணெனவே. 11

தண்ணார் புனல்தில்லைச் சிற்றம்
பலந்தன்னில் மன்னிநின்ற
விண்ணாளனைக்கண்ட நாள்விருப்
பாய்என் உடல்முழுதும்
கண்ணாங் கிலோதொழக் கையாங்
கிலோதிரு நாமங்கள்கற்
றெண்ணும் பரிசெங்கும் வாயாங்கி
லோஎனக் கிப்பிறப்பே. 12

பிறவியிற் பெற்ற பயனொன்று
கண்டிலம் பேரொலிநீர்
நறவியல் பூம்பொழில் தில்லையுள்
நாடகம் ஆடுகின்ற

11. குணலை இட்டு ஆலும் - சுற்றி வந்து ஆடும்.
12. கண் ஆங்கு இல் ஓ; இல் - இல்லை; ஓ: இரங்கற் குறிப்பு.

துறவியல் சோதியைச் சுந்தரக்
கூத்தனைத் தொண்டர்தொண்டர்
உறவியல் வாற்கண்கள் கண்டுகண்
டின்பத்தை உண்டிடவே. 13

உண்டேன் அவரருள் ஆரமிர்
தத்தினை உண்டலுமே
கண்டேன் எடுத்த கழலும்
கனலுங் கவித்தகையும்
ஒண்டேன் மொழியினை நோக்கிய
நோக்கும் ஒளிநகையும்
வண்டேன் மலர்த்தில்லை அம்பலத்
தாடும் மணியினையே. 14

மணியொப் பனதிரு மால்மகு
டத்து மலர்க்கமலத்
தணியொப் பனஅவன் றன்முடி
மேல்அடி யேன்இடர்க்குத்
துணியச் சமைந்தநல் வீர்வாள்
அனையன சூழ்பொழில்கள்
திணியத் திகழ்தில்லை அம்பலத்
தான்றன் திருந்தடியே. 15

அடியிட்ட கண்ணினுக் கோஅவன்
அன்பினுக் கோஅவுணர்
செடியிட்ட வான்துயர் சேர்வதற்
கோதில்லை அம்பலத்து
முடியிட்ட கொன்றைநன் முக்கட்
பிரான்அன்று மூவுலகும்
அடியிட்ட கண்ணனுக் கீந்தது
வாய்ந்த அரும்படையே. 16

---

14. தேன்மொழி என்றது அம்பிகையை.
16. மூவுலகும் அடியிட்ட – மூன்று உலகங்களையும் அடியினால் அளந்த அரும்படை என்றது சக்கரத்தை.

படைபடு கண்ணிதன் பங்கதென்
தில்லைப் பரம்பரவல்
விடைபடு கேதுக விண்ணப்பங்
கேள்என் விதிவசத்தாற்
கடைபடு சாதி பிறக்கினும்
நீவைத் தருளுகண்டாய்
புடைபடு கிங்கிணித் தாட்செய்ய
பாதம்என் னுள்புகவே. 17

புகவுகிர் வாளெயிற் றுல்நிலங்
கீண்டு பொறிகலங்கி
மிகவுகு மாற்கரும் பாதத்த
னேல்வியன் தில்லைதன் னுள்
நகவு குலாமதிக் கண்ணியற்
கங்கணன் என்றனன் றும்
தகவு கொலாந்தக வன்று
கொலாமென்று சங்கிப்பனே. 18

சங்கோர் கரத்தன் மகன்தக்கன்
தானவர் நான்முகத்தோன்
செங்கோல இந்திரன் தோள்தலை
ஊர்வேள்வி சீர்உடலம்
அங்கோல வெவ்வழ லாயிட்
டழிந்தெரிந் தற்றனவால்
எங்கோன் எழில்தில்லைக் கூத்தன்
கடைக்கண் சிவந்திடவே. 19

---

17. விடைபடு கேதுக - இடபக் கொடியை உடையவனே.

18. மாற்கு - திருமாலுக்கு.

19. சங்கோர் கரத்தன் மகன் - மன்மதன். காமன் உடல் அழலாகி, தக்கன் வேள்வி அழிந்து, தானவர் ஊர் எரிந்து, நான்முகத்தோன் தலையும், இந்திரன் தோளும் அற்றன. இக்கவியில், முதலில் எதிர் நிரல்நிறையும், பின்பு நேர் நிரல் நிறையும் வந்தன.

ஏவுசெய் மேருத் தடக்கை
எழில்தில்லை அம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரானன்றி
அங்கணர் மிக்குளரே
காவுசெய் காளத்திக் கண்ணுதல்
வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட்
டியதிறல் வேடுவனே. 20

வேடனென் றாள்வில் விசயற்கு
வெங்கணை அன்றளித்த
கோடனென் றாள்குழைக் காதனென்
றாள்இடக் காதில்இட்ட
தோடனென் றாள்தொகு சீர்த்தில்லை
அம்பலத் தாடுகின்ற
சேடனென் றாள்மங்கை அங்கைச்
சரிவளை சிந்தினவே. 21

சிந்திக் கவும்உரை யாடவும்
செம்மல ராற்கழல்கள்
வந்திக் கவும்மனம் வாய்கரம்
என்னும் வழிகள்பெற்றும்
சந்திக் கிலர்சிலர் தெண்ணர்தண்
ணார்தில்லை அம்பலத்துள்
அந்திக் கமர்திரு மேனிஎம்
மான்றன் அருள்பெறவே. 22

அருடரு சீர்த்தில்லை அம்பலத்
தான்றன் அருளினன்றிப்
பொருடரு வானத் தரசாத
லிற்புழு வாதல்நன்றாம்

---

20. வில்லாகச் செய்த மேருவை உடைய விசாலமான கை.

21. வெங்கணை என்றது பாசுபதாஸ்திரத்தை. இது தோழி கூற்று.

22. சிந்திக்க மனமும், உரையாட வாயும், வந்திக்கக் கரமும் பெற்றார். தெண்ணர் அன்பில்லாதவர்.

சுருட்டரு செஞ்சடை யோன்அரு
ளேல்துற விக்குநன்றும்
இருட்டரு கீழேழ் நரகத்து
வீழும் இருஞ்சிறையே. 23

சிறைப்புள வாம்புனல் சூழ்வயல்
தில்லைச்சிற் றம்பலத்துப்
பிறைப்பிள வார்சடை யோன்திரு
நாமங்க ளேபிதற்ற
மிறைப்புள வாகிவெண் ணீறணிந்
தோடேந்தும் வித்தகர்தம்
உறைப்புள வோஅயன் மாலினொ
டும்பர்தம் நாயகற்கே. 24

அகழ்சூழ் மதிற்றில்லை அம்பலக்
கூத்த அடியம்இட்ட
முகிழ்சூழ் இலையும் முகைகளும்
ஏயுங்கொல் கற்பகத்தின்
திகழ்சூழ் மலர்மழை தூவித்
திறம்பயில் சிந்தையராய்ப்
புகழ்சூழ் இமையவர் போற்றித்
தொழும்தின பூங்கழற்கே. 25

பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப்
பொலிசெம்பொன் அம்பலத்து
வேந்தன் றனக்கன்றி ஆட்செய்வ
தென்னே விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழைஅன்
பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவுந்
திருவமிர் தாகியதே. 26

---

24. **சிறைப்பு** - கரை. வித்தகர் - **அடியார்.** உறைப்பு - **மனத்திண்மை.**

25. **ஏயுங்கொல்** - பொருந்துமோ ?

26. **பழைய அவிழை** - பழைய சோற்றை.

ஆகங் கனகனைக் கீறிய
கோளரிக் கஞ்சிவிண்ணோர்
பாகங் கனங்குழை யாய்அரு
ளாயெனத் தில்லைப்பிரான்
வேகந் தருஞ்சிம்புள் விட்டரி
வெங்கதஞ் செற்றிலனேல்
மோகங் கலந்தன் றுலந்ததன்
றோஇந்த மூவுலகே. 27

மூவுல கத்தவர் ஏத்தித்
தொழுதில்லை முக்கட்பிராற்
கேவு தொழில்செய்யப் பெற்றவர்
யாரெனில் ஏர்விடையாய்த்
தாவு தொழிற்பட் டெடுத்தனன்
மால்அயன் சாரதியா
மேவிர தத்தொடு பூண்டதொன்
மாமிக்க வேதங்களே. 28

வேதகச் சிந்தை விரும்பிய
வன்தில்லை அம்பலத்து
மேதகக் கோயில்கொண் டோன்சேய
வன்வீ ரணக்குடிவாய்ப்
போதகப் போர்வைப் பொறிவாள்
அரவரைப் பொங்குசினச்
சாதகப் பெண்பிளை தன்னையன்
தந்த தலைமகனே. 29

தலையவன் பின்னவன் தாய்தந்தை
இந்தத் தராதலத்து
நிலையவம் நீக்கு தொழில்புரிந்
தோன்நடு வாகிநின்ற

---

27. **கனகனைக் கீறிய கோளரிக்கு**-இரணியனைச் சங்காரம் செய்த நரசிங்க மூர்த்திக்கு. சிம்புள் - சரபம். உலந்தது - அழிந்தது.

30. அவம் - துன்பம்.

கொலையவன் சூலப் படையவன்
ஆலத் தெழுகொழுந்தின்
இலையவன் காண்டற் கருந்தில்லை
அம்பலத் துள்ளிறையே. 30

இறையுந் தெளிகிலர் கண்டும்
எழிற்றில்லை அம்பலத்துள்
அறையும் புனற்சென்னி யோன்அரு
ளால்அன் றடுகரிமேல்
நிறையும் புகழ்த்திரு வாரூ
ரனும்நிறை தார்ப்பரிமேல்
நறையுங் கமழ்தொங்கல் வில்லவ
னும்புக்க நல்வழியே. 31

நல்வழி நின்றார் பகைநன் று
நொய்யர் உறவிலென்னும்
சொல்வழி கண்டனம் யாம்தொகு
சீர்த்தில்லை அம்பலத்து
வில்வழி தானவர் ஊரெரித்
தோன்வியன் சாக்கியனார்
கல்வழி நேர்நின் றளித்தனன்
காண்க சிவகதியே. 32

கதியே அடியவர் எய்ப்பினில்
வைப்பாக் கருதிவைத்த
நிதியே நிமிர்புன் சடைஅமிர்
தேநின்னை என்னுள்வைத்த
மதியே வளர்தில்லை அம்பலத்
தாய்மகிழ் மாமலையாள்
பதியே பொறுத்தரு ளாய்கொடி
யேன்செய்த பல்பிழையே. 33

---

31. திருவாரூரனும் - சுந்தரமூர்த்தி நாயனாரும். **வில்லவன்- சேரமான் பெருமாள்** நாயனார்.
32. நொய்யர் - இழிந்தோர்.

பிழையா யினவே பெருக்கிநின்
பெய்கழற் கன்புதன்னில்
நுழையாத சிந்தையி னேனையும்
மந்தா கினித்துவலே
முழையார் தருதலை மாலை
முடித்த முழுமுதலே
புழையார் கரியுரித் தோள்தில்லை
நாத பொறுத்தருளே. 34

பொறுத்தில னேனும்பன் னஞ்சினைப்
பொங்கெரி வெங்கதத்தைச்
செறுத்தில னேனும்நந் தில்லைப்
பிரான்அத் திரிபுரங்கள்
கறுத்தில னேனுங் கமலத்
தயன்கதிர் மாமுடியை
அறுத்தில னேனும் அமரருக்
கென்கொல் அடுப்பனவே. 35

அடுக்கிய சீலைய ராய்அகல்
ஏந்தித் தசைஎலும்பில்
ஒடுக்கிய மேனியோ டூண்இரப்
பார்ஒள் இரணியனை
நடுக்கிய மாநர சிங்கனைச்
சிம்புள தாய்நரல
இடுக்கிய பாதன்றன் தில்லை
தொழாவிட்ட ஏழையரே. 36

---

34. மந்தாகினி - கங்கை.

35. இவற்றையெல்லாம் செய்யாவிட்டால் தேவர்களுக்கு என்ன அபாயங்கள் வந்திருக்குமோ? கறுத்திலனேனும் - கோபித்து எரிக்காமல் இருந்தாலும்.

36. நடுக்கிய - நடுங்கச் செய்த. நரல - கதற. தொழா விட்ட - தொழாமல் விட்ட. ஏழையர் - அறிவில்லாதவர்.

ஏழையென் புன்மை கருதா
திடையறு அன்பெனக்கு
வாழிநின் பாத மலர்க்கே
மருவ அருளுகண்டாய்
மாழைமென் னோக்கிதன் பங்க
வளர்தில்லை அம்பலத்துப்
போழிளந் திங்கள் சடைமுடி-
மேல்வைத்த புண்ணியனே. 37

புண்ணிய னேஎன்று போற்றி
செயாது புலன்வழியே
நண்ணிய னேற்கினி யாதுகொ
லாம்புகல் என்னுள்வந்திட்
டண்ணிய னேதில்லை அம்பல
வாஅலர் திங்கள்வைத்த
கண்ணிய னேசெய்ய காமன்
வெளுப்பக் கறுத்தவனே. 38

கறுத்தகண் டாஅண்ட வாணு
வருபுனற் கங்கைசடை
செறுத்தசிந் தாமணி யேதில்லை
யாய்என்னைத் தீவினைகள்
ஒறுத்தல்கண் டாற்சிரி யாரோ
பிறர்என் உறுதுயரை
அறுத்தல்செய் யாவிடின் ஆர்க்கோ
வருஞ்சொல் அரும்பழியே. 39

பழித்தக் கவும்இக ழான்தில்லை
யான்பண்டு வேட்டுவனும்
பழித்திட் டிறைச்சி கலையன்
அளித்த விருக்குழங்கன்

---

37. மாழை - மாவடு.
38. வெளுப்ப - நீறுக. கறுத்தவன் - கோபித்தவன்,
39. செறுத்த - செறிய வைத்த.

மொழித்தக்க சீரதி பத்தன்
படுத்திட்ட மீன்முழுதும்
இழித்தக்க என்று தமிர்துசெய்
தானென் றியம்புவரே. 40

வரந்தரு மாறிதன் மேலுமுண்
டோவயல் தில்லைதன்னுட்
புரந்தரன் மால்தொழ நின்ற
பிரான்புலைப் பொய்ம்மையிலே
நிரந்தர மாய்நின்ற என்னையும்
எம்மையிற் றன்னடியார்
தரந்தரு வான்செல்வத் தாழ்த்தினன்
பேசருந் தன்மைஇதே. 41

தன்றாள் தரித்தா ரியாவர்க்கும்
மீளா வழிதருவான்
குன்றா மதிற்றில்லை மூதூர்க்
கொடிமேல் விடைஉடையோன்
மன்றாட வும்பின்னும் மற்றவன்
பாதம் வணங்கிஅங்கே
ஒன்றார் இரண்டில் விழுவர்அந்
தோசில ஊமர்களே. 42

களைகண் இலாமையுந் தன்பொற்
கழல்துணை யாம்தன்மையும்
துளைகள் நிலாம்முகக் கைக்கரிப்
போர்வைச் சுரனினையான்
தளைக ணிலாமலர்க் கொன்றையன்
தண்புலி யூரதென்றேன்
வளைகள் நிலாமை வணங்கும்
அநங்கன் வரிசிலையே. 43

---

41. நிரந்தரமாய் - இடையீடின்றி எப்பொழுதும்.
42. இரண்டில் - பிறப்பு இறப்பில்; இருவினையில் எனவுமாம்.
43. தலைவி கூற்று. களைகண் - துன்பம் நீங்கும் வாயில்.

வரித்தடந் திண்சிலை மன்மதன்
ஆதலும் ஆழிவட்டம்
தரித்தவன் றன்மகன் என்பதோர்
பொற்பும் தவநெறிகள்
தெரித்தவன் தில்லையுட் சிற்றம்
பலவன் திருப்புருவம்
நெரித்தலுங் கண்டது வெண்பொடி
யேயன்றி நின்றிலவே. 44

நின்றில வேவிச யன்னொடுஞ்
சிந்தை களிப்புறநீள்
தென்றில்லை மாநடம் ஆடும்
பிரான்றன் திருமலைமேல்
தன்றலை யால்நடந் தேறிச்
சரங்கொண் டிழிந்ததென்பர்
கன்றினை யேவிள மேலெறிந்
தார்த்த கரியவனே. 45

கருப்புரு வத்திரு வார்த்தைகள்
கேட்டலுங் கண்பனியேன்
விருப்புரு வத்தினொ டுள்ளம்
உருகேன் விதிர்விதிரேன்
இருப்புரு வச்சிந்தை என்னைவந்
தாண்டதும் எவ்வணமோ
பொருப்புரு வப்புரி சைத்தில்லை
ஆடல் புரிந்தவனே. 46

---

44. ஆழி வட்டம் தரித்தவன் - திருமால்.

45. சரம் கொண்டு - பாசுபதாஸ்திரத்தைப் பெற்றுக் கொண்டு. கரியவன் - கண்ணன்.

46. கருப்புருவத் திரு வார்த்தைகள் - கரும்பின் இனிமையை உடைய அழகிய சொற்கள். விதிர் விதிரேன் - உடம்பு நடுங்க வில்லை.

புரிந்தஅன் பின்றியும் பொய்ம்மையி
 லேயுந் திசைவழியே
விரிந்தகங் கைமலர் சென்னியிற்
 கூப்பில் வியநமனூர்
பரிந்தவன் ஊர்புகல் இல்லை
 பதிமூன் றெரியஅம்பு
தெரிந்தஎங் கோன்றன் திரையார்
 புனல்வயற் சேண்தில்லையே. 47

சேண்தில்லை மாநகர்த் திப்பியக்
 கூத்தனைக் கண்டும்அன்பு
பூண்டிலை நின்னை மறந்திலை
 ஆங்கவன் பூங்கழற்கே
மாண்டிலை இன்னம் புலன்வழி
 யேவந்து வாழ்ந்திடுவான்
மீண்டனை என்னைஎன் செய்திட
 வோசிந்தை நீவிளம்பே. 48

விளைவைத் தளர்வித்த விண்டுவும்
 தாமரை மேல்அயனும்
அளவிற் கறியா வகைநின்ற
 அன்றும் அடுக்கல்பெற்ற
தளர்விற் றிருநகை யாளும்நின்
 பாகங்கொல் தண்புலியூர்க்
களவிற் கனிபுரை யுங்கண்ட
 வார்சடைக் கங்கையனே. 49

கங்கை வலம்இடம் பூவலம்
 குண்டலந் தோடிடப்பால்
தங்குங் கரம்வலம் வெம்மழு
 வீயிடம் பாந்தள்வலம்

---

48. திப்பியம் -தெய்வத் தன்மை. சிந்தை - மனமே.
49. அடுக்கல் - இமயம். களாப் பழம் போன்ற நீல கண்டத்தை உடையவனே.
50. மாதிருக்கும் பாதியன் திருக்கோலம்.

சங்கம் இடம்வலந் தோலிடம்
ஆடை வலம்அக் கிடம்
அங்கஞ் சரிஅம் பலவன்
வலங்காண் இடம்அணங்கே. 50

அணங்கா டகக்குன்ற மாதற
வாட்டிய ஆலமர்ந்தாட்
கிணங்காய வன்தில்லை எல்லை
மிதித்தலும் என்புருகா
வணங்கா வழுத்தா விழாஎழும்
பாவைத்த வாமதர்த்த
குணங்காண் இவள்என்ன என்றுகொ
லாம்வந்து கூடுவதே. 51

கூடுவ தம்பலக் கூத்தன்
அடியார் குழுவுதொறும்
தேடுவ தாங்கவன் ஆக்கம்அச்
செவ்வழி அவ்வழியே
ஓடுவ துள்ளத் திருத்துவ
தொண்சுட ரைப்பிறவி
வீடுவ தாக நினையவல்
லோர்செய்யும் வித்தகமே. 52

வித்தகச் செஞ்சடை வெண்மதிக்
கார்நிறக் கண்டத்தெண்டோள்
மத்தகக் கைம்மலைப் போர்வை
மதிற்றில்லை மன்னனைத்தம்
சித்தகக் கோயில் இருத்துந்
திறத்தா கமிகர்க்கல்லாற்
புத்தகப் பேய்களுக் கெங்குத்த
தோஅரன் பொன்னடியே. 53

---

53. ஆகமிகர்க்கு - ஆகம நூலுணர்வுடையவர்களுக்கு. எங்குத்தது - எங்கே இருப்பது.

பொன்னம் பலத்துறை புண்ணியன்
என்பர் புயல்மறந்த
கன்னன்மை தீரப் புனிற்றுக்
கலிக்காமற் கன்றுபுன்கூர்
மன்னு மழைபொழிந் தீரறு
வேலிகொண் டாங்கவற்கே
பின்னும் பிழைதவிர்ந் தீரறு
வேலிகொள் பிஞ்ஞகனே. 54

நேசன் அல் லேன்நினை யேன்வினை
தீர்க்குந் திருவடிக்கீழ்
வாசநன் மாமலர் இட்டிறைஞ்
சேன்என்றன் வாயதனால்
தேசனென் னேபொன் னார்திருச்
சிற்றம் பலம்நிலவும்
ஈசனென் னேன்பிறப் பென்னாய்க்
கழியுங்கொல் என்றனக்கே. 55

தனந்தலை சக்கரம் வானத்
தலைமை குபேரன்தக்கன்
வனந்தலை ஏறடர்த் தோன்வா
சவன்உயிர் பல்உடல்ஊர்
சினந்தலை காலன் பகல்காமன்
தானவர் தில்லைவிண்ணோர்
இனந்தலை வன்அரு ளால்முனி
வாற்பெற் றிகந்தவரே. 56

---

54. கன்னன்மை - பஞ்சம்.

55. என்னாய்க் கழியும் - எவ்வாறு போகும்.

56. தனத்தைக் குபேரனும், தலையைத் தக்கனும், சக்கரத்தைத் திருமாலும் வானத்தலைமையை இந்திரனும் தில்லையான் அருளாற் பெற்றவர். உயிரைக் காலனும், பல்லைக் கதிரவனும், உடலைக் காமனும், ஊரைத் தானவரும் தில்லையான் முனிவால் இகந்தவர்; இகந்தவர் - நீங்கினவர். நிரனிறை.

அவமதித் தாழ்நர கத்தில்
இடப்படும் ஆதர்களும்
தவமதித் தொப்பிலர் என்னவிண்
ஆளுந் தகைமையரும்
நவமிதித் தில்லையுட் சிற்றம்
பலத்து நடம்பயிலும்
சிவநிதிக் கேநினை யாரும்
நினைந்திட்ட செல்வருமே. 57

வருவா சகத்தினின் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற் றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே. 58

சிரித்திட்ட செம்பவ ளத்தின்
திரளுஞ் செழுஞ்சடைமேல்
விரித்திட்ட பைங்கதிர்த் திங்களும்
வெங்கதப் பாந்தளுந்தீத்
தரித்திட்ட அங்கையுஞ் சங்கச்
சுருளும்என் நெஞ்சினுள்ளே
தெரித்திட்ட வாதில்லைச் சிற்றம்
பலத்துத் திருநடனே. 59

---

57. **நினையார் ஆதர்கள்; நினைந்தவர் விண்ணாளும் தகைமையர். ஆதர் - அறிவிலோர்.**

58. திருவாதவூர்ச் சிவபாத்தியன் – திருவாதவூரடிகளாகிய **மாணிக்கவாசகர்.**

59. கதப்பாந்தள் – கோபத்தையுடைய பாம்பு.

நடஞ்செய்சிற் றம்பலத் தான்முனி
வென்செய்யுங் காமன் அன்று
கொடுஞ்சினத் தீவிழித் தாற்குக்
குளிர்ந்தனன் விற்கொடும்பூண்
விடுஞ்சினத் தானவர் வெந்திலர்
வெய்தென வெங்கதத்தை
ஒடுங்கிய காலன் அந்நாள்மின்
றுதையுணு விட்டனனே. 60

விட்டங் கொளிமணிப் பூண்திகழ்
வண்மதன் மெய்புரைக்கில்
இட்டங் கரியனல் லானல்லன்
அம்பலத் தெம்பரன்மேற்
கட்டங் கியகணை எய்தலும்
தன்னைப்பொன் னார்முடிமேற்
புட்டங்கி னன்மக னென்று
பார்க்கப் பொடிந்தனனே. 61

பொடியேர் தருமே னியன்ஆகிப்
பூசல் புகஅடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு
கோயிற் கருவியில்லா
வடியே படஅமை யுங்கணை
என்ற வரகுணன் றன்
முடியே தருகழல் அம்பலத்
தாடிதன் மொய்கழலே. 62

கழலும் பசுபாச ராம்இமை
யோர்தம் கழல்பணிந்திட்
டழலு மிருக்குந் தருக்குடை
யோரிடப் பால்வலப்பால்

---

60. எதிர் மறையாகச் சொல்லினும் குறிப்பினுல் காமன் எரிந்தனன் என்பது முதலாகக் கொள்க. உதையுணு - உதை யுண்ணுதல்.

61. கள் தங்கிய கணை - மலரம்பு.

தழலுந் தமருக மும்பிடித்
தாடிசிற் றம்பலத்தைச்
சுழலும் ஒருகால் இருகால்
வரவல்ல தோன்றல்களே. 63

தோன்றலை வெண்மதி தாங்கியைத்
துள்ளிய மாலயற்குத்
தான்தலை பாதங்கள் சார்எரி
யோன்றன்னைச் சார்ந்தவர்க்குத்
தேன்றலை ஆன்பா லதுகலந்
தாலன்ன சீரனைச்சீர்
வான்றலை நாதனைக் காண்பதென்
றோதில்லை மன்றிடையே. 64

மன்றங் கமர்திருச் சிற்றம்
பலவ வடவனத்து
மின்றங் கிடைக்குந்தி நாடக
மாடக்கொல் வெண்டரங்கம்
துன்றங் கிளர்கங்கை யாளைச்
சுடுசினத் தீயரவக்
கன்றங் கடைசடை மேல்அடை
யாவிட்ட கைதவமே. 65

தவனைத் தவத்தவர்க் கன்பனைத்
தன்அடி எற்குதவும்
சிவனைச் சிவக்கத் திரிபுரத்
தைச்சிவந் தானைச்செய்ய
அவனைத் தவளத் திருநீ
றனைப்பெரு நீர்கரந்த
பவனைப் பணியுமின் றும்பண்டை
வல்வினை பற்றறவே. 66

---

63. அழலும் இருக்கும் - அழுதலும் அதைக் கவனியாது செம்மாந்து இருக்கும். தோன்றல்கள் தருக்குடையோர்.

64. தேன்றலை – தேனில்.

பற்றற முப்புரம் வெந்தது
பைம்பொழில் தில்லைதன்னுட்
செற்றரு மாமணிக் கோயிலில்
நின்றது தேவர்கணம்
சுற்றரு நின்புகழ் ஏத்தித்
திரிவது சூழ்சடையோய்
புற்றர வாட்டித் திரியு
மதுவொரு புல்லனவே. 67

புல்லறி வின்மற்றைத் தேவரும்
பூம்புலி யூருள்நின்ற
அல்லெறி மாமதிக் கண்ணிய
னைப்போல் அருளுவரே
கல்லெறிந் தானுந்தன் வாய்நீர்
கதிர்முடி மேல்உகுத்த
நல்லறி வாளனும் மீளா
வழிசென்று நண்ணினரே. 68

நண்ணிய தீவினை நாசஞ்
செலுத்தி நமனுலகத்
தெண்ணினை நீக்கி இமையோர்
உலகத் திருக்கலுற்றீர்
பெண்ணினொர் பாகத்தன் சிற்றம்
பலத்துப் பெருநடனைக்
கண்ணினை யார்தரக் கண்டுகை
யாரத் தொழுமின்களே. 69

கைச்செல்வம் எய்திட லாமென்று
பின்சென்று கண்குழித்தல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட்
கேயென்றும் போன்றல்இல்லா

---

68. அல் எறி - இருளைப் போக்கும். **நல்லறிவாளன்— கண்ணப்ப** நாயனார்.

அச்செல்வம் எய்திட வேண்டுதி
யேல்தில்லை அம்பலத்துள்
இச்செல்வன் பாதங் கருதிரந்
தேன்உன்னை என்னெஞ்சமே. 70

திருச்சிற்றம்பலம்

33

நம்பியாண்டார் நம்பி
அருளிச்செய்த

திருத்தொண்டர் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

பொன்னி வடகரை சேர்நாரை
யூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர்
பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை
பல்கும்அந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற்
பாதத் துணைதுணையே.

தில்லைவாழ் அந்தணர்

செப்பத் தகுபுகழ்த் தில்லைப்
பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும்
உம்பரின் ஊர்எரித்த

புழைக்கைமுக மன்னன் - பொல்லாப் பிள்ளையார். பதி- ஊர். தேம் - நாடு. தொண்டத் தொகையின் வகையாகப் பல்கிய. விநாயகர் சொல்ல, நம்பியாண்டார் நம்பி அந்தாதி சொன்னார்.

அப்பர்க் கமுதத் திருநடர்க்
கந்திப் பிறையணிந்த
துப்பர்க் குரிமைத் தொழில்புரி
வோர்தமைச் சொல்லுதுமே. 1

திருநீலகண்டக்குயவ நாயனர்

சொல்லச் சிவன்திரு வாணைதன்
தூமொழி தோள்நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற்
பின்உமை கோன்அருளால்
வில்லைப் புரைநுத லாளோ
டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக்
குயவனுஞ் செய்தவனே. 2

இயற்பகை நாயனர்

செய்தவர் வேண்டிய தியாதும்
கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி
யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன்
வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட்
டினத்துள் இயற்பகையே. 3

இளையான்குடிமாற நாயனர்

இயலா விடைச்சென்ற மாதவற்
கின்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி
மனைஅலக் கால்வறுத்துச்

---

1. துப்பர்க்கு - பவளம் போன்ற வண்ணமுடையவருக்கு; வலிமையுடையவர்க்கு எனலும் ஆம்.
2. ஒல்லை – விரைவில்.
3. செய் தவர் தவத்தைச் செய்தவர். கைதவம் - வஞ்சனைச் சொல்.
4. இயலாவிடை – அளிக்க முடியாத சந்தர்ப்பத்தில்.

செயலார் பயிர்விழுத் தீங்கறி
ஆக்கு மவன்செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை
மாறனெங் கற்பகமே. 4

மெய்ப்பொருள் நாயனார்

கற்றநன் மெய்த்தவன் போல்ஒரு
பொய்த்தவன் காய்சினத்தாற்
செற்றவன் றன்னை அவனைச்
செறப்புக லுந்திருவாய்
மற்றவன் தத்தா நமரே
எனச்சொல்லி வான்உலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு
ளாமென்று பேசுவரே. 5

விறன்மிண்ட நாயனார்

பேசும் பெருமையவ் வாரூ
ரனையும் பிரானவனும்
ஈசன் றனையும் புறகுதட்
டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக்
கேபுக நீடுதென்றல்
வீசும் பொழிற்றிருச் செங்குன்றம்
மேயவிறன் மிண்டனே. 6

அமர்நீதி நாயனார்

மீண்டும் பொழிற்பழை யாறை
அமர்நீதி வெண்பொடியின்
முண்டந் தரித்த பிராற்குநல்
லூரின்முன் கோவணம்நேர்

---

6. **புறகு** - விலக்கு.
7. முண்டம் - திரிபுண்டரம்.

கொண்டிங் கருளென்று தன்பெருஞ்
செல்வமுந் தன்னையுந்தன்
துண்ட மதிநுத லாளையும்
ஈந்த தொழிலினனே. 7

சுந்தரமூர்த்தி நாயனார்

தொழுதும் வணங்கியும் மாலயன்
தேடருஞ் சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணம்
காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய்
எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரினற் றாரெம்பி
ரான்நம்பி யாரூரனே. 8

எறிபத்த நாயனார்

ஊர்மதில் மூன்றட்ட உத்தமற்
கென்றோர் உயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன்
தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாகர்
உடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு
வூரில் எறிபத்தனே. 9

ஏனாதிநாத நாயனார்

பத்தனை ஏனாதி நாதனைப்
பார்நீ டெயினைதன்னுள்
அத்தனைத் தன்னோ டமர்மலைந்
தான்நெற்றி நீறுகண்டு

---

9. **ஊர்மலை** - யானை.

10. **எயினை** - எயினனூர்.

கைத்தனி வாள்வீ டொழிந்தவன்
கண்டிப்ப நின்றருளும்
நித்தனை ஈழக் குலதீபன்
என்பரிந் நீணிலத்தே. 10

கண்ணப்ப நாயனார்

நிலத்தில் திகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின்மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற்
குருதிகண் டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன்
மலர்க்கண் இடந்தப்பினான்
குலத்திற் கிராதன்நங் கண்ணப்ப
னாமென்று கூறுவரே. 11

குங்குலியக்கலய நாயனார்

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற்
பூட்டி எழிற்பனந்தாட்
சாய்ந்த சிவன்நிலைத் தானென்பர்
காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்குலி யங்கொண்
டனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்கிட்ட தென்கட
வூரிற் கலயனையே. 12

மானக்கஞ்சாற நாயனார்

கலச முலைக்கன்னி காதற்
புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச
வடிக்கிவை நல்கெனலும்

---

13. பஞ்சவடி - மயிரினாற் செய்து அணியும் கயிறு. **அலசும்** - வருந்துவாள். கஞ்சை - கஞ்சாறு.

அலசும் எனக்கரு தாதவள்
கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ்
சாறன் எனும்வள்ளலே. 13

அரிவாட்டாய நாயனார்

வள்ளற் பிராற்கமு தேந்தி
வருவோன் உகலும்இங்கே
வெள்ளச் சடையாய் அமுதுசெய்
யாவிடில் என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட்
டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங்
கலத்தரி வாட்டாயனே. 14

ஆனாய நாயனார்

தாயவன் யாவுக்குந் தாழ்சடை
மேல்தனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல்
சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு
விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை
உவந்தாண் டருளினனே. 15

சுந்தரமூர்த்தி நாயனார்

அருட்டுறை அத்தற் கடிமைப்பட்
டேன்இனி அல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேஎன்ன
வல்லவன் பூங்குவளை

---

15. வேயவன் புல்லாங்குழலை உடையவன்.

16. அருட்டுறை: திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயில்.

இருட்டுறை நீர்வயல் நாவற்
பதிக்கும் பிரான்அடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி
காட்டிட வல்லவனே. 16

மூர்த்தி நாயனார்

அவந்திரி குண்டமண் ஆவதின்
மாள்வனென் றன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந்
தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துல
காண்டவொண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா
புரியென்னும் நீள்பதியே. 17

முருக நாயனார்

பதிகந் திகழ்தரு பஞ்சாக்
கரம்பயில் நாவினன்சீர்
மதியஞ் சடையாற் கலர்தொட்
டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழற்சண்பை நாதற்குத்
தோழன்வன் றொண்டன்அம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு
கன்னெனும் அந்தணனே. 18

உருத்திர பசுபதி நாயனார்

அந்தாழ் புனல்தன்னில் அல்லும்
பகலும்நின் றாதரத்தால்
உந்தாத அன்பொடு ருத்திரஞ்
சொல்லிக் கருத்தமைந்த

---

18. சண்பைநாதற்கு - திருஞான சம்பந்தருக்கு. வன்றொண்டன் பொன் அதிகம் பெறும் என்றது புகலூருக்கு விசேடணம்.

பைந்தார் உருத்ர பசுபதி
தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென்
றுரைப்பரிந் நானிலத்தே. 19

திருநாளைப்போவார் நாயனார்

நாவார் புகழ்த்தில்லை அம்பலத்
தான்அருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத்
தொண்டன்தன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப
முனியா யவன்பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர்
என்பர்இம் மண்டலத்தே. 20

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

மண்டும் புனற்சடை யான்தமர்
தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடா
தொழியின்யான் வீவனென்று
முண்டம் படர்பாறை முட்டும்
எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி
ஏகா லியர்தங்கள் தொல்குலமே. 21

சண்டேசுர நாயனார்

குலமே றியசேய்ஞ லூரிற்
குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் சண்டிகண்
டீர்தந்தை தாள்இரண்டும்

---

20. புலை - புலைச்சாதித் தன்மை.

21. தூசு எற்றி - ஆடையைத் துவைத்து. முண்டம் - நெற்றி.

வலமே றியமழு வால்எறிந்
தீசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர்
சூட்டிய நன்னிதியே. 22

சுந்தரமூர்த்தி நாயனார்

நிதியார் துருத்திதென் வேள்விக்
குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த
புகர்பின்னை மாற்றிடென் று
துதியா அருள்சொன்ன வாறறி
வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர்
கோனென்னும் நற்றவனே. 23

திருநாவுக்கரசு நாயனார்

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப்
பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற
வீரட்டர் பெய்கழற்குள்
உற்றவன் உற்ற விடம்அடை
யார்இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்
கரசெனுந் தூமணியே. 24

மணியினை மாமறைக் காட்டு
மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப்
பித்தன தெண்கடலிற்

---

23. புகர் - குற்றம்.
24. அடையார் - பகைவர். துற்றவன் - உண்டவன்.

பிணியன கன்மிதப் பித்தன
சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர்
பிரான்றன் அருந்தமிழே. 25

குலச்சிறை நாயனார்

அருந்தமி ழாகரன் வாதில்
அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித்
தோன்எழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் றன்அதி
காரி பிரசம்மல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற்
குடிமன் குலச்சிறையே. 26

பெருமிழலைக் குறும்ப நாயனார்

சிறைநன் புனற்றிரு நாவலூ
ராளி செழுங்கயிலைக்
கிறைநன் கழல்நாளை எய்தும்
இவனருள் போற்றஇன்றே
பிறைநன் முடியன் அடியடை
வேனென் றுடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக்
குறும்ப னெனும்நம்பியே. 27

காரைக்கால் அம்மையார்

நம்பன் திருமலை நான்மிதி
யேனென்று தாள்இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்
தேற உமைநகலும்

26. அருந்தமிழாகரன் - திருஞானசம்பந்தர். தமிழ்நாட்டிடை - பாண்டிய நாட்டில்.

செம்பொன் உருவன்என்
அம்மை எனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பின் உருகாரைக் காலினின்
மேய குலதனமே. 28

அப்பூதியடிகள் நாயனார்

தனமா வதுதிரு நாவுக்
கரசின் சரணமென்று
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத்
தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப்
பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயற்றிங்க ளூரினில்
வேதியன் அப்பூதியே. 29

திருநீலநக்க நாயனார்

பூதிப் புயத்தர் புயத்திற்
சிலந்தி புகலும்அஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை
நீப்பஉப்பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காணென்று
பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக்
கன்னெனும் வேதியனே. 30

நமிநந்தியடிகள் நாயனார்

வேத மறிக்கரத் தாரூர்
அரற்கு விளக்குநெய்யைத்
தீது செறிஅமண் கையர்அட்
டாவிடத் தெண்புனலால்

---

30. உப்பால வெல்லாம் - மற்ற இடங்களெல்லாம்.

31. வேதமாகிய மானைக் கையில் உடையவர். அட்டா விட - ஊற்றுமற் போக.

ஏத முறுக அருகரென்
 றன்று விளக்கெரித்தான்
நாதன் எழில்ஏமப் பேறார்
 அதிபன் நமிநந்தியே. 31

சுந்தரமூர்த்தி நாயனார்

நந்திக்கு நம்பெரு மாற்குநல்
 லாரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ்
 பாடிப் படர்புனலிற்
சிந்திப் பரியன சேவடி
 பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்றொண்டன்
 என்பர்இவ் வையகத்தே. 32

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

வையம் மகிழயாம் வாழ
 அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற்
 கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப்
 பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனன்என்பர்
 ஞானசம் பந்தனையே. 33

பந்தார் விரலியர் வேள்செங்கட்
 சோழன் முருகன்நல்ல
சந்தார் அகலத்து நீலநக்
 கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில்
 இட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான்அருட்
 காழியர் கொற்றவனே. 34

ஏயர்கோன் கலிக்காம நாயனார்

கொற்றத் திறல்எந்தை தந்தைதன்
தந்தைஎங் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி
யேந்திகழ் வன்றொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பான்என்
றுடைவாள் உருவிஅந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன்
குடிஏயர் சீர்க்குடியே. 35

திருமூல நாயனார்

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல
னாகின்ற அங்கணனே. 36

தண்டியடிகள் நாயனார்

கண்ணார் மணிஒன்றும் இன்றிக்
கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனற்றடந் தொட்டலுந்
தன்னை நகும்அமணர்
கண்ணாங் கிழப்ப அமணர்
கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன்
ஆரூர் விறற்றண்டியே. 37

---

36. குரம்பை - உடல்.
37. தொட்டலும் - தோண்ட.

மூர்க்க நாயனுர்

தண்டலை சூழ்திரு வேற்காட்டூர்
மன்னன் தருகவற்ருற்
கொண்டவல் லாயவ்வன் சூதரை
வென்றுமுன் கொண்டபொருள்
முண்டநன் னீற்றன் அடியவர்க்
கீபவன் மூர்க்கனென்பர்
நண்டலை நீரொண் குடந்தையில்
மேவுநற் சூதனையே. 38

சோமாசிமாற நாயனுர்

சூதப் பொழில்அம்பர் அந்தணன்
சோமாசி மாறனென்பான்
வேதப் பொருளஞ் செழுத்தும்
விளம்பியல் லால்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த
நியமன் பரவையென்னும்
மாதுக்குக் காந்தன்வன் ருெண்டன்
றனக்கு மகிழ்துணையே. 39

சுந்தரமூர்த்தி நாயனுர்

துணையும் அளவும்இல் லாதவன்
றன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர்நெடு வேலும்
கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்தகட் சங்கிலி
பேரமைத் தோள்இரண்டும்
அணையும் அவன்திரு வாரூரன்
ஆகின்ற அற்புதனே. 40

---

38. கவற்ருல் - சூதினுல். நண்டு அலைகின்ற.
39. சூதப் பொழில் - மாஞ்சோலை. காந்தனுகிய வன்ருெண்டனுக்கு.

சாக்கிய நாயனார்

தகடன ஆடையன் சாக்கியன்
மாக்கற் றடவரையின்
மகடனந் தாக்கக் குழைந்ததிண்
தோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு மேனியிற் செங்கல்
எறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவன் ஊர்சங்க
மங்கை புவனியிலே. 41

சிறப்புலி நாயனார்

புவனியிற் பூதியுஞ் சாதன
மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மற்குச் சிறப்புச்செய்
தத்துவ காரணனும்
அவனியிற் கீர்த்தித்தென் னாக்கூர்
அதிபன் அருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல்
சீர்நஞ் சிறப்புலியே. 42

சிறுத்தொண்ட நாயனார்

புலியின் அதளுடைப் புண்ணியற்
கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப்
புதல்வன் உடல்துணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும்
புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டூர்
மலியும் பொழிலொண்செங் காட்டங்
குடியவர் மன்னவனே. 43

---

41. வரையின் மகள் - பார்வதி தேவி.
42. சாதனம் - ருத்திராட்சம்.

சேரமான்பெருமாள் நாயனார்

மன்னர் பிரான்எதிர் வண்ணான்
உடல்உவர் ஊறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல
வருதலுந் தான்வணங்க
என்னர் பிரான்அடி வண்ணான்
எனஅடிச் சேரன்என்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி
வானெனுஞ் சேரலனே. 44

சேரற்குத் தென்னா வலர்பெரு
மாற்குச் சிவன்அளித்த
வீரக் கடகரி முன்புதன்
பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில்
வீரனை வெற்றிகொண்ட
சூரற் கெனதுள்ளம் நன்றுசெய்
தாய்இன்று தொண்டுபட்டே. 45

கணநாத நாயனார்

தொண்டரை யாக்கி அவரவர்க்
கேற்ற தொழில்கள்செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு
நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குக்
கோல மடல்கள்தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடற்
காழிக் கணநாதனே. 46

---

45. நாவலர் பெருமாற்குச் சிவன் அளித்த கரியின் முன்பு தன் இவுளியை வைத்த; இவுளி – குதிரை.
46. கண்டல் - தாழை.

கூற்றுவ நாயனார்

நாதன் திருவடி யேமுடி
யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொறித்தமை
யால்அது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலம்எல்
லாமொரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள
ஞகிய கூற்றுவனே. 47

சுந்தரமூர்த்தி நாயனார்

கூற்றுக் கெவனே புகல்திரு
வாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் இன்னடைக்
காயும் இடுதருமக்
கோற்றொத்து கூனனுங் கூன்போய்க்
குருடனுங் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி
யாம்இத் தரணியிலே. 48

பொய்யடிமை இல்லாத புலவர்

தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச்
சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத்
தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயுந் திருவால
வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல
பாடும் புலவர்களே. 49

---

48. கோலைத் தோத்தும் கூனன்.

புகழ்ச்சோழ நாயனார்

புலமன் னியமன்னைச் சிங்கள
நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன
நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழனெ
தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக்
கீந்ததொர் வண்புகழே. 50

நரசிங்க முனையரைய நாயனார்

புகழும் படிஎம் பரமே
தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட
வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண் டவனுக்
கிரட்டிபொன் இட்டவன்நீள்
திகழு முடிநர சிங்க
முனையர சன்திறமே. 51

அதிபத்த நாயனார்

திறமமர் மீன்படுக் கும்பொழு
தாங்கொரு மீன்சிவற்கென்
றுறவமர் மாகடற் கேவிடு
வோன்ஒரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற்
கென்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை அதிபத்த
னாகிய பொய்யிலியே. 52

---

50. கோகன நாதன் குலம் – சூரிய குலம்.
51. எம் பரமே – எம்முடைய ஆற்றலுக்குட்பட்டதா?

கலிக்கம்ப நாயனார்

பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க்
காட்பட்டுத் தன்அடியான்
சைவத் திருவுரு வாய்வரத்
தான்அவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர்
வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணு
கடத்துக் கலிக்கம்பனே. 53

கலிய நாயனார்

கம்பக் கரிக்கும் சிலந்திக்கும்
நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற் கொளிவிளக்
கேற்றற் குடல்இலனாய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக்
குழன்றுங்கொள் கூலியினால்
நம்பற் கெரித்த கலிஒற்றி
மாநகர்ச் சக்கிரியே. 54

சத்தி நாயனார்

கிரிவில் லவர்தம் அடியரைத்
தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரைஅந் நாவரி
வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு
நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகம ழுந்தேன்
வரிஞ்சைத் திகழ்சத்தியே. 55

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

சத்தித் தடக்கைக் குமரனற்
றாதைதன் தானம்எல்லாம்

---

56. சத்தி - வேல். தானம் — க்ஷேத்திரம்.

முத்திப் பதமொரோர் வெண்பா
மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் ருளரற்
காய்ஐயம் ஏற்றலென்னும்
பத்திக் கடல்ஐ யடிகளா
கின்றநம் பல்லவனே. 56

சுந்தரமூர்த்தி நாயனார்

பல்லவை செங்கதி ரோனைப்
பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூர்அரன்
பால்துய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி
மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தன்பதி நாவலூர்
ஆகின்ற நன்னகரே. 57

கணம்புல்ல நாயனார்

நன்னக ராய இருக்குவே
ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லை
புகுந்து புலீச்சரத்து
மன்னவ ராய அரர்க்குநற்
புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோள்எந்தை தந்தை
பிரான்எங் கணம்புல்லனே. 58

காரி நாயனார்

புல்லன வாகா வகைஉல
கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வுந்நய மாக்கிச்
சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங்
கயிலைபுக் கான்என்பராற்

கல்லன மாமதில் சூழ்கட
வூரினிற் காரியையே. 59

நெடுமாற நாயனார்

கார்த்தண் முகிற்கைக் கடற்காழி
யர்பெரு மாற்கெதிரா
ஆர்த்த அமணர் அழிந்தது
கண்டுமற் றுங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த
பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலி
யில்வென்ற மாறனுக்கே. 60

வாயிலார் நாயனார்

மாறு அருளரன் றன்னை
மனஆ லயத்திருத்தி
ஆறு அறிவாம் ஒளிவிளக்
கேற்றி அகமலர்வாம்
வீறு மலரளித் தன்பெனும்
மெய்யமிர் தங்கொடுத்தான்
வீறூர் மயிலையுள் வாயிலான்
என்று விளம்புவரே. 61

முனையடுவோர் நாயனார்

என்று விளம்புவர் நீடூர்
அதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க்
காக்கூலி ஏற்றெறிந்து
வென்று பெருஞ்செல்வம் எல்லாங்
கனகநன் மேருவென்னும்
குன்று வளைத்த சிலையான்
தமர்க்குக் கொடுத்தனனே. 62

---

60. பஞ்சவன் – பாண்டியன்.
62. கொடுத்தனனே என்று விளம்புவர்.

சுந்தரமூர்த்தி நாயனுர்

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்
குயிர்அன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவிஅவி
நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண்
டியினிற் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்ருெண்ட
ஞகின்ற மாதவனே. 63

கழற்சிங்க நாயனுர்

மாதவத் தோர்தங்கள் வைப்பினுக்
காரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன்
மூக்கை அரியப்பொற்கை
காதிவைத் தன்ருே அரிவதென்
ருங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங்
கோதைக் கழற்சிங்கனே. 64

இடங்கழி நாயனுர்

சிங்கத் துருவனைச் செற்றவன்
சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்தஆ
தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென்
செல்வம் எனப்பறைபோக்
கெங்கட் கிறைவன் இருக்குவே
ளூர்மன் இடங்கழியே. 65

---

65. **கொங்கிற் கனகம் - கொங்கு நாட்டிற் கிடைக்கும் பொன்.**

செருத்துணை நாயனார்

கழிநீள் கடல்நஞ் சயின்றார்க்
　　கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன்
　　தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந்
　　தானென் றியம்புவராற்
செழுநீர் மருகல்நன் னாட்டமர்
　　தஞ்சைச் செருத்துணையே. 66

புகழ்த்துணை நாயனார்

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை
　　வையஞ் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி
　　உமைகோனை மஞ்சனஞ்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து
　　கலசம் விழத்தரியா
தருவரை வில்லி அருளும்
　　நிதியது பெற்றனனே. 67

கோட்புலி நாயனார்

பெற்றம் உயர்த்தோன் விரையாக்
　　கலிபிழைத் தோர்தமது
சுற்றம் அறுக்குந் தொழிற்றிரு
　　நாட்டியத் தான்குடிக்கோன்
குற்றம் அறுக்குநங் கோட்புலி
　　நாவற் குரிசில்அருள்
பெற்ற அருட்கடல் என்றுல
　　கேத்தும் பெருந்தகையே. 68

---

67. **சிறுவிலைத்தா** – பஞ்ச காலமாக.
68. **விரையாக் கலி** – ஆணை. **நாவற் குரிசில்** – **சுந்தர மூர்த்தி நாயனார்.**

சுந்தரமூர்த்தி நாயனார்

தருமகட் பேசினேன் வீயவே
நூல்போன சங்கிலிபாற்
புகுமணக் காதலி னால்ஒற்றி
யூர்உறை புண்ணியன்றன்
மிகுமலர்ப் பாதம பணிந்தரு
ளால்இவ் வியனுலகம்
நகும்வழக் கேநன்மை யாப்புணர்ந்
தான்நாவ லூரரசே. 69

பத்தராய்ப் பணிவார்கள்

அரசினை ஆரூர் அமரர்
பிரானை அடிபணிந்திட்
டுரைசெய்த வாய்தடு மாறி
உரோம புளகம்வந்து
கரசர ணாதி அவயவங்
கம்பித்துக் கண்ணருவி
சொரிதரும் அங்கத்தி னோர்பத்தர்
என்று தொகுத்தவரே. 70

பரமனையே பாடுவார்

தொகுத்த வடமொழி தென்மொழி
யாதொன்று தோன்றியதே
மிகுத்த இயலிசை வல்ல
வகையில்விண் தோயுநெற்றி
வகுத்த மதிற்றில்லை அம்பலத்
தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்
லோர்என்பர் உத்தமரே. 71

---

70. கம்பித்து – நடுங்கி.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

உத்தமத் தானத் தறம்பொருள்
இன்ப மொடியெறிந்து
வித்தகத் தானத் தொருவழிக்
கொண்டு விளங்கச்சென்னி
மத்தம்வைத் தான்திருப் பாத
கமல மலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத் தாரென்பர் வீடுபே
றெய்திய செல்வர்களே. 72

திருவாரூர்ப் பிறந்தார்கள்

செல்வந் திகழ்திரு வாரூர்
மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ
ரேஅத னால்திகழச்
செல்வம் பெருகுதென் னாரூர்ப்
பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்கணித்
தாய செழுநெறியே. 73

முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்

நெறிவார் சடையரைத் தீண்டிமுப்
போதும்நீ டாகமத்தின்
அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர்
நம்மையும் ஆண்டமரர்க்
கிறையாய்முக் கண்ணும்எண் தோளுந்
தரித்தீறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெரு மாற்குறை
வாய உலகினிலே. 74

---

72. மத்தம் — ஊமத்த மலர்.

முழுநீறு பூசிய முனிவர்

உலகு கலங்கினும் ஊழி
திரியினும் உள்ளொருகால்
விலகுதல் இல்லா விதியது
பெற்றநல் வித்தகர்காண்
அலகில் பெருங்குணத் தாரூர்
அமர்ந்த அரனடிக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக்
கணியும் இறைவர்களே. 75

அப்பாலும் அடிச்சார்ந்தார்

வருக்கம் அடைத்துநன் னாவலூர்
மன்னவன் வண்டமிழாற்
பெருக்கு மதுரத் தொகையிற்
பிறைசூடி பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடப் பாலடிச்
சார்ந்தவர் என்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத்
தோர்நஞ் செழுந்தவரே. 76

சுந்தரமூர்த்தி நாயனார்

செழுநீர் வயல்முது குன்றினிற்
செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கையன் ஈந்தபொன்
ஆங்குக்கொள் ளாதுவந்தப்
பொழிநீ டருதிரு வாரூரில்
வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூரன்
என்றுநாங் கேட்பதுவே. 77

பூசலார் நாயனார்

பதுமநற் போதன்ன பாதத்
தரற்கொரு கோயிலையாம்
கதுமெனச் செய்குவ தென்றுகொ
லாமென்று கண்துயிலா

ததுமனத் தேஎல்லி தோறும்
நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றல் உலாம்நின்ற
வூர்தனிற் பூசலையே. 78

மங்கையர்க்கரசியார்

பூசல் அயிற்றென்ன னார்க்கன
லாகப் பொறுமையினால்
வாச மலர்க்குழற் பாண்டிமா
தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா
கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தாள் அருகந்
தருக்குத்தென் னாட்டகத்தே. 79

நேச நாயனார்

நாட்டமிட் டன்றரி வந்திப்ப
வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற் றவன்என்பர்
சைவத் தவர்அரையிற்
கூட்டுமக் கப்படங் கோவணம்
நெய்து கொடுத்துநன்மை
ஈட்டுமக் காம்பீலிச் சாலிய
நேசனை இம்மையிலே. 80

---

78. எல்லி தோறும் இரவு தோறும்.

79. தமிழாகரர்க்கு – திருஞான சம்பந்தர்க்கு.

80. நாட்டம் இட்டு - கண்ணை வைத்து. படை – சக்க ராயுதத்தை.

கோச்செங்கட் சோழ நாயனார்

மைவைத்த கண்டன் நெறியன்றி
மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு
சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து
தரணிநீ டாலயங்கள்
செய்வித்த வன்திருக் கோச்செங்க
ணானெனுஞ் செம்பியனே. 81

செம்பொன் அணிந்துசிற் றம்பலத்
தைச்சிவ லோகம்எய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன்
குலமுதல் என்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை ஈசனைச்
சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க
ணானெனும் நித்தனையே. 82

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

தனையொப் பருமெருக் கத்தம்
புலியூர்த் தகும்புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண்
டப்பெரும் பாணனைநீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர்
கோன்செந் தமிழொடிசை
புனையப் பரன்அருள் பெற்றவன்
என்பரிப் பூதலத்தே. 83

---

81. செம்பியன் - சோழன்.
82. பாண்டி நாட்டையும் ஆண்டமையால் நிம்ப நறுந் தொங்கலும் அணிந்தான். நிம்பம் - வேம்பு.

சடைய நாயனார்

தலம்விளங் குந்திரு நாவலூர்
தன்னிற் சடையனென்னும்
குலம்விளங் கும்புக ழோனை
உரைப்பர் துவலயத்தில்
நலம்விளங் கும்படி நாம்விளங்
கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி ஆரூ
ரனைமுன் பயந்தமையே. 84

இசைஞானியார்

பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள்
ளைப்பொள்ளல் நீள்பணைக்கைக்
கயந்தான் உகைத்தநற் காளையை
என்றுங் கபாலங்கைக்கொண்
டயந்தான் புகுமரன் ஆரூர்ப்
புனித அரன்திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத் தென்றும்
உரைப்பது ஞானியையே. 85

சுந்தரமூர்த்தி நாயனார்

ஞானவா ரூரரைச் சேரரை
அல்லது நாம்அறியோம்
மானவ ஆக்கை யொடும்புக்
கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற்
கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத்
தோர்தங்கள் கூட்டத்திலே. 86

---

85. பொள்ளல் - துவாரத்தையுடைய. அயம் - ஐயம்.

திருத்தொண்டத்தொகையில் உள்ள கூட்ட அடியார்கள் தனியடியார்கள்

கூட்டமொன் பானொ டறுபத்து
மூன்று தனிப்பெயரா
ஈட்டும் பெருந்தவத் தோர்எழு
பத்திரண் டாம்வினையை
வாட்டுந் தவத்திருத் தொண்டத்
தொகைபதி னொன்றின்வகைப்
பாட்டுந் திகழ்திரு நாவலூ
ராளி பணித்தனனே. 87

திருத்தொண்டத் தொகைப் பதிகக் கவிகளின் முதற்குறிப்பு.

பணித்தநற் றொண்டத் தொகைமுதல்
தில்லை இலைமலிந்த
அணித்திகழ் மும்மை திருநின்ற
வம்பறு வார்கொண்டசீர்
இணைத்தநற் பொய்யடி மைகறைக்
கண்டன் கடல்சூழ்ந்தபின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய
சீர்மறை நாவனொடே. 88

நூற்பயன்

ஓடிடும் பஞ்சேந் திரியம்
ஒடுக்கிஎன் ஊழ்வினைகள்
வாடிடும் வண்ணம்நின் றேத்தவம்
செய்தனன் வானினுள்ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப் பாதத்தர்
தொண்டத் தொகையின்உள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புகழ்
அந்தாதி செப்பிடவே. 89

திருச்சிற்றம்பலம்

---

89. சேடர் - அன்பர்.

34

நம்பியாண்டார் நம்பி
அருளிச்செய்த
ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

பார்மண் டலத்தினிற் பன்னிரு
பேரொடு மன்னிநின்ற
நீர்மண் டலப்படப் பைப்பிர
மாபுரம் நீறணிந்த
கார்மண் டலக்கண்டத் தெண்டடந்
தோளன் கருணைபெற்ற
தார்மண் டலமணி சம்பந்தன்
மேவிய தண்பதியே. 1

பதிகப் பெருவழி காட்டப்
பருப்பதக் கோன்பயந்த
மதியத் திருநுதல் பங்கன்
அருள்பெற வைத்தஎங்கள்
நிதியைப் பிரமா புரநகர்
மன்னனை என்னுடைய
கதியைக் கருதவல் லோர்அம
ராவதி காப்பவரே. 2

காப்பயில் காழிக் கவுணியர்
தீபற்கென் காரணமா
மாப்பழி வாரா வகைஇருப்
பேன்என்ன மாரன்என்னே

1. படப்பை – தோட்டம்.
2. பதிகப் பெருவழி – பதிகம் பாடிப் பணியும் திருநெறி.

பூப்பயில் வாளிகள் அஞ்சும்என்
நெஞ்சரங் கப்புகுந்த
ஏப்பயில் வார்சிலை கால்வளை
யாநிற்கும் ஈண்டிரவே. 3

இரவும் பகலும்நின் பாதத்
தலர்என் வழிமுழுதும்
பரவும் பரிசே அருளுகண்
டாய்இந்தப் பாரகத்தே
விரவும் பரமத கோளரி
யேகுட வெள்வளைகள்
தரளஞ் சொரியுங் கடல்புடை
சூழ்ந்த தராய்மன்னனே. 4

மன்னிய மோகச் சுவைஒளி
ஊறோசை நாற்றமென்றிப்
பன்னிய ஐந்தின் பதங்கடந்
தோர்க்குந் தொடர்வரிய
பொன்னியல் பாடகக் கிங்கிணிப்
பாத நிழல்புகுவோர்
துன்னிய காவமர் சண்பையர்
நாதற்குத் தொண்டர்களே. 5

தொண்டினஞ் சூழச் சுரிகுழ
லார்தம் மனந்தொடர
வண்டினஞ் சூழ வருமிவன்
போலும் மயில்உகுத்த

---

3. தலைவி கூற்று. அரங்க - குலைய. ஏ - அம்பு.
4. குட வெள்வளைகள் – வளைந்த வெள்ளிய சங்குகள். தராய் - பூந்தராய் என்னும் சீகாழி
5. பாத நிழல் என்றது முத்தியை.
6. மயில் உகுத்த கண் - மயிற்பீலி. பிரம்போரென்றது சமணர்களை.

கண்டினஞ் சூழ்ந்த வளைபிரம்
போர்கழு வாஉடலம்
விண்டினஞ் சூழக் கழுவின
ஆக்கிய வித்தகனே. 6

வித்தகம் பேசிநம் வேணுத்
தலைவன் வாள்நிகர்த்து
முத்தகங் காட்டு முறுவல்நல்
லார்தம் மனமணைய
உய்த்தகம் போந்திருந் துள்ளவும்
இல்லா தனவுமுறு
புத்தகம் போலும் முதுபுலைப்
பாணன் புணர்க்கின்றதே. 7

புணர்ந்தநன் மேகச் சிறுநுண்
துளியிற் சிறகொதுக்கி
உணர்ந்தனர் போல இருந்தனை
யால்உல கம்பரசும்
குணந்திகழ் ஞானசம் பந்தன்
கொடிமதிற் கொச்சையின்வாய்
மணந்தவர் போயின ரோசொல்லு
வாழி மடக்குருகே. 8

குருந்தலர் முல்லையங் கோவலர்
ஏற்றின் கொலைமருப்பால்
அருந்திறல் ஆகத் துழுதசெஞ்
சேற்றரு காசனிதன்
பெருந்திற மாமதிற் சண்பை
நகரன்ன பேரமைத்தோள்
திருந்திழை ஆர்வம்..........முரசே. 9

---

7. தலைவி கூற்று. வேணு - வேணுபுரமென்னும் சீகாழி.
8. காமம் மிக்க கழி படர் கிளவி. கொச்சை - கொச்சை வயமென்னும் சீகாழி.
9. அருகாசனி - ஞானசம்பந்தர்.

முரசங் கரையமுன் தோரணம்
நீட முழுநிதியின்
பரிசங் கொணர்வான் அமைகின்
றனர்பலர் பார்த்தினிநீ
அரிசங் கணைதலென் ஞமுன்
கருதரு காசனிதன்
சுரிசங் கணைவயல் தந்த
நகரன்ன தூமொழிக்கே. 10

மொழிவது சைவ சிகாமணி
ஞூரித் தடவரைத்தோள்
தொழுவது மற்றவன் தூமலர்ப்
பாதங்கள் தாமங்கமழ்ந்
தெழுவது கூந்தலம் பூந்தா
மரைஇனி யாதுகொலோ
மொழிவது சேரி..........மாதர் முறுவலித்தே. 11

வலிகெழு குண்டர்க்கு வைகைக்
கரைஅன்று வான்கொடுத்த
கலிகெழு திண்டோட் கவுணியர்
தீபன் கடல்உடுத்த
ஒலிதரு நீர்வைய கத்தை
உறையிட்ட தொத்துதிரும்
மலிதரு வார்பனி யாம்மட
மாதினை வாட்டுவதே. 12

வாட்டுவர் தத்தந் துயரைவன்
கேழலின் பின்புசென்ற
வேட்டுவர் கோலத்து வேதத்
தலைவனை மெல்விரலார்

---

10. தோழி தலைவனுக்கு நொதுமலர் வரைவுணர்த்தல்.
11. தாமரை - ஞானசம்பந்தரது மாலை.
12. தோழி பருவங் கண்டு இரங்குதல்.

தோட்டியல் காதன் இவனென்று
 தாதைக்குச் சூழ்விசும்பிற்
காட்டிய கன்றின் கழற்றிற
 மானவை கற்றவரே. 13

அவர்சென் றணுகுவர் மீள்வதிங்
 கன்னை அருகர் தம்மைத்
தவர்கின்ற தண்டமிழ்ச் சைவ
 சிகாமணி சண்பையென்னப்
பவர்கின்ற நீள்கொடிக் கோபுரம்
 பல்கதி ரோன்பரியைக்
கவர்கின்ற சூலத் தொடுநின்று
 தோன்றுங் கடிநகரே. 14

நகரங் கெடப்பண்டு திண்தேர்
 மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவ னைப்பதி
 ஞாயிரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையந்
 துயர்கெட வாய்மொழிந்த
நிகரங் கிலிகலிக் காழிப்
 பிரானென்பர் நீணிலத்தே. 15

நிலமே றியமருப் பிற்றிரு
 மாலும் நிலம்படைத்த
குலமே றியமலர்க் கோகன
 தத்தய னுங்கொழிக்கும்
சலமே றியமுடி தாள்கண்
 டிலர்தந்தை காண அன்று
நலமே றியபுகழ்ச் சம்பந்தன்
 காட்டிய நாதனையே. 16

---

14. கண்டோர் செவிலிக்கு உணர்த்தல். அவர் – தலைவனும் தலைவியும். மீள்வது – மீள்வாயாக. அன்னை: விளி.
15. நகரம் - திரிபுரங்கள்.
16. முடியும் தாளும் கண்டிலர்.

நாதன் நணிபள்ளி சூழ்நகர்
கானக மாக்கியஃதே
போதின் மலிவய லாக்கிய
கோன்அமர் பொற்புகலி
ஓத நெடுங்கடல் வாருங்
கயலோ விலைக்குளது
காதி னளவும் மிளிர்கய
லோசொல்லு காரிகையே. 17

கைம்மையி னால்நின் கழல்பர
வாதுகண் டார்க்கிவனோர்
வன்மைய னேஎன்னும் வண்ணம்
நடித்து விழுப்பொருளோ
டிம்மையில் யான்எய்தும் இன்பம்
கருதித் திரிதருமத்
தன்மையி னேற்கும் அருளுதி
யோசொல்லு சம்பந்தனே. 18

பந்தார் அணிவிரற் பங்கயக்
கொங்கைப் பவளச்செவ்வாய்க்
கொந்தார் நறுங்குழற் கோமள
வல்லியைக் கூறருஞ்சீர்
நந்தா விளக்கினைக் கண்டது
நானெப் பொழுதும்முன்னும்
சந்தா ரகலத் தருகா
சனிதன் தடவரையே. 19

வரைகொண்ட மாமதிற் சண்பைத்
தலைவனை வாழ்த்தலர்போல்
நிரைகொண்டு வானோர் கடைந்ததி
னஞ்ச நிகழக்கொலாம்

---

17. தலைவன் கூற்று.
18. கைம்மையினால் - இழிதகைமையால்.
19. தலைவன் பாங்கனுக்குத் தலைவியின் இயல்பும் இடமும் உரைத்தல்.

நரைகொண்டு மெய்ப்பரத் துள்ளம்
சுழலநொந் தோரிரவும்
திரைகொண் டலமரும் இவ்வகன்
ஞாலஞ் செறிகடலே. 20

கடலன்ன பொய்ம்மைகள் செய்யினும்
வெய்ய கடுநரகத்
திடநமன் ஏவுதற் கெவ்விடத்
தான்இருஞ் செந்தமிழால்
திடமன்னு மாமதிற் சண்பைத்
தலைவன்செந் தாமரையின்
வடமன்னு நீண்முடி யான்அடிப்
போதவை வாழ்த்தினமே. 21

வாழ்த்துவ தெம்பர மேயாகும்
அந்தத்து வையமுந்நீர்
ஆழ்த்திய காலத்தும் ஆழா
ததுஅரன் சேவடியே
ஏத்திய ஞானசம் பந்தற்
கிடம்இசைத் தும்பிகொம்பர்க்
காத்திகழ் கேதகம் போதகம்
ஈனுங் கழுமலமே. 22

மலர்பயில் வாட்கண்ணி கேள்கண்ணி
நீண்முடி வண்கமலப்
பலர்பயில் கீர்த்திக் கவுணியர்
தீபன் பகைவர்என்னத்
தலைபயில் பூம்புனங் கொய்திடு
மேகணி யார்புலம்ப
அலர்பயி லாமுன் பறித்தன
மாகில் அரும்பினையே. 23

---

20. தலைவி கூற்று.
22. கேதகம் - தாழை. போது அகம் ஈனும்.
23. தோழி தலைவிக்கு உரைத்தல். கணியார் - வேங்கை மரம்.

அரும்பின அன்பில்லை அர்ச்சனை
இல்லை அரன்நெறியே
விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி
செய்கிலம் பொய்க்கமைந்த
இரும்பன உள்ளத்தி னேற்கெங்ங
னேவந்து நேர்பட்டதாற்
கரும்பன நீள்வயல் சூழ்காழி
நாதன் கழலடியே. 24

அடியால் அலர்மிதித் தாலரத்
தம்பில் கமிர்தமின்றிக்
கொடியா ளொடும்பின் நடந்தநெவ்
வாறலர் கோகனதக்
கடியார் நறுங்கண்ணி ஞானசம்
பந்தன் கருதலர்சேர்
வெடியா விடுவெம் பரற்சுறு
நாறு வியன்சுரத்தே. 25

சுரபுரத் தார்தந் துயருக்
கிரங்கிச் சுரர்கள் தங்கள்
பரபுரத் தார்தந் துயர்கண்
டருளும் பரமன்மன்னும்
அரபுரத் தான்அடி எய்துவ
னென்ப தவனடிசேர்
சிரபுரத் தான்அடி யாரடி
யேன்என் னுந் திண்ணனவே. 26

---

25. செவிலி இரங்குதல். அமிர்தம் - தலைவி. இன்று இக் கொடியாளொடும். சுறுநாறும் - தீந்த நாற்றம் நாறுகின்ற.

26. பர புரத்தார் - அயலாகிய திரிபுரத்தையுடைய அசுரர்கள்.

திண்ணன வார்சென்ற நாட்டிடை
இல்லைகொல் தீந்தமிழோர்
கண்ணென ஓங்குங் கவுணியர்
தீபன்கை போற்பொழிந்து
விண்ணின வாய்முல்லை மெல்லரும்
பீனமற் றியாம்மெலிய
எண்ணின நாள்வழு வாதிரைத்
தோடி எழுமுகிலே. 27

எழுவாள் மதியால் வெதுப்புண்
டலமந் தெழுந்துவிம்மித்
தொழுவாள் தனக்கின் றருளுங்
கொலாந்தொழு நீரவைகைக்
குழுவாய் எதிர்ந்த உறிக்கைப்
பறிதலைக் குண்டர்தங்கள்
கழுவா உடலங் கழுவின
ஆக்கிய கற்பகமே. 28

கற்பா நறவ மணிகொழித்
துந்து மலைச்சிலம்பா
நற்பா மொழிஎழில் ஞானசம்
பந்தன் புறவமன்ன
விற்பா நுதலிதன் மென்முலை
யின்னிளஞ் செவ்விகண்டிட்
டிற்பா விடும்வண்ணம் எண்ணுகின்
றாள்அம்ம எம்அனையே. 29

---

27. தலைவி கூற்று.

28. தோழி இரங்குதல். ஏடை எதிரேற விட்டமையால், வைகை தொழும் நீரையுடைதாயிற்று.

29. தலைவியை இற்செறிப்பர் என்று தோழி தலைவனுக்குக் கூறுதல். புறவம் - சீகாழி.

எம்மனை யாய்எந்தை யாய்என்னை
ஆண்டென் துயர்தவிர்த்த
செம்மலர் நீண்முடி ஞானசம்
பந்தன் புறவமன்னீர்
வெம்முனை வேல்என்ன என்ன
மிளிர்ந்து வெளுத்தரிபோன்
றும்மன வோஅல்ல வோவந்தென்
உள்ளத் தொளிர்வனவே. 30

ஒளிறு மணிப்பணி நாட்டும்
உலகத்தும் உம்பருள்ளும்
வெளிறு படச்சில நிற்பதுண்
டேமிண்டி மீன்உகளும்
அளறு வயற்சண்பை நாதன்
அமுதப் பதிகமென்னும்
களிறு விடப்புகு மேல்தொண்டர்
பாடுங் கவிதைகளே. 31

கவிக்குத் தகுவன கண்ணுக்
கினியன கேட்கில்இன்பம்
செவிக்குத் தகுவன சிந்தைக்
குரியன பைந்தரளம்
நவிக்கட் சிறுமியர் முற்றில்
முகந்துதஞ் சிற்றில்தொறும்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை
நாதன் குரைகழலே. 32

---

30. தலைவன் கூற்று. தலைவியின் கண்ணைப் புகழ்ந்தவாறு.

31. பணி நாட்டும் - நாக லோகத்திலும். உலகத்தும் - பூவுலகிலும். உம்பருள்ளும் - தேவ லோகத்திலும். வெளிறு பட - நாணத்தால் வெளுக்க.

32. தரளத்தைக் குவிக்க, நவி - நவ்வி; மான். கொச்சை - சீகாழி.

கழல்கின்ற ஐங்கணை அந்தியும்
அன்றிலுங் கால்பரப்பிட்
டழல்கின்ற தென்றலும் வந்திங்
கடர்ப்பஅன் றுயிலைக்காச்
சுழல்கின்ற நஞ்சந் தணித்தவன்
றன்னைத் தொடர்ந்துபின்போய்
உழல்கின்ற நெஞ்சமிங் கென்னோ
இனிஇன் றுறுகின்றதே. 33

உறுகின்ற அன்பினோ டொத்திய
தாளமும் உள்ளுருகிப்
பெறுகின்ற இன்பும் பிறைநுதல்
முண்டமுங் கண்டவரைத்
தெறுகின்ற வாறென்ன செய்தவ
மோவந்தென் சிந்தையுள்ளே
துறுகின்ற பாதன் கழுமலம்
போலுந் துடியிடைக்கே. 34

இடையும் எழுதா தொழியனு
மாம்இன வண்டுகளின்
புடையும் எழுதிலும் பூங்குழல்
ஒக்குமப் பொன்னனையாள்
நடையும் நகையுந் தமிழா
கரன்தன் புகலிநற்றேன்
அடையும் மொழியும் எழுதிடிற்
சால அதிசயமே. 35

---

33. தலைவி கூற்று. ஐங்கணையோடு சேர்ந்த அந்தியும்.

34. தலைவன் கூற்று. துறுகின்ற - பொருந்தி இருக்கின்ற.

35. தோழி எழுதரிதென்ன ஏந்தலை விலக்குதல். நடை, நகை, மொழி என்பவற்றை எழுத இயலாதென்றபடி.

மேனாட் டமரர் தொழஇருப்
பாரும் வினைப்பயன்கள்
தானாட் டருநர கிற்றளர்
வாருந் தமிழர்தங்கள்
கோனாட் டருகர் குழாம்வென்ற
கொச்சையர் கோன்கமலப்
பூநாட் டடிபணிந் தாரும்அல்
லாதபுலையருமே. 36

புலையடித் தொண்டனைப் பூசுரன்
ஆக்கிப் பொருகயற்கண்
மலைமடப் பாவைக்கு மாநடம்
ஆடு மணியைஎன்றன்
தலையிடைப் பாதனைக் கற்றூங்
குரைத்தசம் பந்தனென்று
முலையிடைப் பொன்கொண்டு சங்கிழந்
தாள்என்றன் மொய்குழலே. 37

குழலியல் இன்கவி ஞானசம்
பந்தன் குரைகழல்போற்
கழலியல் பாதம் பணிந்தேன்
உனையுங் கதிரவனே
தழலியல் வெம்மை தணித்தருள்
நீதணி யாதவெம்மை
அழலியல் கான்நடந் தாள்வினை
யேன்பெற்ற ஆரணங்கே. 38

---

36. தமிழர் தங்கள் கோன் - பாண்டியன். பணிந்தார் அமரர் தொழ இருப்பார்; புலையர் தளர்வர்.

37. செவிலி கூற்று. தொண்டன் என்றது திருநாளைப் போவார் நாயனாரை. பொன் – பசலை. சங்கு – வளை.

38. சுற்றாய் சுரம் தணிவித்தல். குழலைப் போன்ற இனிமையை உடைய கவி.

அணங்கமர் யாழ்முரித் தாண்பனை
　　பெண்பனை ஆக்கிஅமண்
கணங்கழு ஏற்றிக் கடுவிடந்
　　தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீரெதி ரோடஞ்
　　செலுத்தின வெண்பிறையோ
டிணங்கிய மாடச் சிரபுரத்
　　தான்றன் இருந்தமிழே. 39

இருந்தண் புகலிகோ லக்கா
　　எழிலா வடுதுறைசீர்
பொருந்தும் அரத்துறை போனகம்
　　தாளம்நன் பொன்சிவிகை
அருந்திட ஒத்தழுத் தீச்செய
　　ஏற அரனளித்த
பெருந்தகை சீரினை எம்பர
　　மோநின்று பேசுவதே. 40

பேசுந் தகையதன் றேஇன்றும்
　　அன்றுந் தமிழ்விரகன்
தேசம் முழுதும் மழைமறந்
　　தாண்கெடச் செந்தழற்கை
ஈசன் திருவரு ளால்எழில்
　　வீழி மிழலையின்வாய்க்
காசின் மழைபொழிந் தானென்றிஞ்
　　ஞாலங் கவின்பெறவே. 41

---

39. அணங்கு - மாதங்கி என்னும் தெய்வம்.

40. புகலியில் போனகத்தை அருந்திடவும், திருக்கோலக்காவில் தாளத்தை ஒத்தவும். திருவாவடுதுறையில் பொன்னை வேள்வி செய்யவும், திருநெல்வாயில் அரத்துறையில் சிவிகையை ஏறவும் சிவபெருமான் அளித்தார்.

பெறுவது நிச்சயம் அஞ்சல்நெஞ்
சேபிர மாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம்
பந்தனை வாழ்த்துதலால்
வெறியுறு கொன்றை மறியுறு
செங்கை விடைஎடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெரு
மானமர் பொன்னுலகே. 42

பொன்னார் மதில்சூழ் புகலிக்
கரசை அருகர்தங்கள்
தென்னாட் டரண்அட்ட சிங்கத்
தினைஎஞ் சிவன்இவனென்
றந்நாள் குதலைத் திருவாய்
மொழிகள் அருளிச்செய்த
என்னனை யைப்பணி வார்க்கில்லை
காண்க யமாலயமே. 43

மாலையொப் பாகும் பிறைமுன்பு
நின்று மணிகுறுக்கி
வேலையைப் பாடணைந் தாங்கெழில்
மன்மதன் விற்குனித்த
கோலைஎப் போதும் படிப்பன்
வடுப்படு கொக்கினஞ்சூழ்
சோலையைக் காழித் தலைவன்
மலரின்று சூடிடினே. 44

சூடுநற் றார்த்தமி ழாகரன்
றன்பொற் சுடர்வரைத்தோள்
கூடுதற் கேசற்ற கொம்பினை
நீயுங் கொடும்பகைநின்

44. கோலை - அம்பை. வடுப்படு கொக்கினம் - வடு உண்டாகும் மாமரக் கூட்டம்.
45. சந்திரோபாலம்பனம். ஏசற்ற - ஏங்கிப்போன.

றுடுதற் கேஅத்த னைக்குனை
யேபின்னை ஆடரவம்
வாடிடக் காரும் மறுவும்
படுகின்ற வாண்மதியே. 45

மதிக்கத் தகுநுதல் மாதொடும்
எங்கள் மலையில்வைகித்
துதிக்கத் தகுசண்பை நாதன்
சுருதி கடந்துழவோர்
மிதிக்கக் கமலம் முகிழ்த்ததண்
தேன்உண்டு மீண்டிவரால்
குதிக்கக் குருகிரி யுங்கொச்சை
நாடு குறுகுமினே. 46

குறுமன முன்கலவர் த்தமி
ழாகரன் கொச்சையன்ன
நறுமலர் மென்குழ லாய்அஞ்சல்
எம்மூர் நகுமதிசென்
றுறுமனை ஒண்சுவர் ஓவியக்
கிள்ளைக்கு நம்பதியிற்
சிறுமிகள் சென்றிருந் தங்கையை
நீட்டுவர் சேயிழையே. 47

இழைவளர் ஆகத்து ஞானசம்
பந்தன் இருஞ்சுருதிக்
கழைவளர் குன்று கடத்தலும்
காண்பீர் கடைசியர்நீள்
முழைவளர் நண்டு படத்தடஞ்
சாலிமுத் துக்கிளைக்கும்
மழைவளர் நீள்குடு மிப்பொழில்
சூழ்ந்த வளவயலே. 48

---

46. தலைவனைத் தோழி விருந்துண்டு செல்கவெனக் கூறுதல். குருகு இரியும் – பறவைகள் ஓடும்.
47. தலைவன் தன் இடம் அணித்தென்றல்.
48. கண்டோர் கூற்று. இழை – பூணூல். சாலி – நெல்.

வயலார் மருகற் பதிதன்னில்
வாளர வாற்கடியுண்
டயலா விழுந்த அவனுக்
கிரங்கி அறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்துயர்
தீர்த்த கருணைவெள்ளப்
புயலார் தருகையி னன்என்னத்
தோன்றிடும் புண்ணியமே. 49

புண்ணிய நாடு புகுவதற்
காகப் புலன்அடக்கி
எண்ணிய செய்தொழில் நிற்பதெல்
லாருமின் றியானெனக்கு
நண்ணிய செய்தொழில் ஞானசம்
பந்தனை நந்தமர்நீர்க்
கண்ணியன் மாடக் கழுமலத்
தானைக் கருதுவதே. 50

கருதத் தவஅருள் ஈந்தருள்
ஞானசம் பந்தன்சண்பை
இரதக் கிளிமொழி மாதே
கலங்கல் இவர்உடலம்
பொருதக் கழுநிரை யாக்குவன்
நந்தமர் போர்ப்படையேல்
மருதச் சினையிற் பொதும்பருள்
ஏறி மறைகுவனே. 51

---

49. என்ன – என்று சொல்ல.

50. புண்ணிய நாடாகிய முத்தியிலே புக எல்லோரும் புலனடக்குதல் ஆதியன செய்வர்; யானோ ஞானசம்பந்தனைக் கருதுவதே செய்வன். நந்து - சங்கு.

51. இடைச் சுரத்துப் படை கண்டு தலைவன் கூறுதல். இரதம் - சுவையுள்ள.

மறைமுழங் குங்குழ லார்கலி
காட்ட வயற்கடைஞர்
பறைமுழங் கும்புக லித்தமி
ழாகரன் பற்றலர்போல்
துறைமுழங் குங்கரி சீறி
மடங்கல் சுடர்ப்பளிங்கின்
அறைமுழங் கும்வழி நீவரிற்
சால அரும்பழியே. 52

பழிக்கே தருகின்ற தின்றிப்
பிறைபல் கதிர்விழுந்த
வழிக்கே திகழ்தரு செக்கரைக்
கொச்சை வயவரென்னும்
மொழிக்கே விரும்பி முளரிக்
கலமரும் ஒவியர்தம்
கிழிக்கே தரும்உரு வத்திவள்
வாடிடக் கீள்கின்றதே. 53

கீளரிக் குன்றத் தரவம்
உமிழ்ந்த இளர்மணியின்
வாளரிக் கும்வைகை மாண்டனர்
என்பர் வயற்புகலித்
தாளரிக் கும்மரி யான்அருள்
பெற்ற பரசமய
கோளரிக் குங்கிக ராத்தமிழ்
நாட்டுள்ள குண்டர்களே. 54

---

52. தோழி தலைவனை இரவு வரல் விலக்கல். பற்றலர் – பகைவர். பளிங்கின் அறை – பளிங்குப் பாறை.

53. பிறை கண்டு கலங்கிய தலைவி நிலையைத் தோழி கூறுதல். பிறை கீள்கின்றது. முளரிக்கு – ஞானசம்பந்தருடைய தாமரை மாலைக்கு.

54. மணியின் வாள் அரிக்கும் – மாணிக்கத்தின் சுடரை அரித்துச் செல்லும். குண்டர்கள் மாண்டனர். அரிக்கும் அரிய தாளுடையவன்.

குண்டகழ் சூழ்தரு கொச்சைத்
தலைவன்றன் குன்றகஞ்சேர்
வண்டக மென்மலர் வில்லியன்
னீர்வரி விற்புருவக்
கண்டக வாளி படப்புடை
வீழ்செங் கலங்கலொடும்
புண்டகக் கேழல் புகுந்ததுண்
டோநுங்கள் பூம்புனத்தே. 55

புனத்தெழு கைமதக் குன்றம
தாயங்கொர் புண்கலையாய்
வனத்தெழு சந்தனப் பைந்தழை
யாய்வந்து வந்தடியேன்
மனத்தெழு பொற்கழல் ஞானசம்
பந்தன்வண் கொச்சையன்னாள்
கனத்தெழு கொங்கைக ளாய்அல்கு
லாய்த்திவர் கட்டுரையே. 56

கட்டது வேகொண்டு கள்ளுண்டு
நுங்கைக ளாற்சுணங்கை
இட்டது வேயன்றி எட்டனைத்
தான்இவள் உள்ளுறுநோய்
விட்டது வேயன்றி வெங்குரு
நாதன்றன் பங்கயத்தின்
மட்டவிழ் தார்கொண்டு சூட்டுமின்
பேதை மகிழ்வுறவே. 57

---

55. பன்றி வினுதல். மலர் வில்லி - மன்மதன். கண்டகம் - முள். செங்கலங்கல் - இரத்தம். புண் தக.

56. பாங்கி தலைவனை நகுதல் கைம்மதக் குன்றம் - யானை. கலை - மான் ஆய்த்து ஆயிற்று.

57. தோழி அறத்தொடு நிற்றல். சுணங்கு - பசலை. வெங்குரு - சீகாழி.

உறவும் பொருளும்ஒண் போகமும்
கல்வியுங் கல்வியுற்ற
துறவுந் துறவிப் பயனும்
எனக்குச் சுழிந்தபுனற்
புறவும் பொழிலும் பொழில்சூழ்
பொதும்புந் ததும்பவண்டின்
நறவும் பொழில்எழிற் காழியர்
கோன்திரு நாமங்களே. 58

நாமுகந் தேத்திய ஞானசம்
பந்தனை நண்ணலர்போல்
ஏமுக வெஞ்சரஞ் சிந்திவல்
இஞ்சி இடிபடுக்கத்
தீமுகந் தோன்றிகள் தோன்றத்
தளவ முகைஅரும்பக்
காமுகம் பூமுகங் காட்டிமின்
மூர்த்தன காரினமே. 59

காரங் கணைபொழிற் காழிக்
கவுணியர் தீபன்நல்லூர்ச்
சீரங் கணைநற் பெருமணந்
தன்னிற் சிவபுரத்து
வாரங் கணைகொங்கை மாதொடும்
புக்குறும் போதுவந்தார்
ஆரங் கொழிந்தனர் பெற்றதல்
லால்அவ் வரும்பதமே. 60

---

58. புறவு - முல்லை நிலம்.

59. கார்ப்பருவம் கண்டு தலைவி இரங்கல். இஞ்சி - மதில். தோன்றிகள் - செங்காந்தள் மலர்கள். தளவம் - முல்லை. காமுகம் பூமுகம் காட்டி - சோலைகளில் மலர்களின் முகத்தைக் காட்டி.

60. அரும்பதம் பெற்றதல்லால் ஆர் ஒழிந்தனர்; யாவரும் பெற்றனரென்றபடி.

அரும்பதம் ஆக்கும் அடியரொ
டஞ்சலித் தார்க்கரிய
பெரும்பதம் எய்தலுற் றீர்வந்
திறைஞ்சுமின் பேரரவம்
வரும்பத நான்மறைக் காழித்
தலைவன் மலர்க்கமலத்
தரும்பத ஞானசம் பந்தனென்
னுனை தன் தாளிணையே. 61

தாளின் சரணந் தருஞ்சண்பை
நாதன் தரியலர்போற்
கீளின் மலங்க விலங்கே
புகுந்திடுங் கெண்டைகளும்
வாளுந் தொலைய மதர்த்திரு
காதின் அளவும்வந்து
மீளுங் கருங்கண்ணி மின்புரி
யாவைத்த மென்னகையே. 62

நகுகின்ற முல்லைநண் ணார்எரி
கண்டத் தவர்கவர்ந்த
மிகுகின்ற நன்னிதி காட்டின
கொன்றை விரவலர்ஊர்
புகுகின்ற தீயெனப் பூத்தன
தோன்றி புறவமன்கைத்
தகுகின்ற கோடல்கள் அன்பரின்
றெய்துவர் கார்மயிலே. 63

---

61. அரவம் - ஓசை. பதம் - சொற்கள்.
62. முறுவற் குறிப்புணர்தல். கீளின் மலங்க - கீளுதலால் வருந்த. விலங்கே - குறுக்கே.
63. பருவங் கண்டு தலைவர் வருவரென்று தோழி கூறியது. நகுகின்ற: முற்று. கொன்றை நிதியைக் காட்டின. கோடல்கள் — காந்தள் மலர்கள். கைத்தகுகின்ற கையைப் போலத் தோன்றின.

மயிலேந் தியவள்ளல் தன்னை
அளிப்ப மதிபுணர்ந்த
எயிலேந் தியசண்பை நாதன்
உலகத் ததிர்பவர்யார்
குயிலேந் தியபொழிற் கொங்கேந்
தியகொம்பின் அம்புதழீஇ
அயிலேந் தியமலர் கண்டுள
ளுய்வந்த அண்ணலுக்கே. 64

அண்ணல் மணிவளைத் தோள்அரு
காசனி சண்பையன்ன
பெண்ணின் அமிர்தநல் லாள்குழல்
நாற்றம் பெடையொடும்பூஞ்
சுண்ணந் துதைந்தவண் டேகண்ட
துண்டுகொல் தூங்கொலிநீர்த்
தண்ணம் பொழில்எழிற் காசினி
பூத்தமென் றுதுகளே. 65

தாதுகற் றோய்த்தநஞ் சன்னசி
யார்சட லம்படுத்துத்
தூதையிற் சிக்கங் கரஞ்சேர்த்து
வாளா துலுக்குகின்றீர்
போதியிற் புத்தர்கள் வம்மின்
புகலியர் கோனன்னநாட்
காதியிட் டேற்றுங் கழுத்திறம்
பாடிக் களித்திடவே. 66

---

64. பாங்கன் தலைவனை வியத்தல். எயில் - மதில். எதிர் பவர் - முன் நிற்பவர்; ஒப்பானவர். கொம்பு - தலைவி. மலர் - கண்கள். அவளைக் கண்டு மீண்டு வந்த வலிமையையுடைய தலைவனை ஒப்பவர் யார்?

65. தலைவன் தலைவியைப் புகழ்தல். குழலில் உள்ள மணத்தை வேறு மலர்த்தாதுகளில் கண்டதுண்டோ?

66. கல் - காவிக்கல். தூதை கமண்டலம். சிக்கம் - உறி. துலுக்குகின்றீர் - ஆடுகின்றீர்.

களியுறு தேன்தார்ச் சவுணியர்
தீபன் கருதலர்போல்
வெளியுறு ஞாலம் பகல்இழந்
தால்விரை யார்கமலத்
தளியுறு மென்மலர்த் தாதளைந்
தாழி அமைப்பவரும்
துளியுறு வாடையி தாமட
மானைத் துவள்விப்பதே. 67

தேறும் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துச் சிறந்துவந்துள்
ஊறும் அமிர்தைப் பருகிட்
டெழுவதோர் உட்களிப்புக்
கூறும் வழிமொழி தந்தெனை
வாழ்வித்த வன்கொழுந்தேன்
நாறும் அலங்கல் தமிழா
கரனென்னும் நன்னிதியே. 68

நிதியுறு வார்அறன் இன்பம்வீ
டெய்துவர் என்னவேதம்
துதியுறு நீள்வயற் காழியர்
கோனைத் தொழாரின்னைய
நதியுறு நீர்தெளித் தஞ்சல்
என அண்ணல் அன்றேவெறு
மதியுறு வாணுதல் பாதம்
பணிந்தனள் மன்னனையே. 69

---

67. தோழி தலைவியின் நிலை கண்டு இரங்குதல்.

69. தோழி அறத்தொடு நிற்றல். தொழாரின் னைய - தொழாதவரைப் போல இவள் மயங்கிக் கிடக்க.

மன்னநங் கனைசெந் தமிழா
கரன்வெற்பில் வந்தொருவர்
அன்னங்கள் அஞ்சன்மின் என்றடர்
வேழத் திடைவிலங்கிப்
பொன்னங் கலைசா வகைஎடுத்
தாற்கிவள் பூண்அழுந்தி
இன்னந் தழும்புள வாம்பெரும்
பாலும்அவ் வேந்தனுக்கே. 70

ஏந்தும் உலகுறு வீரெழில்
நீலநக் கற்கும்இன்பப்
பூந்தண் புகலூர் முருகற்குந்
தோழனைப் போகமார்ப்பைக்
காந்துங் கனலிற் குளிர்படுத்
துக்கடற் கூடலின்வாய்
வேந்தின் துயர்தவிர்த் தானைஎப்
போதும் விரும்புமினே. 71

விரும்பும் புதல்வனை மெய்யரிந்
தாக்கிய இன்னமிர்தம்
அரும்பும் புனற்சடை யாய்உண்
டருளென் றடிபணிந்த
இரும்பின் சுடர்க்களிற் றன்சிறுத்
தொண்டனை ஏத்திரேற்
சுரும்பின் மலர்த்தமி ழாகரன்
பாதத் தொடர்வெளிதே. 72

---

70. களிறு தரு புணர்ச்சி கூறி அறத்தொடு நிற்றல். மன் நம் கனை. பொன் - தலைவி. கலைசாவகை - கலங்காதபடி.

71. போக மார்ப்பை - 'போகமார்த்த' என்ற திருப்பதிகத்தை. இப் பதிகம் எழுதிய ஏட்டைச் சம்பந்தப் பெருமான் எரியிலிட, ஏடு வேவாதிருந்தது. கூடலின் வாய் வேந்து - கூன் பாண்டியன்.

எளிவந்த வாளழிற் பூவரை
ஞாண்மணித் தார்தழங்கத்
துளிவந்த கண்பிசைந் தேங்கலும்
எங்கள் அரன்துணையாம்
கிளிவந்த சொல்லிபொற் கிண்ணத்தின்
ஞான அமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ்சியின்சொற்
சிறுக்கன்றன் ஆரருளே. 73

அருளுந் தமிழா கரனின்
னலங்கல்தந் தென்பெயரச்
சுருளுங் குழலியற் கிந்திலை
யேமுன்பு தூங்குகரத்
தருளுங் களிற்றினொ டோட்டரு
வானை அருளியன்றே
மருளின் மொழிமட வாள்பெயர்
என்கண் வருவிப்பதே. 74

வருவார் உருவின் வழிவழி
வைத்த வனமருந்தும்
திருவா ரிருந்த செழுநகர்ச்
செவ்வித் திருவடிக்காள்
தருவான் தமிழா கரன்கரம்
போற்சலம் வீசக்கண்டு
வெருவா வணங்கொண்டல் கள்மிண்டி
வானத்து மின்னியவே. 75

மின்னார் குடுமி நெடுவெற்
பகங்கொங்கில் வீழ்பனிநோய்
தன்னார் வழிகெட் டழிந்தமை
சொல்லுவர் காண்இறையே

---

73. தழங்க - ஒலிக்க. சிறுக்கன் - குழந்தை. அருள் எளி வந்தவாறு என்ன வியப்பு.
76. நெடு வெற்பகம் - திருச்செங்கோடு.

மன்னார் பரிசனத் தோர்மேற்
புகலும் எவர்க்கும்மிக்க
நன்னு வலர்பெரு மான்அரு
காசனி நல்கிடவே. 76

நல்கென் றடியின் இணைபணி
யார்சண்பை நம்பெருமான்
பல்கும் பெரும்புகழ் பாடகில்
லார்சிலர் பாழ்க்கிறைத்திட்
டொல்கும் உடம்பின ராய்வழி
தேடிட் டிடறிமுட்டிப்
பில்கும் இடம்அறி யார்கெடு
வார்உறு பேய்த்தனமே. 77

தனமே தருபுகழ்ச் சைவ
சிகாமணி தன்அருள்போல்
மனமே புகுந்த மடக்கொடி
யேமலர் மேல்இருந்த
அனமே அமிர்தக் குமுதச்செவ்
வாய்உங்கள் ஆயமென்னும்
இனமே பொலியவண் டாடெழிற்
சோலையுள் எய்துகவே. 78

உகட்டித்து மோட்டு வராலினம்
மேதி முலைஉரிஞ்ச
அகட்டிற் சொரிபால் தடம்நிறை
கொச்சை வயத்தரசைத்
தகட்டிற் றிகழ்மணிப் பூண்தமி
ழாகரன் றன்னையல்லாற்
பகட்டிற் பொலியினும் வேண்டேன்
ஒருவரைப் பாடுதலே. 79

---

78. தலைவன் தலைமகளை ஆயத்துய்த்தல்.
79. உகட்டித்து – உகண்டு; துள்ளி. தகடு - பொன் தகடு. பகட்டில் - யானைமேல்.

பாடிய செந்தமி ழாற்பழங்
காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்தன் நிறைபுகழான்
சேடிய பூந்திரு நாவுக்
கரசோ டெழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னல்லுள
தாய்த்திக் குவலயமே. 80

வலையத் திணிதோள் மிசைமழ
வேற்றி மனைப்புறத்து
நிலையெத் தனைபொழு தோகண்ட
தாரனை நீதிகெட்டார்
குலையக் கழுவின் குழுக்கண்ட
வன்திகழ் கொச்சையன்ன
சிலையொத்த வாள்நுதல் முன்போல்
மலர்க திருக்கண்களே. 81

கண்ணார் திருநுத லோன்கோலக்
காவிற் கரநொடியாற்
பண்ணார் தரப்பாடு சண்பையர்
கோன்பாணி நொந்திடுமென்
றெண்ணா எழுத்தஞ்சும் இட்டபொற்
றாளங்கள் ஈயக்கண்டும்
மண்ணார் சிலர்சண்பை நாதனை
ஏத்தார் வருந்துவதே. 82

---

81. தோழி வாயிலாகப் புகுந்து கூறுதல். வலையம் - தோள் வளை. மழவு ஏற்றி - குழந்தையைத் தூக்கிக்கொண்டு. தாரனை - தலைவனை.

82 கரநொடியால் - கைத்தாளத்தால். பாணி - கை.

வருந்துங் கொலாங்கழல் மண்மிசை
ஏகிடின் என்றுமென்றூர்த்
திருந்தும் புகழ்ச்சண்பை ஞானசம்
பந்தற்குச் சீர்மணிகள்
பொருந்துஞ் சிவிகை கொடுத்தனன்
காண்புண ரித்திகழ்நஞ்
சருந்தும் பிரான்நம் அரத்துறை
மேய அரும்பொருளே. 83

பொருளென என்னைத்தன் பொற்கழல்
காட்டிப் புகுந்தெனக்கிங்
கருளிய சீர்த்திரு ஞானசம்
பந்தன் அருளிலர்போல்
வெருளின மானின்மென் னோக்கியை
விட்டு விழுநிதியின்
திரளினை ஆதரித் தன்னன்று
சாலஎன் சிந்தனைக்கே. 84

சிந்தையைத் தேனைத் திருவா
வடுதுறை யுட்டிகழும்
எந்தையைப் பாடல் இசைத்துத்
தொலையா நிதியம்எய்தித்
தந்தையைத் தீத்தொழில் மூட்டிய
கோன்சரண் சார்விலரேல்
நிந்தையைப் பெற்றொழி
யாதிரந் தேகரம்நீட்டுவரே. 85

---

84. பொருள்வயிற் பிரிய எண்ணிய நெஞ்சிற்குத் தலைவன் கூறியது.

85. தீத் தொழில் மூட்டிய - வேள்வியைச் செய்யும்படி செய்த.

நீட்டுவ ரோதத்தொ டேறிய
சங்கம் நெகுமுளரித்
தோட்டுவெண் முத்தஞ் சொரிசண்பை
நாதற் றொழாதவரில்
வேட்டுவர் வேட்டதண் ணீரினுக்
குண்ணீர் உணக்குழித்த
காட்டுவர் ஊறல் பருகுங்
கொலாம்எங் கனங்குழையே. 86

குழைக்கின்ற கொன்றைபொன் போல
மலரநுங் கூட்டமெல்லாம்
அழைக்கின்ற கொண்டல் இயம்புன்
னிலையகன் றூர்வரவு
பிழைக்கின் றதுகொலென் றஞ்சியொண்
சண்பைப் பிரான்புறவத்
திழைக்கின்ற கூடல் முடியவெண்
ணுத இளங்கொடிக்கே. 87

கொடித்தேர் அவுணர் குழாம்அனல்
ஊட்டிய குன்றவில்லி
அடித்தேர் கருத்தின் அருகா
சனியை அணியிழையார்
முடித்தேர் கமலங் கவர்வான்
முரிபுரு வச்சிலையால்
வடித்தேர் நயனக் கணையிணை
கோத்து வளைத்தனரே. 88

---

86. செவிலி வருந்துதல். உவர் ஓதத்தொடு - உப்பாகிய கடல் நீரோடு. காட்டு உவர் ஊறல் - பாலைவனத்திலே உவர்ப்புச் சுவையோடு ஊறிய நீரை.

88. அடியைத் தேர்கின்ற.

வளைபடு தண்கடற் கொச்சை
வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன
லூரன்ற னீரிலங்கு
வளைபடு கண்ணியர் தம்பொதுத்
தம்பலம் நாறும்இந்த
வளைபடு கிங்கிணிக் கால்மைந்தன்
வாயின் மணிமுத்தமே. 89

முத்தன வெண்ணகை யார்மயல்
மாற்றி முறைவழுவா
தெத்தனை காலம்நின் றேத்தும்
அவரினும் என்பணிந்த
பித்தனை எங்கள் பிரானை
அணைவ தெளிதுகண்டீர்
அத்தனை ஞானசம் பந்தனைப்
பாதம் அடைந்தவர்க்கே. 90

அடைத்தது மாமறைக் காடர்தங்
கோயிற் கதவினையன்
றுடைத்தது பாணன்றன் யாழின்
ஒலியை உரகவிடம்
துடைத்தது தோணி புரத்துக்
கிறைவன் சுடரொளிவாய்
படைத்தது தண்மையை நள்ளாற்
றரசு பணித்திடவே. 91

---

89. தலைவி காமக் கிழத்தியைப் பழித்தல். தன் மகனைக் காமக் கிழத்தி முத்திட்டாள் என்று கூறுகிறாள். வளைபடு நீள் முடி - வணங்குகின்ற உயர்ந்த தலை. நீரில் அம் குவளைபடு கண்ணியர்; பரத்தையர்.

பணிபடு நுண்ணிடை பாதம்
பொருபல காதம்என்று
தணிபடும் இன்சொற்க ளால்தவிர்த்
தேற்குத் தழல்உமிழ்கான்
மணிபடு பொற்கழல் ஞானசம்
பந்தன் மருவலர்போல்
துணிபடு வேலன்ன கண்ணியென்
னோவந்து தோன்றியதே. 92

தோன்றல்தன் னோடுடன் ஏகிய
சுந்தரப் பூண்முலையை
ஈன்றவ ரேஇந்த ஏந்திழை
யார்அவர் இவ்வளவில்
வான்றவர் சூழுந் தமிழா
கரன்றன் வடவரையே
போன்றபொன் மாடக் கழுமல
நாடு பொருந்துவரே. 93

பொருந்திடு ஞானத் தமிழா
கரன்பதி பொற்புரிசை
திருந்திய தோணி புரத்துக்
கிறைவன் திருவருளாற்
கருந்தடம் நீரெழு காலையிற்
காகூ கழுமலமென்
றிருந்திட வாமென்று வானவ
ராகி இயங்கியதே. 94

இயலா தனபல சிந்தைய
ராயிய லுங்கொல்என்று
முயலா தனவே முயன்றுவன்
மோகச் சுழிஅழுந்திச்

---

92. தலைவன் கூற்று. நுண்ணிடை - தலைவி. கண்ணி கான் வந்து தோன்றியது என்னோ?
93. செவிலிக்குக் கண்டோர் கூறுதல்.

செயலார் வரைமதிற் காழியர்
கோன்திரு நாமங்களுக்
கயலார் எனப்பல காலங்கள்
போக்குவர் ஆதர்களே. 95

ஆதர வும்பயப் பும்மிவள்
எய்தினள் என்றயலார்
மாதர் அவஞ்சொல்லி என்னை
நகுவது மாமறையின்
ஓதர வம்பொலி காழித்
தமிழா கரனொடென்றே
தீதர வம்பட அன்னைஎன்
னோபல செப்புவதே. 96

செப்பிய என்ன தவம்முயன்
றேன்நல்ல செந்தமிழால்
ஒப்புடை மாலைத் தமிழா
கரனை உணர்வுடையோர்
கற்புடை வாய்மொழி ஏத்தும்
படிகத றிட்டிவர
மற்படு தொல்லைக் கடல்புடை
சூழ்தரு மண்ணிடையே. 97

மண்ணில் திகழ்சண்பை நாதனை
வாதினில் வல்லமணைப்
பண்ணைக் கழுவின் நுதிவைத்தெம்
பந்த வினைஅறுக்கும்

---

96. தலைவி கூற்று. பயப்பு - பசலை. மாதர் அவம் சொல்லி; அவம் - வீண் பழிமொழி. அரவம் பொலி - முழக்கம் விளங்குகின்ற. தமிழாகரனொடென்றே நகுவது.

97. கற்பு – கல்வி.

98. பண்ணை - கூட்டம்.

கண்ணைக் கதியைத் தமிழா
கரனைஎங் கற்பகத்தைத்
திண்ணற் றுடையற் கவுணியர்
தீபனைச் சேர்ந்தனமே. 98

சேரும் புகழ்த்திரு ஞானசம்
பந்தனை யான்உரைத்த
பேருந் தமிழ்ப்பா இவைவல்
லவர்பெற்ற இன்புலகம்
காருந் திருமிடற் றுய்அரு
ளாய்என்று கைதொழுவர்
நீரும் மலருங் கொளாநெடு
மாலும் பிரமனுமே. 99

பிரமா புரம்வெங் குருசண்பை
தோணி புகலிகொச்சை
சிரமார் புரம்நற் புறவம்
தராய்காழி வேணுபுரம்
வரமார் பொழில்திரு ஞானசம்
பந்தன் பதிக்குமிக்க
பரமார் கழுமலம் பன்னிரு
நாமம்இப் பாரகத்தே. 100

பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியும்
ஏரகலம் பெற்றாலும் இன்றுதால்—காரகிலின்
தூமங் கமழ்மாடத் தோணி புரத்தலைவன்
நாமஞ் செவிக்கிசையா நாள்.

திருச்சிற்றம்பலம்

---

99. காரும் - கருமை நிறம் படைத்த.
வெண்பா: நாள் இன்றுது.

35

நம்பியாண்டார் நம்பி

அருளிச் செய்த

ஆளுடையபிள்ளையார்
திருச்சண்பை விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாலித் தெழில்தங்கு பார்முகம்
உய்யப் பறிதலையோர்
மாலுற் றழுந்த அவதரித்
தோன்மணி நீர்க்கமலத்
தாலித் தலர்மிசை அன்னம்
நடப்ப அணங்கிதென்னச்
சாலித் தலைபணி சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1

கொங்குதங் குங்குஞ்சி கூடாப்
பருவத்துக் குன்றவில்லி
பங்குதங் கும்மங்கை தன்னருள்
பெற்றவன் பைம்புணரிப்
பொங்குவங் கப்புனல் சேர்த்த
புதுமணப் புன்னையின்கீழ்ச்
சங்குதங் கும்வயற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 2

---

1. பறிதலையோர் - சமணர் அணங்கு - தெய்வ மகள். சாலி – நெல்.

2. புணரி – அலை.

குவளைக் கருங்கட் கொடியிடை
துன்பந் தவிர அன்று
துவளத் தொடுவிடந் தீர்த்த
தமிழின் தொகைசெய்தவன்
திவளக் கொடிக்குன்ற மாளிகைச்
சூளிகைச் சென்னியின்வாய்த
தவளப் பிறைதங்கு சண்பையர்
காவலன் சம்பந்தனே. 3

கள்ளம் பொழில்நனி பள்ளித்
தடங்கடம் ஆக்கிஅஃதே
வெள்ளம் பணிநெய்தல் ஆக்கிய
வித்தகன் வெண்குருகு
புள்ளொண் டவளப் புரிசங்கொ
டாலக் கயல்உகளத்
தள்ளந் தடம்புனற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 4

ஆறதே றுஞ்சடை யான்அருள்
மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி
கண்டவன் மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூறு சண்பகந்
தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 5

---

3. திவள் அக் கொடி - ஒளி விடுகின்ற அந்தக் கொடிகளை உடைய. சூளிகை – உச்சிப் பகுதி.

4. கள் அம் பொழில் - கள்ளையும் அழகையும் உடைய சோலை. கடம் - பாலை நிலம்.

5. மாந்தேறல் - மாம் பூவில் உள்ள தேனை. தாறு - குலை.

அந்தமுந் தும்பிற வித்துயர்
  தீர அரனடிக்கே
பந்தமுந் தந்தமிழ் செய்த
  பராபரன் பைந்தடத்தேன்
வந்துமுந் துந்நந்தம் முத்தங்
  கொடுப்ப வயற்கயலே
சந்தமுந் தும்பொழிற் சண்பையர்
  காவலன் சம்பந்தனே. 6

புண்டலைக் குஞ்சரப் போர்வையர்
  கோயிற் புகஅடைக்கும்
ஒண்டலைத் தண்டமிழ்க் குண்டா
  சனிஉம்பர் பம்பிமின்னும்
கொண்டலைக் கண்டுவண் டாடப்
  பெடையொடுங் கொக்குறங்கும்
தண்டலைக் குண்டகழ்ச் சண்பையர்
  காவலன் சம்பந்தனே. 7

எண்டலைக் குந்தலை வன்கழல்
  சூடிஎன் உள்ளம்வெள்ளம்
கண்டலைப் பத்தன் கழல்தந்த
  வன்கதிர் முத்தநத்தம்
விண்டலைப் பத்தியில் ஒடும்
  விரவி மிளிர்பவளந்
தண்டலைக் குங்கடற் சண்பையர்
  காவலன் சம்பந்தனே. 8

---

6. பந்தம் - தளை. நந்தம் - சங்கு. சந்தனம் - சந்தன மரம்.

7. குண்டாசனி - சமணருக்கு இடி போன்றவர்.

8. எண் தலைக்கும் - எட்டுத் திக்குகளுக்கும். நத்தம் - சங்கு. அலைப் பத்தியில் - அலைகளின் வரிசையில். தண்டு - கொடியின் தாள்.

ஆறுமண் டப்பண்டு செஞ்சொல்
நடாத்தி அமண்முழுதும்
பாறுமண் டக்கண்ட சைவ
சிகாமணி பைந்தடத்த
சேறுமண் டச்சங்கு செங்கயல்
தேமாங் கனிசிதறிச்
சாறுமண் டும்வயற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 9

விடந்திளைக் கும்மர வல்குல்மென்
கூந்தல் பெருமணத்தின்
வடந்திளைக் குங்கொங்கை புல்கிய
மன்மதன் வண்கதலிக்
கடந்திளைத் துக்கமு நீர்புல்கி
ஒல்கிக் கரும்புரிஞ்சித்
தடந்திளைக் கும்புனற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 10

பாலித்த கொங்கு குவளைகள்
ளம்பொழில் கீழ்ப்பரந்து
ஆலிப்ப ஆறதே றுங்கழ
னிச்சண்பை அந்தமுந்து
மேலிட்ட புண்டலைக் குஞ்சரத்
தெண்டலைக் குந்தலைவன்
கோலிட்ட வாறு விடந்திளைக்
கும்மர வல்குலையே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. ஆறு மண்ட - வையையாற்றில் செறியும்படி; ஏடெதிரேற விட்டதை நினைந்தது. பாறு - பருந்து.
10. மன்மத னென்றது இங்கே சம்பந்தப் பெருமானை. கதலிக்கடம் - வாழைக் காடு.

36

நம்பியாண்டார் நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருமும்மணிக்கோவை

திருச்சிற்றம்பலம்

(ஆசிரியப்பா)

திங்கட் கொழுந்தொடு பொங்கரவு திளைக்கும்
கங்கைப் பேரியாற்றுக் கடுவரற் கலுழியின்
இதழியின் செம்பொன் இருகரை சிதறிப்
புதலெருக்கு மலர்த்தும் புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்
முத்தீ வேள்வி நான்மறை வளர
ஐவேள் வுயர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை யாழை எண்டிசை அறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்
காழி நாடன் கவுணியர் தலைவன்
மாமழை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க் கல்லது
கடுந்துய ருட்புகக் கைவிளிக் கும்மிந்
நெடும்பிற விக்கடல் நீந்துவ தரிதே. 1

(வெண்பா)

அரியோடு நான்முகத்தோன் ஆதிசுரர்க் கெல்லாம்
தெரியாமை செந்தழலாய் நின்ற—ஒருவன்சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாளிணைகள்
என்தலையின் மேலிருக்க என்று. 2

---

1. அடி, 2. கடுவரற் கலுழியின் - வேகமாக வரும் வெள்ளத்தில். 3. இதழி - கொன்றை. 7. ஐவேள்வு - பஞ்சயக்ஞம். 8 - 9. யாழ்முரி பாடியதை நினைந்தது.

(கட்டளைக் கலித்துறை)

என்றும் அடியவர் உள்ளத்
திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்
துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக்
குரியன ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ
சிகாமணி பொன்னடியே. 3

(ஆசிரியப்பா)

அடுசினக் கட்கரி அதுபட உரித்த
படர்சடைக் கடவுடன் திருவரு ளதனாற் பிறந்தது
கழுமலம் என்னுங் கடிநக ரதுவே வளர்ந்தது
தேங்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதிடு போனகம் உண்டே பெற்றது
குழகனைப் பாடிக் கோலக் காப்புக்
கழகுடைச் செம்பொற் றாளம் அவையே தீர்த்தது
தாதமர் மருகற் சடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே அடைத்தது
தரைசோ டிசையா அணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவே ஏறிற்
றத்தியும் மாவுந் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாட் பெற்றே பாடிற்
றருமறை ஒத்தூர் ஆண்பனை யதனைப்
பெருதிறம் எய்தும் பெண்பனையாவே கொண்டது
பூவிடு மதுவிற் பொறிவண் டுழலும்

---

3. யாப்பு - பாட்டு.

4. அடி, 4. சிலம்பரையன் - இமவான். 6. கோலக் காவில் புகுந்து. 10. அரைசு திருநாவுக்கரசர். 11. குரை - ஒலி. 12. அத்தியும் மாவும் - யானையும் குதிரையும்.

ஆவடு துறையிற் பொன்னா யிரமே கண்ட
துறியொடு பீலி ஒருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையே நீத்த
தவிழ்ச் சுவை யேஅறிந் தரனடி பரவும்
தமிழ்ச்சுவை அறியாத் தம்பங் களையே நினைந்த
தள்ளாற் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே மிக்கவர்
ஊனசம் பந்தம் அறுத்துயக் கொளவல
ஞானசம் பந்தன்இஞ் ஞாலத் திடையே. 4

(வெண்பா)

நிலத்துக்கு மேல்ஆறு நீடுலகத் துச்சித்
தலத்துக்கு மேலேதான் என்பர்—சொலத்தக்க
சுத்தர்கள்சேர் காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பத்தர்கள்போய் வாழும் பதி. 5

(கட்டளைக்கலித்துறை)

பதிகம் பலபாடி நீடிய
பிள்ளை பரசுதரற்
கதிகம் அணுக்கன் அமணர்க்குக்
காலன் அவதரித்த
மதியந் தவழ்மாட மாளிகைக்
காழிஎன் றுல்வணங்கார்
ஓதியம் பணைபோல் விழுவர்அந்
தோசில ஊமர்களே. 6

(ஆசிரியப்பா)

கவள மாளிகைத் திவளு மியானையின்
கவுட்டலைக் கும்பத்

அடி, 20. அவிழ்ச்சுவை - சோற்றுச் சுவை.
6. அணுக்கன் - நெருக்கமானவன். ஓதியம்பணை - ஓதிய மரத்தின் கிளை.
7. தோழி அறத்தொடு நிற்றல். அடி, 2. கவுள் - கபோலம்.

தும்பர்ப் பதணத் தம்புதந் திளைக்கும்
பெருவளந் தழீஇத் திருவளர் புகலி
விளங்கப் பிறந்த வளங்கொள்சம் பந்தன்
கருதியஞ் செவ்விச் சுருதியஞ் சிலம்பில்
தேமரு தினைவளர் காமரு புனத்து
மும்மதஞ் சொரியும் வெம்முகக் கைம்மா
மூரி மருப்பிற் சீரிய முத்துக்
கொடுஞ்சிலை வளைத்தே கொடுஞ்சரந் துரந்து
முற்பட வந்து முயன்றங் குதவிசெய்
வெற்பனுக் கலது
சுணங்கணி மென்முலைச் சுரிகுழல் மாதினை
மணஞ்செய மதிப்பது நமக்குவன் பழியே. 7

(வெண்பா)

பழிஒன்றும் ஓராதே பாய்இடுக்கி வாளா
கழியுஞ் சமண்கையர் தம்மை—அழியத்
துரந்தரங்கச் செற்றான் சுரும்பரற்றும் பாதம்
நிரந்தரம்போய் நெஞ்சே நினை. 8

(கட்டளைக்கலித்துறை)

நினையா தரவெய்தி மேகலை
நெக்கு வளைசரிவாள்
தனைஆவ என்றின் றருளுதி
யேதடஞ் சாலிவயற்
கனையா வருமேதி கன்றுக்
கிரங்கித்தன் கால்வழிபால்
நனையா வருங்காழி மேவிய
சீர்ஞான சம்பந்தனே. 9

---

3. பதணம் - மேடை. அம்புதம் - மேகம். இது களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றது.
8. அரங்க - வருந்த.
9. தோழி கூற்று. ஆவ - அந்தோ.

(ஆசிரியப்பா)

தனமலி கமலத் திருவெனுஞ் செல்வி
விருப்பொடு திளைக்கும் வீயா இன்பத்
தாடக மாடம் நீடுதென் புகலிக்
காமரு கவினார் கவுணியர் தலைவ
பொற்பமர் தோளா நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ கலைபயில் நாவ நினது
பொங்கொளி மார்பில் தங்கிய திருநீ
றுதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலிற்
பிள்ளை யாவது தெரிந்தது பிறர்க்கே. 10

(வெண்பா)

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டோர்—நிறைஉலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ். 11

(கட்டளைக்கலித்துறை)

ஞானந் திரளையி லேஉண்
டனையென்று நாடறியச்
சோனந் தருகுழ லார்சொல்
விடாமுன் கரும்புகட்குப்
பானந் தருபங்க யத்தார்
கொடுபடைச் சால்வழியே
கூனந் துருள்வயல் சூழ்காழி
மேவிய கொற்றவனே. 12

---

10. அடி, 3. ஆடக மாடம் - பொன் மாளிகை. 9. பொன்-பசலை.

12. திரளை - உணவு. சோனம் - மேகம். கூன் நந்து - வளைவை உடைய சங்கு.

(ஆசிரியப்பா)

அவனிதலம் நெரிய எதிரெதிர் மலைஇச்
சொரிமதக் களிற்று மத்தகம் போழ்ந்து
செஞ்சே றாடிச் செல்வன அரியே எஞ்சாப்
படவர வுச்சிப் பருமணி பிதுங்கப்
பிடரிடைப் பாய்வன பேழ்வாய்ப் புலியே இடையிடைச்
செறியிருள் உருவச் சேண்விசும் பதனிற்
பொறியென விழுவன பொங்கொளி மின்னே
உறுசின வரையால் உந்திய கலுழிக்
கரையால் உழல்வன கரடியின் கணனே நிரையார்
பொருகடல் உதைந்த சுரிமுகச் சங்கு
செங்கயல் கிழித்த பங்கய மலரின்
செம்மடல் நிறைய வெண்முத் துதிர்க்கும்
பழனக் கழனிக் கழுமல நாடன்
வைகையில் அமணரை வாதுசெய் தறுத்த
சைவ சிகாமணி சம்பந்தன் வெற்பிற்
சிறுகிடை யவள்தன் பெருமுலை புணர்வான்
நெறியினில் வரலொழி நீமலை யோனே. 13

(வெண்பா)

மலைத்தலங்கள் மீதேறி மாதவங்கள் செய்து
முலைத்தடங்கள் நீத்தாலும் மூப்பர்—கலைத்தலைவன்
சம்பந்தற் காளாய்த் தடங்காழி கைகூப்பித்
தம்பந்தந் தீராதார் தாம். 14

(கட்டளைக்கலித்துறை)

தாமரை மாதவி சேறிய
நான்முகன் றன்பதிபோற்
காமரு சீர்வளர் காழிநன்
றுடன் கவித்திறத்து

---

13. தோழி தலைவனை இரவுவரல் விலக்கல். அடி, 3. அரி-சிங்கம். 8. கலுழி - காட்டாற்று வெள்ளம்.

நாமரு மாதவர் போல்அழ
ஈந்துநல் வில்லிபின்னே
நீர்மரு வாத சுரத்தெங்ஙன்
ஏகும்என் நேரிழையே. 15

(ஆசிரியப்பா)

இழைகெழு மென்முலை இதழிமென் மலர்கொயத்
தழைவர ஒசித்த தடம்பொழில் இதுவே காமர்
சுனைகுடைந் தேறித் துகிலது புனையநின்
றனையுங் கண்டு வெள்கிடம் இதுவே தினைதொறும்
பாய்கிளி இரியப் பைவந் தேறி
ஆயவென் றிருக்கும் அணிப்பரண் இதுவே ஈதே
இன்புறு சிறுசொல் லவைபல இயற்றி
அன்புசெய் தென்னை ஆட்கொளும் இடமே பொன்புரை
தடமலர்க் கமலக் குடுமியி லிருந்து
நற்றொழில் புரியும் நான்முகன் நாட்டைப்
புற்கடை கழீஇப் பொங்கு சராவத்து
நெய்த்துடுப் பெடுத்த முத்தீப் புகையால்
நாடொறு மறைக்குஞ் சேடுறு காழி
எண்டிசை நிறைந்த தண்டமிழ் விரகன்
நலங்கலந் தோங்கும் விலங்கலின் மாட்டுப்
பூம்புன மதனிற் காம்பன தோளி
பஞ்சிற் றிருந்தபடி நோவப் போயெனை
வஞ்சித் திருந்த மணியறை இதுவே. 16

(வெண்பா)

வேழங்கள் எய்பவர்க்கு வில்லாவ திக்காலம்
ஆழங் கடல்முத்தம் வந்தலைக்கும்—நீள்வயல்சூழ்
வாய்ந்ததிவண் மாட மதிற்காழிக் கோன்சிலம்பிற்
சாய்ந்தது வண்டழையோ தான். 17

---

15. செவிலி இரங்கல். சுரத்து - பாலை நிலத்தில்.
16. தலைவன் கூற்று. அடி, 1. மென்முலை : தலைவி
11. புல் - தருப்பை. சராவம் - அகப்பை. 13. சேடு - பெருமை.

(கட்டளைக்கலித்துறை)

தழைக்கின்ற சீர்மிகு ஞானசம்
பந்தன் தடமலைவாய்
அழைக்கின்ற மஞ்ஞைக் கலர்ந்தன
கோடல்அம் பெய்திடுவான்
இழைக்கின்ற தந்தரத் திந்திர
சாபம்நின் எண்ணமொன் றும்
பிழைக்கின்ற தில்லைநற் றேர்வந்து
தோன்றிற்றுப் பெய்வளையே. 18

(ஆசிரியப்பா)

வளைகால் மந்தி மாமரப் பொந்தில்
விளைதேன் உண்டு வேணுவின் துணியாற்
பாறை யிற்றுயில் பணைக்கை வேழத்தை
உந்தி எழுப்பும் அந்தண் சிலம்ப அஃதிங்
கென்னையர் இங்கு வருவர் பலரே
அன்னை காணில் அலர்தூற் றும்மே பொன்னார்
சிறுபரற் கரந்த விளிகுரற் கிங்கிணி
சேவடி புல்லிச் சில்குரல் இயற்றி
அமுதுண் செவ்வாய் அருவி தூங்கத்
தாளம் பிரியாத் தடக்கை அசைத்துச்
சிறுகூத் தியற்றிச் சிவன்அருள் பெற்ற
நற்றமிழ் விரகன் பற்றலர் போல
இடுங்கிய மனத்தொடும் ஒடுங்கிய சென்று
பருதியுங் குடகடற் பாய்ந்தனன்
கருதிநிற் பதுபிழை கங்குலிப் புனத்தே. 19

---

17. தோழி தலைவனை நகுதல். வில்லாவது தழையோ

18. தோழி தலைவன் வரவுரைத்தல். கோடல் – காந்தள். அம்பு – மழை நீர். அந்தரத்து. இந்திர சாபம் – வானவில்.

19. தோழி கூற்று. அடி, 1. வளைந்த காலையுடைய மந்தி. 2. வேணுவின் துணியால் – மூங்கில் கொம்பால். 5. என்னையர் - என் தமையன்மார்.

தேம்புனமே உன்னைத் திரிந்து தொழுகின்றேன்
வாம்புகழ்சேர் சம்பந்தன் மாற்றலர்போல்—தேம்பி
அழுதகன்றாள் என்று தணிமலையர் வந்தால்
தொழுதகன்றாள் என்றுநீ சொல்லு. 20

(கட்டளைக்கலித்துறை)

சொற்செறி நீள்கவி செய்தன்று
வைகையில் தொல்லமணர்
பற்செறி யாவண்ணங் காத்தசம்
பந்தன் பயில்சிலம்பிற்
கற்செறி வார்சுனை நீர்குடைந்
தாடுங் கனங்குழையை
இற்செறி யாவண்ணங் காத்திலை
வாழி இரும்புனமே. 21

(ஆசிரியப்பா)

புனலற வறந்த புன்முளி சுரத்துச்
சினமலி வேடர் செஞ்சரம் உரீஇப்
படுகலைக் குளம்பின் முடுகு நாற்றத்
தாடு மரவின் அகடு தீயப்
பாடு தகையின் பஞ்சுரங் கேட்டுக்
கள்ளியங் கவட்டிடைப் பள்ளி கொள்ளும்
பொறிவரிப் புறவே உறவலை காண்நீ நறைகமழ்
தேம்புனல் வாவித் திருக்கழு மலத்துப்
பையர வசைத்த தெய்வ நாயகன்
தன்அருள் பெற்ற பொன்னணிக் குன்றம்
மானசம் பந்தம் மண்மிசைத் துறந்த
ஞானசம் பந்தனை நயவார் கிளைபோல்

---

20. தலைவி கூற்று. திரிந்து - மீட்டும்.
21. தலைவன் வறும்புனம் கண்டு இரங்குதல்.
22. செவிலி புறவோடு கூறுதல். அடி. 1. முளி - உலர்ந்த.

வினையேன் இருக்கும் மனைபிரி யாத
வஞ்சி மருங்குல் அஞ்சொற் கிள்ளை
ஏதிலன் பின்செல விலக்கா தொழிந்தனை
ஆதலிற் புறவே உறவலை நீயே. 22

(வெண்பா)

அலைகடலின் மீதோடி அந்நுளையர் வீசும்
வலைகடலில் வந்தேறு சங்கம்—அலர்கடலை
வெண்முத் தவிழ்வயல்சூழ் வீங்குபுனற் காழியே
ஒண்முத் தமிழ்பயந்தான் ஊர். 23

(கட்டளைக்கலித்துறை)

ஊரும் பசும்புர வித்தேர்
ஒளித்த தொளிவிசும்பிற்
கூரும் இருளொடு கோழிகண்
துஞ்சா கொடுவினையேற்
காரும் உணர்ந்திலர் ஞானசம்
பந்தன்அந் தாமரையின்
தாருந் தருகிலன் எங்ஙனம்
யான்சங்கு தாங்குவதே. 24

(ஆசிரியப்பா)

தேமலி கமலப் பூமலி படப்பைத்
தலைமுக டேறி இளவெயிற் காயும்

---

15. ஏதிலன் - அயலான்.
23. நுளையர் - வலையர்.

24. இரவில் தலைவி இரங்குதல். ஊரும் - கதிரவன் ஏறிச் செல்லும். சங்கு - வளை.

25. காம மிக்க கழிபடர் கிளவி. அடி, 1. படப்பை - வயல்.

கவடிச் சிறுகாற் கர்க்கடகத்தைச்
சுவடிச் சியங்குஞ் சூல்நரி முதுகைத்
துன்னி எழுந்து செந்நெல் மோதும்
காழி நாட்டுக் கவுணியர் குலத்தை
வாழத் தோன்றிய வண்டமிழ் விரகன்
தெண்டிரைக் கடல்வாய்க்
காண்டகு செவ்விக் களிறுகள் உகுத்த
முட்டைமுன் கவரும் பெட்டையங் குருகே
வாடை அடிப்ப வைகறைப் போதிற்
தனிநீ போந்து பனிநீர் ஒழுகக்
கூசிக் குளிர்ந்து பேசா திருந்து
மேனி வெளுத்த காரணம் உரையாய்
இங்குத் தணந்தெய்தி நுமரும்
இன்னம்வந் திலரோ சொல்லிளங் குருகே. 25

(வெண்பா)

குருகும் பணிலமுங் கூன்நந்துஞ் சேலும்
பெருகும் வயற்காழிப் பிள்ளை—அருகந்தர்
முன்கலங்க நட்ட முடைகெழுமு மால்இன்னம்
புன்கலங்கல் வைகைப் புனல். 26

(கட்டளைக்கலித்துறை)

புனமா மயில்சாயல் கண்டுமுன்
போகா கிளிபிரியா
இனமான் விழிஒக்கும் என்றுவிட்
டேகா இருநிலத்துக்
கனமா மதிற்காழி ஞானசம்
பந்தன் கடமலைவாய்த்
தினைமா திவள்காக்க எங்கே
விளையுஞ் செழுங்கதிரே. 27

(ஆசிரியப்பா)

கதிர்மதி நுழையும் படர்சடை மகுடத்
தொருத்தியைக் கரந்த விருத்தனைப் பாடி

முத்தின் சிவிகை முன்னாட் பெற்ற
அத்தன் காழி நாட்டுறை அணங்கோ மொய்த்தெழு
தாமரை அல்லித் தவிசிடை வளர்ந்த
காமரு செல்வக் கனங்குழை யவளோ மீமருத்
தருவளர் விசும்பில் தவநெறி கலக்கும்
உருவளர் கொங்கை உருப்பசி தானோ
வாருணக் கொம்போ மதனன் கொடியோ
ஆரணி யத்துள் அருந்தெய்வ மதுவோ
வண்டமர் குழலுங் கெண்டையங் கண்ணும்
வஞ்சி மருங்குங் கிஞ்சுக வாயும்
ஏந்திள முலையுங் காந்தளங் கையும்
ஓவியர் தங்கள் ஒண்மதி காட்டும்
வட்டிகைப் பலகை வான்துகி லிகையால்
இயக்குதற் கரியதோர் உருவுகண் டென்னை
மயக்கவந் துதித்ததோர் வடிவிது தானே. 28

(வெண்பா)

வடிக்கண்ணி யாளைஇவ் வான்சுரத்தி னூடே
கடிக்கண்ணி யாளோடுங் கண்டோம்—வடிக்கண்ணி
மாம்பொழில்சேர் வைகை அமண்மலைந்தான் வண்காழிப்
பூம்பொழிலே சேர்ந்திருப்பார் புக்கு. 29

(கட்டளைக்கலித்துறை)

குருந்துந் தரளமும் போல்வண்ண
வெண்ணகைக் கொய்மலராள்
பொருந்துந் திரள்புயத் தண்ணல்சம்
பந்தன்பொற் றாமரைக்கா

---

28. ஐயம். அடி, 5. அல்லி - அகவிதழ். 6. மரு - மணம். 7. தரு - கற்பகம். 12. கிஞ்சுகம் – முள்ளு முருங்கை மரம். 15. வட்டிகைப் பலகை - சித்திரம் எழுதும் பலகை. துகிலிகை - எழுதுகோல்.

29. இடைச்சுரத்துக் கண்டோர் கூறுதல். வடி - கூர்மை. வடிக்கண்ணி மாம்பொழில் - மாலை போல வடுக்களை உடைய மாமரச்சோலை.

30. சந்திரோபாலம்பனம். குருந்து - குருத்து.

வருந்துத் திரள்கொங்கை மங்கையை
வாட்டினை வானகத்தே
திருந்துந் திரள்முகில் முந்திவந்
தேறுதிங் கட்கொழுந்தே. 30

திருச்சிற்றம்பலம்

37

நம்பியாண்டார் நம்பி

அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை

திருச்சிற்றம்பலம்

திருந்தியசீர்ச் செந்தா மரைத்தடத்துச் சென்றோர்
இருந்தண் இளமேதி பாயப்—பொருந்திய
புள்ளிரியப் பொங்கு கயல்வெருவப் பூங்குவளைக்
கள்ளிரியச் செங்கழுநீர் கால்சிதையத்—துள்ளிக்
குருகிரியக் கூன்இறவம் பாயக் களிறு
முருகுவிரி பொய்கையின்கண் மூழ்க—வெருவுற்ற
கோட்டத்துப் பாய்வாளை கண்டலவன் கூசிப்போய்த்
தோட்டகத்த செந்நெல் துறைஅடையச்-சேட்டகத்த
5 காவி முகமலரக் கார்நீலங் கண்படுப்ப
வாவிக்கண் நெய்தல் அலமர—மேவிய
அன்னந் துயில்இழப்ப அஞ்சிறைசேர் வண்டினங்கள்
தன்னுந் துணைஇழப்பச் சூழ்கிடங்கில்—மன்னிய

---

2. கால் - தண்டு. 3. இறவம் - இறா மீன். களிறு - ஒரு வகை மீன் 4. கோட்டகம் - குளம். சேட்டகத்த - சேற்றினுள்ளே தோன்றிய.

வள்ளை நகைகாட்ட வண்குமுதம் வாய்காட்டத்
தெள்ளுபுனற் பங்கயங்கள் தேன்காட்ட—மெள்ள
நிலவு மலரணையின் நின்றிழிந்த சங்கம்
இலகுகதிர் நித்திலங்கள் ஈன—உலவிய
மல்லைப் பழனத்து வார்பிரசம் மீதழிய
ஒல்லை வரம்பிடறி ஓடிப்போய்ப்—புல்லிய
பாசடைய செந்நெற் படரொளியாற் பல்கதிரோன்
தேசடைய ஓங்கு செறுவுகளும்—மாசில்நீர்
நித்திலத்தின் சாயும் நிகழ்மரக தத்தோலும்
ஒத்தொளி செம்பொற் றொழிற்பரிய—மொய்த்த
பவளத்தின் செவ்வியும் பாங்கணைய ஓங்கித்
திவளக் கொடிமருங்கிற் சேர்த்தித்—துவளாமைப்
பட்டாடை கொண்டுடுத்துப் பைந்தோ டிலங்குகுழை
இட்டமைந்த கண்ணார் இளங்கமுகும்-விட்டொளிசேர்
கண்கள் அழல்சிதறிக் காய்சினத்த வாய்மதத்துத்
தண்டலையின் நீழற் றறிஅணைந்து—கொண்ட
கொலைபுரியா நீர்மையவாய்க் கொம்புவளைத் தேந்தி
மலையு மரவடிவங் கொண்டாங்—கிலைநெருங்கு
சூதத் திரளுந் தொகுகனிக ளால்நிவந்த
மேதகுசீர்த் தெங்கின் வியன்பொழிலும்—போதற்
றினமொருங்கு செவ்வியவாய் இன்றேன் ததும்பு
கனிநெருங்கு திண்கதலிக் காடும்—நனிவிளங்கு
நாற்றத்தால் எண்டிசையும் வந்து நலஞ்சிறப்ப
ஊற்று மடுத்த உயர்பலவும்—மாற்றமரு
மஞ்சள் எழில்வனமும் மாதுளையின் வார்பொழிலும்
இஞ்சி இளங்காவின் ஈட்டமும்—எஞ்சாத
கூந்தற் கமுகுங் குளிர்பாட லத்தெழிலும்
வாய்ந்தசீர்ச் சண்பகத்தின் வண்காடும்-ஏந்தெழிலார்

---

9. பழனம் - வயல். 10. செறு - வயல். 11. சாய் - சாயல்.
16. சூதத்திரள் - மாமரக் கூட்டம். 20. பாடலம் - பாதிரி மரம்.

மாதவியும் புன்னையும் மன்னு மலர்க்குரவும்
கேதகையும் எங்கும் கெழீஇ....ப்—போதின்
இளந்தென்றல் வந்தசைப்ப எண்டிசையும் வாசம்
வளந்துன்று வார்பொழிலின் மாடே—கிளர்ந்தெங்கும்
ஆலை ஒலியும் அரிவார் குரலொலியும்
சோலைக் கிளிமிழற்றுஞ் சொல்லொலியும்—ஆலும்
அறுபதங்கள் ஆர்ப்பொலியும் ஆன்றபொலி வெய்தி
உறுதிரைநீர் வேலை ஒலிப்ப—வெறிகமழும்
நந்தா வனத்தியல்பும் நற்றவத்தோர் சார்விடமும்
அந்தமில் சீரார் அழகினால்—முந்திப்
புகழ்வாருந் தன்மையதாய்ப் பூதலத்துள் ஓங்கி
நிகழ்கிடங்குஞ் சூழ்கிடப்ப நேரே—திகழ
முளைநிரைத்து மூரிச் சிறைவகுத்து மொய்த்த
புளகத்தின் பாம்புரிசூழ் போகி—வளர
இரும்பதணஞ் சேர இருத்திஎழில் நாஞ்சில்
மருங்கணைய அட்டாலை இட்டுப்—பொருந்தியசீர்த்
தோமரமுந் தொல்லைப் பொறிவீசி யந்திரமும்
காமரமும் ஏப்புழையுங் கைகலந்து—மீமருவும்
வெங்கதிரோன் தேர்விலங்கமிக்குயர்ந்தமேருப்போன்
றங்கனகத் திஞ்சி அணிபெற்றுப்—பொங்கொளிசேர்
மாளிகையும் மன்னியசீர் மண்டபமும் ஒண்டலத்த
சூளிகையுந் துற்றெழுந்த தெற்றிகளும்—வாளொளிய
நாடக சாலையும் நன்பொற் கபோதஞ்சேர்
பீடமைத்த மாடத்தின் பெற்றியும்—கேடில்

---

21. **மாதவி** - குருக்கத்தி. கேதகை - **தாழை**. 23. **ஆலை** - **கரும்பாலை**. **24.** அறுபதங்கள் - **வண்டுகள்**. 28. **பதணம்** - மேடை. **நாஞ்சில்** - **மதிலின் உறுப்பு**. **அட்டாலை** - மேற்பரண். 29. **தோமரம்** - **ஓர் ஆயுதம்**. **ஏப்புழை** - அம்பு **விடுவதற்குரிய துவாரம்**. **30.** **இஞ்சி** - மதில். 31. **தெற்றி** - **திண்ணை**. 32. **கபோதம்** - **விட்டம்**.

உருவு பெறவகுத்த அம்பலமும் ஓங்கு
தெருவும் வகுத்தசெய் குன்றும்—மருவினிய
சித்திரக் காவுஞ் செழும்பொழிலும் வாவிகளும்
நித்திலஞ்சேர் நீடு நிலைக்களமும்—எத்திசையும்
துன்னி எழில்சிறப்பச் சோதி மலர்மடந்தை
மன்னி மகிழ்ந்துறையும் வாய்மைத்தாய்ப்-பொன்னும்
மரகதமும் நித்திலமும் மாமணியும் பேணி
இரவலர்கட் கெப்போதும் ஈந்தும்—கரவாது
கற்பகமுங் காருமெனக் கற்றவர்க்கும் நற்றவர்க்கும்
தப்பாக் கொடைவளர்க்குஞ் சாயாத—செப்பத்தாற்
பொய்ம்மை கடிந்து புகழ்புரிந்து பூதலத்து
மெய்ம்மை தலைசிறந்து மேதக்கும்—உண்மை
மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல்பயில்வார்-முறைமையால்
ஆகமங்கள் கேட்பார் அருங்கலைநூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள்துய்ப்பார்—சோகமின்றி
நீதி நிலைஉணர்வார் நீள்நிலத்துள் ஐம்புலனும்
காதல் விடுதவங்கள் காமுறுவார்—ஆதி
அருங்கலைநூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலிநீங் கக்கனல்வ குப்பார்—ஒருங்கிருந்து
காமநூல் கேட்பார் கலைஞானங் காதலிப்பார்
ஓமநூல் ஓதுவார் உத்தரிப்பார்—பூமன்னும்
நான்முகனே அன்னசீர் நானூற் றுவர்மறையோர்
தாம்மன்னி வாழுந் தகைமைத்தாய்—நாமன்னும்
ஆரணங்கும் மற்றை அருந்ததியும் போல்மடவார்
ஏரணங்கு மாடத் தினிதிருந்து—சீரணங்கு

---

34. **சித்திரக்கா** – உபவனம்.

42. **கனல் வகுப்பார்** – அக்கினி காரியம் செய்வார்.

வீணை பயிற்றுவார் யாழ்பயில்வார் மேவியசீர்ப்
பாணம் பயில்வார் பயனுறுவார்—பேணியசீர்ப் [யில்வார்
பூவைக்குப் பாட்டுரைப்பார் பொற்கிளிக்குச் சொற்ப
பாவைக்குப் பொன்புனைந்து பண்புறுவா-ராய்எங்கும்

மங்கையர்கள் கூட்டமும் மன்னு சிறார்குழுவும்
பொங்குலகம் எல்லாம் பொலிவடையத்—தங்கிய

வேத ஒலியும் விழாவொலியும் மெல்லியலார்
கீத ஒலியும் கிளர்ந்தோங்கும்—மாதரார்

பாவை ஒலியும் பறைஒலியும் பல்சனங்கள்
மேவும் ஒலியும் வியனகரம்—காவலர்கள்

பம்பைத் துடிஒலியும் பௌவப் படைஒலியும்
கம்பக் களிற்றொலியுங் கைகலந்து—நம்பிய

கார்முழக்கும் மற்றைக் கடல்முழக்கும் போற்கலந்த
சீர்முழக்கம் எங்குஞ் செவிடுபடப்—பார்விளங்கு

செல்வம் நிறைந்தஊர் சீரில் திகழ்ந்தஊர்
மல்கு மலர்மடந்தை மன்னும்ஊர்—சொல்லினிய

ஞானத்து மிக்கஊர் நானூற் றுவர்கள்ஊர்
வேலொத்த கண்ணார் விளங்கும்ஊர்—ஆலித்து

மன்னிருகால் வேலை வளர்வெள்ளத் தும்பரொடும்
பன்னிருகால் நீரில் மிதந்தஊர்—மன்னும்

பிரமனூர் வேணுபுரம் பேரொலிநீர்ச் சண்பை
அரன்மன்னு தண்காழி அம்பொற்—சிரபுரம்

பூந்தராய் கொச்சைவயம் வெங்குருப் பொங்குபுனல்
வாய்ந்தநற் றோணி புரம்மறையோர்—ஏய்ந்த

புகலி கழுமலம் பூம்புறவம் என்றிப்
பகர்கின்ற பண்புற்ற தாகித்—திகழ்கின்ற

மல்லைச் செழுநகரம் மன்னவும் வல்லமணர்
ஒல்லைக் கழுவில் உலக்கவும்—எல்லையிலா

---

46. வீணை வேறு யாழ் வேறு. *47.* **பூவை** - மைனா. 59. **உலக்**

மாதவத்தோர் வாழவும் வையகத்தோர் உய்யவும்
மேதக்க வானோர் வியப்பவும்—ஆதியாம்
வென்றிக் கலிகெடவும் வேதத் தொலிமிகவும்
ஒன்றிச் சிவனடியார் ஓங்கவும்—துன்றிய
பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்—முன்னிய
சிந்தனையாற் சீரார் கவுணியர்க்கோர் சேயென்ன
வந்தங் கவதரித்த வள்ளலை—அந்தமில்சீர்
ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை
மான மறையவற்றின் வான்பொருளை—ஆனசீர்த்
தத்துவனை நித்தனைச் சைவத் தவர்அரசை
வித்தகத்தால் ஓங்கு விடலையை—முத்தமிழின்
செஞ்சொற்பொருள்பயந்தசிங்கத்தைத் தெவ்வர்உயிர்
அஞ்சத் திகழ்ந்த அடல்உருமை—எஞ்சாமை
ஆதிச் சிவனருளால் அம்பொன்செய் வட்டிலிற்
கோதில் அமிர்தம்நுகர் குஞ்சரத்தைத்—தீதறுசீர்க்
காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த—சீலத்
திருஞான சம்பந்தன் என்றுலகஞ் சேர்ந்த
ஒருநாமத் தால்உயர்ந்த கோவை—வருபெருநீர்ப்
பொன்னிவள நாடனைப் பூம்புகலி நாயகனை
மன்னர் தொழுதிறைஞ்சும் மாமணியை—முன்னே
நிலவு முருகற்கும் நீலநக் கற்கும்
தொலைவில் புகழ்ச்சிறுத்தொண் டற்கும்—குலவிய
தோழமையாய்த் தொல்லைப் பிறப்பறுத்த சுந்தரனை
மாழையொண்கண் மாதர் மதனனைச்—சூழொளிய
கோதைவேல் தென்னன்றன் கூடற் குலநகரில்
வாதில் அமணர் வலிதொலையக்—காதலாற்

கவும் - அழியவும். 66. **தெவ்வர் - பகைவர். உருமை - இடியை.**

புண்கெழுவு செம்புனலா றோடப் பொருதவரை
வண்கழுவில் தைத்த மறையோனை—ஒண்கெழுவு
ஞாலத் தினர்அறிய மன்னுநனி பள்ளியது
பாலை தனைநெய்தல் ஆக்கியும்—காலத்து
நீரெதிர்ந்து சென்று நெருப்பிற் குளிர்படைத்தும்
பாரெதிர்ந்த பல்விடங்கள் தீர்த்துமுன்—நேரெழுந்த
யாழை முரித்தும் இருங்கதவந் தான்அடைத்தும்
சூழ்புனலில்ஓடத்தொழில்புரிந்தும்-தாழ்பொழில்சூழ்
கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும்
துங்கப் புரிசை தொகுமிழலை—அங்கதனில்
நித்தன் செழுங்காசு கொண்டுநிகழ் நெல்வாயில்
முத்தின் சிவிகை முதல்கொண்டும்—அத்தகுசீர்
மாயிரு ஞாலத்து மன்னு வடுதுறைபுக்
காயிரஞ் செம்பொ னதுகொண்டும்—மாய்வரிய
மாண்புதிகழ் எம்பெருமான் மன்னுதிரு வோத்தூரில்
ஆண்பனைகள் பெண்பனைகள் ஆக்கியும்—பாண்பரிசிற்
கைப்பாணி ஒத்திக்கா ழிக்கோலக் காவிற்பொற்
சப்பாணி கொண்டு தராதலத்துள்—எப்பொழுதும்
நீக்கரிய இன்பத் திராகம்இருக் குக்குறள்
நோக்கரிய பாசுரம்பல் பத்தோடும்—ஆக்கரிய
யாழ்முரி சக்கரமாற் றீரடி முக்காலும்
பாழிமையாற் பாரகத்தோர் தாம்உய்ய—ஊழி
உரைப்பமரும் பல்புகழால் ஓங்கஉமை கோனைத்
திருப்பதிகம் பாடவல்ல சேயை—விருப்போடு
நண்ணு புகழ்மறையோர் நாற்பத்தெண் ணாயிரவர்
எண்ணின் முனிவரர் ஈட்டத்துப்—பண்ணமரும்
ஓலக்கத் துள்ளிருப்ப ஒண்கோயில் வாயிலின்கட்
கோலக் கடைகுறுகிக் கும்பிட்டாங்—காலும்

---

74. செம்புனல் - இரத்தம். 78. மிழலை - திருவீழிமிழலை.
82. கைப்பாணி ஒத்தி - கைத்தாளம் போட்டு.
பாழிமை - வலிமை.

புகலி வளநகருட் பூசுரர் புக்காங்
கிகலில் புகழ்பரவி ஏத்திப்—புகலிசேர்

வீதி எழுந்தருள வேண்டுமென விண்ணப்பம்
ஆதரத்தாற் செய்ய அவர்க்கருளி—நீதியார்

கேதகையுஞ் சண்பகமும் நேர்கிடத்திக் கீழ்த்தாழ்ந்த
மாதவியின் போதை மருங்கணைத்துக்—கோதில்

இருவேலி தன்னை இடையிருத்தி ஈண்டு
மருவோடு மல்லிகையை வைத்தாங்—கருகே

கருமுகையைக் கைகலக்க வைத்துக் கழுநீர்ப்
பெருகு பிளவிடையே பெய்து—முருகியலும்

புன்னாகந் தன்னைப் புணர இருவாச்சி
தன்அயலே முல்லை தலையெடுப்ப—மன்னிய

வண்செருந்திவாய்நெகிழ்ப்பமௌவல்அலர்படைப்பத்
தண்குருந்தம் மாடே தலையிறக்க—ஒண்கமலத்

தாதடுத்த கண்ணியால் தண்ணறுங் குஞ்சிமேற்
போதடுத்த கோலம் புனைவித்துக்—காதிற்

கனவயிர குண்டலங்கள் சேர்த்திக் கழுத்தின்
இனமணியின் ஆரம் இலகப்—புனைகனகத்

தொத்தடுத்த பூஞ்சுரிகைச் சோதிசேர் தாளிம்பம்
வைத்து மணிக்கண் டிகைபூண்டு—முத்தடுத்த

கேயூரந் தோள்மேற் கிடத்திக் கிளர்பொன்னின்
வாய்மை பெறுநூல் வலந்திகழ—வேயும்

தமனியத்தின் தாழ்வடமுந் தண்டரளக் கோப்பும்
சிமைய வரைமார்பிற் சேர்த்தி—அமைவுற்ற

வெண்ணீற்றின் ஒண்களபம் மட்டித்து மேவுதொழில்
ஒண்ணூற் கலிங்கம் உடல்புனைந்து—திண்ஞேக்கிற்

காற்றுருமோ குன்றோ கடலோ அடலுருமோ
கூற்றுருவோ என்னக் கொதித்தெழுந்து—சீற்றத்

98. கேயூரம் - தோள்வளை.

தழல்விழித்து நின்றெதிர்ந்து தாலவட்டம் வீசிப்
புழைத்தடக்கைகொண்டெறிந்துபொங்கி-மழைமதத்தாற்
பூத்த கடதடத்துப் போக மிகப்பொலிந்த
காத்திரத்த தாகிக் கலித்தெங்கும்—கோத்த
கொடுநிகளம் போக்கிநிமிர் கொண்டெழுந்து கோபித்
திடுவண்டை யிட்டுக் கலித்து—முடுகி
நெடுநிலத்தைத் தான்உழக்கி நின்று நிகர்நீத்
திடிபெயரத் தாளந் திலுப்பி—அடுசினத்தாற்
கன்ற முகம்பருகிக் கையெடுத் தாராய்ந்து
வென்றி மருப்புருவ வெய்துயிர்த்—தொன்றிய
கூடம் அரணழித்துக் கோபுரங்க ளைக்குத்தி
நீடு பொழிலை நிகரழித்—தோடிப்
பணப்பா கரைப்பரிந்து குத்திப் பறித்த
நிணப்பாகை நீள்விசும்பின் வீசி—அணைப்பரிய
ஓடைக் கருங்களிற்றை ஒண்பரிக்கா ரர்கள்தாம்
மாடணையக் கொண்டு வருதலுமே—கூடி
நயந்து குரற்கொடுத்து நட்பளித்துச் சென்று
வியந்தணுகி வேட்டந் தணித்தாங்—குயர்ந்த
உடற்றாய வாசிதனைப் பற்றிமேல் கொண்டாங்
கடற்கூடற் சந்தி அணுகி—அடுத்த
பயில்பலவும் பேசிப் படுபுரசை நீக்கி
அயர்வு கெடஅணைத்துத் தட்டி—உயர்வுதரு
தண்டுபே ரோசையின்கட் டாள்கோத்துச் சீர்ச்சிறுத்
தொண்டர் பிறகணையத் தோன்றுதலும்—எண்டிசையும்
பல்சனமும் மாவும் படையும் புடைகிளர
ஒல்லொலியால் ஓங்கு கடல்கிளர—மல்லற்
பரித்தூரங் கொட்டப் படுபணிலம் ஆர்ப்பக்
கருத்தோ டிசைகவிஞர் பாட—விரித்த

---

103. காத்திரம்-உடம்பு 104. நிகளம்-சங்கிலி. 112. புரசை-கயிறு.

குடைபலவுஞ் சாமரையுந் தொங்கல்களுங் கூடிப்
புடைபரந்து பொக்கம் படைப்பக்—கடைபடு
வீதி அணுகுதலும் வெள்வளையார் உள்மகிழ்ந்து
காதல் பெருகிக் கலந்தெங்கும்—சோதிசேர்
ஆடரங்கின் மேலும் அணிமா ளிகைகளிலும்
சேடரங்கும் நீள்மறுகுந் தெற்றியிலும்—பீடுடைய
பேரிளம்பெண் ஈறாகப் பேதை முதலாக
வாரிளங் கொங்கை மடநல்லார்—சீர்விளங்கப்
பேணும் சிலம்பும் பிறங்கொளிசேர் ஆரமும்
பூணும் புலம்பப் புறப்பட்டுச்—சேண்மறுகிற்[போல்
காண்டகைய வென்றிக் கருவரைமேல் வெண்மதி
ஈண்டு குடையின் எழில்நிழற்கீழ்க்—காண்டலுமே
கைதொழுவார் நின்று கலைசரிவார் மால்கொண்டு[துப்
மெய்தளர்வார் வெள்வளைகள் போய்வீழ்வார்-வெய்துயிர்த்
பூம்பயலை கொள்வார் புணர்முலைகள் பொன்பயப்பார்
காம்பனைய மென்றோட் கவின்கழிவார்—தாம்பயந்து
வென்றிவேற் சேயென்ன வேனில்வேட் கோவென்ன
அன்றென்ன ஆமென்ன ஐயுற்றுச்—சென்றணுகிக்
காழிக் குலமதலை என்றுதங் கைசோர்ந்து
வாழி வளைசரிய நின்றயர்வார்—பாழிமையால்
உள்ளம் நிலைதளர்ந்த ஒண்ணுதலார் வெல்களிற்றை
மெள்ள நடவென்று வேண்டுவார்—கள்ளலங்கல்
தாராமை அன்றியுந் தையல்நல் லார்முகத்தைப்
பாராமை சாலப் பயனென்பார்—நேராக
என்னையே நோக்கினான் ஏந்திழையீர் இப்பொழுது
நன்மை நமக்குண் டெனநயப்பார்—கைம்மையால்

---

116. பொக்கம்-சிறப்பு. 123 பொன்-பசலை. காம்பு-மூங்கில்.

ஒண்கலையும் நாணும் உடைதுகிலுந் தோற்றவர்கள்
வண்கமலத் தார்வலிந்து கோடுமெனப்—பண்பின்
வடிக்கண் மலர்வாளி வார்புருவ வில்மேல்
தொடுத்ததரந் தொண்டை துடிப்பப்-பொடித்தமுலைக்
காசைக் கருங்குழலார் காதற் கவுணியன்பாற்
பூசற் கமைந்து புறப்படுவார்—வாசச்
செழுமலர்த்தார் இன்றெனக்கு நல்காதே சீரார்
கழுமலர்த்தார் கோவே கழல்கள்—தொழுவார்கள்
அங்கோல் வளைஇழக்கப் போவது நின்னுடைய
செங்கோன்மை யோஎன்று செப்புவார்—நங்கைமீர்
இன்றிவன் நல்குமே எண்பெருங் குன்றத்தில்
அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப்—பொன்ற
உரைகெழுவு செந்தமிழ்ப்பா ஒன்றினால் வென்றி
நிரைகழுமேல் உய்த்தானை நேர்ந்து—விரைமலர்த்தார்
பெற்றிடலாம் என்றிருந்த நம்மினும் பேதையர்கள்
மற்றுளரோ என்று வகுத்துரைப்பார்—மற்றிவனே
பெண்ணிரக்கம் அன்றே பிறைநுதலீர் மாசுணத்தில்
நண்ணு கடுவிடத்தா னாட்சென்று—விண்ணுற்ற
ஆருயிரை மீட்டன் றவளை அணிமருக
லூரறிய வைத்ததென உரைப்பார்—பேரிடரால்
ஏசுவார் தாம்உற்ற ஏசறவைத் தோழியர்முன்
பேசுவார் நின்றுதம் பீடழிவார்—ஆசையால்
நைவார் நலன்அழிவார் நாணோடு பூண்இழப்பார்
மெய்வாடு வார்வெகுள்வார் வெய்துயிர்ப்பார்—தைய
பூந்துகிலைப் பூமாலை என்றணிவார் பூவினைமுன் [லார்
சாந்தம் எனமெய்யில் தைவருவார்—வாய்ந்த

131. காசை - காயாமலர்.

கிளியென்று பாவைக்குச் சொற்பயில்வார் பந்தை
ஒளிமே கலையென் றுடுப்பார்—அளிமேவு
பூங்குழலார் மையலாய்க் கைதொழமுன் போதந்தான்
ஓங்கொலிசேர் வீதி உலா.

திருச்சிற்றம்பலம்

38

நம்பியாண்டார் நம்பி
அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்

திருச்சிற்றம்பலம்

(ஒருபோகு கோச்சகக்கலிப்பா)

அலையார்ந்த கடலுலகத் தருந்திசைதோ றங்கங்கே
நிலையார்ந்த பலபதிகம் நெறிமனிதர்க் கினிதியற்றி
ஈங்கருளி எம்போல்வார்க் கிடர்கெடுத்தல் காரணமா
ஓங்குபுகழ்ச் சண்பையெனும் ஒண்பதியுள் உதித்தனையே.

செஞ்சடைவெண் மதிஅணிந்த சிவன்எந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாள் மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகமுன் றார்ந்தனையே

தோடணிகா தினனென்றுந் தொல்லமரர்க் கென்ஞான்றும்
தேடரிய பராபரனைச் செழுமறையின் அகன்பொருளை
அந்திச்செம் மேனியனை அடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணஅரன் உவனுமென் றுரைத்தனையே.

[இவை மூன்றும் நான்கடித் தாழிசை]

வளமலி தமிழிசை வடகலே மறைவல
முளரிநன் மலர்அணி தருதிரு முடியினே.
கடல்படு விடம்அடை கறைமணி மிடறுடை
அடல்கரி உரியனே அறிவுடை அளவினே.

[இவை இரண்டும் அராகம்]

கரும்பினுமிக் கினியபுகழ்க் கண்ணுதல்விண் ணவனடிமேற்
பரம்பவிரும் புவியவர்க்குப் பத்திமையை விளைத்தனேயே.
பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனேயே.

[இவை இரண்டும் இரண்டடித் தாழிசை]

அணிமவத் தவர்களுக் கதிகவித் தகனும்நீ.
தனிமனத் தருளுடைத் தவநெறிக் கமிர்தம்நீ.
அமணரைக் கழுநுதிக் கணேவுறுத் தவனும்நீ.
தமிழ்நலத் தொகையினிற் றகுசுவைப் பனுவல்நீ.

[இவைநான்கும் நாற்சீரோரடி அம்போதரங்கம்]

மறையவர்க் கொருவன் நீ.
மருவலர்க் குருமுநீ.
நிறைகுணத் தொருவன் நீ.
நிகரிலுத் தமனும் நீ.

[இவை நான்கும் முச்சீரோரடி அம்போதரங்கம்]

அரியை நீ.
எளியை நீ.
அறவன் நீ.
துறவன் நீ.
பெரியை நீ.
உரியை நீ.
பிள்ளை நீ.
வள்ளல் நீ.

[இவை எட்டும் இருசீரோரடி அம்போதரங்கம்]

எனவாங்கு [இது தனிச்சொல்]

அருந்தமிழ் விரகனிற் பரசுதுந் திருந்திய
நிரைச்செழு மாளிகை நிலைதொறும் நிலைதொறும்
உரைச்சதுர் மறையின் ஓங்கிய ஒலிசேர்
சீர்கெழு துழனித் திருமுகம் பொலிவுடைத்
தார்கெழு தண்டலைத் தண்பணை தழீஇக்
கற்றெருகு புரிசைக் காழியர் நாத
நற்றெருகு கீர்த்தி ஞானசம் பந்த
நின்பெருங் கருணையை நீதியின்
அன்புடை அடியவர்க் கருளுவோய் இதுசுரிதகம் எனவே.

(வெண்பா)

எனவே இடர்அகலும் இன்பமே எய்தும்
நனவே அரன்அருளை நாடும்—புனல்ஏய
செங்கமலத் தண்டார்த் திருஞான சம்பந்தன்
கொங்கமலத் தண்காழிக் கோ. 2

(கட்டளைக்கலித்துறை)

கோலப் புலமணி சுந்தர
மாளிகைக் குந்தளவா
ரேலப் பொழிலணி சண்பையர்
கோனை இருங்கடல்சூழ்
ஞாலத் தணிபுகழ் ஞானசம்
பந்தனை நற்றமிழே
போலப் பலபுன் கவிகொண்டு
சேவடி போற்றுவனே. 3

(எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

போற்று வாரிடர் பாற்றிய புனிதன்
பொழில்சு லாவிய புகலியர் பெருமான்
ஏற்ற வார்புகழ் ஞானசம் பந்தன்
எம்பி ரான்இருஞ் சுருதியங் கிரிவாய்ச்

சுரிதகம்: பரசுதும் -புகழ்வோம். துழனி ஓசை.
2. கோ எனவே இடர் அகலும்.

சேற்று வார்புனங் காவல் புரிந்தென்
சிந்தை கொள்வதுஞ் செய்தொழி லானால்
மாற்றம் நீரெமக் கின்றுரை செய்தால்
வாசி யோகுற மாதுந லீரே. 4

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

நலமலி தரும்புவனி நிறைசெய்புகழ் இன்பம்நனி
பனிமதி அணைந்த பொழில்சூழ்
பொலமதில் இரும்புகலி அதிபதி விதம்பெருகு
புனிதகுணன் எந்தம் இறைவன்
பலமலி தருந்தமிழின் வடகலை விடங்கன்மிகு
பரசமய வென்றி அரிதன்
சலமலி தருங்கமல சரண்நினைவன் என்றனது
தகுவினைகள் பொன்றும் வகையே. 5

(பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

வகைதகு முத்தமி ழாகரன் மறைபயில் திப்பிய வாசகன்
வலகலை வித்தகன் வானவில் மதியணை பொற்குவைமாளிகை
திகைதிகை மட்டலர் வார்பொழில் திகழ்புக லிக்கர சாகிய
திருவளர் விப்ரசி காமணி செழுமல யத்தமிழ் கேசரி
மிகமத வெற்றிகொள் வாரண மிடைவ ருடைக்குலம் யாளிகள்
விரவிரு ளிற்றனி நீணெறி வினைதுயர் மொய்த்துள வேமணி
நகையெழி லிற்குற மாதுன தருமை நினைக்கிலள் நீயிவள்
நசையின் முழுப்பழி யாதல்முன் னுகலி னிக்கிரி வாணனே.

வாணில வும்புன லும்பயில் செஞ்சடை வண்கரு ணாகரனை
மலைமா துமையொடு மிவனு வானென முன்னுளுரைசெய்தவன்

---

4. பாற்றிய - நீக்கிய. மாற்றம் - வார்த்தை. இது தலைவன் கூற்று.

5. பரசமய வென்றியரி - பரசமய கோளரி.

6. தோழி தலைவனை இரவு வரல் விலக்கல். திகை திகை - திசைதோறும். வருடை - எண்கால் வருடை.

சேணில வும்புகழ் மாளிகை நீடிய தென்புக லிக்கரசைத்
திருவா ளனையெழி லருகா சனிதனை மருவா தவர்கிளைபோல்
நாணில வும்பழி யோகரு தாதய லாளொரு காளையுடன்
நசைதீர் நிலைகொலை புரிவே டுவர்பயி றருகா னதர்வெயிலிற்
கேணில வுங்கிளி பாவையொ டாயமும் யாயெனை யும்மொழியக்
கிறியாலெனதொருமகள்போயுறுதுயர் கெடுவேன்அறிகிலனே.

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

அறிவாகி இன்பஞ்செய் தமிழ்வாதில் வென்றந்த
அமணான வன்குண்டர் கழுவேற முன்கண்ட
செறிமாட வண்சண்பை நகராளி என்தந்தை
திருஞான சம்பந்தன் அணிநீடு திண்குன்றில்
நெறியால மண்டுன்றி முனைநாள்சி னங்கொண்டு
நிறைவார் புனந்தின்று மகன்மேல் வருந்துங்க
வெறியார் மதந்தங்கு கதவா ரணங்கொன்ற
வெகுளாத நஞ்சிந்தை விறலான் உளன்பண்டே. 8

(பதின்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

பண்டமுது செய்ததுமை நங்கையருள் மேவுசிவ ஞானம்
பைந்தரள நன்சிவிகை செம்பொனணி நீடுகிற தாளம்
கொண்டதர னும்பர்பர னெங்கள்பெரு மானருள் படைத்துக்
கொடுத்ததமி ழைத்தவகு லத்தவர்க ளுக்குலகில்இன்பம்
கண்டதரு கந்தர்குல மொன்றிமுழு துங்கழுவில் ஏறக்
கறுத்தது வினைப்பயன் மனத்திலிறை காதலது வன்றி
விண்டதுவும் வஞ்சகரை மஞ்சணவு கின்றமணி மாட
வேணுபுர நாதன்மிகு வேதியர்சி காமணி பிரானே. 9

---

7. மகட் போக்கிய செவிலி இரங்குதல். கான் அதர்-காட்டுவழியில்
8. தோழி களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றது.
9. கறுத்தது - கோபித்தது. மஞ்சு - மேகம்.

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

பிரானை மெய்த்திரு ஞானசம் பந்தனை
மறையவர் பெருமானைக்
குராமலர்ப்பொழிற் கொச்சையர் நாதனைக்
குரைகழ லிணைவாழ்த்தித்
தராத லத்தினில் அவனருள் நினைவொடு
தளர்வுறு தமியேனுக்
கிராவி னைக்கொடு வந்ததிவ் வந்திமற்
றினிவிடி வறியேனே. 10

களி

(பதினான்குசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

ஏனமு கத்தவ புத்தரை இந்திர
சித்து மணம்புணர் வுற்றான்
ஈழவ னார்சொரி தொட்டி யினங்களை
வெட்டி யிசித்தனர் பட்டர்
தானம் இரக்கிற சீதை மடுப்பது
சாதி குடத்தொடு கண்டீர்
சக்கர வர்த்திகள் சிக்கர மட்டுவர்
தத்துவ மிப்பரி சுண்டே
ஆன புகழ்ப்பயில் விப்ர சிகாமணி
அத்தகு மைப்புரை யுங்கார்
ஆர்பொழில் நீடிய சண்பையர் காவலன்
வண்களி யேன்எளி யேனோ
சோனக னுக்குமெ னக்குமெ னத்தரை
அம்மனை சூலது கொண்டாள்
தும்புரு வாலியை வென்று நிலத்திடை
நின்று துளுக்குகி றாரே. 11

---

10. தலைவி பொழுதுகண்டு இரங்குதல். அந்தி - மாலை.
11. கள்ளை உண்டவன் பொருள் தொடர்பில்லாதவற்றைக் கூறும் கூற்றாக அமைந்தது இது. ஏனம் - பன்றி. சோனகன் - ஒரு சாதியினன். துளுக்குகிறார் - ஆடுகிறார்.

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

ஆர்மலி புகலி நாதன் அருளென இரவில் வந்தென்
வார்முலை பயலை தீர மணந்தவர் தணந்து போன
தேரதர் அழியல் உம்மைச் செய்பிழை எம்ம தில்லை
கார்திரை புரள மோதிக் கரைபொருங் கடலி னீரே. 12

(கலிவிருத்தம்)

கடல்மேவு புவியேறு கவிநீரர் பெருமான்றன்
தடமாடு மிகுகாழி தகுபேதை அருளாமல்
திடமாகி லணிநீறு செழுமேனி முழுதாடி
மடலேறி எழில்வீதி வருகாதல் ஒழியேனே. 13

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

ஒழியா நின்புறு பொழில்சூழ் சண்பைமன்
உயர்பார் துன்றிய தகுஞா னன்புகழ்
எழிலா ருங்கவு ணியர்தீ பன்திகழ்
இணையார் செங்கரன் நிகழ்வான் விண்குயின்
பொழியா நின்றன துளிதார் கொன்றைகள்
புலமே துன்றின கலைமான் ஒன்றின
பழிமேல் கொண்டது நுமர்தேர் அன்பொடும்
அருகே வந்தது அதுகாண் மங்கையே. 14

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

மங்கை யிடத்தர னைக்கவி நீரெதிர்
ஓட மதித்தருள்செய்
தங்கு புகழ்ச்சதுர் மாமறை நாவளர்
சைவசி காமணிதன்

---

12. **தலைவி கடலோடு கூறுதல்.** பயலை - பசலை. **தேர் அதர் அழியல் - தேர் போன வழியைச் சிதைக்காதே.**

13. **தலைவன் மடலேறுவேன் என்றல்.** பேதை - **தலைவி. அருளாமல்** திடமாகில் - **அருள் செய்யாமல் வன்மையுடைய ளானால். மடல் - பனைமடலால்செய்த குதிரை.**

14. **தலைவன்** வரவைத் **தோழி தலைவிக்கு உரைத்தல். இணை - இரண்டு. குயின்** - மேகம். **புலம் - நிலத்தில்.**

துங்க மதிற்பிர மாபுரம் மேவிய
சூழ்பொழில் நின்றொளிர்மென்
கொங்கை யுடைக்கொடி ஏரிடை யாள்குடி-
கொண்டனள் எம்மனமே. 15

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

மனங்கொண்டு நிறைகொண்டு கலையுங் கொண்டு
மணிநிறமும் இவள்செங்கை வளையுங் கொண்ட
தனங்கொண்ட பெருஞ்செல்வந் திகழுங் கீர்த்திச்
சண்பையர்கோன் திருஞான சம்பந் தற்கு
நனங்கொண்டு மெய்கொண்டு பயலை கொண்டே
நன்னுதலாள் அயர்கின்றாள் நடுவே நின்றும்
இனங்கொண்டு நகைகொண்டு மடவீர் வாளா
என்செயநீர் அலர்தூற்றி எழுகின் றீரே. 16

சம்பிரதம்

எழுகுல வெற்பிவை மிடறில் அடக்குவன்
எறிகட லிற்புனல் குளறிவ யிற்றினில்
முழுதும் ஒளித்திர வியையிநி லத்திடை
முடுகுவன் இப்பொழு திவையல விச்சைகள்
கழுமல நற்பதி யதிப தமிழ்க்கடல்
கவுணிய நற்குல திலகன் இணைக்கழல்
தொழுதுவ ழுத்திய பிறரொரு வர்க்குறு
துயர்வரு விப்பனி தரியதொர் விச்சையே. 17

(எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

சயமிகுத்தரு கரைமுருக்கிய தமிழ்பயிற்றிய நாவன்
வியலியற்றிரு மருகலிற்கொடு விடமழித்தருள் போதன்
கயலுடைப்புனல் வயல்வளத்தகு கழுமலப்பதி நாதன்
இயலுடைக்கழல் தொழுகினைப்பவ ரிருவினைத்துயர்
[போமே. 18

---

15. தலைவன் பாங்கனுக்கு உரைத்தல். அரணை மதித்து.
16. தோழி கூற்று. அலர் - பழிமொழி.
17. விச்சை - வித்தை.
18. முருக்கிய - வென்ற. வியல் - பரப்பு.

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

மேதகுந் திகழ்பூக நாகசண் பகசூத
வேரிவண் டறைசோலை ஆலைதுன் றியகாழி
நாதன்அந் தணர்கோனென் ஆனைவண் புகழாளி
ஞானசுந் தரன்மேவு தார்நினைந் தயர்வேனை
நீதியன் றனபேசும் யாயுமிந் துவும்வாசம்
நீடுதென் றலும்வீணை ஓசையுங் கரைசேர
மோதுதெண் திரைசேவல் சேருமன் றிலும்வேயும்
மூடுதண் பனிவாடை கூடிவன் பகையாமே. 19

வன்பகை யாமக் குண்டரை வென்றோய்
மாமலர் வாளிப் பொருமத வேளைத்
தன்பகை யாகச் சிந்தையுள் ளையும்
தையலை உய்யக் கொண்டருள் செய்யாய்
நின்புகழ் பாடிக் கண்பனி சோரா
நின்றெழில் ஞானா என்றகம் நெக்கிட்
டன்பக லாமெய்ச் சிந்தையர் இன்பா
அம்பொழில் மாடச் சண்பையர் கோவே. 20

மறம்

கோவின்திரு முகமீதொடு வருதூதுவ னீர
குளிர்பைம்பொழில் வளநாடெழில் நிதியம்பரி சம்மீ
மாவீரிய ரிவர்தங்கையென் மகுடன்திற மமண
மறவெங்குல மறிகின்றிலன் பழியச்சத வரசன்
பாவேறிய மதுரத்தமிழ் விரகன்புக லியர்மன்
பயில்வண்புக ழருகாசனி பணியன்றெனி னமர்காள்
தூவேரியை மடுமின்துடி யடிமின்படை யெழுமின்
தொகுசேனையு மவனும்பட மலையும்பரி சினியே. 21

---

19. தலைவி இரங்குதல். பூகம்-கமுகு. நாகம்-சுரபுன்னை. சூதம் - மா. ஆலை - கரும்பு. நீதி அன்றன - நீதி அல்லாத வார்த்தைகள். வேயும் - புல்லாங்குழலும்.

20. தோழி கூற்று.

21. கோவின் திருமுகம் - அரசனுடைய ஓலை. வேரி - கள். மலையும் - போர் செய்யும்.

(எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

இனியின் றொழிமினிவ் வெறியும் மறியடு
தொழிலும் மிடுகுர வையுமெல்லாம்
நனிசிந் தையினிவள் மிகவன் புறவதொர்
நசையுண் டதுநரை முதுபெண்டீர்
புனிதன் புகலியர் அதிபன் புனைதமிழ்
விரகன் புயமுறும் அரவிந்தம்
பனிமென் குழலியை அணிமின் துயரொடு
மயலுங் கெடுவது சரதம்மே. 22

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

சரத மணமலி பரிசம் வருவன
தளர்வில் புகலியர் அதிபன் நதிதரு
வரதன் அணிதமிழ் விரகன் மிகுபுகழ்
மருவு சுருதிநன் மலையின் அமர்தரு
விரத முடையைநி னிடையி னவண்மனம்
விரைசெய் குழலியை அணைவ தரிதென
இரத மழிதர வருதல் முனமினி
எளிய தொருவகை கருது மலையனே. 23

அயனெடிய மாலுமவ ரறிவரிய தாணுவரன்
அருளினொடு நீடவனி இடர்முழுது போயகல
வயலணிதென் வீழிமிழ லையினிலவு காசின்மலி
மழைபொழியு மானகுண மதுரன்மதி தோய்
[கனக

---

22. தோழி அறத்தொடு நிற்றல். வெறியும் – வெறியாடு தலையும். நசை – காதல். சரதம் – உறுதி.

23. நொதுமலர் வரைவுணர்த்தித் தோழி வரைவு கடாதல். அயலார் பரிசத்தோடு வருவதற்குமுன் தலைவியை மணந்து கொள்வாயாக என்றபடி.

24. தாணுவாகிய அரன்.

செயநிலவு மாடமதில் புடைதழுவு வாசமலி
செறிபொழில்சு லாவிவளர் சிரபுரசு ரேசன்முதிர்
பயனிலவு ஞானதமிழ் விரகன்மறை ஞானமுணர்
பரமகுரு நாதன்மிகு பரசமய கோளரியே. 24

அரியாருங் கிரிநெறிஎங் ஙனம்நீர் வந்தீர்
அழகிதினிப் பயமில்லை அந்திக் கப்பால்
தெரியாபுன் சிறுநெறிகள் எந்தம் வாழ்விச்
சிறுகுடியின் றிரவிங்கே சிரமந் தீர்ந்திச்
சுரியார்மென் குழலியொடும் விடியச் சென்று
தொகுபுகழ்சேர் திருஞான சம்பந் தன்றன்
வரியாரும் பொழிலுமெழில் மதிலுந் தோற்றும்
வயற்புகலிப் பதியினிது மருவ லாமே. 25

(ஈற்றடி மிக்குவந்த நான்கடிக் கலித்தாழிசை)

ஆமாண்பொன் கூட்டகத்த அஞ்சொலிளம் பைங்கிளியே
பாமாலை யாழ்முரியப் பாணழியப் பண்டருள்செய்
மாமான சுந்தரன்வண் சம்பந்த மாமுனியெம்
கோமான்றன் புகழொருகால் இன்புறநீ கூறாயே
கொச்சையர்கோன் றன்புகழ்யா னின்புறநீ கூறாயே. 26

(எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

கூற தாகமெய் யடிமை தானெனை
உடைய கொச்சையர் அதிபதி
வீற தார்தமிழ் விரகன் மேதகு
புகழி னானிவன் மிகுவனச்
சேற தார்தரு திரள்க ளைக்கன
செழுமு லைக்குரி யவர்சினத்
தேறு தானிது தழுவி னாரென
இடிகொண் மாமுர சதிருமே. 27

25. இடைச் சுரத்துக் கண்டோர் விலக்கல். அரி – சிங்கம். வரி - வண்டு.
27. ஏறு தழுவுதல். தழுவினார் இவளுக்குரியவர் என்று முரசு அதிரும்.

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

சதுரன் புகலியர் அதிபன்கூர்
தவசூந் தரகவு ணியர்தஞ்சீர்
முதல்வன் புகலிய ரதிபன்தாள்
முறைவந் தடையலர் நகரம்போல்
எதிர்வந் தனர்விறல் கெடவெம்போர்
எரிவெங் கணைசொரி புரிமின்கார்
அதிர்கின் றனஇது பருவஞ்சே
ரலர்தம் பதிமதில் இடிமின்னே. 28

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

மின்னு மாகத் தெழிலி யுஞ்சேர்
மிகுபொன் மாடப் புகலி நாதன்
துன்னு ஞானத் தெம்பி ரான்மெய்த்
தொகைசெய் பாடற் பதிக மன்னாள்
பொன்னு மாநற் றரள முந்தன்
பொருக யற்கண் தனம்பி ரைத்தாள்
இன்னு மேகிப் பொருள்ப டைப்பான்
எங்ங னேநான் எண்ணு மாறே. 29

(பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

மாறி லாத பொடிநீ றேறு கோல வடிவும்
வம்பு பம்பு குழலுந் துங்க கொங்கை இணையும்
ஊறி யேறு பதிகத் தோசை நேச நுகர்வும்
ஒத்து கித்து நடையுஞ் சித்த பத்தி மிகையும்

---

28. பருவங் கண்டு தோழி கூறுதல். சேரலர் – பகைவர்.

29. பொருள்வயிற் பிரிய எண்ணிய நெஞ்சத்துக்குத் தலைவன் கூறியது. மாகத்து எழிலி – வானிலுள்ள மேகம். பொன் என்றது பசலையை; தரள மென்றது கண்ணீர்த் துளியை.

30. வம்பு பம்பு – நறுமணம் பரவிய.

வீற தேறும் வயல்சூழ் காழி ஞான பெருமான்
வென்றி துன்று கழலி னென்றி நின்ற பணியும்
தேறல்போலு மொழியுஞ் சேல்கள் போலும் விழியும்
சிந்தை கொண்ட பரிசும் நன்றி மங்கை தவமே.

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

கைதவத்தால் என்னிடைக்கு
நீவந்த தறியேனோ கலதிப் பாண
மெய்தவத்தா ருயிரனைய
மிகுசைவ சிகாமணியை வேணுக் கோனைச்
செய்தவத்தால் விதிவாய்ந்த
செழுமுலையா ரவனுடைய செம்பொற் றிண்டோள்
எய்தவத்தால் விளிவெனக்கென்
யாதுக்கு நீபலபொய் இசைக்கின் றாயே. 31

மதங்கியார்

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

இசையை முகந்தெழு மிடறுமி திங்கிவன்
இடுகர ணங்களின் இயல்பும் வளம்பொலி
திசைதிசை துன்றிய பொழில்சுல வுந்திகழ்
சிரபுர மன்றகு தமிழ்விர கன்பல
நசைமிகு வண்புகழ் பயிலு மதங்கிதன்
நளிர்முலை செங்கயல் விழிநகை கண்டபின்
வசைதகு மென்குல மவைமுழு துங்கொள
மதிவளர் சிந்தனை மயல்வரு கின்றதே. 32

வருகின் றனனென் றனதுள் ளமும்நின்
வசமே நிறுவிக் குறைகொண் டுதணித்
தருகும் புனல்வெஞ் சுரம்யான் அமரும்
மதுநீ இறையுன் னினையா தெனின்முன்

---

31. தலைவி பாணனை இகழ்தல். கலதி - இழிந்தவன்.

32. கரணங்கள் - கை முதலியவற்றால் செய்யும் அபிநயங்கள்.

33. தலைவன் கூற்று. அதர் வந்து பிழை செய்தனை; அதர் - வழி.

கருகும் புயல்சேர் மதில்வண் புகலிக்
கவிஞன் பயில்செந் தமிழா கரன்மெய்ப்
பெருகுந் திருவார் அருள்பே ணலர்போற்
பிழைசெய் தனைவந் ததர்பெண் கொடியே. 33

கொடிநீடு விடையுடைய பெருமானை அடிபரவு
குணமேதை கவுணியர்கள் குலதீப சுபசரிதன்
அடியேனை திடர்முழுதும் அறவீசு தமிழ்விரகன்
அணியான புகலிநக ரணையான கனைகடலின்
முடிநீடு பெருவலைகொ டலையூடு புகுவன்நுமர் [வை
முறையேவு பணிபுரிவ னணிதோணி புனைவன
படியாரு நிகரரிய வரியாரு மதர்நயனி [பெறினே.
பணைவார்மென் முலைநுளையர் மடமாது னருள்

பெறுபயன் மிகப்புவியு ளருளுவன பிற்றைமுறை
பெருநெறி அளிப்பனபல் பிறவியை ஒழிச்சுவன
உறுதுய ரழிப்பனமுன் உமைதிரு வருட்பெருக
உடையன நதிப்புனலி னெதிர்பஃறி உய்த்தனபுன்
நறுமுறு குறைச்சமணை நிரைகழு நிறுத்தியன
நனிகத வடைத்தன துனருவிடம் அகற்றியன
துறுபொழில் மதிற்புறவ முதுபதிமன் ஒப்பரிய
தொழில்பல மிகுத்ததமிழ் விரகன கவித்தொகையே.

(பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

தொகுவார் பொழில்சுற் றியவான் மதிதோ யுமதிற் கனமார்
தொலையா ததிருப் பொழில்மா ளிகைமா டநெருக் கியசீர்
மிருகா ழிமன்முத் தமிழா கரன்மே தகுபொற் புனைதார்
விரையார் கமலக் கழலே துணையா கநினைப் பவர்தாம்

34. தலைவன் கூற்று நுளையர் — வலையர்.

35. பிற்றைமுறை - மறுமையில். ஒழிச்சுவன-ஒழிப்பன. பஃறி – தோணி. நறுமுறு - குறை கூறிய.

மகரா கரநித் திலநீர் நிலையார் புவியுத் தமராய்
வாலா றுபிறைப் பிணிறா ழியிலக்........கிதமா
தருவாழ் வுநிலைத் தெழில்சே ரறமா னபயிற் றுவர்மா
சதுரால் வினைசெற் றதன்மே லணுகார் பிறவிக் கடலே (37)

பாணாற்றுப்படை
(நேரிசை ஆசிரியப்பா)

கருமங் கேண்மதி கருமங் கேண்மதி
தருமதிப் பாண கருமங் கேண்மதி
நிரம்பிய பாடல் நின்கண் ணோடும்
அரும்பசி நலிய அலக்கணுற் றிளைத்துக்
காந்திய உதரக் கனல்தலைமுத் தெழுதலின்
தேய்ந்துடல் வற்றிச் சின்னரம் பெழுந்தே
இறுகுபு சுள்ளி இயற்றிய குரம்பை
உறுசெறித் தனைய உருவுகொண் டுள்வளை இ
இன்னிசை நல்லி யாழ்சுமந் தன்னம்
மன்னிய வளநகர் மனைக்கடை தோறும்
சென்றுழிச் சென்றுழிச் சில்பலி பெறாது
நின்றுழி நிலாவு வன்றுயர் போயொழிந்
தின்புற் றிருநிதி எய்தும் அதுநன
துள்ளத் துள்ள தாயின் மதுமலர்
வண்டறை சோலை வளவயல் அகவ
ஒண்டிறற் கோண்மீன் உலாவு குண்டகம்
உயர்தரு வரையில் இயல்தரு பதணத்துக்
கடுநுதிக் கழுக்கடை மிடைதரு வேலிக்
கனகப் பருமுரட் கணையக் கபாட
விலையக் கோபுர விளங்கெழில் வாயில்
நெகிழ்ச்சியில் வகுத்துத் திகழ்ச்சியி லோங்கும்
மஞ்சணை இஞ்சி வண்கொடி மிடைந்த்
செஞ்சுடர்க் கனகத் திகழ்சிலம் பனைய
மாளிகை ஒளிச் சூளிகை வளாகத்

---

36. மகராகரம் - கடல்.

37. அடி, 4. அலக்கண் - துன்பம். 18. கழுக்கடை - சூலம். 24. ஒளி - வரிசை.

தணிவுடைப் பலபட மணிதுடைத் தழுத்திய
நல்லொளி பரந்து நயந்திகழ் இந்திர
வில்லொளி பலபல விசும்பிடைக் காட்ட
மன்னிய செல்வத்துத் துன்னிய பெருமைச்
செம்மலர் மாது சேர்ந்திறை பிரியாக்
கழுமல நாதன் கவுணியர் குலபதி
தண்டமிழ் விரகன் சைவ சிகாமணி
பண்டிதர் இன்பன் பரசமய கோளரி
என்புனை தமிழ்கொண் டிரங்கிஎன் னுள்ளத்
தன்பினை அருளிய ஆண்டகை தன்புகழ்
குறைவறத் துள்கி நிறைகடை குறுகி
நாப்பொலி நல்லிசை பாட
மாப்பெருஞ் செல்வம் மன்னுதி நீயே. 37

(வஞ்சித்துறை)

நீதியி னிறைபுகழ்
மேதகு புகலிமன்
மாதமிழ் விரகனை
ஓதுவ தறுதியே. 38

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

உறுதி முலைதாழ எனையி கழுநீதி
உனது மனமார முழுவ துமதாக
அறுதி பெறுமாதர் பெயல்த ருதருனும்
அழகி தினியானுன் அருள்பு னைவதாவ
பெறுதி இவைநீயென் அடிப ணிதல்மேவு
பெருமை கெடநீடு படிறொ ழிபொன்மாட
நறைக மழுவாச வளர்பொ ழில்சுலாவு
நனிபு கலிநாத தமிழ்வி ரகநீயே. 39

(ஆசிரியத்துறை)

நீமதித் துன்னி நினையேல் மடநெஞ்சமே
காமதிக் கார்பொழிற் காழி
நாமதிக் கும்புகழ் ஞானசம் பந்தனொடு
பூமதிக் குங்கழல் போற்றே. 40

(கட்டளைக்கலிப்பா)

போற்றி செய்தான் பொற்கழல் பூண்டதே
புந்தி யானுந்தம் பொற்கழல் பூண்டதே
மாற்றி யிட்டது வல்விட வாதையே
மன்னு குண்டரை வென்றது வாதையே
ஆற்றெ திர்ப்புனல் உற்றதந் தோணியே
ஆன தன்பதி யாவதந் தோணியே
நாற்றி சைக்கவி ஞானசம் பந்தனே
நல்ல நாமமும் ஞானசம் பந்தனே. 41

(கைக்கிளை மருட்பா)

அம்புந்து கண்ணிமைக்கும் ஆன நுதல்வியர்க்கும்
வம்புந்து கோதை மலர்வாடும்—சம்பந்தன்
காமரு கழுமலம் அனையாள்
ஆமிவள் அணங்கலள் அடிநிலத் தனவே. 42

(பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

தனமுந் துகிலுஞ் சாலிக் குவையுங் கோலக் கனமாடச்
சண்பைத் திகழ்மா மறையோன் தவமெய்க் குலதீபன்
கனவண் கொடைநீ டருகா சனிதன் கமலக் கழல்பாடிக்
கண்டார் நிறையக் கொள்ளப் பசியைக் கருதா தெம்பாண
புனைதண் டமிழின் இசையார் புகலிக் கரசைப் புகழ்பாடிப்
புலையச் சேரிக் காளை புகுந்தா லென்சொற் புதிதாக்கிச்
சினவெங் கதமாக் களிறென் றிந்தச் சேரிக் கொடுவந்தார்
சேரிக் குடிலு மிழந்தா ரிதனைச் செய்வ தறியாரே. 43

(இன்னிசை வெண்பா)

யாரேஎம் போல அருளுடையார் இன்கமலத்
தாரேயுஞ் சென்னித் தமிழ்விரகன்—சீரேயும்
கொச்சை வயன் றன் குரைகழற்கே—மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து. 44

---

41. வாதை - துன்பம், வாதத்தை.
42. வம்பு - நறுமணம். அணங்கு - தெய்வமகள்.
43. பாணனை நோக்கித் தலைவி கூறியது. சாலி - நெல்.

(பதின்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

அறிதரு நுண்பொருள் சேர்பதி கமரன் கழல்மேல்
அணிதரு சுந்தர மார்தமிழ் விரகன் பிறைதோய்
செறிதரு பைம்பொழில் மாளிகை கலவுந் திகழ்சீர்த்
திருவளர் சண்பையில் மாடலை கடலொண் கழிசேர்
எறிதிரை வந்தெழு மீனிரை நுகர்கின் றிலைபோய்
இனமுழ மடைந்திலை கூரிட ரொடிருந் தனையால்
உறுதுயர் சிந்தையி னூடுத வினரெந் தமர்போல்
உமரும் அகன்றன ரோஇது உரைவண் குருகே. 45

(கலிவிருத்தம்)

குருகணி மணிமுன்கைக் கொடியுநல் விறலவனும்
அருகணை குவரப்பால் அரிதினி வழிமீண்மின்
தருகெழு முகில்வண்கைத் தகுதமிழ் விரகன்றன்
கருகெழு பொழில்மாடக் கழுமல வளநாடே. 46

நாடே றும்புகழ் ஞானசம் பந்தன்வண்
சேடே றுங்கொச்சை நேர்வளஞ் செய்தனை
மாடே றுந்தையல் வாட மலர்ந்தனை
கோடே றுங்கொடி யாய்கொல்லை முல்லையே. 47

(எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

முல்லை நகையுமைதன் மன்னு திருவருளை
முந்தி யுறுபெரிய செந்தண் முனிவன்மிகு
நல்ல பொழில்சுலவு தொல்லை யணிபுகலி
நாதன் மறைமுதல்வன் வேத மலையதனில்
வில்லை இலர்கணையும் இல்லை பகழியுறு
வேழம் இரலைகலை கேழல் வினவுறுவர்
சொல்லை இலர்விரக ரல்லர் தழைகொணர்வர்
தோழி இவரொருவர் ஆவ அழிதர்வரே. 48

---

45. காம மிக்க கழிபடர் கிளவி. குருகு - கொக்கு.
46. இடைச் சுரத்துக் கண்டோர் கூறுதல். குருகு - வளை.
47. தோழி கூற்று. சேடு - பெருமை. கோடு - கொழு
கொம்பு
48. தோழி கூற்று. இரலை – மான். கேழல் – பன்றி.

(வஞ்சித்துறை)

வழிதரு பிறவியினுறு
தொழிலமர் துயர்கெடுமிகு
பொழிலணி தருபுகலிமன்
எழிலிணை அடிஇசைமினே. 49

திருச்சிற்றம்பலம்

39

நம்பியாண்டார் நம்பி

அருளிச்செய்த

ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

திருச்சிற்றம்பலம்

பூவார் திருநுதல்மேற் பொற்சுட்டி யிட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்புரற்ற—ஓவா

தழுவான் பசித்தானென் றுங்கிறைவன் காட்டத்
தொழுவான் துயர்தீர்க்குந் தோகை—வழுவாமே

முப்பத் திரண்டறமுஞ் செய்தாள் முதிராத
செப்பொத்த கொங்கைத் திருநுதலி—அப்பன்

அருளாலே ஊட்டுதலும் அப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல்—இருள்தீர்ந்த

காழி முதல்வன் கவுணியர்தம் போரேறு
ஊழி முதல்வன் உவனென்று காட்டவலான்

வீழி மிழலைப் படிக்காசு கொண்டபிரான்
பாழி அமணைக் கழுவேற்றி னான்பாணர்

அடி, 2. உரற்ற - ஒலிக்க.

யாழ முரித்தான் எரிவாய் இடும்பதிகம்
ஆழி உலகத் தழியாமற் காட்டினான்
ஏழிசை வித்தகன்வந் தேனோரும் வானோரும்
தாழுஞ் சரணச் சதங்கைப் பருவத்தே
பாலையும் நெய்தலும் பாடவலான்—சோலைத்
திருவா வடுதுறையிற் செம்பொற் கிழியொன்
றருளாலே பெற்றருளும் ஐயன்—தெருளாத
தென்னவன்நா டெல்லாந் திருநீறு பாலித்த
மன்னன் மருகல்விடம் தீர்த்தபிரான்—பின்னைத்தென்
கோலக்கா விற்றாளம் பெற்றிக் குவலயத்தில்
மாலக்கா லத்தே........மாற்றினான்—ஞாலத்து
முத்தின் சிவிகை அரன்கொடுப்ப முன்னின்று
தித்தித்த பாடல் செவிக்களித்தான்—நித்திலங்கள்
மாடத் தொளிரும் மறைக்காட் டிறைகதவைப்
பாடி அடைப்பித்த பண்புடையான்—நீடும்
திருவோத்தூ ராண்பனையைப் பெண்பனையா கென்னும்
பெருவார்த்தை தானுடைய பிள்ளை—மருவினிய
கொள்ளம்பூ தூர்க்குழகன் நாவா யதுகொடுப்ப
உள்ளமே கோலாக ஊன்றினான்—வள்ளல்
மழவன் சிறுமதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோமான்—நிலவிய
வைகையாற் றேடிட்டு வானீர் எதிரோட்டும்
செய்கையால் மிக்க செயலுடையான்—வெய்யவிடம்
மேவி இறந்தஅயில் வேற்கண் மடமகளை
வாவென் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான்—நேர்வந்த

---

19. தெருளாத - தெளியாத.

23. மால் – மயக்கத்தை.

புத்தன் தலையைப் புவிமேற் புரள்வித்த
வித்தகப் பாடல் விளம்பினான்—மொய்த்தொளிசேர்
கொச்சைச் சதுரன்றன் கோமானைத் தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா
வித்துப் பொருளை விளக்க வலபெருமான்
முத்திப் பகவ முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தரெதி ராணைநம தென்னவலான்
கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்
பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடும்
கொற்றக் கதிர்வேற் குலச்சிறையுங் கொண்டாடும்
அற்றைப் பொழுதத் தமணரிடு வெந்தீயைப்
பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை என்னவல்லான்
வர்த்தமா னீசர் கழல்வணங்கி வாழ்முருக
பத்தியை ஈசன் பதிகத்தே காட்டினான்
அத்தன் திருநீல நக்கற்கு மன்புடையான்
துத்த மொழிக்குதலைத் தூயவாய் நன்னுதலி
நித்திலப் பூண்முலைக்கும் நீண்டதடங் கண்ணினுக்கும்
கொத்தார் கருங்குழற்குங் கோலச்செங் கைம்மலர்க்கும்
அத்தா மரையடிக்கும் அம்மென் குறங்கினுக்கும்
சித்திரப்பொற் காஞ்சி செறிந்தபே ரல்குலுக்கும்
முத்தமிழ்நூ லெல்லா முழுதுணர்ந்த பிள்ளையார்க்
கொத்த மணமிதுவென் றோதித் தமர்களெல்லாம்
சித்தங் களிப்பத் திருமணஞ்செய் காவணத்தே
அற்றைப் பொழுதத்துக் கண்டுட னேநிற்கப்
பெற்றவர்க ளோடும் பெருமணம்போய்ப் புக்குத்தன்
அத்தன் அடியே அடைந்தான் அழகிதே.

திருச்சிற்றம்பலம்

---

55. **துத்தம் - ஓர் இசை நரம்பு.**

40

நம்பியாண்டார் நம்பி

அருளிச்செய்த

திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை

திருச்சிற்றம்பலம்

புலனொ டாடித் திரிமனத்தவர்
பொறிசெய் காமத் துரிசடக்கிய
புனித நேசத் தொடுத மக்கையர்
புணர்வி னாலுற் றுரைசெ யக்குடர்

சுலவு சூலைப் பிணிகெ டுத்தொளிர்
சுடுவெ ணீறிட் டமண கற்றிய
துணிவி னன்முப் புரமெ ரித்தவர்
சுழலி லேபட் டிடுத வத்தினர்

உலகின் மாயப் பிறவி யைத்தரும்
உணர்வி லாவப் பெருமயக்கினை
ஒழிய வாய்மைக் கவிதையிற்பல
உபரி யாகப் பொருள்ப ரப்பிய

அலகில் ஞானக் கடலி டைப்படும்
அமிர்த யோகச் சிவவொ ளிப்புக
அடிய ரேமுக் கருளி னைச்செயும்
அரைய தேவத் திருவ டிக்களே. 1

1. பொறி – இந்திரியம். தமக்கையர் - திலதவதியார். திருவடிகள் – சுவாமிகள்.

திருநாவுக் கரசடி யவர்நாடற் கதிநிதி
தெளிதேனைத் தினியசொல் மடவாருர்ப் பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருஞானத் திரள்மன முருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான்வைத் தனதமிழ்
குருவாகக் கொடுசிவன் அடிசூடத் திரிபவர்
குறுகார்புக் கிடர்படு குடர்யோனிக் குழியிலே. 2

குழிந்து சுழிபெறுநா பியின்கண் மயிர்நிரையார்
குரும்பை முலையிடையே செலுந்த கைநன்மடவார்
அழிந்த பொசியதிலே கிடந்தி ரவுபகல்நீ
அலைந்த யருமதுநீ அறிந்தி லைகொல்மனமே
கழிந்த கழிகிடுநாள் இணங்கி தயநெகவே
கசிந்தி தயமெழுநா றரும்ப திகநிதியே
பொழிந்த ருளுதிருநா விநெங்க ளரசினையே
புரிந்து நினையிதுவே மருந்து பிறிதிலையே. 3

இலைமா டென்றிடர் பரியா ரிந்திர
னேயொத் தறுகுறை வற்றாலும்
நிலையா திச்செல்வ மெனவே கருதுவர்
நீள்சன் மக்கட லிடையிற்புக்
கலையார் சென்றரன் நெறியா குங்கரை
அண்ணப் பெறுவர்கள் வண்ணத்திண்
சிலைமா டந்திகழ் புகழா மூருறை
திருநா வுக்கர சென்போரே. 4

---

2. **உர்ப்பசி** - ஊர்வசி. வசி - வசியம். **குழியிலே குறுகார்.**

3. **கழிந்த கழிகிடு** - போனது போகட்டும். **புரிந்து** - விரும்பி.

4. **இலை மாடு என்று இடர்பரியார்** - செல்வம் இல்லை யென்று துன்பத்தைக் கொள்ளார்.

என்பட்டிக் கட்டிய இந்தப்பைக் குப்பையை
இங்கிட்டுச் சுட்டபி னெங்குத்தைக் குச்செலும்
முன்பிட்டுச் சுட்டிவ ருந்திக்கெத் திக்கென
மொய்ம்புற்றுக் கற்றறி வின்றிக்கெட் டுச்சில
வன்பட்டிப் பிட்டர்கள் துன்புற்றுப் புத்தியை
வஞ்சித்துக் கத்திவி ழுந்தெச்சுத் தட்டுவர்
அன்பர்க்குப் பற்றிலர் சென்றர்ச்சிக் கிற்றிலர்
அந்தக்குக் கிக்கிரை சிந்தித்தப் பித்தரே. 5

பித்தரசு பதையாத கொத்தைநிலை உளதேவு
பெட்டியுரை செய்துசோறு சுட்டியுழல் சமண்வீரர்
கைத்தரசு பதையாத சித்தமொடு சிவபூசை
கற்றமதி யினஞோசை யித்தரசு புகழ்ஞாலம்
முத்திபெறு திருவாள னெற்றுணையின் மிதவாமல்
கற்றுணையில் வருமாதி..................
பத்தரசு வசைதீர வைத்தகன தமிழ்மாலை
பற்பலவு மவையோத நற்பதிக நிதிதானே. 6

பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்
அதிகைமா நகர்மேவி அருளினு லமண்மூடர்
அவர்செய்வா தைகள்தீரும்அனகன்வார் கழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை உடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீசன் அடியரா குவர்வானம்
உடையரா குவர்பாரில் மனிதரா னவர்தாமே. 7

தாமரைநகும் அகவிதழ் தகுவன
சாய்பெறுசிறு தளிரிணை அணையன
சார்தருமடி யவரிடர் தடிவன
தாயினும்நல கருணையை உடையன

---

5. குரம்பை - குடிலைப்போன்ற உடலை. எங்குத்தைக்கு - எவ்விடத்துக்கு. குக்கிக்கு - வயிற்றுக்கு.

7. அனகன் - பாவம் அற்றவன். பாவம் வெறியர் ஆகுவார் - பாவம் இல்லாதவராவர்.

தூமதியினை யொருபது கொடுசெய்த
சோதியின்மிகு கதிரினை உடையன
தூயனதவ முனிவர்கள் தொழுவன
தோமறுகுண நிலையின தலையின

ஓமரசினை மறைகளின் முடிவுகள்
ஒலிடுபரி சொடுதொடர் வரியன
ஓவறுமுணர் வொடுசிவ வொளியன
ஊறியகசி வொடுகவி செய்தபுகழ்

ஆமரசுயர் அகநெகு மவருள
ஞாரரசதி கையினர னருளவ
ஞமரசுகொ ளரசெனை வழிமுழு
தாளரசுத னடியிணை மலர்களே. 8

அடிநாயைச் சிவிகைத் தவிசேறித் திரிவித்
தரியாவப் பசுவைச் சிறியோரிற் செறியுங்
கொடியேனுக் கருளைத் திருநாவுக் கரசைக்
குணமேருத் தனைவிட் டெனையாமொட் டகல்விற்
பிடியாரப் பெறுதற் கரிதாகச் சொலுமப்
பிணநூலைப் பெருகப் பொருளாகக் கருதும்
செடிகாயத் துறிகைச் சமண்மூடர்க் கிழவுற்
றதுதேவர்க் கரிதச் சிவலோகக் கதியே. 9

சிவசம் பத்திடைத் தவஞ்செய்து
திரியும் பத்தியிற் சிறந்தவர்
திலகன் கற்றசிட் டன்வெந்தொளிர்
திகழும் பைம்பொடித் தவண்டணி

கவசம் புக்குவைத் தரன்கழல்
கருதுஞ் சித்தனிற் கவன்றிய
கரணங் கட்டுதற் கடுத்துள
களகம் புக்கநற் கவந்தியன்

9. செடி - நாற்றம்.

அவசம் புத்தியிற் கசிந்துகொ
டழுகண் டத்துவைத் தளித்தனன்
அனகன் குற்றமற் றபண்டிதன்
அரசெங் கட்கொர்பற் றுவந்தறு

பவசங் கைப்பதைப் பரஞ்சுடர்
படிறின் றித்தனைத் தொடர்ந்தவர்
பசுபந் தத்தினைப் பரிந்தடு
பரிசொன் றப்பணிக் குநன்றுமே. 10

நன்று மாதர நாவினுக் கரைசடி
நளினம்வைத் துயின்அல்லால்
ஒன்று மாவது கண்டிலம் உபாயமற்
றுள்ளன வேண்டோமால்
என்றும் ஆதியும் அந்தமும் இல்லதோர்
இகபரத் திடைப்பட்டுப்
பொன்று வார்புகுஞ் சூழலிற் புகேம்புகிற்
பொறியிலம் புலனோடே. 11

திருச்சிற்றம்பலம்

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்
அக்காரம்	182
அகழ்சூழ்	328
அங்கண்	20
அங்கை	171
அஞ்சனஞ்சேர்	30
அஞ்சரத்தான்	282
அஞ்சுமுகங்	152
அஞ்செழுத்	98
அடங்காதார்	171
அடிக்கண்ணி	53
அடிசார்ங்	269
அடித்தலத்தின்	10
அடிநாயைச்	455
அடிநின்ற	278
அடிப்போது	116
அடிபேரிற்	23
அடியமர்ங்	161
அடியாயி	273
அடியார்தம்	174
அடியால்	379
அடியிட்ட	325
அடியுமுடியு	107
அடியொன்று	222
அடியோமைத்	168
அடிவலப்	290
அடுக்கிய	331
அடுங்கண்	17
அடுசினக்	409
அடுத்த	193
அடைத்தது	400
அடைந்துய்ம்	92
அடைந்துன்	191
அடையுந்திசை	202
அடையும்படை	197

பாட்டு	பக்கம்
அண்ணலது	117
அண்ணல்	392
அணங்கமர்	384
அணங்காட	336
அணங்குறை	64
அதுவேபிரா	13
அந்தஇள	107
அந்தணராம்	45
அந்தணனைத்	8
அந்தணாளர்	209
அந்தமுங்	406
அந்தாழ்	348
அந்திமதி	165
அம்பரங்	287
அம்பலவர்	236
அம்பவள	107
அம்புந்து	447
அமரா	319
அமையாமென்	184
அமைவும்	194
அயமால்	177
அயமேபலி	49
அயனெடிய	440
அரங்கமாப்	24
அரங்கா	54
அரசினை	365
அரசுமாய்	177
அரணம்	92
அரவம்அரைக்	132
அரவம்உயிர்ப்ப	51
அரவமொன்	16
அரன்காய	177
அரனென்கோ	14
அரனே	202

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அராவிவளைத்	19	அவரும்	93
அரிகரியை	108	அவளோர்	26
அரிதன்	282	அவன்கண்	26
அரியாருங்கிரி	441	அவனிதல	413
அரியாரும்	176	அவனேஇரு	15
அரியும்உழு	108	அழகறி	287
அரியோடு	408	அழகுடைக்	71
அருட்டுறை	347	அழகுதிரி	29
அருடரு	327	அழலாட	27
அருணம்பாற்	185	அழிகின்ற	47
அருதிக்கு	322	அளவினில்	311
அருந்தமிழா	351	அறமாய்	203
அரும்பதம்	391	அறமான	175
அரும்பின	379	அறிதருநுண்	448
அருள்சேரா	191	அறியாம	103
அருள்பழுத்	248	அறிவாகி	435
அருளால்வரு	39	அறிவானுங்	15
அருளாதவா	98	அறிவில்	228
அருளின்	246	அன்பால்அடைவ	11
அருளுந்தமி	395	அன்புதவச்	215
அருளூவாழி	237	அன்பே	199
அருளேஉல	13	அன்றமரர்	200
அருளைத்தரு	281	அன்றினர்	264
அல்லல்களைந்	318	அன்றுந்திரு	21
அல்லல்வாழ்	229	அன்றும்பகை	286
அலங்கல்	218	அன்றுவெள்	61
அலங்காரம்	184	அன்றென்றும்	265
அலராளுங்	174	ஆக்கூர்	183
அலரோன்	102	ஆகங்கனக	329
அலைகட	417	ஆங்குரை	192
அலையார்ந்த	431	ஆட்டும்	189
அலையார்புனல்	36	ஆதரவும்	402
அவந்திரி	348	ஆதரித்த	222
அவநெறிக்	322	ஆம்பரிசே	192
அவமதித்தாழ்	338	ஆமாண்	441
அவமதியா	320	ஆமாறறி	17
அவர்க்கே	12	ஆமென்று	103
அவர்சென்	376	ஆய்ந்துன்	198

பாட்டு	பக்கம்
ஆயம்அழிய	178
ஆயன்ற	197
ஆயின அந்தணர்	48
ஆயின அன்	75
ஆயினேன்	13
ஆர்க்கின்ற	46
ஆர் துணை	196
ஆர்மலி	437
ஆர்வல்லார்	26
ஆரணங்கின்	48
ஆரணம்	246
ஆலமர்கண்	131
ஆலநிழற்கீழ்	195
ஆலயங்கார்	296
ஆவணயாரே	56
ஆவாமனிதர்	188
ஆழும்	177
ஆளாளஞ்	184
ஆளானேம்	12
ஆளி தொடர	108
ஆளெனப்	232
ஆறதேறுஞ்	405
ஆருவெங்	189
ஆறுகற்றைச்	119
ஆறுடையர்	203
ஆறுமண்டப்	407
ஆனையனை	262
ஆனேறே	241
இக்சுயங்	217
இங்கிருந்து	16
இசையுந்தன்	105
இசையை	443
இட்டகுடி	30
இடத்துறை	308
இடப்பாகம்நீள்	92
இடப்பாகமும்	167
இடப்பால	23
இடமாய	204

பாட்டு	பக்கம்
இடமால்வலந்	33
இடாமல் வலமாலை	185
இடர்களையா	12
இடர்தரு	209
இடரீர்	98
இடவஞ்சு	291
இடுதினை	108
இடைக்கு	292
இடைதரில்	205
இடையும்	382
இதுநீர்	206
இதுவன்றே	15
இமையோர்	52
இயங்குந்	285
இயம்பாய்	100
இயலாதன	401
இயலாவிடை	343
இயலிசை	170
இரவும் பகலும்	373
இருக்கும்	272
இருந்தண்	384
இருந்தனம்	36
இருந்தவா	100
இருநில	307
இருள்கொண்ட	131
இருள்புரி	66
இருளார்	48
இருளின் உரு	25
இல்லும்பொரு	30
இல்லைபிற	166
இலமல	183
இலர்கொலாம்	210
இலவவெங்	298
இலவிதழ்வாய்	223
இலைமாடென்	453
இவரேமுதல்	102
இவரைப்	16
இவளப்பனி	207

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
இவளுக்கு	97	உடைமணி	261
இழவாடி	30	உடையோடு	179
இழைகெழு	414	உண்டிருந்த	108
இழையார் வனமுலை ஈர்க்	65	உண்டேன்	325
இழையார் வனமுலை வீங்கி	49	உணரவலை	192
இழையாரர	302	உணருங்கால்	99
இழைவளர்	386	உத்தமத்தா	366
இறைக்கோ	166	உத்தமராய் அடி	34
இறையாய	180	உத்தமராய்வாழ்	11
இறையுந்	330	உத்துங்க	287
இறைவனே	12	உந்தத்	215
இன்றியாம்	180	உமைகங்கை	199
இன்றிருந்து	273	உய்யாதென்	179
இன்றுசெய்	306	உய்யும்மருந்	31
இன்றுதொடக்	103	உயிராய	187
இன்றுநமக்	15	உயிராயின	303
இன்னம்	151	உருவாம்	308
இனிதே	95	உருவுபலகொண்டுணர்	92
இனியவர்	291	உருவுபலகொண்டொரு	203
இனியவா	199	உருவியலு	181
இனியாரும்	186	உரைக்கப்படு	9
இனியின்று	440	உரையா	198
இனியோராம்	14	உரையின்வ	221
இனிவார்சடை	8	உரையினல்	27
ஈங்கேவா	106	உரையும்பொரு	99
ஈசன் அவன்	8	உரைவந்	169
ஈசன் திறமை	101	உரைவளர்	40
ஈசனைக்	32	உலகம் அனைத்	93
ஈண்டுமுற்	210	உலகம் உவப்ப	137
ஈண்டொளி	17	உலகாளுறு	36
ஈயும்பொருளே	201	உலகுகலங்	367
ஈரமுடைய	200	உலவியமின்	302
ஈரவேரித்	239	உலவுசலதி	231
ஈன்றகுழவி	108	உலாநீர்க்	74
ஈன்றகுற	108	உவரச்சொல்	299
உகட்டித்து	396	உவவா	185
உடைதலை	207	உழப்பின்	260
உடைப்புலி	289	உழிதரல்	211

பாட்டு	பக்கம்
உள்வார்	300
உள்ளம்	285
உள்ளிடத்	30
உளதள	162
உளமால்	174
உளரொளிய	208
உற்றடியார்	41
உற்றுரை	191
உறவும்	390
உருவே	178
உறுகின்றஅன்	382
உறுகின்றவெவ்	297
உறுதிமுலை	446
உறுமுந்து	204
உறைகழி	63
உறைகின்றனர்	53
உன்னை ஒழிய	151
ஊடிப்பிடி	109
ஊணொன்றும்	194
ஊர்மதில்	345
ஊர்வதுவும்	198
ஊரும்பசும்	417
ஊருமதொற்றி	175
ஊரெலாங்	73
எட்டி இலவம்	5
எண்டலைக்	406
எண்ணம் இறை	44
எம்மனை	381
எம்பிறை	57
எம்மையும்	281
எமக்கிதுவோ	22
எமையாள	204
எய்யத்	109
எரிகின்ற	51
எரியாடி	193
எழுகுலவெற்	439
எழுமலர்த்	304
எழுவாள்	380
எளியதிது	19
எளியவென்	212
எளிவந்த	395
என்பட்டி	454
என்புந்	321
என்றும்அடி	409
என்றுமலர்	190
என்றுவிளம்	362
என்னும்	234
என்னெஞ்சே	31
என்னை இவ	191
என்னை உடை	26
என்னைவினைந்	315
எனக்கினிய	13
எனக்குவளை	184
எனவேஇடர்	433
எனவேஉல	212
எனவேஎழு	2 51
ஏகம்பனே	277
ஏத்தியே	163
ஏத்துற்று	192
ஏதொக்கும்	21
ஏந்தும்உல	394
ஏய்ந்தகயி	346
ஏவுசெய்	327
ஏழைஇள	109
ஏழையென்	332
ஏற்றின்	106
ஏறலால்	11
ஏறிய	319
ஏறுதழீஇய	219
ஏறேய	198
ஏனங்கிளை	109
ஏனம்உழுத	109
ஏனமுகத்த	436
ஒப்பினை	5
ஒருகணை	109
ஒருங்காது	94

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
ஒருநெடுங்	213	கடிமலர்க்கொன்றையுங்	69
ஒருபால்	18	கடியரவர்	176
ஒழித்தேன்	38	கடுவெடுத்த	28
ஒழிந்ததெங்	229	கடுவன்உகளுங்	7
ஒழியாதின்	437	கண்களங்கஞ்	32
ஒளியார்	175	கண்கொண்டவிர்	112
ஒளிவந்தவா	247	கண்டகனி	110
ஒளிவிலி	25	கண்டங்கரியன்உமை	175
ஒளிறுமணி	381	கண்டங்கரியன்கரி	40
ஒற்றியூர	313	கண்டபகிறங்	173
ஒன்றினை	255	கண்டெந்தை	23
ஒன்றுமுத	174	கண்ணார்திரு	397
ஒன்றுரைப்	190	கண்ணார்நுதல்	63
ஒன்றேநினைந்	13	கண்ணார்மணி	354
ஒன்றுறப்பர	204	கண்ணாரக்	25
ஓங்கிப்பரந்	110	கண்ணிஇளம்	167
ஓங்கின	301	கண்ணுங்	101
ஓடும்பஞ்	371	கன்னினன்	256
ஓடுகின்ற	127	கண்திறந்து	193
ஓடும்முகி	110	கணக்கிட்டுக்	100
ஓதநெடுங்	23	கணங்கொண்ட	162
ஓதவன்	47	கதியாவது	256
ஓராதே	263	கதியே	330
ஓருடம்பி	121	கதிர்மதி	418
கங்குல்இரை	111	கதையிலே	93
கங்கைவலம்	335	கம்பக்கரி	360
கச்சார்	301	கயங்கெழு	73
கட்டதுவே	389	கரத்தத்தமரு	290
கடக்களிறு	110	கரத்தினில்	276
கடநாகம்	95	கரதலம்	207
கடல்மேவு	437	கரம்ஊன்றிக்	31
கடலன்ன	378	கரியார்தாஞ்	199
கடலான	249	கரியானும்	202
கடவியதென்	55	கருங்களிற்	110
கடனைகக்கை	195	கருத்தினல்	23
கடனைகம்	176	கருத்துக்குச்	94
கடிமலர்க்கொன்றைதரி		கருத்துடைய	193
னும்	50	கருதத்தவ	387

பாட்டு	பக்கம்
கருதியதொன்	48
கருதுங்கருத்	168
கருப்புச்சிலை	166
கருப்புருவத்	334
கருமங்கேண்	445
கருமுதற்	246
கரையேனு	197
கல்லாக்குர	111
கல்லைப்புனை	111
கலங்கின	57
கலங்குபுனற்	23
கலசமுலைக்	346
கலந்தனக்	46
கலம்பெரி	180
கலவிக்களி	111
கலைகள்	114
கலைகாமின்	178
கலைதலை	57
கலைமான்	202
கவவுமணி	216
கவளமாளி	410
கவிக்குத்	381
கழல்கின்ற	382
கழல்வண்ண	117
கழலும்பசு	339
கழற்கொண்ட	9
கழிந்தகழி	95
கழிந்தது	30
கழிநீள்கட	364
கள்ளம்பொழி	405
கள்ளமுது	111
கள்ளவளா	54
கள்ளிக்கவட்	2
களியானைக்	164
களியுறுதேன்	393
களிவந்	220
களிறுமுகத்	316
களிறுவழங்க	65
களைகண்	333
கற்பாநறவ	380
கற்றநன்	344
கற்ருனஞ்	188
கற்றைப்	288
கறுத்தகண்	332
கறுத்தமுலை	111
கன்னிப்பிடி	111
கனமதில்	319
கனன்ருழி	181
கனியஙினை	161
கனையபலாங்	110
காக்கக்	152
காக்கை	184
காட்டில்	96
காட்டிவைத்	306
காண்பார்க்	14
காணங்கை	183
காணுதலக்	94
காணுய்	191
காணீர்	261
காதலைக்	289
காந்தள்	132
காந்தளங்	112
காப்பயில்	372
காமனை	45
காமுற்ரு	101
கார்த்தண்	362
கார்மிக்க	299
கார்முகமார	303
கார்விடை	304
காரங்கலை	390
காரணன்	36
காரும்முழக்	64
காருருவக்	20
காலது	216
காலற்சிறிய	314
காலனையும்	24

பாட்டு	பக்கம்
காலைக்கலை	28
காலையேபோன்	22
காவார்	201
காளையர்கள்	30
காளைவடி	28
கிடக்கும்	288
கிரிவில்	360
கிழவரு	226
கிளர்ந்து	7
கிறிபல	292
கிளரிக்	388
கிழாயின	9
குடிமன்னு	354
குடைகொண்	220
குண்டகழ்	389
குண்டிலோமக்	3
குண்டைவயிற்	7
குணக்கோடி	179
குந்திநடந்து	28
குயிலொத்	29
குரவங்	69
குருகணி	449
குருகிள	187
குருகும்பணி	418
குருந்தலர்	374
குருந்துங்	419
குலமேறிய	349
குவளைக்கரு	405
குழலார்	20
குழலியல்	383
குழிகட்	53
குழிந்து	453
குழிஇயிருந்த	29
குழைக்கின்ற	399
குறமகளிர்	112
குறிக்கொண்	55
குறியார்	197
குறுமன	386

பாட்டு	பக்கம்
குறையாப்	212
குன்றம்எறிந்ததுவு	151
குன்றம்எறிந்தாய்	151
குன்றெடுத்	53
கூட்டமொன்	371
கூடியதன்	49
கூடியிருந்து	105
கூடுவதம்	336
கூத்தனென்	324
கூத்துக்	34
கூரால	179
கூவுதலும்	104
கூழைமுது	112
கூற்றுக்	358
கூற்றும்	187
கூறதாக	441
கூறாய்	101
கூறுபெறுங்	172
கூறுமின்ஈசனை	52
கூறுமின்தொண்	295
கூறெமக்கீ	25
கெட்டஅரக்	104
சேணாற்றி	219
கைக்குப்பிணி	161
கைச்செல்	341
கைதவத்	443
கைம்மையினால்	377
கையாறவா	180
கொங்கு	404
கொங்கை	2
கொட்டுஞ்சில	45
கொடிக்குல	173
கொடித்தேர்	399
கொடிநீடு	444
கொடிமேல்	37
கொடியோர்	68
கொடிறு	171
கொடுத்தான்	363

பாட்டு	பக்கம்
கொடுவிற்	112
கொண்டபலி	169
கொண்டல்	241
கொண்டலின்	274
கொண்டற்கா	208
கொம்பனையா	316
கொம்பார்	120
கொம்பினை	18
கொல்லை	112
கொவ்வைக்	112
கொழுந்திரள்	208
கொள்ளுங்	297
கொற்றத்திறல்	54
கொற்றத்துப்	210
கொற்றவனே	58
கோங்கின்	113
கோடரவங்	132
கோத்த	102
கோப்பாடி	186
கோலப்புல	433
கோவிற்	318
கோவின்	439
சங்கம்புரள	118
சங்கரன்	51
சங்கரனைத்	8
சங்கிடத்	229
சங்குகோள்	167
சங்கோர்	326
சடைமேல்அக்	19
சடைமேல்ஒருத்	271
சடையே	206
சத்தித்தட	360
சதுர்முகன்	242
சதுரன்	442
சந்தனப்பூம்	113
சந்தித்த	56
சந்தின் இலை	113
சந்துபுனை	224

பாட்டு	பக்கம்
சயமிகுத்த	438
சரணுடை	163
சரதமண	440
சார்ந்தார்க்கு	24
சார்ந்தாரை	101
சார்ந்துரை	191
சாரங்குறத்	113
சாராவார்	193
சாற்றுவன்	43
சிங்கத்துரு	363
சிந்தனை	58
சிந்திக்க	327
சிந்தையை	398
சிரமே	219
சிரித்திட்ட	338
சிலம்படியாள்	22
சிவசம்பத்	455
சிவன்மாட்	189
சிவனந்தஞ்	200
சிறைநன்	351
சிறைப்புள	328
சிறைவண்டு	300
சீரார்ந்த	20
சுடர்ப்பிழம்	217
சுடர்விடு	272
சுடலைப்பொடி	322
சுரபுரத்தார்	379
சுழலும்அழல்	4
சுனைநீடு	113
சூடுநற்	385
சூடுமதியம்	7
சூதப்பொழில்	355
சூதொன்று	187
சூர்தந்த	219
சூலபாணியை	124
செடிமுட்டச்	113
செத்தபிணத்தை	6
செந்தினை	113

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
செப்பத்தகு	342	தகவுடையார்	14
செப்பன	46	தகுமகட்	365
செப்பிய	402	தங்கழல்கள்	101
செப்பேந்திள	27	தஞ்சாக	31
செம்பொன்	369	தடங்குடை	114
செய்தசிறப்	97	தடப்பாற்	68
செய்தரு	217	தண்டலை	355
செய்தவர்	343	தண்ணார்	324
செய்யசடை	103	தந்தையாங்	158
செய்யதிரு	228	தம்மைப்	284
செய்யான்	187	தமக்கென்றும்	11
செருக்கிறல்	24	தரணியிற்	358
செருவிலி	364	தரம்பொற்	289
செல்லுமள	200	தரித்தேன்	277
செல்வங்	366	தருக்கவற்	290
செழுந்தழல்	132	தருமருட்	288
செழுநீர்	367	தலம்விளங்	370
செறிவளை	56	தலையவன்	329
சென்றிறைஞ்	102	தலையாய	9
சென்றுசெருப்	194	தலையாலங்	188
சென்றேறி	295	தவறுபெரிது	127
சேண்டில்லை	335	தவனேஉல	33
சேய்தங்	283	தவளைத்தவ	340
சேர்கின்ற	204	தழைக்கின்ற	415
சேர்வும்	203	தளராமிகு	302
சேரற்குத்	357	தறித்தாய்	55
சேரும்பிரான்	199	தன்மையிற்	279
சேரும்புகழ்	403	தன்றாள்	333
சொல்லச்	343	தனக்குன்றம்	44
சொல்லாதன	44	தனக்கே	18
சொல்லாயம்	196	தனந்தலை	337
சொல்லும்	91	தனம்ஏறிப்	120
சொற்செறி	416	தனமலி	412
ஞான்றகுழற்	16	தனமாவது	352
ஞான்றபுன	209	தனமிட்டு	280
ஞானந்திர	412	தனமுங்	447
ஞானவாரூர	370	தனமேதரு	396
தகடன	356	தனையொப்	369

பாட்டு	பக்கம்
தாதுகற்	392
தாம்பட்ட	104
தாமரைக்கோ	166
தாமரைசேர்	186
தாமரைநகு	454
தாமரைமா	413
தாமரையின்	114
தாமென்ன	195
தாமேய	197
தாயவன்	347
தாயோங்கித்	113
தாராய	177
தாரான்	195
தாரிளங்	211
தாழ்ந்தசடை	106
தாழ்ந்து	75
தாழ்ஞ்சடை	43
தாளார்	196
தாளின்	391
தாளொன்	105
தான்ஏறும்	119
தானக்கன்	185
தானயன்	193
தானேஉல	104
தானேதனி	14
திங்கட்கோ	408
திங்கள்இது	18
திண்ணன	381
திரிதவர்	34
திரியப்	283
திரியும்	192
திருக்கண்	153
திருத்தங்கு	133
திருந்திய	420
திருநாவுக்	453
திருமார்பில்	19
திருமாலும்	75
திருவளர்	244
திருவாக்கும்	160
திறைமருவு	26
திறங்காட்	179
திறத்தால்	19
திறமமர்	359
திறமலி	72
திறமென்	200
தீயான	204
தீவினையேனை	37
துணைத்தாம	287
துணையும்	355
துணையொத்த	298
துத்தங்கைக்	4
துயர்க்கெலாங்	97
துயருந்	42
துயிலா	64
தூமதி	310
தெய்வத்	251
தெள்ளகட்ட	114
தெள்ளிய	38
தெளிதரு	278
தெளியாய்	181
தேடுற்றில	293
தேம்புன	416
தேமலி	417
தேரு	180
தேரோன்	178
தேவனைப்	170
தேறும்புனற்	393
தேன்மருவும்	114
தொக்கு	172
தொகுத்த	365
தொகுவார்	444
தொட்டுத்	29
தொடங்கிய	50
தொடர	241
தொண்டரை	357
தொண்டின	373

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
தொல்லைவினை	10	நாட்டமிட்	368
தொழுதுநம	105	நாடும் நகரும்	4
தொழுதும்	345	நாடேறும்	448
தொழுவாள்இவள்	249	நாணு நடக்க	50
தொழுவாள்பே	100	நாதன்திரு	358
தோன்றல்தன்	401	நாதன்நனி	377
தோன்றலை	340	நாந்தன	320
நக்கரை	181	நாமத்தினல்	227
நக்கீரர்தாம்	152	நாமம்	269
நகரங்	376	நாமாலை	25
நகுகின்ற	391	நாமுகங்	390
நஞ்சுமிழ்	223	நாமே இடை	263
நட்டம்நீ	171	நாயனைய	233
நட்டமா	183	நாரணன்	318
நடக்கிற்	27	நாவாய்	187
நடஞ்செய்	339	நாவார்	349
நடமாடி	222	நானுடைய	197
நடமாடுஞ்	105	நானும்என்	170
நடனம்	291	நானேபிறங்	224
நண்ணிப்	295	நிதியார்	350
நண்ணிய	341	நிதியுறு	393
நந்திக்கு	353	நிணந்தான்	6
நம்பன்	351	நிலத்திடைப்	312
நம்பான்	94	நிலத்திமை	286
நமக்கிசை	95	நிலத்தில்	346
நயந்தநாள்	184	நிலத்துக்கு	410
நல்கும்	293	நிலந்துளங்	214
நல்கென்	396	நிலமேறிய	377
நல்லார்	165	நிலா இலங்கு	21
நல்வழி	330	நிலாவு	296
நலந்தர	279	நிலைத்திவ்	200
நலம்பாயு	196	நிலையில்	94
நலமலி	434	நிழல்படு	324
நற்றவன்	350	நிறம்பிறி	172
நன்று	456	நிறைந்தெங்	99
நன்றைக்	169	நின்றிலவே	334
நன்னக	361	நின்றும்	98
நன்னுத	300	நின்னியல்பை	99

பாட்டு	பக்கம்
நினை அடைந்தேன்	201
நினைந்திருந்து	14
நினைமால	198
நினையாதர	411
நினையாதொழிதி	10
நினையார்	236
நினைவார்க்	295
நீ இருந்	72
நீ உலகம்	20
நீட்டுவ	399
நீதியினி	446
நீ நின்று	10
நீமதித்து	446
நீயேயா	190
நீரென்னி	303
நீரே	200
நூலறிவு	17
நூற்றனைத்	31
நூறுன் பயன்	189
நெஞ்சந் தளிர்	35
நெஞ்சந்திரு	321
நெஞ்சார்	298
நெஞ்சிற்	210
நெஞ்சே	102
நெடிதாய	24
நெறிதருகுழலி	120
நெறிதருகுழலை	227
நெறிவார் சடையரை	366
நெறிவார் சடையாய்	98
நெறிவிரவு	208
நேசன் அல்	337
நேர்த்தமை	300
நேர்ந்தரவங்	18
நொந்திக்கிடந்த	6
நோக்கிற்று	265
பகரப்பரி	203
பகனட்டம்	188
பட்டடி	3

பாட்டு	பக்கம்
பட்டாரண்	187
பட்டோர்	68
படி முழுது	29
படியேறும்	201
படிறுயின	35
படைபடு	326
படையால்	286
பண்டங்கன்	41
பண்டந்த	163
பண்டமரர்	20
பண்டமுது	435
பண்டிதுவே	96
பண்டுதொட	93
பண்ணுகப்	203
பண்பாய	188
பண்புண	21
பணித்த	371
பணிந்தும்	24
பணிந்தேன்	123
பணிபடு	401
பணிபதம்	34
பணியாது	106
பணியாய்	177
பத்தனை	345
பதங்க	183
பதிகந்தி	348
பதிகப்பெரு	372
பதிகம்பல	410
பதிகமே	454
பதியார்பலி	40
பதியார் பழி	175
பதும நற்	367
பந்தார் அணி	377
பந்தார் விர	353
பயந்தாள்	370
பயில்கின்	322
பரங்குன்றிற்	152
பரப்பார்	301

பாட்டு	பக்கம்
பரமனையே	33
பரமாயபைங்	199
பரமாயவிட்	201
பரவித்	291
பரிசறியேன்	99
பரிந்து	97
பரிப்பருங்	297
பரியாதன	60
பரியானை	175
பரிவின்	159
பருப்பதங்	294
பருமுத்து	282
பல் உயிர்	42
பல்லவை	361
பலிக்குத்	178
பவன் அடி	182
பழி ஒன்றும்	411
பழிக்கே	388
பழித்தக்க	332
பற்றற	341
பற்றுவான்	99
பாங்குடை	292
பாசத்தை	94
பாடிய செங்	397
பாடியவண்	58
பாதம் பரவி	306
பாதம் புவனி	37
பாம்பும் மதி	22
பாயும்	179
பார்கால்	186
பார்த்துப்	194
பார்மண்ட	372
பார்மேவு	197
பார்கலத்	403
பாரும்	132
பாலாய	71
பாலார்	192
பாவித்த	407
பாவித் தெழில்	404
பாவிக்கும்	55
பாவை ஆடிய	119
பித்தரசு	454
பிரமாபுரம்	403
பிரானவனை	19
பிரானிட	190
பிரானென்று	8
பிரானை	436
பிழைப்பு	106
பிழையாயின	331
பிறந்து	12
பிறப்பாழ்	167
பிறப்புடை	93
பிறர்அறிய	16
பிறவியிற்	324
பிறவியெனும்	412
பிறிந்தேன்	259
பிறைத்துண்டஞ்	52
பிறையும்புன	15
புகலூரு	196
புகவுகிர்	326
புகழும்படி	359
புட்கள் பொதுத்த	6
புண்டலைக்குஞ்	406
புண்ணியங்கள்	11
புண்ணிய நாடு	387
புண்ணியபுரா	266
புண்ணியன்	40
புண்ணியனே	332
புணர்ந்த	374
புந்தி கலங்கி	5
புரிந்தஅன்	335
புல்லறிவின்	341
புல்லன	361
புலமன்னிய	359
புலர்ந்தால்	185
புலனொடாடி	452

பாட்டு	பக்கம்
புலியின்	356
புலேயடித்	383
புவனியிற்	356
புள்ளுங்	74
புறந்தாழ்	189
புறமறையப்	168
புனங்குழை	285
புனத்தெழு	389
புனமயிற்	67
புனமா	418
புனலற	416
புனேகடற்கு	181
பூங்கொத்	280
பூசல்அயிற்	368
பூணுக	16
பூதப்படை	46
பூதிப்புயத்	352
பூந்தண்	328
பூமேல்	220
பூவார் திரு	449
பெண்கொண்	117
பெண்ணின்	101
பெண்ணீர்மை	91
பெயராநலத்	284
பெரியவர்	92
பெருகொளிய	17
பெருங்காதல்	164
பெற்ற பயன்	92
பெற்றம் உயர்	364
பெற்றமெல்	217
பெற்றுகந்	278
பெற்றும்	190
பெற்ரூர்	231
பெறினும்பிறி	25
பெறுகின்ற	236
பெறுபயன்	444
பெறுவது	385
பேச்சுப்	191
பேசத்தகா	316
பேசுக	284
பேசுந்தகை	384
பேசும்பரி	96
பேசும்பெரு	344
பேசுவதெல்	60
பேசுவாழி	234
பேதுறு	214
பேதைஎங்	231
பேய்ச்சுற்றம்	173
பேராணே	186
பொடிக்கின்	39
பொடியேர்	339
பொய்கீர்	213
பொய்யாநர	60
பொய்யால்	71
பொய்யைக்	360
பொய்வரு	305
பொருட்டக்	118
பொருந்திரு	401
பொருள்உணர்ந்	309
பொருளாக	211
பொருளுங்	254
பொருளென	398
பொழுதுகழிந்	66
பொறுத்தில	331
பொன்வண்ணம்	32
பொன்னம்	337
பொன்னூர்	385
பொன்னி	342
போகபந்தத்	162
போகின்ற	103
போதரங்க	188
போதுநெறி	103
போதும்பெரு	257
போதெலாம்	117
போந்தார்	186
போர்த்த	96

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
போற்றி	447	மலைத்தலங்	413
போற்று	433	மலையத்தகத்	293
மகத்தினின்	17	மலையார்	196
மகிழ்தி	17	மலைவரும்	92
மகிழ்ந்தலரும்	96	மற்றும்பல	107
மகிழ்ந்தன்	199	மறித்துமட	18
மங்கைகொங்	41	மறுவுடைய	17
மங்கையிடத்	437	மறைத்துலகம்	26
மண்டும்	349	மறைமுழங்	388
மண்ணில்	402	மன்றங்	340
மணிசிந்து	214	மன்னங்	394
மணியமரும்	169	மன்னர்	357
மணியார்	293	மன்னு	99
மணியினை	350	மன்னிய	373
மணியொப்	325	மன்னும்	173
மணிவாய்	233	மனங்கொண்	438
மத்தக்கரி	114	மனமாய	185
மதந்தந்த	218	மனமால்	63
மதிக்கத்தகு	386	மனமுற்றும்	106
மதிமயங்கப்	168	மனை உறை	70
மதிமலி	1	மனையாய்	180
மதியாஅடல்	17	மாட்டும்	198
மதியாருந்	195	மாண்டுவாய்	28
மதியால்	181	மாதரங்கத்	180
மந்திஇனங்	115	மாதவத்	363
மந்திமக	115	மாநிலத்	57
மயக்கத்த	305	மாயங்கள்	100
மயக்கமில்	310	மாயவன்	323
மயலான	202	மாயன்நன்	61
மயலைத்	97	மாயனை	19
மயிலேந்	392	மாலைஒருபால்	174
மருப்பை	317	மாலையொப்	385
மலஞ்செய்	317	மாரு அரு	362
மலர்ந்தபட	289	மாருதஆனை	201
மலர்ந்தமலர்	170	மாறிப்பிற	95
மலர்பயில்	378	மாறிலாத	442
மலரணைக்	194	மாறுதடுத்	205
மலைசூழ்ந்	216	மானும்	247

பாட்டு	பக்கம்
மிக்கமுழங்	21
மிடற்றும்	165
மிடற்றில்	22
மிண்டும்	344
மிறைத்தார்	294
மின்களௌன்	279
மின்போலுஞ்	24
மின்னலிக்	299
மின்னூர்	395
மின்னுமாக	442
மின்னெடுங்	215
முகத்தாற்	316
முகம்பாக	304
முகிற்கணம்	118
முடிமேற்	22
முத்தன	400
முதல்வன்	205
முரசங்க	375
முருகனே	152
முல்லைநகை	448
முலைநலஞ்	182
முள்ளார்ந்த	115
முள்ளிதீந்து	6
முறைவனே	47
முன்னிளங்	163
முனியே	43
முனிவன்	185
மூவுலகத்	329
மூன்றரணம்	203
மெய்த்தொண்	277
மெய்யன்	189
மெலிக்கின்ற	42
மேதகுந்	439
மேயகரு	214
மேயிரை	305
மேலாயதேவர்	193
மேலாயமேக	21
மேவியபுன்	262
மேனாட்டமரர்	383
மையார்	131
மைவைத்த	369
மொழியக்கண்	54
மொழியின்	215
மொழிவது	375
யாமான	176
யாரேஎம்	447
யானென்று	100
யானேத்திய	318
யானேதவ	13
யானேன்றங்	176
யானைமுகத்	162
வகுப்பார்	285
வகைதகு	434
வகையில்	249
வஞ்சனை	59
வஞ்சியன	28
வடிக்கண்ணி	419
வடிவார்	182
வடிவுடைய	21
வடுவென்றெனக்	20
வண்ணம்	206
வணக்கந்	279
வணங்குதும்	116
வணங்குமிடை	239
வந்தமரர்	96
வந்தார்எதிர்	66
வந்தார்வளை	195
வந்தாறலை	170
வந்திகண்	259
வந்திதனைக்	15
வந்தியான்	183
வந்தும்	283
வந்தோர்	104
வயலார்	387
வரங்கொண்	303
வரந்தரு	333

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
வரமாவ	107	வாய்த்த	194
வரித்தடங்	334	வாயிலே	98
வரிவிலை	182	வாரணிந்த	198
வருக்கம்	367	வாவா	104
வருகின்றமுப்	38	வாழ்த்துவ	378
வருகின்றன	443	வாழ்த்துவாய்	95
வருகோட்	164	வாழ்ந்தனம்	257
வருத்தந்தரு	280	வாழ்வாகவுந்	238
வருந்துங்	398	வாழ்வார்	201
வருந்தேன்	254	வாழப்பெரி	296
வருவாசகத்	338	வாழைக்கனி	161
வருவார்	395	வாளா	93
வரைகொண்ட	377	வாளைக்கிளர	6
வரையொன்று	225	வானகம்	35
வலந்தான்	50	வானத்தான்	12
வலிகெழு	375	வானம்மணி	167
வலைபத்	397	வானமதி	115
வழகிதழ்க்	116	வானிற்	319
வழிதரு	449	வானோர்	238
வழிபிழைத்	276	விசும்பில்	23
வழுத்திய	323	விட்டங்	339
வள்ளற்	347	விட்டாவி	106
வளர்தரு	218	விடந்திளைக்	407
வளர்ந்த	115	விடைபாய்	304
வளைகால்	415	விண்ணுதல்	164
வளைகொண்	202	வித்தகச் செஞ்	336
வளைபடு	400	வித்தகம்	374
வளையார்	269	விதிகரந்த	172
வளையாழி	182	விதித்தன	59
வன்பகை	439	விநாயகனே	161
வனப்பார்	181	வியந்தாழி	176
வனஞ்சாய	317	விரிகடல்	62
வனவரித்	298	விரிகின்ற	39
வாகைவிரிந்	3	விருப்பினால்	26
வாட்டுவா	375	விரும்பும்	394
வாணிலவும்	434	விரைந்தேன்	126
வாணுதற்	43	விரையார்	184
வாமான்	102	விரையாரு	196

பாட்டு	பக்கம்
விழுதுமிணத்தை	3
விளைவைத்	335
விளையும்	97
வீரவேல்	151
வீரன்அயன்	59
வெந்திறல்	102
வெள்காதே	172
வெறியானை	177
வென்றைந்	105
வேட்கை	164
வேடனென்	327
வேண்டிய	60
வேதகச்	329
வேதமறிக்	352
வேதமுதல்	323
வேதியர்	212
வேதியன்	38
வேதியனை	9
வேந்துக்க	209
வேய்கள்	6
வேய்வனத்துள்	115
வேலைமுக	206
வேழங்கள்	414
வேறுரைப்பன்	194
வேறேயுங்	103
வைத்த இரு	100
வையகத்	313
வையம் மகிழ	359
வையார்	281

செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப் பெற்றுள்ள தருமங்களின் விவரம்

எண்	விவரம்	நிதி ரூபாய்
1	சிவஞானசித்தியார் உபந்நியாசக் கட்டளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	15,000
2	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த	11,500
3	திருவிதாங்கூர் மகாராசா தேவாரப்பரிசு....	5,000
4	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு	5,000
5	மூவர் தேவாரப் பரிசு, சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள்	10,000
6	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதகாசிரியர் நியமிக்க	60,000
	அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க	30,000
8	திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ	1,50,000
9	இசைத் தமிழ்க் கல்விக்கு	1,00,000
10	திருப்பனந்தாளில் கால்நடை வைத்திய சாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளம் அளிக்கவும்	20,000

11	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம்	10,000
12	இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம்	10,000
13	திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம்	3,000
14	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம்	17,000
15	திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி	1,00,000
16	திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை	ஏ. 44 செ. 14 நிலவரும்படி
17	திருப்பனந்தாள் மண்ணியாற்றில் கேதாரக் கட்டம்	2,900
18	திருப்பனந்தாள் மண்ணியாற்றில் அரிச்சந்திரக் கட்டம்	3,000
19	கும்பகோணம் மணிக்கூண்டு	25,000
20	தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை	21,000
21	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம்	9,000
22	மைசூர் மகாராசா தேவாரப் பரிசு	5,000
23	மாயூரத்தில் தேவாரப் பரிசு	5,000
24	சென்னை விவேகாநந்தா கல்லூரியில் சைவசித்தாந்தக் கட்டளை	10,000
25	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தக் கட்டளை	20,000
26	ஸ்ரீ வைகுண்டம் தேவாரப் பரிசு	5,000
27	மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு	10,000

28	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர் திருநெல்வேலி மாணவிகட்கு	1,00,000
29	ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம்	5,000
30	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு	1,50,000
31	டாக்டர் சாமிநாதையர் நினைவுத் திருக்குறள் பரிசு, சென்னை	3,500
32	குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு	1,000
33	காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி	3,000
34	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூஜை	10,000
35	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம்	4,000
36	விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி	1,000
37	குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு	3,500
38	திருநெல்வேலியில் அபிராமி அந்தாதிப் பரிசு	3,500
39	திருப்பனந்தாளில் தண்ணீர்ப் பந்தல் தருமம்	3,500
40	ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பக நிதி	3,500
41	சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி	35,000
42	சிதம்பரத்தில் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம்	12,000

43	இராமேசுரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம்	3,500
44	ஸ்ரீ வைகுண்டத்தில் நூல் நிலையக் கட்டிடம்	10,825
45	பஞ்சாப் அகதிகள் நிவாரண நிதி	5,000
46	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி	3,500
47	ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோவிலில் ஏழைகள் அன்னதானம்	5,000
48	ஸ்ரீ வில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு	3,500
49	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம்போட....	7,500
50	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு	5,000
51	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம்	7,000
52	28வது நம்பர் செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ வைகுண்டம் முதல் ஆண்டு உதவி நிதி	5,000
53	30வது நம்பர் ஸ்ரீ செந்திலாண்டவன் உணவு நிதியின் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழக முதல் இரண்டு ஆண்டு மூலதனம்	14,000
54	28வது நம்பர் ஸ்ரீ செந்திலாண்டவன் நிதியின் திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம்	5,000
55	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புச்சாகக் கட்டிடமும் நிலமும்	15,000
56	மாளவியாஜி பெயரால், கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்ேனா, ஆக்ரா, அலிகார் ஆகிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபந்நியாசக் கட்டளை	5,000

57	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர்	60,000
58	பனசை மண்ணியாற்றுச் சோமேசர் துறை கட்ட	1,500
59	ஸ்ரீ வைகுண்டம் பெண்கள் உயர்நிலைக் கல்விக் கூடம் நிறுவ	45,000
60	ஸ்ரீ வைகுண்டம் தேவார மாணவர்கள் யாத்திரை நிதி	5,000
61	பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு	5,000
62	6வது ஸ்ரீகாசி பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த நிதிக்கு அதிகப்படியாகக் கொடுத்தது	16,000
63.	30வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் - (மதுரை முதலாண்டு உதவி மூலதனம்)	7,000
64	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக் கிரயம்	7,500
65	28வது செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ வைகுண்டம் வகையரா திருநெல்வேலி முதலாண்டு உதவி மூலதனம்	5,000
66	30வது செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையரா - கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம்	7,000
67	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை	10,000